F3

பாணினியின் அஷ்டாத்தியாயி

(தமிழாக்கம்)

பகுதி 1

முனைவர் கு. மீனாட்சி

VTN011

Alagappa university
Central Library
8967

8967
491.2'045
N8

...மிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

[illegible]

பாணினியின் அஷ்டாத்தியாயி தமிழாக்கம்

பகுதி 1

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
LIBRARY.
Accession No 48967
Date of purchase:
Call Number:

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
KARAIKUDI

முனைவர் கு. மீனாட்சி

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 16220

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

அழகப்பா பல்கலைக்கழகம்
வளர் தமிழ் நூலகம்
காரைக்குடி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Paniniyin Aṣṭādhyāyī Tamiḻākkam Part - I
Translator	:	Dr. K. Meenakshi
Publisher & ©	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113.
Publication Number	:	304
Language	:	Tamil
Date of Publication	:	1998
Edition	:	First
Paper used	:	TNPL 16 Kg Super Printing
Size of the book	:	1/8 Demy
Printing types	:	10 Points
Number of Pages	:	IX + 431
Price	:	
Number of Copies	:	1100
Type Set & Printed by	:	**BRAINET COMPUTERS** 158/7, Lakeview Road, West Mambalam, Chennai - 600 033. ✆ : 044 - 488 0958
Subject	:	Tamil Translation of Aṣṭādhyāyī

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
LIBRARY
Accession No. 48967
Date of ...
Call No. 491.2'045 N8

Printed and Published with financial Assistance from the Government of India, Central Institute of Indian Languages, Mysore.

அணிந்துரை

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
KARAIKUDI

ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ அஞ்சல்,
தரமணி,
சென்னை - 600 113.

சமஸ்கிருத மொழி என்பதற்குச் 'செம்மை செய்யப்பட்டது' என்பது பொருளாகும். சமஸ்கிருத மொழியைச் செம்மைப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தவர் இலக்கணப் பேராசிரியர் பாணினி ஆவார். வடமொழியில் கிடைக்கின்ற முதல் மூத்த இலக்கண நூல் பாணினி எழுதிய அஷ்டாத்தியாயி என்னும் இலக்கண நூலாகும். பாணினி என்னும் இந்நூல் ஆசிரியர் பெயரால் 'பாணினியம்' என்றும் அழைக்கப்படுகிறது.

பாணினி காலம் கி.மு. 8 ஆம் நூற்றாண்டு என்று கோல்ட்ஸ்டுக்கர் கருதுகிறார். ஆயின் பெரும்பாலான ஆய்வாளர்கள் பாணினி காலம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். ரிக், யசூர், சாம, அதர்வண முதலிய வேதங்களோடு அமைப்பு வேறுபடும் வகையில் பாணினி அஷ்டாத்தியாயி எனும் இலக்கண நூலை இயற்றியுள்ளார்.

அற்றை நாளில் சமஸ்கிருத மொழி இருவகை வழக்குடையதாக விளங்கிற்று. கற்றறிந்த அறிஞர்கள் பேசிய மொழிகள் முதல் பிரிவிலும் ஏனையோர் பேசிய மொழிகள் இரண்டாவது பிரிவிலும் அடங்கும். பாணினி முதல் பிரிவைச் சார்ந்தவர்கள் பேசுகின்ற மொழிக்கு இலக்கணம் வகுத்தார் என்பர்.

பாணினி இலக்கணம் சூத்திரங்களால் ஆனது. சில சொற்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை உடையன இச்சூத்திரங்கள்.

இந்நூல் 8 அத்தியாயங்களையும் 4000 சூத்திரங்களையும் கொண்டதாகும். அவையின்றி, 14 சிவ சூத்திரங்கள் அல்லது மாகேசுவர சூத்திரங்கள் முன்னதாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கண நூலுக்குக் காத்தியாயனர், பதஞ்சலி ஆகியோர் உரை எழுதியுள்ளனர். அவர்களுடைய உரைகள் வார்த்திகம், மகாபாஷ்யம் என்ற பெயர்களைக் கொண்டவை.

வடமொழி இலக்கண நூலோர் இந்த இலக்கணத்தையும் உரைகளையும் மூன்று முனிவர்கள் இலக்கணம் என்ற பொருளில் 'முனித்ரய வ்யாகரணம்' என்று குறிப்பிடுவர்.

பாணினியைப் புரிந்துகொள்வதற்கு இவ்விரு உரைகளும் மிகத் தேவையாக அமைகின்றன.

இந்நூல் குறித்து, 'வடமொழி இலக்கிய வரலாறு' நூலுள் திரு. கைலாசநாதக் குருக்கள்,

"நமது கைக்கெட்டிய முழு இலக்கண நூல்களுள் பழையது பாணினீயமே. இங்கு வைதிக இலக்கணம் விரிவாகக் கூறப்படாது சிற்சில விதிகள் மட்டும் கூறப்படுவது நோக்கற்பாலது. இந்நூல் வேத சாகைகளுள் ஒன்றுடனாவது இணைக்கப்படாதிருப்பதும் கவனிக்க வேண்டுவதே. இது எழுந்த காலம் சமயப் பற்றற்ற தனி நிலையில் நூலமையச் சூழ்நிலை பொருந்திய காலம். சமயத்துடன் தொடர்பு பெற்றுச் சமய அடிப்படையிலேயே சாஸ்திரங்கள் தோன்றின எனினும், ஆசிரியர்கள் படிப்படியாக இவ்வழியினின்றும் விலகித் தனிவழி நின்று சமயப் பற்றற்ற நூல்களை எழுதும் மரபையும் தொடங்கி வைத்தனர்" என்கின்றார். (பக். 192-193)

அபிதான சிந்தாமணி, பாணினி, ஒரு மகரிஷி. இவர் தமது உள்ளத்தில் உலகமுய்ய வியாகரணம் அருளிச் செய்ய வேண்டிச் சிவமூர்த்தியைத் தரிசித்து நிற்கையில், சிவமூர்த்தி, இவரது மன எண்ணமறிந்து தமது திருக்கரத்தில் இருந்த நாதமயமாகியடமருகத்தைச் சிறிது அசைத்தனர். அதிலிருந்து எழுத்துக்கள் உண்டாயின. அவ்வெழுத்துக்களை அருகில் இருந்த இவர் பன்னிரண்டு சூத்திரங்களாக்கினார். இதற்குப் பதஞ்சலி முனிவர் பாஷ்யம் செய்தனர் என்கின்றது. (பக். 1095-76). இவ்வாறு பாணினி எழுதிய இலக்கண நூலுக்குத் தெய்வீகத் தொடர்புடைய புராணக் கதையும் கூறப்படுகிறது.

பாணினி அஷ்டாத்தியாயி பலரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழில் இதுகாறும் இந்த நூல் மொழிபெயர்க்கப்படவில்லை. வடமொழியில் கிடைக்கின்ற மூத்த இலக்கணமான இந்நூலினை முனைவர் கு. மீனாட்சி முதல் முதலாகத் தமிழாக்கம் செய்துள்ளார். அத்துடன் அஷ்டாத்தியாயி தொடர்புடைய காத்யாயனரின் வார்த்திகம், பதஞ்சலியின் மகாபாஷ்யம் உரைகளில் உள்ள தொடர்புடைய கருத்துகளையும் மொழிபெயர்த்துள்ளார். 'தமிழிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்' என்ற பாரதிதாசனின் கருத்திற்கிணங்க வடமொழி இலக்கண நூலான இதனைத் தமிழ் ஆக்கம் செய்த முனைவர் கு. மீனாட்சி அவர்கள் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்.

இந்நூலினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூன்று பகுதிகளாக வெளியிடுகிறது. முனைவர் கு. மீனாட்சி அவர்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் வல்லுநர். மேலும் சிறந்த மொழிநூல் அறிஞர். இவருடைய மும்மொழிப் புலமை இந்நூலுள் நன்கு வெளிப்படுகிறது.

இந்தியாவில், முதல் இலக்கண நூல் பாணினியின் அஷ்டாத்தியாயி என்று சிலரும் தொல்காப்பியம் என்று சிலரும் கூறிவருகின்றனர். இந்நூலாசிரியர் இருசாராரின் ஐயத்தை நீக்கும் வகையில் **'Tolkappiyam and Astadhyayi'** என்ற நூலை நிறுவனத்தின் வழி வெளியிட்டுள்ளார். இவருடைய ஆய்வுப் பணியின் தொடர்ச்சியாக 'அஷ்டாத்தியாயி' எனும் தமிழ் மொழிபெயர்ப்பு நூலினையும் நிறுவனம் வெளியிடுகின்றது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டிவருகின்ற மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய 'இந்திய மொழிகள் நடுவண் நிறுவன'த்திற்கு எங்கள் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த 'பிரைநெட் கம்ப்யூட்டர்ஸ்' அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

27.07.98

இயக்குநர்.

முகவுரை

தொல்காப்பியரின் வடமொழி இலக்கணத் தேர்ச்சி அனைவரும் அறிந்ததே. தொல்காப்பிய உரையாசிரியர்கள், பின்னால் வந்த வீரசோழிய ஆசிரியர் போன்றவர்களும் வடமொழி இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றவர்களே. பல காலக் கட்டங்களில் எழுந்த நூல்களின் ஆசிரியர்களும் இருமொழிகளையுமே நன்கு கற்றுணர்ந்தவர்கள்தான் என்று வரலாற்றுச் சான்றுகள் பறைசாற்றுகின்றன. பல மொழிபெயர்ப்பு நூல்கள் தொல்காப்பியர் காலத்திலேயே இருந்தன என்பது தொல்காப்பியரே, முதல்நூல், வழிநூல் என்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பதிலிருந்து விளங்கும். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுச்சிப் புலவர் பாரதி, 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று வேறுமொழிகளையும் கற்றுணர்ந்த தமிழறிஞர்களுக்கு ஆணையிட்டுக் கூறுகிறார்.

பாணினியின் அஷ்டாத்தியாயி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆனால், தமிழ் இலக்கண நூல்களில் ஆழ்ந்த அறிவுள்ள பல தமிழறிஞர்கள், பாணினியின் இலக்கணத்தோடோ அல்லது அதன் ஆங்கில மொழிபெயர்ப்புகளோடோ நேரிடைத்தொடர்பு கொள்ள இயலாத நிலையில் காணப்படுகிறார்கள். உரையாசிரியர்களின் உரைகளிலிருந்துதான் வடமொழி இலக்கணங்களைப் பற்றி, அவர்கள் அறிந்து கொள்ள இயலுகிறது. பல மேல்நாட்டு அறிஞர்களால் மிகவும் புகழப்பட்ட அஷ்டாத்தியாயியை அதன் தமிழாக்கத்தையாவது படித்து அறிந்து கொள்வதற்குக்கூட இதுவரையில் அதன் தமிழாக்கம் தமிழறிஞர்களுக்குக் கிடைக்கவில்லை. இத்தகைய நூலின் தேவையைப் பல அறிஞர்கள் புரிந்து கொண்டும் இருக்கிறார்கள். இந்தக் குறையை நிறைவு செய்வதற்காக எடுத்துக்கொண்ட எனது எளிய முயற்சிதான் இந்தத் தமிழாக்கம். இப்பணி முதன் முதலில்

பல்கலைக் கழக மானியக் குழுவின் **(University Grants Commission)** நிதி உதவியுடன், உயர்மட்ட ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்டது.

அஷ்டாத்தியாயி என்ற பாணினி இலக்கணத்துடன் காத்தியாயனரின் வார்த்திகம், பதஞ்ஜலியின் மகாபாஷ்யம் ஆகிய மூன்றையும் சேர்த்துத்தான் படிப்பது தொன்று தொட்ட வழக்கம். அஷ்டாத்தியாயி சூத்திரப்பாடம் மட்டும் தனியாக மொழிபெயர்த்தால், அத்தமிழாக்கம் எளிதில் புரிந்துகொள்ள இயலாது. வடமொழி இலக்கணத்தை முனித்ரய வ்யாகரணம் அதாவது மூன்று முனிவர்களின் இலக்கணம் என்று கூறுவதுண்டு. ஆகவே இம்மொழிபெயர்ப்பில் முதலில் பாணினியின் சூத்திரங்களைத் தமிழில் கொடுத்து, தொடர்ந்து, மகாபாஷ்யம், வாமனர் ஜயாதித்தரின் காஸிகா என்ற நூல்களின் அடிப்படையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே, வார்த்திகங்களையும் தமிழில் கொடுத்து, தொடர்ந்து, அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் அச்சிடப்பட்ட சில எழுத்துக்களைப் பற்றிய விளக்கம் தேவை. தமிழ் எழுத்துக்களைவிட அதிகமான எழுத்துக்களைக் கொண்டது ஸம்ஸ்கிருதம். இதன் எழுத்தான, நாகரியில், ஒவ்வொரு வர்க்கத்திலும் நன்னான்கு எழுத்துக்கள் உள்ளன. அவை அந்தந்த எழுத்துக்களோடு, 1,2,3,4 என்ற எண்கள் இணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, 'க' என்ற எழுத்து அதன் உச்சரிப்பினடிப்படையில் 4 வகையாக அமையும். அவை முறையே க^{1} **(=ka)**, க^{2} **(kha)**, க^{3} **(=ga)** க^{4} **(=gha)** என்று கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே ரு^{1} **(=r)** என்றும் 'ரு^{2}' **(=ru)** ஸ^{1} **(=s^{1})**, 'ஸ' **(=s)** என்றும் உச்சரிக்க வேண்டும்.

பாணினி பல இடங்களில் சுரத்தைப்பற்றிப் பேசுகிறார். வேதமொழியில், உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்ற மூன்று வகையான சுரங்கள் காணப்படும். இவைகளைக் குறிப்பிட சரியான குறியீடு கிடைக்காததால், அவைகளை அந்தந்த இடங்களில் குறிப்பிடவில்லை. ஆகவே, சில சூத்திரங்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு எடுத்துக் காட்டுக்களும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. ஆயினும், அதற்கு முன்பு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திலிருந்து, இவைகளை வேறுபடுத்த இயலும். உதாத்த சுரத்தை மட்டும், அந்த எழுத்துடன் '2' அல்லது '3' என்ற குறியுடன் காட்டப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, போ^{3} அல்லது க^{2}.

இந்த மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கிய காலத்திலிருந்து, பலர் எனக்கு ஊக்கம் அளித்து, உறுதுணையாக

இருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரியது. ஆயினும், சிலரைக் குறிப்பிட்டு, நன்றி கூறுவது எனது கடமை.

இம்மொழிபெயர்ப்புப் பணியை நான் தொடங்குவதற்குக் காரணமாக அமைந்தவர் பேராசிரியர் அகத்தியலிங்கம் (முன்னாள் துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) அவர்கள் ஆவர். இப்பணியைச் செய்து முடிக்க அவர்களது ஆர்வமும், ஊக்கமும், உறுதுணையாக இருந்தன. பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். எனது உளமார்ந்த நன்றி அவர்களுக்கு உரியது. இத்தமிழாக்கத்தை நூல் வடிவில் வெளிக் கொண்டு வருவதற்காகவும் பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் விருப்பம் நிறைவேறவில்லை. கனவாகவே நின்ற அந்த முயற்சி, இன்று நனவாகிறது. இதற்குக் காரணம் முனைவர் இராமர் இளங்கோ அவர்கள் (இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) ஆகும். எனது தமிழாக்கத்தை அச்சேற்றுவதற்காக, அணுகியபோது, எவ்விதத் தயக்கமும் காட்டாமல், உடனேயே ஏற்றுக்கொண்டு, இன்று அதை நூல் வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். முனைவர் இராமர் இளங்கோ அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அஷ்டாத்தியாயியின் தமிழ் மொழிபெயர்ப்புப்பணியை நான் தொடங்கிய காலத்திலிருந்தே இதற்கு ஊக்கமளித்து, தனது கருத்துக்களையும் எடுத்துக்கூறிப் பல வகையில் உதவி புரிந்தவர் முனைவர் இ. அண்ணாமலை அவர்கள் (முன்னாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர் **(Central Institute of Indlan Languages, Mysore)** ஆவர். இன்று இது, நூலாக வருவதில் மிகப்பெரிய பங்கு அவர்களுடையதுதான். முனைவர் இ. அண்ணாமலை எடுத்துக்கொண்ட ஆர்வத்திற்கும், அவர்கள் எனக்கு அளித்த ஊக்கத்திற்கும் எனது நன்றி என்றென்றும் உரியது.

பேராசிரியர் செ. வை. சண்முகம் (ஓய்வு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மொழியியல் துறை) அவர்கள், நான் இப்பணியை மேற்கொண்ட நாளிலிருந்து, பல காலக் கட்டங்களில், தனது கருத்துக்களைக் கூறி, இப்பணியை நான் செய்து முடிக்க ஊக்கமளித்து உதவினார்கள். அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றி.

இந்த அஷ்டாத்தியாயியின் தமிழ் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டபோது, பல இன்னல்கள் இடையூறுகளை நான் எதிர்கொள்ள வேண்டிவந்தது. அந்த நேரங்களில் எல்லாம் எனக்கு ஊக்கமளித்து உறுதுணையாக நின்றவர்கள் பல நண்பர்கள். அவர்களில், சிலர் குறிப்பிடத் தகுந்தவர்கள். முனைவர் ரவிந்திர வர்மா (எனது சக ஆசிரியர்), திரு. இராம கிருட்டிணன், திரு. மணிவேல் ஆகியவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அஷ்டாத்தியாயியைத் தமிழில் மொழிபெயர்க்க நிதி உதவி செய்த பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு எனது மனமார்ந்த நன்றி. நான் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு, இதைச் செய்து முடிக்கப் பலவகையில் உதவிபுரிந்த ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்துக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது.

இது நூலாக வெளிவருவதற்கு உதவிய இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை ஆகியவைகளுக்கு எனது நன்றி.

இது அச்சாகும் போது, நான் சென்னையில் தங்கிய நாட்களில் அன்போடும் ஆர்வத்தோடும் பலவகையில் முனைவர் இ. ராஜலட்சுமி ஸ்ரீனிவாசன், அவர்கள் கணவர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன்ஆகியோர் உதவினர். அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இதன் பிழை திருத்தத்தில், ஆர்வத்தோடு எனக்கு உதவி புரிந்த எனது தோழி திருமதி. சீதாலட்சுமி அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி.

பூனே,
01/07/1998.

கு. மீனாட்சி

முன்னுரை

அஷ்டாத்தியாயி அல்லது அஷ்டகம் (''எட்டு அத்தியாயங்களைக் கொண்டது'') என்றழைக்கப்படும் பாணினியால் எழுதப்பட்ட ஸம்ஸ்க்ருத மொழியின் இலக்கண நூல் நந்நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்ட எட்டு அத்தியாயங்களைக் கொண்டது. இதில் கிட்டத்தட்ட 4000 சூத்திரம் எனப்படும் இலக்கண விதிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாயத்திலும் விளக்கவெடுத்துக் கொண்ட தலைப்பு, அத்தியாயங்கள் அமைக்கப்பட்டிருக்கும் வகைமுறை ஆகியவைகளைப் பொறுத்து ஒவ்வொரு அத்தியாயத்திலும் காணப்படும் சூத்திரங்களின் எண்ணிக்கை வேறுபடும். அவைகள் வருமாறு:

1.1.75	2,73	3.93	4.110	1.351
2.1.72	2.38	3.73	4.85	2.268
3.1.150	2.188	3.176	4.117	3.631
4.1.178	2.145	3.168	4.144	4.635
5.1.176	2.146	3.119	4.160	5.555
6.1.223	2.199	3.139	4.175	6.736
7.1.103	2.118	3.120	4.97	7.438
8.1.74	2.108	3.119	4.68	8.369

பாணினியின் சூத்திரங்களோடு இணைந்தமையாத ஆனால், அச்சூத்திரங்களைப் புரிந்து கொள்ள இன்றியமையாதவையாகக் கருதப்ப டும். தனித்தனியாக அமைந்துள்ள, சில துணை நூல்கள் வருமாறு (1)சிவசூத்திரம் (2)தாதுபாடம் (3)கணபாடம் (4)உணாதிசூத்திரம் (5)பிட் சூத்திரம் (6)லிங்கானுஸாஸனம் (7)ஸிக்ஷா. இந்நூல்களின் ஆசிரியர் பாணினியா அல்லது வேறு ஒருவரா என்று முடிவாக எதுவும் கூறமுடியாதபோதிலும், பாணினியின் இலக்கணத்தோடு இவைகளுக்குள்ள நெருங்கிய தொடர்பு பற்றியோ அல்லது அவ்விலக்கணத்தை எளிதில் புரிந்து கொள்ள இந்நூல்களின் அவசியத்தைப் பற்றியோ எந்தவிதக் கருத்து வேறுபாடோ சந்தேகமோ இல்லை.

1. சிவசூத்திரம்

சிவசூத்திரம் அல்லது மாஹேஸ்வர சூத்திரம் அல்லது பிரத்தியாஹார சூத்திரம் எனப்படும் இந்நூல் 14 சூத்திரங்களைக் கொண்டது. ஸம்ஸ்க்ருத மொழியின் நெடுங்கணக்கு வைப்பு முறையிலிருந்து மாறுபட்ட முறையில் ஸம்ஸ்க்ருத எழுத்துக்களை இச்சூத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. சிவசூத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களைக் கொண்டு பிரத்தியாஹார சூத்திரங்களைமைக்கப்பட்டு. இவ்விலக்கணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சூத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கும் இறுதியெழுத்துக்கு `இத்'' அல்லது ''அநுபந்தம்'' என்று பெயர். இச்சூத்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரெழுத்தை முதலில் வைத்து, அதையடுத்து, ''இத்'' எனப்படும் ஒரெழுத்தைத் தேவைக்குத் தகுந்தவாறு எடுத்து வைத்து இப்பிரத்தியாஹார சூத்திரங்களமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, முதல் சூத்திரத்தின் முதலெழுத்தான அ–வையும் நான்காம் சூத்திரத்தினிறுதியில் நிற்கும் இத் எனப்படும் எழுத்தான ச்–ஐ அதையடுத்து வைத்து அச் என்னும் பிரத்தியாஹாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அச் என்ற பிரத்தியாஹாரம் அ–வுக்கும் ச்–க்கும் இடையே காணப்படும் எல்லாவெழுத்துக்களையும் சுட்டும். இது எல்லாவுயிரெழுத்துக்களையும் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். இவ்வாறே 'உறல் என்ற பிரத்தியாஹாரம் எல்லா மெய்யெழுத்துக்களையும் அல்–என்ற பிரத்தியாஹாரம் மைஸ்க்ருத மொழியின் எல்லாவெழுத்துக்களையும் சுட்டும். சிவசூத்திரங்களிலிருந்து ஆக்கப்பட்ட 44 பிரத்தியாஹார சூத்திரங்களை பாணினி தனது இலக்கணத்தில் பயன்படுத்தியுள்ளார். (பார்க்க சிவசூத்திரம்)

2. தாதுபாடம்

பாணினி தனது இலக்கணத்தில் விகரணங்களையும் (Conjugational Sign) அவைகளுக்குரியவொட்டுக்கள், அவைகளை நீக்குதல் ஆகியவைகளைப் பற்றிப் பேசும்போது அவைகளை தாதுக்களின் வகுப்புகள் மூலம் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக அதாதி^{3} ப்ரப்^{4}ருத்^{3}ப்^{4}ய ஸப் (2.4.72), ஜூஹோத்^{3} யாதி^{3}ப்^{4}ய ஸ்லு (2.4.75), தி^{3}வாதி^{3}ப்^{4}ய ஸ்யன்(3.1.69) ஸ்வாதி^{3} ப்^{4}ய ஸ்னு(3.1.73), துத^{3}ாதி^{3}ப்^{4}யஸ்'(3.1.77) ருத^{4}ாதி^{3}ப்^{4}ய ஸ்னம்(3.1.78), தனாதி^{3}க்: ங்ப்^{4}ய உ (3.1.79), க்ர்யாதி^{3}ப்^{4}ய ஸ்னா (3.1.81) ஆகியவைகளில் ஸப், ஸ்லு என்ற விகரணங்கள் சில தாதுக்களுக்குப் பின் நிற்கும்போது மறைவதையும் ஸ்யன் முதலிய விகரணங்கள் குறிப்பிட்ட சில தாதுக்களுக்குப்பின் இணைக்கப்படுவதையும் குறிப்பிடுகின்றன (1)அத^{3}ாதி^{3}, (2)ஜூஹோத்யாதி^{3} (3)தி^{3}வ ாதி^{3} (4)ஸ்வாதி^{3} (5)துத^{3}ாதி^{3} (6)ருத^{4}ாதி^{3} (7)தனாதி^{3} (8)க்ர்யாதி^{3} (9)சுராதி^{3} என்ற தாதுக்களின் வகுப்புகள் உள்ளவையென்பது இச்சூத்திரங்களிலிருந்து தெளிவாகிறது. ப்^{4}வாத^{3}யோ, த^{4}ாதவ (1.1.1) என்ற சூத்திரத்திலிருந்து ப்^{4}வாதி என்ற வகுப்பும் இருப்பதாகத் தெரியவருகிறது. ஸம்ஸ்க்ருத மொழியில் காணப்படும் தாதுக்கனைத்தையும் அவைகளையடிச் சொல்லாக மாற்றும் போது அவைகளோடிணைப்படும் விகரணங்களினடிப்படையில் 10 வகுப்புகளாகப்

பிரிக்கப்பட்டு தாதுபாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் வருமாறு (1)ப்^{4}வாதி^{3} (1035), (2)அத^{3}ாதி^{3} (72) (3)ஜுஹோத்யாதி,(24), (4)தி^{3}வாதி(1 40), (5)ஸ்வாதி^{3}(35), (6)துத^{3}ாதி(157), (7)ருத^{43}ாதி^{3}(25), (8)தனாதி^{3} (10)க்ர்யாதி^{3} (67), (10)சுராதி^{3} (441). இவ்வகுப்பின் பெயர்களுக்கு வலதுபுறத்தில் காணப்படும் அடைப்புக்குறிக்குள் காணப்படும் எண், அவைகளின் எண்ணிகையைச் சுட்டும். இத்தாதுக்களின் மொத்த எண்ணிக்கை 1970 ஆகும்.

3. கணபாடம்

தாதுபாடத்தில் தாதுக்களின் வகுப்பைக் கூறியிருப்பது போல் கணபாடத்தில் பெயர்ச்சொற்களை குறிப்பிட்டவொரு வரிசைக்கிர ப்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இது இருவகையில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம் (1) ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் அமைக்கப்பட்ட சொற்கள் (2) பெயர்ச்சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடாமல் அமைக்கப்பட்டவை.

தாதுபாடம், கணபாடம் ஆகியவிரண்டின் ஆசிரியரும் பாணினியா அல்லது இவைகள் வேறு ஒருவரால் எழுதப்பட்டவையாவென்று முடிவுக்கு வராத ஒரு விவாதம் இன்று வரை நடந்து கொண்டிருக்கிறது . ஆயினும் இவைகளின் ஆசிரியர் யாராக இருந்தபோதிலும், இந்நூல்கள் அஷ்டாத்தியாயிக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கு விளக்குவது பொருத்தமாகவிருக்கும்.

பாணினி தனது சூத்திரங்களின் தாதுக்களை சுரம் அல்லது இத்–தின் தொடர்பாகத்தான் குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய சுரம் பெற்ற தாதுக்கள், இத்–தைக் கொண்ட தாதுக்கள் எவையெவையென்பதையறிய தாது பாடத்தின் உதவியைத்தான் நாட வேண்டியிருக்கும். ஏனென்றால் தாதுபாடத்தில்தான் இவைகளின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய சூத்திரங்களைப் படிக்கும்போது தான் தாதுபாடம் பாணினியின் விதிகளைப் புரிந்து கொள்ள எத்துணை முக்கியமானது என்பதை உணர்கிறோம். எடுத்துகாட்டாக, ஆத்மனேபத வினையை வரையறுக்கும் சூத்திரம் அனுதாத்த சுரமோ அல்லது ங்–ஐ இத்–தாகக் கொண்டதோவான தாதுக்கள் ஆத்மனேபதமாகுமென்று கூறுகிறது (1.3.12.) அனுதாத்த சுரங்கொண்ட தாதுக்கள் ங்–ஐ இத்–தாகக் கொண்ட தாதுக்கள் எவையெவையென்பதையறிய தாது பாடத்தின் துணை தேவையாகிறது.

இதைப் போன்று 4.1.76–லிருந்து தொடங்கி 5ஆம் அத்தியாயமிறுதிவரையில் தத்திதவொட்டுகளைப் பற்றி பாணினி பேசுகிறார். அவ்வமயம் ஒரு குறிப்பிட்ட வகுப்பின் பெயரை மட்டுந்தான் பாணினி குறிப்பிடுகிறார். அக்குறிப்பிட்ட வகுப்பினுள்ளடங்கும் சொற்கள் எவையெவையென்பதையறிய கண பாடத்தின் உதவியைத்தான் நாட வேண்டியிருக்கும்.

4. உணாதி சூத்திரங்கள்

தாதுக்களுடன் சில குறிப்பிட்டவொட்டுக்களை யிணைத்துப் பெயரடிச் சொற்களாக்கும் விதிகளைக் கொண்டது இந்நூல். இதன் முதல் சூத்திரம் உண் (-உ) என்றவொட்டை சில தாதுக்களுடனிணைத்துப் பெயரடிச் சொல்லாக்குவதைப் பற்றிய விதியாகவமைகிறது. இச்சூத்திரத்திருந்து இந்நூல் உணாதி சூத்திரங்கள் என்ற பெயர் பெறுகிறது. காட்டாக க்ரு–என்ற தாதுவுடன் உண்– (உ) இணைக்கப்பட்டு காரு–என்ற சொல்லாக்கப்படுவதை விளக்குகிறது இந்நூலின் முதற் சூத்திரம். பஞ்சபாதி[3] ''ஐந்து இயல்கள் கொண்டது'' த³ஸ'பாதி ''பத்து இயல்கள் கொண்டது'' என்று இருவகை யில் கிடைக்கின்றது இந்நூல். இதனாசிரியர் யார் என்பதும் முடிவாகக் கூற முடியாது.

5. பி²ட் சூத்திரங்கள்

பெயரடிச் சொற்களின் ஒலியன் வடிவம் அவைகள் சுட்டும் பொருட்கள் ஆகியவைகளினடிப்படையில் அச்சொற்களின் சுரத்தை நிர்ணயிக்கும் விதிகளைக் கொண்டது இந்நூல். ஸந்தநு அல்லது ஸாந்தநு என்பவரால் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாமென்ற கருத்து பொதுவாக நிலவுகிறது. இதன் முதல் விதி பி²ஷ் என்ற சொல்லைக் கொண்டபடியால் பி²ட் என்ற பெயரால் இது அழைக்கப்படுகிறது.

6. லிங்கானுஸாஸனம்

பெயர்ச் சொற்களினமைப்பு அவைகள் சுட்டும் பொருட்கள் ஆகியவைகளினடிப்படையில் அச்சொற்களின் பாலை நிர்ணயிக்கும் விதிகளைக் கொண்டது லிங்கானுஸாஸனம் என்ற இந்த நூல் ஆண்பால், பெண்பால், நபும்சகம், பெண்பால்–ஆண்பால் (ஸத்ரீபும்ஸக), ஆண்பால்–நபும்சகம் (புமான் நபும்கம்), அவிஸிஷ்டலிங்க (ஒரு குறிப்பிட்ட பாலைச் சுட்டாத) என்ற தலைப்புக்களில் பாலைப் பற்றி விளக்கும் விதிகளைக் கொண்டது இந்நூல். கிட்டத்தட்ட 200 சூத்திரங்களில் இவைகள் விளக்கப்பட்டுள்ளன. இத்தலைப்புக்கள் உணர்த்துகிறபடி, சில சொற்கள் ஒரெயொரு பாலைச் சுட்டுவதாகவும் அதாவது ஆண்பால், பெண்பால், நபும்சகம் ஆகியவைகளில் ஏதாவதொன்றில் அமைவதாகவும் வேறுசில சொற்கள் ஆண்பால்–பெண்பாலாகவும், அல்லது ஆண்பால் நபும்சகமாகவும், மற்றுஞ்சில இம்மூன்று பால்களிலுமே பயன்படுத்த படக்கூடியவைபாகவும் அமைகின்றன. இதனாசிரியர் யாராக இருக்கக்கூடுமென்பது பற்றிய கருத்து வேற்றுமை காணப்பட்டாலும் இதனாசிரியர் பாணினியாக இருக்க முடியாது என்பது பொதுவாக எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட கருத்து.

7. ஸிக்ஷா

இதைப் பாணீனிய ஸிக்ஷா என்ற மற்றொரு பெயராலும் குறிப்பிடப் படுவது உண்டு. ஆயினும் இந்நூல் பாணினியால் எழுதப்படவில்லையென்பது பெரும்பாலான

ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இது ஒரு ஒலியனியல் நூல்.

பாணினி இலக்கணத்தின் கருமொழி **(Language of Description)**

இந்தோ ஆரியமொழியின் தொடக்க கால நிலையில் அமைந்திருந்த மொழியின் இலக்கணமே அஷ்டாத்தியாயி. பாணினியின் காலத்தில் அவர் வசித்து வந்த இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் உயர்மட்ட வகுப்பினரால் பேசப்பட்ட மொழியின் வர்ணனையிலக்கணம் அஷ்டாத்தியாயியென நம்பப்படுகிறது. இம்மொழியை பாணினி பாஷா–வென்று குறிப்பிடுகிறார். தான் வர்ணிக்கும் மொழியைப் பாணினி ஸம்ஸ்கிருதம் என்ற பெயரால் தனது இலக்கணத்தில் எங்கேயுமே குறிப்பிடவில்லை. (முதன்முதலாக ஸம்ஸ்கிருதம் என்ற சொல் மொழியின் தொடர்பாகப் பயன்படுத்தியுள்ளதை இராமாணயத்தில்தான் காணலாம்) ஆயினும், பாஷாவின் தனிப்பட்ட வர்ணனையிலக்கணம்தான் அஷ்டாத்தியாயியென்று கூறுவது பொருத்தமாகாது. காலத்தால் முற்பட்ட வேதமொழியின் மொழிக்கூறுகள் (சந்த³ஸி). இந்தியாவின் கிழக்குப்பகுதி (ப்ராசாம்), வடபகுதி (உதீ³சாம்) ஆகியவைகளில் காணப்படும் மொழிக்கூறுகள், ஆகியவைகளையும், தனது இலக்கணத்தில் வேறுபாடுகளாகப் பாணினி குறிப்பிடுகிறார். இவைகளைத்தவிர தனது காலத்துக்கு முற்பட்ட காலத்து இலக்கண நூலார்களின் கருத்துக்களையும் மொழிக் கூறுகளின் வேறுபாடுகளாகப் பாணினி குறிப்பிட்டுள்ளார்.

அஷ்டாத்தியாயிக்கு முன்பும் பல இலக்கண நூல்கள் இருந்தனவென்பதற்கு உட்சான்றுகள் இவ்விலக்கண நூலிலேயே கிடைக்கின்றன. தனது காலத்துக்கு முன் எழுந்த இலக்கண நூல்களில் காணப்படும் மொழிக் கூறுகளின் வேறுபாடுகளைப் பற்றிப் பேசும்போது பாணினி அந்தந்த இலக்கண நூலார்களின் பெயரைச் சுட்டி அவரது கருத்துப்படி இக்குறிப்பிட்ட சொல் இவ்வாறான வடிவம் பெறுமென்று கூறுகிறார். அவர்கள் பெயர்கள் வருமாறு ஆபிஸலி (6.1.91), கஸ்'யப (1.2.15; 8.4.67) க³ார்க்³ய (7.3.99; 8.3.20; 4.67), க³ாலவ (6.3.61; 7.1.74), சாக்ரவர்மன் (6.1.130; 4.170), ப⁴ாரத்³வாஜ (7.2.63), ஸ'ாகடாயன (3.4.111; 8.3.; 4.50) ஸாகல்ய (1.1016; 6.1.27; 8.3.19) ஸேனக (5.4.112), ஸ்போடாயன (6.1.23). பதஞ்ஜலி தனது மயாபாஷ்யத்தில் காஸக்ருத்ஸன (1.12.5–6) என்ற மற்றொரு இலக்கண நூலாரையும் குறிப்பிடுகிறார். ஆயினும் இவர்களுடைய இலக்கண நூல்களில் ஒன்றுகூட இப்போது கிடைக்கவில்லையென்பது குறிப்பிடத்தகுந்தது.

பாணினியென்று பெயர்

'பாணின' என்பவரின் மகன் அல்லது 'பனின்' என்பவரின் பேரன் அல்லது 'பணி' என்பவரின் மகன் என்று பலவிதமாக 'பாணினி' என்ற சொல்லின் இலக்கணம் (Tymology) கூறப்படுகிறது. 'பாணினி' என்ற பெயரைத்தவிர, த³ா க்ஷீ புத்ர ''தாஷி என்பவரின் மகன் ஸாலாதுரீய அதாவது ''ஸாலாதுர என்ற இடத்தில் பிறந்தவர்'' என்ற

மற்ற பெயர்களும் உண்டு.

பாணினியின் காலம்

கி.மு. 7ஆம் நூற்றாண்டிலிருந்து 4ஆம் நூற்றாண்டுவரை, அறிஞர்கள் இவருடைய காலத்தை ஏதோவொரு நூற்றாண்டைக் குறிப்பிடுகிறார்கள். பொதுவாக இவரது காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டாக இருக்கலாமென்று நம்பப்படுகிறது.

பாணினியின் பிறந்த இடம்.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள ஸாலாதுர என்ற கிராமம் பாணினியின் பிறந்தவிடமென்று நம்பப்படுகிறது. இது தற்சமயம் ப ாகிஸ்தானிலுள்ள லாகூர் என்ற இடமாக இருக்ககூடுமென்பது பெரு ம்பாலான கருத்து.

பாணினியின் சூத்திரங்களினமைப்பு

சுருக்கமாகக்கூறும் வகையிலமையும் சூத்திர நடையில் பாணினி தனது இலக்கணத்தில் விதிகளையமைத்துள்ளார். இதற்காகச் சில கலைச் சாதனங்களைத் (Technical Device) தனது இலக்கண நூலில் கைய ாண்டுள்ளார். அவைகள் வருமாறு

1) பிரத்தியாஹாரங்கள்

பாணினி பிரத்தியாஹாரம் அமைக்கும் விதத்தை ஒரு சூத்திரத்தில் விளக்கியுள்ளார். (1.1.71) ஒரு சூத்திரத்தில் தேவையான எழுத்துக்களைபெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து விவரித்துக் கூறாமல், அதற்குள்ளடங்கும் எழுத்துக்களெல்லாவற்றையும் சுருக்கமாக பிரத்தியாஹாரங்கள் மூலம் சுட்டலாம். இதற்காக ஸிவ சூத்திரங்களில் காணப்படுமெழுத்துக்களைப் பெரும்பாலும் பாணினி பயன்படுத்தியுள்ளார். காட்டாக அச் என்ற பிரத்தியாஹாரத்தைப் பயன்படுத்தும்போது ஸம்ஸ்க்ருத மொழியின் எல்லாவுயிரெழுத்துக்களையும் இதற்குள்ளடக்கிவிடலாம். இதைப்போன்ற ஹல் என்ற பிரத்தியாஹாரத்தைப் பயன்படுத்தி இம்மொழியின் எல்லா மெய்யெழுத்துக்களையும் சுட்டலாம். ஆகவே இவ்வெழுத்துக்களை மீண்டும் மீண்டும் கூறாமல் இப்பிரத்தியாஹாரங்களைப் பயன்படுத்தி சூத்திரங்களைச் சுருக்கமாக அமைத்துள்ளார்.

2) அநுபந்தம்

அனுபந்தம் என்ற சொல்லை பாணினி தனது இலக்கணத்தில் பயன்படுத்தவில்லை. இதைவிடச் சிறப்பான இத் என்ற சொல்லை இதனிடத்தில் பயன்படுத்தியுள்ளார். இ(போ) என்ற தாதுவிலிருந்தாக்கப்பட்டது இத் என்ற சொல். இது மறைதல் என்ற பொருளைச் சுட்டும். அடிச்சொல் (ப்ரக்ருதி), ஒட்டு (ப்ரத்யய), ஆகமம், பதிலி (ஆதே³ஸம்)

ஆகியவைகளுடன் அனுபந்தமெனப்படும் எழுந்து இணைக்கப்படும். விகரணம், குணம், விருத்தி, சுரம் போன்ற மாற்றங்களேற்படுவதை இவ்வனுபந்தம் சுட்டும். முழுமையான சொல்லாக்கப்பட்டவுடன் இவ்வனுபந்தம், இதன் பெயருக்கேற்ப (போதல்) மறைந்து விடும்.

எந்தெந்தவெழுத்துக்கள் 'இத்'தாகப் பயன்படுத்தப்படுமென்பதை சூ.1.3.2–9. ஆகியவைகளில் குறிப்பிட்டள்ளார். இச்சூத்திரங்களிலிருந்து, தேவநாகரியின் நெடுங்கணக்கில் காணப்படும் பெரும்பாலானவெழுத்துக்கள் இத்–தாகப் பயன்படுத்தப்படுமென்று தெரிய வருகிறது. எந்தெந்தச் சூழல்களில் எந்தெந்தவெழுத்துக்கள் 'இத்'தாக வருமென்பதையும் பாணினி சுட்டிக் கூறியுள்ளார். ஐ, ஔ என்ற இரண்டெழுத்துக்களைத் தவிர மற்றவெல்லாயிரெழுத்துக்களையும், த்^{3}, த்^{4}, ப்^{3}, ஹ என்ற நான்கையும் தவிர்த்த ஏனைய மெய்யெழுத்துக்களையும் இத்–தாகப் பாணினி பயன்படுத்தியுள்ளார். பிரத்தியாஹாரங்களாக்குவதற்கு அனுபந்தங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. (பார்க்க சிவசூத்திரம், பிரத்தியாஹாரம்)

சிவ சூத்திரங்களிலிருந்து மட்டுமல்லாமல் அஷ்டாத்தியாயியின் சூத்திரங்களிலிருந்தும் பிரத்தியாஹாரங்கள் அமைத்து, பாணினி தனது விதிகளில் பயன்படுத்தியுள்ளார். காட்டாக சூ.4.1.2–இல் வேற்றுமையுருபுகளைக் கூறுகிறார். இதிலிருந்து ஸுப் என்ற பித்தியாஹாரத்தை உண்டாக்கி எல்லா வேற்றுமையுருபுகளையும் சுட்டுவதற்குப் பயன்படுத்தியுள்ளார். இதே போல் திப் என்பது வினையோடிணைக்கப்படும் எல்லா இடவொட்டுக்களையும் சுட்டும். (2) த் என்ற அனுபந்தத்தை ஒருயிரெழுத்தையடுத்து இறுதியில் வைத்து ஆக்கப்படும் பிர்த்தியாஹாரம் அந்த ஒரேயொரு உயிரெழுத்தைச் சுட்ட பயன்படுத்தியுள்ளார். காட்டாக அத் என்ற பிரத்தியாஹாரம் அ என்ற உயிரெழுத்தையும் ஆத் என்ற பிரத்தியாஹாரம் ஆ என்ற உயிரெழுத்தையும் சுட்டுமாறு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதைப்போன்று, மெய்யெழுத்துக்களின் ஒரு வர்க்கத்தின் (வகுப்பு) முதலெழுத்தையடுத்து உ என்ற அனுபந்தத்தைச் சேர்த்தாக்கப்படும் பிரத்தியாஹாரம் அவ்வர்க்கத்தைச் சேர்ந்த எல்லாவெழுத்துக்களையும் சுட்டும். காட்டாக, சூ, சு என்ற பிரத்தியாஹாரங்களை, முறையே பின்னண்ணவொலிகள், அண்ணவொலிகள் ஆகியவைகளைச் சுட்டப்பயன்படுத்தியுள்ளார். (3) பெண்பாலைச் சுட்டும் ஒட்டான ஈ, ஙீன், ஙீப், ஙீஷ் என்ற மூன்று ஒட்டுக்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் முதலில் காணப்படும். இத்–தான ங் அவைகளெல்லாவற்றையும் பொதுவில் குறிப்பிடப் பயன்படுகிறது. ன், ப், ஷ் என்ற இத் எழுத்துக்கள் அவைகளின் செயற்பாடுகளின் வேறுபாடுகளைச் சுட்டப்பயன்படுகின்றன. ஆகவே ங் என்றவெழுத்தால் பெண்பாலொட்டுக்களைப் பொதுவாகப் குறிப்பிடப்படுகிறது. இதைப் போன்று சாப், டாப், ட3ாப் என்று பெண்பாலொட்டுக்களைச் சுட்ட ஆப் என்ற பொதுவான வொட்டைப் பயன்படுத்துகிறார் பாணினி.

சில அனுபந்தவெழுத்துக்கள் முதலிலும் வேறு சில இறுதியிலும் நிற்கும்.

ஒவ்வொரு அனுபந்தமும் தனித்தனிச் செயற்பாடு கொண்டது. சில அனுபந்தங்கள் சுரத்தைக் சுட்டுவதாகவும் காணப்படுகின்றன. காட்டாக ப் என்ற அனுபந்தம் அனுதாத்த சுரத்தைக் சுட்டுமென்று பாணினி கூறுகிறார். (3.1.4)

3)கணங்கள்

பார்க்க, க³ணபாடம், சொற்களை ஒரு வகுப்பிலமைத்துக் கூறும் போது, ஒரு விதியில்அவ்வகுப்பின் முதல் முதலில் நிற்கும் சொற்களை மட்டும் குறிப்பிட்டுவிட்டு காட்டாக அம்ஸ்வாத³ய (6.2.193) அவ்வகுப்பைச் சேர்ந்த மற்ற சொற்களிலும் அவ்விதி அவ்வாறே செயல்படுமென்பதைக் குறிப்பிட இயலும். இம்முறையினால், எல்லாச் சொற்களையும் தனித்தனியாக கூறுவதைத் தவிர்க்க முடிகிறது.

4) கலைச் சொற்கள்

கி⁴ ('இ' அல்லது 'உ' வீற்றுப் பெயரடிச் சொற்கள்), கு⁴ (த³ா, த⁴ா என்ற தாதுக்கள்) நதீ 'ஈ' அல்லது ஊ வீற்று பெண்பாற் சொற்கள்) போன்ற கலைச் சொற்களைப் பயன்படுத்தி, மேலே கூறியவெழுத்துக்களை ஈறாகக் கொண்ட, எல்லா அடிச் சொற்களையும் தனித்தனியாகக் கூறுவதைத் தவிர்த்திருக்கிறார் பாணினி. இக்கலைச் சொற்களைப் பயன்படுத்தி தனது சூத்திரங்களையமைக்கும்போது இவைகளெல்லாவற்றையும் ஒரே விதிக்குள்ளடக்குவது எளிதாகிறது.

5) அனுவிருத்தி

முதலில் கூறப்பட்ட விதிகளில் சில சொற்களைப் பயன்படுத்தி, அவைகளை அதையடுத்து வரும் சூத்திரங்களில் பயன்படுத்துவதில்லை. இச்சொற்களை அனுவிருத்தி மூலம், தேவையான இடங்களில் கொண்டு வந்து பொருள் விளக்குவது வழக்கம். இம்முறைக்கு அனுவிருத்தியென்று பெயர். பாணினி இம்முறையைப் பின்பற்றி சூத்திரங்களையமைத்தபோதிலும், அனுவிருத்தியென்ற சொல்லை அவர் பயன்படுத்தவில்லை. பிற்கால உரையாசிரியர்கள் இதை அனுவிருத்தியென்று கூறி பொருள் விளக்குகிறார்கள். இதன் மூலம் சொற்களை மீண்டும் மீண்டும் விதிகளில் பயன்படுத்துவதைத் தவிரிக்க இயலுகிறது.

இந்தவிதமாகத் தேவையான சொற்களை முந்திய சூத்திரங்களிலிருந்து அடுத்துவருஞ் சூத்திரங்களிலிணைப்பது தொடர்ச்சியாக அமையும். சில சமயங்களில் அவ்வாறு தொடர்ச்சியாக அமையாமல், அதாவது தேவையில்லாத இடங்களில் அச்சொற்களைத் தற்காலிமாக நிறுத்திவைத்துவிட்டு, மறுபடியும் தேவையெழும்போது அச்சொற்களைக் கொண்டு வந்து பொருள் காண்பதும் உண்டு. இதற்கு மண்டுகேப்லுதி 'தவளைக்குதி ' என்று பெயர். தலைப்புகளைத் தொடங்கும் அதிகார சூத்திரங்கள் அனுவிருத்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI.
LIBRARY.
Accession No 48967
Date of purchase:
Call Number: 491.2045

அஷ்டாத்தியாயியின் கருவிமொழி (Metalanguas)

கருமொழியை அதாவது ஸம்ஸ்கிருத மொழியினடிப்படையில் பாணினி கருவிமொழியையமைத்திருந்தபோதிலும் இவ்விரண்டுக்கும் வேறுபாடுகள் பல உண்டு.

(1) பாணினி தனது கருவி மொழியில், சொல்லின் தொடக்கத்தில் சில கூட்டு மெய்களையமைத்திருக்கிறார். காட்டாக ஹ்ம்யந்த (7.2.5), ம்வோஸ்ச (3.2.64) இச்சொற்களின் முதலில் காணப்படும் கூட்டு மெய்கள் ஸம்ஸ்க்ருத மொழியில் சொல்லின் முதலில் வாரா.

(2) ஸம்ஸ்கிருத மொழியில் ஸந்தி விதிப்படி, நிற்கும் சொல்லினிறுதி மூக்கொலி, வருஞ் சொல்லினுயிரெழுத்துக்கு முன்னால் பொதுவாக இரட்டிக்கும். காட்டாக ப்ரஹஸன் + உவாச ப்ரஹஸன்னுவாச. ஆனால் அஷ்டாத்தியாயின் கருவி மொழியில், இந்த இரட்டித்தல் காணப்படவில்லை. இகோ யணசி (யண் + அசி) (6.1.77).

(3) கருவி மொழியில் வினைச் சொற்களே பயன்படுத்தப்படவில்லை. பெயர்ச் சொற்களே காணப்படுகின்றன. இச்சூத்திரங்களின் பொருட்களை விளக்க, வினைச் சொல்லை நாமாகவே அவைகளுடன் சேர்க்க வேண்டும். காட்டாக வ்ருத்³தி⁴ ஆத்ஐச் (1.1.1) அதே³ங்கு³ண: (1.1.2) என்ற சூத்திரங்களில் வ்ருத்³தி, ஆத், ஐச் அத், ஏங், கு3ண: என்ற சொற்களே காணப்படுகின்றன. இவைகளுடன் அஸ்தி அல்லது ப⁴வதி, 'ஆகு' என்ற வினைகளை சேர்த்து விளக்க வேண்டும்.

(4) ஸம்ஸ்கிருத மொழியில் காணப்படும் எட்டு வேற்றுமைகள், கருவி மொழியில் காணப்படவில்லை. இதில் ஐந்தே ஐந்து வேற்றுமைகள்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் வேற்றுமை, 3ஆம் வேற்றுமை, 5ஆம் வேற்றமை, 6ஆம் வேற்றுடை, 7ஆம் வேற்றுமைகள் கருவி மொழியில் காணப்படுகின்றன. 2, 4, 8ஆம் வேற்றுமைகள் கருவி மொழியில் பயன்படுத்தப்படவில்லை.

கருமொழியில் சுட்டும் பொருட்களையே கருவிமொழியிலும் இவ்வேற்றுமைகள் சுட்டவில்லை. கருவிமொழியில் இவைகள் சுட்டும் பொருட்களை பாணினி விளக்கிக் கூறுகிறார். சூத்திரத்தில் பயன்படுத்தியுள்ள 6ஆம் வேற்றமைச் சொல் அதனிடத்தில் என்ற பொருளையும் (1.1.49) ''எது தொடர்கிறதோ அல்லது பின்னால் நிற்கிறதோ'' வென்ற பொருளை 5ஆம் வேற்றுமைச் சொல்லும் (1.1.67), 7ஆம் வேற்றுமைச் சொல் ''எது முன்னால் நிற்கிறதோ'' என்ற பொருளையும் (1.1.66) என அவைகள் சுட்டும் பொருட்களை வரையறுத்துள்ளார். இதை ஒரு எடுத்துக் காட்டுடன் விளக்குவோம். ''இகோ யண் அசி'' (5.1.77) என்ற சூத்திரத்தில் இக் 6ஆம் வேற்றமைச் சொல், யன் முதல் வேற்றுமைச் சொல், அசி 7ஆம் வேற்றுமைச் சொல் அச்–சுக்கு முன் நிற்கும் இக்–குக்குப் பதிலியாக யண்–வரவேண்டும் என்பது இச்சூத்திரத்தின் பொருள்.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No:
Date of purchase:
Call Number:

காலம், வினை நோக்கு ஆகியவைகளைச் சுட்டப் பயன்படுத்தியுள்ள லகாரம் கருவி மொழியில் மட்டும் காணப்படும் சொல் அவ்வாறே தத்திவொட்டுக்களான பி^{2} (= ஆயன), க்^{2} (= இன்) போன்ற ஒலிபன்களும் கருவிமொழியில் இவ்வாறு பயன்படுத்தப்படமாட்டாது.

அஷ்டாத்தியாயியில் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதிகளின் வகைகள்

1. ஸம்க்^{3}ஞா விதி

கலைச் சொற்கள் பற்றிய விதிகள் ஒரு குறிப்பிட்ட சொல் அல்லது எழுத்தைபொரு கலைச் சொல்லாக வரையறுக்கும் விதிகள் கிட்டத்தட்ட நூறு கலைச் சொற்களை பாணினி தனது இலக்கணத்தில் பயன்படுத்தியுள்ளார். (அ)ஸ'ப்த^{3} ஸம்க்^{3}ஞா (ஆ)அர்த^{2}ஸம்க்ஞா, (இ)த^{3}ர்ம ஸம்க்^{3}ஞா என்று ஸம்க்ஞாவை மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) ஒரு சொல் லுக்கு அளிக்கப்படும் கலைச் சொல். விருத்தி, ப்ராதிபதிகம் போன்றவை இதைச் சேர்ந்தது (2) ஒரு சொல்லின் பொருளினடிப் படையில் அழைக்கப்படும் கலைச் சொல், விபாஷா, லோப, லுக் போன்றவைகள் இதிலடங்கும் (3) ஒலியின் பண்பின் அடிப்படையில் கலைச் சொல்லாக வரையறுப்பது உதாத்தம், அனுதாத்தம் ஸ்வரித ம் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுக்கள்.

பெரும்பாலான கலைச் சொற்களை பாணினி, அஷ்டாத்தியாயியின் முதல் அத்தியாயத்தின் முதல் பாதத்திலேயே அளித்துள்ளார். இவைகள் இவ்விலக்கண நூல் முழுவதிலுமே பயன்படுத்தக்கூடியவை வேறுசில கலைச் சொற்களை எந்தெந்தச் சூழலில் பயன்படுத்தப்படுகிறதோ அந்தந்த அத்தியாங்களில் விளக்கியுள்ளார். காட்டாக, தொகையைப் பற்றிப் பேசும் 2ஆம் அத்தியாயத்தில், அவைகளைப் பற்றிய விளக்கங்களையும் கொடுத்திருக்கிறார். இதேபோல் ஒட்டுக்களைப் பற்றிய கலைச் சொற்களை 3.4.5 அத்தியாயங்களில் காணலாம்.

2. பரிபாஷா விதி

அஷ்டாத்தியாயியின் விதிகளைத் தகுந்த முறையில் விளக்குவதையோ அல்லது பயன்படுத்துவதையோ வரையறுக்கும் விதிகள் கிட்டத்தட்ட 75 பரி பாஷா விதிகளை பாணினி குறிப்பிடுகிறார். ஆனால், இதோடு 150க்கும் மேற்பட்ட பரிபாஷா விதிகளை இலக்கண மரபு ஒத்துக் கொள்கிறது. பரிபாஷா விதிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை வருமாறு.

அ) வாசனகீ–பாணினி வெளிப்படையாகத் தனது இலக்கண நூலில் குறிப்பிட்டுள்ளவை.

ஆ) க்^{3}ஞாபகஸித்^{3}த^{4}–அஷ்டாத்தியாயில் வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும் இத்தகைய விதிகளை பாணினி மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறாரென்பது அவருடைய இலக்கணத்திலிருந்து தெளிவாகிறது. அவ்வாறு பாணினி இவைகளை ஒப்புக்கொள்ளாமலிருந்திருந்தால்சிலசூத்திரங்கள்பொருளற்றதாக ஆகியிருந்திருக்கும்

என்ற உண்மையிலிருந்து இவைகளின் முக்கியத்துவம் விளங்கும்.

இ) ந்யாயஸித்த –இவைகள் வெளிப்படையானவையாகவும் அடி வழக்குச் சார்ந்துவைகளாகவும் (axiomatic) அமைகின்றன பரிபாஷாவென்ற சொல்லை பானினி பயன்படுத்தவில்லை. பரிபாஷா விதிகள் இலக்கண விதிகளைத் தகுந்த முறையில் விளக்குவதற்கு உறுதுணையாக அமைகின்றன.

3) விதி

பொதுவாக இலக்கண நூலில் காணப்படுபவை.

4) நியம விதி

ஒரு குறிப்பிட்ட விதியின் செயற்பாட்டின் எல்லையை வரையறுக்கும் விதி

5) ப்ரதிஷேத[4] அல்லத நிஷேத[4] விதி (தடுப்பு விதி)

ஒரு குறிப்பிட்ட சூழலில் செயற்படக்கூடிய விதியை அவ்விடத்தில் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கும் விதி. (1)ப்ரஸஜ்ய ப்ரதிஷேத (2)பர்யுதாஸ என்று இருவகையாக இவ்விதிகளைப் பிரிக்கலாம்.

(அ) ப்ரஸஜ்யப்ரதிஷேத[4] – ஓரிடத்தில் பயன்படுத்தக்கூடிய விதியை 'நஞ்' என்ற எதிர்மறையிடைச் சொல்லை ஒரு செயலைச் சுட்டுஞ் சொல்லோடிணைத்து, அவ்விதி செயற்படாமல் தடுப்பது காட்டாக 6.4.3 நாமி, 6.4.4. ந திஸ்ரு சதஸ்ரு.

ஆறாம் வேற்றுமையுருபான 'நாம்'உக்கு முன் நிற்கும் அடிச்சொல்லிறுதியுயிர் நெடிலாகுமென்று 6.4.3 விதிக்கிறது. 6.4.4. திஸ்ரு. சதஸ்ரு என்ற சொற்களுக்குப்பின் 'நாம்' நிற்கும்போது, அவ்வடிச் சொற்களினிறுதியுயிர் நெடிலாகாது என்ற விதிக்கிறது.

(ஆ) *பர்யுதாஸ* – ஓரிடத்தில் செயல்படக்கூடிய விதியை அங்கு செயற்படாமல் தவிர்க்கும் நோக்கத்துடன் அமைக்கும் தடுப்பு விதி. இங்கு, எதிர்மறை இடைச் சொல்லான 'நஞ்' பொதுவாக, ஒரு பெயர்ச் சொல்லோடிணைத்து எதிர்மறைத் தொகையாக்கப் பயன்படுத்தப்படும். மேலே குறிப்பிட்ட ப்ரஸஜ்யப்ரதிஷேதத்தில் காணப்படுகிறபடி தனியாக 'நஞ்' நிற்காது. காட்டாக ஸுட் அநபும்கஸ்ய (1.1.43) நபும்சகச் சொற்களைத் தவிர்த்த (அநபும்ஸகஸ்ய) மற்ற விடங்களில் 'ஸுட்' வரும். இங்கு 'நபும்ஸக' என்ற பெயர்ச் சொல்லோடு 'நஞ்' ணைக்கப்பட்டு ஒரு தொகையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

6. விப⁴ாஷா (விருப்பு விதி)

ஒரு குறிப்பிட்ட விதியை விருப்பாகச் செயற்படுமாறு அமைக்கப்பட்டிருக்கம் விதி விருப்பு விதியெனப்படும். ''ந வா இதி விப4ாஷா (1.1.44)'' அல்லது இல்லை'' என லிபாஷாவை வரையறுக்கிறார் பாணினி. விருப்பு விதியை மூன்று வகையாகப் பிரிக்கலாம். (அ) ப்ராப்தே (ஆ)அப்ராப்தே (இ) உப⁴யத்ர. (அ)கட்டாயமாகச் செயற்படக்கூடிய ஒரு விதியை விருப்பாக ஆக்குவது. பார்க்க (8.1.45) (ஆ) முதலில் குறிபிடப்படாத விதியை, விருப்பு விதியாக முதன்முதலில் விதிப்பது (7.2.6 3.90) (அ)மேலே கூறப்பட்ட இரண்டையுமே விருப்பாக ஆக்குவது.

இவைகளைத் தவிர, மற்றொரு விருப்பு விதியையும் உரையாசிரியர் கள் கூறுகிறார்கள். இது ''வ்யவஸ்தி³த விப⁴ாஷா'' எனப்படும். விருப்பாக விதிக்கப்பட்ட ஒரு விதி. செயற்படும் எல்லாவிடங்களிலும் இவ்விதி கட்டாயமாக செயற்படாது. ஆனால் ஒரு சில இடங்களில் மட்டும் இவ்விருப்புவிதி கட்டாயமாக செயற்படும். வேற இடங்களில் இது செயற்படாது. காட்டாக 1.4.3. ஈ, ஊ, வீற்றுச் சொற்கள் (பெண்பால்) 'நதீ' என்ற ஸம்க்³ஞா பெறும் எனக் கூறுகிறது. இதையடுத்து வரும் விதி 'இயங்' 'உவங்' என்ற ஆதேசங்களோடு வரும். 'ஈ' அல்லது 'ஊ' வீற்றுச் சொற்கள் 'நதீ' ஆகாது என்று கூறுகிறது. மேலே கூறப்பட்ட சொற்கள் 'ஆம்' என்ற வேற்றுமையுருபுக்கு முன் நிற்கும்போது 'இயங்' அல்லது 'உவங்' ஒடு வந்தாலும் 'நதீ' என விருப்பாக அழைக்கப்படும் என்ற விருப்பு விதி (1.4.5) (மேலும் பார்க்க 2.4.56 3.2.124)

விப⁴ாஷா, வா, அன்யதரஸ்யாம், ப³ஹுலம் என்ற பல சொற்களை விருப்பு விதியயமைக்குமிடங்களில் பாணினி பயன்படுத்தியுள்ளார். இச்சொற்களைத் தவிர காலத்தால் முற்பட்ட சில இலக்கண நூலார்களின் கருத்துப்படி இச்சொல் இவ்வாறாக்கப்படுமென்று கூறி மற்றொரு வகையிலும் விருப்பு விதிகள் அமைந்துள்ளதை அஷ்டாத்தியாயியில் காணலாம்.

7) நிபாதன விதி

விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்களை, தருவிக்கப்பட்டதாக ஆக்கும் விதிகள் சொல் தருவிக்கப்படும் படிப்படியான நிலைகளை மற்ற செயற்பாட்டு விதிகள் (operational rule) கூறுவது போல் விளக்காமல் சொற்களை அதன் முழுமையான உருவத்தில் ஆக்கப்பட்டதாகக் கூறும் விதிகள் (பார்க்க 6.4.174)

8. அதிகார விதி

தலைப்புகள் விதிகளின் செயற்பாடு ஆகியவைகளை ஒருங்கே ஓரிடத்தில் அமைக்கப்பயன்படுகிறது இவ்விதி.

வள்ளதமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No 16220

9)அதிதேஸ

ஒரு விதியின் குணம் அல்லது தன்மையை மற்றொன்றிலும் செயற்படு மாறு அமையும் விதி. பொதுவாக, விதி என்ற தத்திதவொட்டைப் பயன்படுத்தி பாணினி இவ்விதிகளை யமைத்துள்ளார். காட்டாக லேடோ லங்வத் (3.4.85) சில இடங்களில் வத் இல்லாமலும் காணப் படுகிறது. காட்டாக க்3ாங் சூடாதிப்3ப4யோ அஞ்வின் விதி (1.2.1) ; வத்3ப4ாவ என்ற சொற்றொடரில் முடியும் எல்லா விதிகளிலும் இந்த அதிதேஸம் காணப்படுகிறது. ''ஸ்த3ானிவத்3ப4ா5வ (1.1.56–59) ஸன்வத்3ப4ா3 வ (7.4.93), அந்தாதி3வத்3ப4ாவ (6.1.85) அபூ4ததத்3ப4ாவ (5.4.50) முதலியவைகள் இதற்கு எடுத்துக்காட்டாகும். அதி தேசங்களில் ஸ்த3ாநிவத்3 பாவம் மிகவும் முக்கியமானது. இது இருவகைப்படும்.

அ) *ருபாதிதேஸம்* – இதில் ஸ்த3ானி எனப்படும் மூலவடிவத்தை ஆதேஸம் எனப்படும் துணைமை வடிவத்தின் இடத்தில் (secondary form) பதிலியாகக் கொண்டு வருவது இதற்கு ரூபாதிதேஸம் எனப்படும் (ஆ)மற்றொரு வகையான ஸ்தானிவத்3 பாவம் கார்யாதிதேஸம் எனப்படும். ஸ்த2ானி அதாவது மூல வடிவத்துக்கு விதிக்கப்படும் செயற்பாடு, அதற்குப் பதிலியாக அமையும் வடிவத்திலும் செயற்படுவது.

விதி எனப்படும் பொதுவான செயற்பாடு விதிகளைப் பற்றி இங்கு சிறிது விளக்குவது பொருத்தமாக இருக்கும். இவைகள் ப்ரத்யயம் (ஒட்டு) ஆகமம், ஆதே'ஸம்–(பதிலி), விகாரம் (மாற்றம்), லோபம் (கெடுதல்) ஆகியவைகளைப் பற்றியது. ப்ரத்யய ஒட்டுக்களைபிணைத்துச் சொற்கள் தருவிப்பது பற்றியது, ஆகமம் விகரணம், ஆகமம் என்று இருவகையானது. விகரணம் தாதுக்களுடன் இணைக்கப்பட்டு வினையடிச் சொல்லாக்கப்படுவதைப் பற்றி விளக்கும். விகரணங்களை ஒட்டுக்களெனக் கருதப்படும். இவைகள் அடிச்சொல்லோடிணைக்கப்பட்ட போதிலும் தனது தனித்தன்மையைத் தக்கவைத்துக் கொள்ளும். ஆனால் ஆகமங்களை ஒட்டுக்களெனக் குறிப்பிடுவதில்லை. அவைகள் ஓரடிச் சொல்லோடிணைக்கப்படும்போது அதோடு ஒரு பகுதியாகவே மாறிவிடும். தனது தனித்தன்மையைத் தக்கவைத்துக் கொள்ளாது.

ஆதேஸம் – பதிலிகளைப் பற்றிக் கூறுபவை

லோபம் – கெடுதல், மறைதல்

காணப்படாதது (அத3ர்ஸவம்) லோபம்(கெடுதல்) என்று இதை பாணினி விளக்குகிறார். (1.1.60) 'லுக்', 'ஸ்லு', 'லுப்', 'லோப' என்ற சொற்களை இதற்குப் பாணினி பயன்படுத்துகிறார். இவற்றுள் ஒட்டுக்கள் கெடுதலைப் பற்றிக் கூறும்போது 'லுக்'' ஸ்லு', 'லுப்' என்ற சொற்களையும் ஒட்டுக்களல்லாத மற்றவைகளின் மறைதலைப் பொதுவாக லோப என்ற சொல்லாலும் குறிப்பிடுகிறார். ஒட்டுக்களின் கெடுதலைச் சுட்டும் 3 சொற்களில் 'ஸ்லு' என்ற சொல், ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த தாதுக்களுக்குப்பின் நிற்கும் ஒட்டுக்கள் கெடுதலைச் சுட்டும்போது மட்டுந்தான் பயன்படுத்தியுள்ளார். தனது

மூல எண்ணையும், பாலையும் தக்க வைத்துக் கொள்ளும் தத்திவொட்டுக்கள் கெடுதலைப் பற்றிப் பேசுமிடங்களில் 'லுப்' என்ற சொல்லைப் பயன்படுத்தி விளக்கியுள்ளார். 'ஸ்லு', 'லுப்' என்ற இரண்டையும் பயன்படுத்த இயலாத மற்ற இடங்களான தாதுக்கள் அல்லது பெயரடிச் சொற்கள் ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் ஒட்டுக்கள் கெடுதலைப்பற்றி விளக்கும்போது 'லுக்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இவைகளைத் தவிர்த்த ஏனைய இடங்களில் கெடுதலை 'லோபம்' என்ற சொல்லால் விளக்குகிறார். 'லுக்',' ஸ்லு', 'லுப்' என்ற சொற்களைப் பயன்படுத்தி விதிக்கப்பட்டிருக்கும் 'கெடுதல்' ஒட்டு முழுமையாகக் கெடுதலை விதிக்கிறது, ஒட்டு அல்லது ஒட்டு அல்லாதது (non-suffix) ஆகியவைகளின் ஒரேயொரு பகுதி மட்டும் கெடுதலை லோப என்ற சொல்லைப் பயன்படுத்தி விதியமைத்துள்ளார்.

அஷ்டாத்தியாயியின் அமைப்பு

அஷ்டாத்தியாயி கிட்டதட்ட 4000 சூத்திரங்களை உள்ளடக்கிய எட்டு அத்தியாயங்கள் கொண்டது என்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். இவ்வத்தியாயங்களில் விளக்கப்பட்ட பொருட்கள் வருமாறு.

அத்தியாயம் ஒன்று

ஸம்க்³ஞா, பரிப⁴ாஷா விதிகள், அதிதேஸ விதிகள், ஆத்மனேபதம் பரஸ்மைபதம் பற்றிய விதிகள், காரகங்கள் பற்றிய விதிகள்.

அத்தியாயம் இரண்டு

தொகைகள் பற்றிய விதிகள் வேற்றுமையுருபுகள், தொகைகளின் எண்:பால் பற்றிய விதிகள், தாதுக்களின் பதிலிகள் பற்றிய விதிகள், லுக்–கினால் கெடுதல் பற்றிய விதிகள்

அத்தியாயம் மூன்று

'ஸன்' முதலியவொட்டுக்களிணைத்துத் தருவிக்கப்பட்ட தாதுக்கள் பற்றிய விதிகள், 'க்ருத்' ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொற்கள் தொடர்பான விதிகள், 'திங்' ஒட்டுக்களிண்ணத்தாக்கப்படும் வினைகள் தொடர்பான விதிகள்

அத்தியாயம் நான்கும் ஐந்தும்

வேற்றுமையுருபுகள் (ஸுப்) இணைத்தாக்கப்படும் சொற்கள் தொடர்பான விதிகள், பெண்பாலொட்டுக்கள் தொடர்பானவை, தத்³ தி⁴தவொட்டுக்களிணைத்தாக்கப்பட்ட பெயர்ச் சொற்கள் பற்றிய விதிகள்.

அத்தியாயம் ஆறும் எழும்

இரட்டித்தல், உயிராக்கம் (ஸம்ப்ரஸாரணம்) ஸந்தி(ஸம்ஹித), ஸுட் ஆகமம், சுரம், ஆடிச் சொல்லின் ஒலியனியல் செயற்பாங்கு தொடர்பான விதிகள், ஒட்டுக்கள், ஆகமங்களில் செயற்பாங்கு பற்றிய விதிகள்.

அத்தியாயம் எட்டு

சொற்களின் இரட்டிப்பு, பதங்களின் சுரம், பதம் தொடர்பான ஒலியனியல் செயற்பாங்கு, பதங்களல்லாதவைகள் தொடர்பான பலவிதமான செயற்பாங்குகள் பற்றிய விதிகள்.

ஸபாத ஸப்தாத்⁴யாயி 'முதல் ஏழு அத்தியாங்களும் ஒரு பாதமும் கொண்டது'. த்ரிபாதி³ 'கடைசி மூன்று பாதங்களைக் கொண்டது' என்று அஷ்டாத்தியாயியை அதமைப்பின் அடிப்படையில் இரு தொகுதிகளாகப் பிரிக்கலாம். இந்த இருவகைப் பாகுபாடு 8.2.1 இலிருந்து தெளிவாகப் புலனாகிறது. இறுதியிலமையும் மூன்று பாதங்களில் விதிக்கப்பட்டுள்ள விதிகள் அதற்கு முன்னாலுள்ள ஏழு அத்தியாங்கள் எட்டாம் அத்தியாயம் முதல் பாதம் ஆகியவைகளைப் பொறுத்தவரையில் செயலற்றவையென்று 8.2.1 கூறுகிறது (பூர்வத்ராஸித்³தம்)

பாணினியின் இலக்கணத்தில் கையாண்டுள்ள பொதுவான செயல்முறைக்கொள்கைகள்

வழக்கிலிருக்கும் சில சொற்களில் காணப்படும் பொதுத் தன்மையின் (ஸாமான்ய) அடிப்படையில் அவைகளைபொரு தொகுதியாக எடுத்துக்கொண்டு அவைகளின் பொதுத் தன்மையைச் சுட்ட விதிகளைபமைத்துள்ளார். இவற்றுள், சில சொற்களில் காணப்படும் சிறப்புத் தன்மையைச் சுட்ட அவைகளை இதன் உட்பிரிவாக அமைத்துள்ளார். ஆகவே இவ்விலக்கணத்தில் பாணினி, பொதுவான விதிகளை (உத்ஸாகர்)பமைத்து அவைகளைச் சார்ந்த சில புறனடை விதிகளை (அபவாத)யும் அமைத்துள்ளார். உத்ஸர்க விதிகள் விரிவான செயல் எல்லை (broad demain) கொண்டதாகவும் அவைகளின் தொடர்பான புறனடை விதிகள் அதற்குட்பட்டதாகவும் காணப்படுகிறது. உத்ஸர்க விதி, அபவாத விதி இரண்டையுமே ஒரு சூழலில் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலை ஏற்படும்போது உத்ஸர்கவிதியை விட அபவாத விதிதான் பலம் பொருந்தியது. ஆகவே இச்சூழலில் அபவாத விதியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறது ஒரு பரிபாஷா விதி. காட்டாக, 6.1.77 முழு உயிர்களான இ,உ,ரு,ல் ஆகியவைகளுக்குப்பின் ஒருவிரெழுத்து நிற்கும்போது அவ்வுயிரெழுத்துக்களுக்குப் பதிலிபாக முறையே அரையுயிர்களான ய்,ப்,ர்,ல் வரும் என்று கூறுகிறது. (இகோ யணசி) ரூ.6.4.77 இவ்விதிக்குப் புறனடையாக அமைகிறது. 'ஈ' அல்லது 'ஊ 'வீற்றுச் சொற்களுக்குப்பின் ஒருயிரெழுத்தை முதலில் கொண்ட ஒட்டு நிற்கும்போது, இறுதியுயிரான 'ஈ' அல்லது' ஊ'வுக்குப் பதிலியாக முறையே 'இயங்' 'உவங்' வருமென்று இச்சூத்திரம் கூறுகிறது. அயலாத விதி, உத்ஸர்க விதியைச் செயலற வைக்குமென்ற (blocking)பரிபாஷாவின் படி இங்கு 6.4.77தான் செயற்படும். 6.1.77

அல்ல.

அந்தரங்க (அகக்கட்டுப்பாடு), ப[1]ஹிரங்க[3] (புறக்கட்டுப்பாடு) செயற்பாங்கு

இவ்விரண்டின், அகக்கட்டுப்பாட்டுக்குளடக்கிய விதி, முதலில் செயற்படும் (அந்தரங்கம் கார்யம்) அதன்பிறகுதான் பஹிரங்கவிதி செயற்படும். காட்டாக வஸதியத்ர (வஸதி > வஸது+அத்ர) 'அவன் இங்கு வசிக்கட்டும்'. லோடோ லங்வத் (3.4.56) 'லோட்'டின் அடிப்படையொட்டுக்களை (basic endings) லங் (நிகழ்கால ஒட்டு) போன்று கருதப்படுமென்று இச்சூத்திரம் கூறுகிறது. இகோ யணசி (6.1.77). முழு உயிருக்கும் அரையுயிர் பதிலியாவதை விதிக்கும். மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டில் அதாவது வஸத்வத்ர · வஸதி + வஸது (3.4.86) அத்ர · வஸத்வத்ர (6.1.77) என்ற படிநிலையில் ஆக்கவேண்டும். இதில் 3.4.86 அந்தரங்க விதி, 6.1.77 ப[1]ஹிரங்க விதி.

கட்டாயமாக செயற்படுவது, கட்டாயமாக அல்ல. (நித்ய, அநித்ய) செயற்பாங்கு

$க_1$, $க_2$ என்ற இரண்டு விதிகளுமே ஒரு குறிப்பிட்ட சூழலில் செயற்படக்கூடுமென்று ஒரு நிலையை வைத்துக் கொள்வோம். இவைகளிலொன்று நித்ய–மாகவும் மற்றொன்று அநித்யமாகவும் கீழ்க்கண்ட நிபந்தனைக்குள்ளமையும்போது கருதப்படும். $க_1$ஐப் பயன்படுத்திய பிறகு '$க_2$' செயற்படமுடியாத நிலையேற்படுமானால், அதாவது '$க_1$' செயற்படுவதால் '$க_2$' செயற்படக்கூடிய சூழல் மறைந்து அல்லது நீக்கப்பட்டு விடுகிற நிலை. அதே சமயம் '$க_2$' செயற்பட்ட போதிலும் '$க_1$' செயற்படக்கூடிய நிலை நீடிப்பது இவ்விரண்டு சூழலில் '$க_1$' நித்யமாகவும் '$க_2$' அநித்யமாகவும் கருதப்படும். இவ்விரண்டில் 'க' (அதாவது அநித்ய கட்டாயமாகச் செயற்படாத)வுக்கு முன்பு '$க_1$' (நித்ய கட்டாயமாகச் செயற்பட வேண்டியது) ஐப் பயன்படுத்த வேண்டும். இதை 'துத்[3]' தாதுவிலிருந்து வினைச்சொல் தருவிப்பதைக் காட்டாக எடுத்துக்கொண்டு விளக்குவோம். 'துத்[3]' தோடு திங் இணைக்கும் நிலையில் இரண்டு விதிகளை ஒரே சமயத்தில் பயன்படுத்தக்கூடிய நிலையைக் காணலாம். சூ.3.1.77ஐப் பயன்படுத்தி தாதுவோடு 'ஸ' இணைப்பது 7.3.86ஐப் பயன்படுத்தி 'துத்[3]' இன் 'உ'வுக்கு குணவெழுத்து பதிலியாக இணைத்தல், இவ்விரண்டுக்குள், 'குண'வெழுத்து ஒ பதிலியாக வந்தபிறகும் 'ஸ'வை தாதுவோடு இணைக்க முடியும். கர்த்தாவைச் சுட்டும் ஸார்வதாதுகவொட்டு இச்சூழலிலும் 'துத்[3]'ஐத் தொடர்ந்து வரமுடியும். 3.4.86இன்படி 'து' நிகழ்காலவொட்டான 'தி' போன்று செயற்படும். இதைப்போல் 'தோத்'ஐயும் 'துத்[3]' போன்று கருதப்படும் (1.1.56). ஆனால் 'ஸ'வை முதலில் இணைத்தால் குணம் பதிலியாக வராது. 'ஸ' ஒரு 'ஙித்'ஆகும் (1.2.84). ஆகவே 7.3.66–இல் விதிக்கப்பட்ட குணம் பதிலியாக வராது (1.1.5) ஆகையால் குணவெழுத்து பதிலியாகும் என்ற விதியான 7.3.86 (நித்யமானது) முதலில் செயற்படவேண்டும்.

4) விப்ரதிஷேதே[4] பரம் கார்யம் (1.4.2)

ஒன்றுக்கொன்று முரண்பாடான இருவிதிகள், பொதுவிதி (உத்ஸர்க) புறனடை (அபவாத) என்ற தொடர்புக்குள் அமையாதவைகளாக நிற்கும் போது அவ்விரண்டையுமே மாறி மாறிப் பயன்படுத்தலாம் என்று விதியமைக்கப்பட்டுள்ளது.

காட்டாக 3.1.133 'ண்வுல்', 'த்ருச்' என்ற வொட்டுக்களை தாதுக்களுடவிணைப்பதுபற்றிய விதி, ஆனால், ஒரே சமயத்தில் இரண்டு ஒட்டுக்களையும் இணைத்தல் கூடாது. ஒரேயொரு ஒட்டுத்தான் இணைக்க முடியும். மேலே கூறிய விதி (அதாவது 3.1.133) இல் ஓட்டுக்களை மாறிமாறி இணைக்க விதி வகுத்துள்ளது. ஆயினும் ஒன்றுக்கொன்று முரண்பாடான செயல்பாங்கு கொண்ட இரு விதிகளில் ஒன்றேயொன்றைத்தான் பயன்படுத்தவியலும் என்ற சூழலும் காணப்படுகிறது. இத்தகைய சூழலில் எந்த விதியைப் பயன்படுத்த வேண்டுமென்பதற்கும் விதியமைத்துள்ளார் பாணினி. இத்தகைய சூழலால் ஏற்படும் குழப்பதைத் தவிர்க்க பாணினி, சூத்திரங்களை (இந்தவிடங்களில்) ஒரு குறிப்பிட்ட வரிசைக் கிரமத்தில் அமைத்துள்ளார். இவைகளுள் எது முதலில் செயற்படுமென்பதை 1.4.2 பரிபாஷா விதி விளக்குகிறது. இந்தப் பரிபாஷா விதியின்படி முரண்பாடான இரு விதிகளுள் வரிசைக் கிரமத்தில் பின்னால் நிற்கும் விதியை அவ்வரிசையில் முதலில் நிற்கும் விதி செயற்படுவதற்கு முன்பே பயன்படுத்த வேண்டும்.

5) பூர்வத்ராஸித்தம் (8.2.1)

8.2.1இலிருந்து அத்தியாயத்தில் கடைசி வரையில் இந்த விதி பொதுவாகச் செயற்படும். இப்பகுதிக்கு 'த்ரிபாதி' என்று பெயர். இப்பகுதியில் காணப்படும் சூத்திரங்களுள், பின்னால் விதிக்கப்பட்டுள்ள விதிகள், அதற்கு முன்னால் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் செயல்பாங்கைப் பொறுத்தவரையில் செயலற்றவை. அதாவது நிகழாதவையென்று கருதப்படும். இத்தகைய விதியின் செயல்பாங்கு நிறுத்தம் (suspension of rule) கடைசி மூன்று பாதங்களைத் தவிர, வேறு அத்தியாயங்களிலும் செயற்படுவது உண்டு. 'த்ரிபாதி'யில் காணப்படும் விதிகள், அதற்கு முன்னால் அமைந்துள்ள முதல் ஏழு அத்தியாங்களிலும் 8வது அத்தியாயத்தின் முதல் பாதத்திலும் கூறப்பட்ட விதிகளைப் பொறுத்தவரையில் நிகழாதவையென்று கருதப்படும். ஆகவே, த்ரிபாதியின் விதிகள் அவைகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் விதிகளைப் பொறுத்த வரையில் இல்லாதவைகளாகும் (non-existent) 'அஸித்த' (தற்காலிகமாக நிறுத்திவைத்தல்) விதிகளின் விளைவு வருமாறு (1) 'த்ரிபாதி'யின் ஒரு விதியைப் பயன்படுத்தி ஒரு சொல்லைத் தருவித்தால், 'த்ரிபாதி'க்கு முன்னாலமைந்திருக்கும் விதியை அத்தருவிக்கப்பட்ட சொல்லில், செயற்படுத்த முடியாது. அதற்கான சூழல் காணப்பட்டாலும் செயற்படுத்த முடியாது. (2) முதல் ஏழு அத்தியாயங்கள், எட்டாம் அத்தியாயத்தின் முதல் பாதம் ஆகியவைகளின் விதிகள் செயற்பட்ட பிறகுதான் த்ரிபாதி–யின் விதிகளைச் செயற்படுத்த முடியும். அவ்வாறே, த்ரிபாதியிலமைக்கப்பட்டுள்ள விதிகளில், முதலில் காணப்படும் விதிகளை செயற்படுத்திய பிறகுதான் பின்னால் அமையும் விதிகளை செயற்படுத்த வேண்டும். இதை ஒரிரு எடுத்துக் காட்டுக்களின் மூலம் விளக்குவோம்.

'அஸ்மை' என்ற (நான்காம் வேற்றுமையொருமை) மாற்றுப்பெயரினிறுதி 'ஐ'யைத் தொடர்ந்து ஒருயிரெழுத்து நிற்கும்போது, இவ்விறுதி 'ஐ','ஆய்' ஆகும் (3.1.78) அதாவது

அஸ்மை ⟶ அஸ்மாய் ஆகும். 8.3.19 சொல்லினீறான 'ய்'கெடும் என்று விதிக்கிறது. ஆகவே இச்சொல் அஸ்மா என்றாகிறது. இப்போது இச்சொல்லைத் தொடர்ந்து உயிரெழுத்தை முதலில் கொண்ட ஒரு சொல் வருமானால், பொதுவாக 'ஸந்தி'விதியின் படி நிகழும் மாற்றங்கள் ஏற்படாது. அஸ்மா+உத்^{3}த^{4}ர:அஸ்மா உத்^{3}த^{4}ர அஸ்மா+ஆஹர:அஸ்மா ஆஹர இவைகள் அஸ்மோத், அஸ்மாஹர என்று ஆகாது. அதாவது 6.1.87 விதிக்கும் குணவெழுத்து பதிலியாக வருவது 6.1.101 விதிக்கும் நெடில் பதிலியாக வருவது ஆகிய ஸந்தி விதிகள் இங்கு செயற்படாது. ஆகவே, 8.3.19, அதற்கு முன்னாலமைந்துள்ள 6.1.87 101 சூத்திரங்களைப் பொறுத்தவரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும். இவ்வாறு அதன் செயலாக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதால், 6.1.87 101 ஸந்திவிதிகள் செயற்படுவதற்கான சூழல் ஏற்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதாவது 8.3.19–ஐ பயன்படுத்தினால் உண்டாகும். இறுதி 'ய்' கெட்டதாக் கருதப்படமாட்டா.

பாணினியின் சொல்லாக்க முறை

ஸம்ஸ்கிருத மொழியின் கூற்றுகளையும் அவற்றின் உறுப்பினர்களையும் ஆக்கப்படும் முறையை தனது இலக்கண நூலான அஷ்டாத்தியாயியில் விளக்கியுள்ளார். அடி (base) அதாவது ஒட்டுக்களிணைக்கப்படுவதற்கு முன்பு நிற்கும் வடிவம் (அங்க 1.4.13) ஒட்டுக்கள் (3.1.1), பதம் (தொடரியல் சொல் 1.4.14), வாக்கியம் ஆகியவைகள் கூற்றுகளின் உறுப்பினர்களாகக் கருதப்படுகின்றன. அடி–இருவகைப்படும் (அ) வினையடி (தாது 1.1.1 3.1.32), (ஆ) பெயரடி (பிராதிபதிகம் 1.2.45–46) இவ்விரண்டையும் மூலஅடி, ஆக்கப்பட்ட அடி என்று திரும்பவும் இருவகையாகப் பிரிக்கலாம். ஸுப் (வேற்றுமையுருபுகள் (4.1.2) அல்லது திங் (மூவிடப் பெயர் ஒட்டுக்கள்) (3.4.78) இணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட முழுமையான வினைச் சொல், பெயர்ச் சொல்லுக்கு பதம் என்று பெயர். ஒட்டுக்கள் இருவகையானவை (அ) தாதுக்களுடனிணைக்கப்படுபவை. இவைகள் நான்கு வகைப்படும் (1) முதல் தாதுவுடனிணைக்கப்படும் ஒட்டுக்கள். இவைகள் துணை வினைக்கு (நாமதாது, இயக்குவினை போன்றவை) ஆக்கப்பயன்படுபவை (2) விகரணங்கள் (conjugational sign) (3)திங்– (மூவிடப் பெயர் ஒட்டுக்கள்) (4)க்ருத் ஒட்டுக்கள் ஆகியவை இவைகள் தாதுக்களுடனிணைக்கப்படுபவை (ஆ) தத்திதவொட்டுக்கள் இவைகள் பிராதிபதிகங்கள் அல்லது பெண்பாற் சொற்களுடனிணைக்கப்படுபவை (4–5)

ஒட்டுக்கனிணைப்பது பற்றிப் பேசும்போது, பெரும்பாலும், எந்தெந்தப் பொருளைச் சுட்டும் சூழலில் இவைகள் அடிச் சொற்களுடவிணைக்கப்படும். இவைகளோடு எவ்வகையான சொற்கள் அல்லது ஒட்டுக்கள் எந்தெந்தப் பொருளைச் சுட்டும் போது நிற்கும் என்பதையும் பாணினி விளக்கியுள்ளார்.

ஒலியழுத்தம் இடல் (Accentuation)

ஒரு பதத்தின் சுரம் தொடர்பானவை, ஒரு கூற்றின் தொடர்ச்சிய ாக நிற்கும் பதங்களின் சுரம் தொடர்பானவையென்று சுரம் பற்றிய விதிகளை இருவகையாக பாகுபடுத்தலாம்.

சொற்கள், அவைகளின் உறுப்பினர்கள் ஆகியவைகள் தத்தமது சுரத்துடன் காணப்படும். சொற்கள் ஆக்கும் ஒவ்வொரு படிநிலையிலும் தனக்கே உரிய சுரத்தை நீக்கி ஆக்கப்படும் சொற்களுக்குத் தக்கவாறு ஒலியழுத்தம் இடுதல் வழக்கம் ஆகவே, தாதுக்கள், ஒட்டுக்கள், பதங்கள் ஆகியவைகளின் அவைகளுக்குரிய சுரங்களை குறிப்பிட்டுவிட்டு, எந்தெந்த சூழல்களில் இவைகளில் மாற்றமேற்படுகிறது என்பதையும் பாணினி கூறுகிறார்.

ஒரு பதம், பொதுவாக அனுதாத்த அசை கொண்டது (6.1.158) தாதுக்கள் இறுதியசையில் உதாத்த சுரம் கொண்டது (6.1.162). ஒட்டுக்கள் பொதுவாக முதலசையில் உதாத்த சுரம் கொண்டவை (3.1.3) ஆயினும், பெயற் சொற்களினிறுதியில் நிற்கும் ஒட்டுக்கள் (ஸுப்)அனுதாத்த சுரம் கொண்டவை (3.1.4). இவைகளைத் தவிர தொகைகளின் ஒலியழுத்தம் பற்றியும் சில குறிப்பிட்ட விதிகளையமைத்துள்ள்ார். தொகைகளின் ஒலியழுத்தம் தொடர்பான பொது விதியான 6.1.223 (ஸமாஸஸ்ய அந்த:) ஒரு தொகையினிறுதியசை உதாத்தசுரம் கொண்டது என்று கூறுகிறது. இவைகள் பொதுவான சில ஒலியழுத்தம் பற்றிய விதிகள். மேலே குறிப்பிட்ட படி சொற்கள் அல்லது தொகைகள் ஆக்கப்படும்போது எங்கெங்கு மாற்றம் தேவையோ அங்கங்கு சில சிறப்பு விதிகளை யமைத்து சரியான சொற்கள் தருவிக்கப்பயன்படுமாறு விளக்கம் கூறியுள்ளார்.

பாணினியின் சொல்லாக்க முறைக்கு மூலஅடி, ஒட்டுக்கள் முதலிய வைகளயமைத்துக் கொள்ளுதல் மிகவும் தேவையான ஒன்று. இம்மூலவடிவங்கள், சரியான சொற்களாக்கும்போது பல வகையான மாற்றங்களுக்கு (காட்டாக, பதிலிகள், முழு மாற்றங்கள் suppletion) உட்படுகின்றன. பாணினி, மூலவடிவங்களை எதனடிப்படியில் தீர்மானித்துள்ளாரென்று, வெளிப்படையாக அவரது இலக்கணத்தில் கூறவில்லை. ஆயினும் அவர் ஒரு குறிப்பிட்ட வொட்டுக்கள் அடிகள் ஆகியவைகளை மூலவடிவங்களாக ஒப்புக்கொண்டு அவைகளின் மாற்றுளுக்களை அதனதன் சூழல்களைக் குறிப்பிட்டு விளக்குகிறார். வேற்றுமையுருபுகள், மூவிடப் பெயர்கள் ஆகிபவைகளை இதற்குக் காட்டாக எடுத்துக் கொண்டு அவைகளின் மாற்றங்களை பாணினியின் விதிகளைக் கொண்டு விளக்குவோம்.

மூலவேற்றுமையுருபுகள் (4.1.2)

	ஒருமை	*இருமை*	*பன்மை*
1.	ஸு(ஸ்)	ஔ	ஜஸ்
2.	அம்	ஔட்	ஸ^{1}ஸ்
3.	டா	ப்^{4}யாம்	பி^{4}ஸ்
4.	ஙே	ப்^{4}யாம்	ப்^{4}யஸ்
5.	ஙஸி	ப்^{4}யாம்	ப்^{4}யஸ்
6.	ஙஸ்	ஓஸ்	ஆம்
7.	ஙி	ஓஸ்	ஸுப்

மூல மூவிடப் பெயரொட்டுக்கள் (3.4.78)

பரஸ்மைபதம்

	ஒருமை	*இருமை*	*பன்மை*
படர்க்கை	திப்	தஸ்	ஜி^{2}
முன்னிலை	ஸிப்	த^{2}ஸ்	த^2
தன்மை	மிப்	வஸ்	மஸ்

ஆத்மனபேதம்

படர்க்கை	த	ஆதாம்	ஜ^2
முன்னிலை	த^2ாஸ்	அத^2ாம்	த்^{4}வம்
தன்மை	இட்	வஹி	மஹிங்

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேற்றுமையுருபுகளை நேராக மெய்யீற்றுப் பெயர்ச்சொற்களுடனிணைத்து வேற்றுமைச் சொற்களா க்கப்படும் இவ்வுருபுகளை உயிரீற்றுப் பெயர்ச் சொற்களோடி ணைக்கம்போது பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. சொற்களினிற்று, அவைகளின் பால், ஆகியவற்றிற்குத் தக்கவாறு இம்மாற்றங்களைக் காணலாம். பாணினி இம்மாற்றங்களை விளக்கப்பல விதிகளைய மைத்துள்ளார். காட்டாக அ–வீற்று ஆண்பாற் சொற்களைக் கொ ண்டு இதை விளக்குவோம்.

முதல் வேற்றுமை

ஒருமை	ராம + ஸ் → ராம:
இருமை	ராம + ஔ → ராமௌ(6.1.88)
பன்மை	ராம + அஸ் → ராமா: (6.1.102)
விளிவேற்றுமையொருமை	ராம + ஸ் → ராம(6.1.69)

இரண்டாம் வேற்றுமை

ஒருமை ராம + அம் → ராமம் (6.1.107)

இருமை ராம + அன் → ராமான் (6.1.101, 103)

மூன்றாம் வேற்றுமை

ஒருமை ராம + டா → ராமேண (7.1.12, 6.1.87, 8.4.1)

இருமை ராம + ப்^{4}யாம் → ராமப்4யாம் (7.3.101, 102)

பன்மை ராமு + பி^{4}ஸ் → ராமை: (7.1.9)

நான்காம் வேற்றுமை

ஒருமை ராம + ஙே → ராமாய (7.1.13)

இருமை ராம + ப்^{4}யாம் → ராமாப்4யாம்

பன்மை ராம + ப்^{4}யஸ் → ராமேப்^{4}ய (7.3.103)

ஐந்தாம் வேற்றுமை

ஒருமை ராம + அஸ் → ராமாத் (7.1.12)

இருமை ராமாப்^{4}யாம்

பன்மை ராமேப்^{4}ய

ஆறாம் வேற்றுமை

ஒருமை ராம + அஸ் – ராமஸ்ய (7.1.12)

இருமை ராம + ஒஸ் – ராமயோ: (7.3.104)

பன்மை ராம + ஆம் – ராமாணாம் (7.3.104, 6.4.3)

ஏழாம் வேற்றுமை

ஒருமை ராம + இ – ராமே

இருமை ராமயோ:

பன்மை ராம ஸு + ராமேஷு (7.3.103, 3.3.59)

இவ்வாறே மற்ற உயிரீற்றுச் சொற்களோடு வேற்றுமையுருபுகளை யிணைக்கும் போது ஏற்படும் மாற்றங்களை விளக்குகிறார்.

மேலேகொடுக்கப்பட்ட மூவிடப் பெயர் ஒட்டுக்களை லகாரங்கள் (3.4.77) என்று பொதுவாக குறிப்பிடப்படும். இவைகளை நிகழ்காலத்தைச் சுட்டும் வினைகளோடு இணைக்கப்படும். ஸம்ஸ்கிருதத்தில் 10, கால வினைநோக்குகள் (Tenses and

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
KARAIKUDI

Modes) காணப்படுவதாக மரபு இலக்கண நூலார் கூறுவார்கள். நிகழ் காலத்தைத் தவிர ஏனைய இடங்களில் இவ்வொட்டுக்களையிணைக்கும் போது ஏற்படும் மாற்றங்களை அந்தந்த இடங்களைக் குறிப்பிட்டு பாணினி விளக்கியுள்ளார்.

பாணினியின் இலக்கணத்தைப் பற்றிக் கூறும் இத்தறுவாயில், பாணினி ஒலியனியியல் பற்றி ஒழுங்கான ஒரு முறையில் கூறவில்லையென்று குறிப்பிடவேண்டும். ஒலிகள் எவ்வாறு பிறக்கின்றனவென்றோ அல்லது ஒலிகளின் வருகை (distribution) அதாவது அவைகள், முதலில், நடுவில் அல்லது இறுதியில் நிற்கும் என்ற வர்ணனையோ, ஸிக்ஷா அல்லது பிராதி சாக்கிய நூல்களில் விளக்கப்பட்டிருக்கும் வகையில் விளக்கவில்லை. ஒலியியல் பற்றிய அறிவு, பாணினியினிலக்கணத்தைப் படிப்பவர்களுக்கு ஏற்கெனவேயிருக்க வேண்டுமென்ற ஊகத்திலேயே, சில ஒலியியல் தொடர்பான விதிகளை பாணினியமைத்திருக்கிறாரென்பது அஷ்டாத்தியாயின் சில சூத்திரங்களிலிருந்து (1.1.9–10) தெளிவாகிறது.

அஷ்டாத்தியாயின் உரையாசிரியர்கள்

காத்யாயனர் (கி.மு. 4ஆம் நூற்றாண்டு) என்பவரால் எழுதப்பட்ட வார்த்திகமும். பதஞ்ஜலி (கி.மு. 150) என்பவரால் எழுதப்பட்ட மஹாபாஷ்யம் என்ற உரையும் பாணியிலக்கணத்தோடு, சேர்ந்ததாகப் பொதுவாகக் கருதப்படும். பாணினியின் இலக்கணத்தில் விளக்கப்படாத சில சொற்களில் விளக்கங்களை வார்த்திகத்தில் காணலாம். மஹாபாஷ்யம், அஷ்டாத்தியாயியின் விளக்கவுரை, பாணினி தனது சூத்திரங்களைத் மிகக் குறைவான செ ாற்களைப் பயன்படுத்தி சுருக்கமாக அமைத்துள்ளதால் வார்த்திக ங்களும் மஹாபாஷ்யமும், அஷ்டாத்தியாயியை எளிதில் புரிந்து கொள்ள துணை புரிகிறது. கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்குப்பிற கு வாமனர்–ஜயாதித்தர் (கி.பி. 7ஆம் நூற்றாண்டு) என்ற இரட்டையாசிரியர்களால் அஷ்டாத்தியாயியின் சூத்திரங்கள் எல்லாவற்றுக்கும் முழுமையான விளக்கவுரை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் எழுதப்பட்டுள்ளது. இந்நூலுக்கு 'காஸிகா'வென்று பெயர். பாணினியிலக்கணத்தைத் தெளிவாக விளக்குவதற்குக் காஸிகாவின் பங்கு மிகப் பெரியது. பாணினியைப் பின்பற்றி எழுந்த இலக்கண நூல்கள் அஷ்டாத்தியாயின் சூத்திரங்களுக்கு காஸிகாவில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களையும், எடுத்துக் காட்டுக்களையும் தொடர்ந்து பயன்படுத்துவதைப் பார்க்கும்போது, பாணினியிலக்கண மரபுக்குழுவினரிடையே காஸிகாவுக்கு இருக்கும் மதிப்பு எத்துணை பெரியது என்பது புலனாகிறது.

சிவசூத்திரங்கள்

(1) அ, இ, உ(ண்)
(2) ரு, ல்ரு, (ங்)
(3) ஏ, ஓ(ங்)
(4) ஐ, ஔ(ச்)
(5) ஹ, ய, வ, ர(ட்)
(6) ல(ண்)
(7) ஞ, ம, ங, ண. ந(ம்)
(8) ஜ^{2}, ப^{2} (ஞ்)
(9) க^{4}, ட^{4}, த^{4} (ஷ்)
(10) ஜ^{1}, ப^{3}, க^{3} ட^{3}, த^{3} (ஸ்^{1})
(11) க^{2}, ப^{2} ச^{2}, ட^{2}, த^{2}, ச^{1}, ட^{1}, த^{1}(வ்)
(12) கப^{1},(ய்)
(13) ஸ^{1} ஷ ஸ(ர்)
(14) ஹ(ல்)

குறிப்பு : அடைப்புக் குறிக்குள் காணப்படும் எழுத்துக்கள் 'இத்'

சி. 1–4 உயிர்கள். சி.1–2 தனி உயிர்கள் சி 3–4 கூட்டு உயிர்கள்
சி 5–4 மெய்கள் சி5–6 அரை உயிர்கள் சி 7–12 அடைப்பொலிகள்
சி 13–14 உரசொலிகள் சி 8–10 குரலொலி சி 11–12 குரலிலா ஒலி
சி 7 மூக்கொலி.

சிவசூத்திரங்களிலிருந்து, கீழ்க்கண்ட 41 பிரத்யஹார சூத்திரங்களை அமைத்து, தன் இலக்கணத்தில் பிரயோகம் பண்ணுகிறார் பாணினி.

1. அல் சி.1–14 எல்லா எழுத்துக்களும்
2. அச் சி1–4 உயிரெழுத்துக்கள்
3. உறல் சி,5–14 அரை உயிர்கள், அடைப்பொலிகள், உரசொலிகள்
4. அக்–(சி 1–2) தனி உயிர்கள்
5. ஏச், (சி3–4) கூட்டு உயிர்கள்
6. அண் (சி1–6) உயிர்கள், அரை உயிர்கள்
7. இக் (சி11–2) இ, உ, ரு ல்ரு.
8. உக் (சி1–2) உ.ரு.ல்ரு
9. ஏங் (சி. 3) ஏ, ஓ
10. ஐச் (சி,4) ஓ ஐ, ஔ
11. இச் (சி1–4) இ, உ.ரு.ல்ரு, ஏ, ஊ.ஐ, ஔ
12. யண் (சி5–6) அரை உயிர்கள்
13. ஸ'ல் (சி 13–14)உரசொலிகள்
14. ஸர் (சி 13) ஸ^{1}, ஷ ஸ
15. மய் (சி 7–12) ஞ–வைத் தவிர்த்து மற்ற எல்லா அடைப்பொலிகள்.
16. ஜ^{2}ய் (சி 3–12) அடைப்பொலிகள் (மூக்கொலிகளைத் தவிர்த்து)
17. ந ம்(சி 7) ஞ, மு வைத்தவிர்த்து மற்ற மூக்கொலிகள்
18. ஜ2 ஸ்1 (சி 8–10) குரலொலிகள்
19. க 2 ய் (சி11–12) குரலிலா ஒலிகள்
20. ஜ2 ஷ் (சி 8–9) குரல் ஒலி, உயிர்ப்பொலி

21. ஜஸ்^{1} (சி 10) குரல் ஒலிகள்
22. ப^{4}ஷ் (சி 8–9) ஜ^2–வைத்தவிர்த்து (பார்க்க 20)
23. ப^{3}ஸ் (சி 10) குரல் ஒலிகள் (ஜ–வைத்தவிர)
24. ச^{2}வ் (சி 11) குரலிலா ஒலிகள் (க^2, ப^2 நீக்கி)
25. அஸ்^{1} (சி 1–10) எல்லா உயிர்களும் குரலிலா ஒலிகளைத் தவிர மற்ற அடைப்பொலிகளும்.
26. அண் (சி 1) அ, இ, உ
27. இண் (சி) இ, உ
28. அட் (சி 1–5) உயிர்கள் அரை உயிர்கள்
29. அம் (சி 1–7) உயிர்கள் அரை உயிர்கள், மூக்கொலிகள்
30. ஹ ஸ்1 (சி 5–10) அரை உயிர்கள் மூக்கொலிகள், குரல் ஒலிகள்.
31. யர் (சி 5–13) அரை உயிர்கள், மூக்கொலிகள், குரலிலா ஒலிகள்
32. வல் (சி 5–14) ய–வைத்தவிர மேலே குறிப்பிட்ட எழுத்துக்களும் ஹ–வும்.
33. ரல் (சி 5–4) ய, வ வைத்தவிர்த்து மேலே குறிப்பிட்ட ஒலிகள்
34. யய் (சி 5–12) அரை உயிர்கள், அடைப்பொலிகள்
35. யஞ் (சி 5–8) அரை உயிர்கள், மூக்கொலிகள் ஜ^2, ப^2
36. யம் (சி 5–7) அரை உயிர்கள் மூக்கொலிகள்
37. வஸ் (சி5–10) அரை உயிர்கள், மூக்கொலிகள், குரலொலிகள்
38. ஜ^{2}ல் (சி8–14) குரலொலிகள், உரசொலிகள்.
39. ஜ^{2}ர் (சி8–13) அடைப்பொலிகள் (ஹ–வைத்தவிர)
40. க^{2}ர் (சி 11–13) குரலிலா ஒலிகள் உரசொலிகள் (ஹ–வைத் தவிர)
41. சர் (சி 11–13) ச^1, ட^1, த^1, க^1, ப^1 உரசொலிகள் (ஹ–வைத்தவி ர)

குறிப்பு : தன் சூத்திரங்களுக்கு, பயன்படும் வகையில், சிவசூத்திரங்களின் முதல் எழுத்திலோ, அல்லது 2வது 3வது எழுத்துக்களிலோ தொடங்கி, ஒரு ப்ரத்யாஹாரத்துக்குத் தேவையான எழுத்துக்களை அனுபந்தமாக அமைத்து, மேற்சொன்ன ப்ரத்யாஹாரங்களைப் பாணினி உருவாக்கியிருக்கிறார்.

ப்ரத்யாஹாரம் அனுபந்தம். பார்க்க கலைச் சொற்கள்

1.1.1 வ்ருத்^{3}தி^{4}ர்ஆத் ஐச்

ஆ.ஐ.ஔ ஆகிய உயிர் எழுத்துக்கள் விருத்தி என்ற பெயர் பெறும் எ–டு. ஆஸ்வலாயன; ஐதிகாயன: ஔபமன்யவ!

குறிப்பு: 'ஆத்' என்ற ப்ரத்யாஹாரத்தின் இறுதி மெய்க்கு அனுபந்தம் அல்லது 'இத்' என்ற பெயர்.

1.1.2 அதே^{3}ங்கு^{3}ண

அ.ஏ.ஓ. ஆகிய உயிர்கள் 'குணம்' என்ற ஸம்ஞாவினால் குறிப்பிடப்படும். எ–டு ஸ்து →ஸ்தோதா சி–சேதா

1.1.3 இகோ கு^{3}ணவ்ருத்^{3}தி^{4}

குணவிருத்தி எழுத்துக்கள் 'இக்' (என்ற ப்ரத்யாஹாரத்து)க்கு பதிலாக வரும்.

இது. ஒரு பரிபாஷா சூத்திரம். குணம் அல்லது விருத்தி எழுத்துக்கள் மாத்திரம். ஆதேசமாக (பதிலியாக) வரும் என்று ஒரு நியமத்தைக் கூறுகிறது இந்தச் சூத்திரம். 'இக்' என்றப்ரத்யாஹாரத்துள்ளடங்கிய 'இ, உ, ரு, ல்ரு ' ஆகிய நான்கு உயிர்கள்–முதலிரண்டு சூத்திரங்களில் குறிப்பிடப்பட்ட ஆ.ஐ.ஔ(விருத்தி) அ. ஏ. ஓ(குணம்) ஆகிய எழுத்துக்கள் எல்லாம் இதிலடங்கா. இச்சூத்திரத்தின்படி 'இக்' என்ற ப்ரத்யஹாரத்திலுள்ளடங்கிய நான்கு உயிர்களுக்கு மட்டுந்தான், இந்த ஆதேசம்.

தனி உயிர்கள்	*குணஎழுத்துக்கள்*	*விருத்தி*
அ/ஆ	ஏ	ஐ
உ/ஊ	ஓ	ஔ
ரு/ரூ	அர்	ஆர்
ல்ரு/ல்ரூ	அல்	ஆல்

எ–டு பூ^{4}+அ+தி → போ^{4} +அ + தி → ப^{4}வதி (ஓ)
அட் + க்ரு + ஸிச் + தி → அகார்ஷீத் (ஆர்)
அட் + சி + ஸிச் + தி → அசைஷீத்(ஐ)
அட் + ஸ்து + ஸிச் + தி → அஸ்தாவீத் (ஔ)

1.1.4. ந த^4ாதுலோப ஆர்த்^{3}த^4ா^{4}துகே
ஆர்த்ததாதுக ஒட்டுக்களோடு இணையும்போது வேரின் ஒரு பகுதி சில இடங்களில் குறையும். அப்படிக் குறைக்கப்பட்ட சொற்களில் காணப்படும். 'இக்'குக்கு குண விருத்தி எழுத்துக்கள் ஈடாக வாரா . இச்சூத்திரம், 3ம் சூத்திரத்துக்கு விதிவிலக்கு.

எ–டு லோலுவலு (வெட்டு)
லோலூய +அச் (3.1.134) → லோலூ +அச்(2.4.74)

லோலூவின் இறுதி எழுத்து ஊ 7.3.84படி குணமாக வேண்டும். ஆனா ல், சூ 1.1.4 இங்கு குணமாக மாறுவதற்குத் தடைவிதிக்கிறது.

1.1.5 க்–ங்–இதி ச
க^1 க்^{2}ங் ஆகிய எழுத்துக்களை 'இத்' ஆகக் கொண்ட சொற்களிலும் அவ்வாறே.
பீ^{4} + க்த/க்தவது → பீத:/பீதவான் இங்கு 'க்' ஒரு 'இத்'

1.1.6 த்^{3} த்^{4} வேவி – இடாம்
த்^{3} த்^{4} வேவி, ஆகமம் 'இட்' ஆகியவைகளில், பொதுவாக, குண/விருத்தி மாற்றம் நிகழும் என்றிருந்தாலும் அத்தகைய மாற்றம் இங்கு நிகழாது.

ஆங் + த்^{3}த்^{4} + ண்வுல் → ஆத்^{3}த்^{4} – ஆக (8.1) → ஆத்^{3}த்^{4}யக
ஆ + வேவி → ஆவேவ்யக
ஆங்+த்^{3}த்^{4}ல்யுட் – ஆத்^{3}த்^{4} +ஆன → ஆத்^{3}த்^{4}யனம் ல்யுட் (=அன) இல் குணமும், ண்வுல்(=ஆக) இல் விருத்தியும் பொதுவாக எதிர்பார்க்கப்டும் இச்சூத்திரத்தின்படி அவைகள் இங்கு வரவில்லை.

1.1.7 ஹலோ அனந்தராஸ்ம்யோகா:
மெய்யெழுத்துக்கள் (ஹல்) இடையில் வேறு எழுத்துக்கள் (அதாவது உயிர்கள்) வராமல் தொடர்ந்து ஒரு சொல்லில் காணப்படுவதை 'ஸம்யோகம்' என்று கூறுவார்கள்.
மெய்கள், இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்டதோ ஒரு சொல்லில் தொடர்ந்து வரும் வாய்ப்பு உண்டு

எ–டு அக்னி(க்ன), இந்த்ர (ந்த்)
திவான்ஸ்ரயாவபதி (ன்ஸ்த்ரய்)

1.1.8 முக^{2} நாஸிகா வசனோ அனுநாஸிகா
அனுநாஸிகம் (மூக்கொலி) என்பது, மூக்கினாலும் வாயினாலும் ஒரே சமயத்தில் சேர்ந்தாற்போல் உச்சரிக்கும் எழுத்து.

1.1.9 துல்யாஸ்ய ப்ரயத்னம் ஸவர்ணம்
ஸவர்ணம் (இன எழுத்துக்கள்) என்பது, ஒலி எழுப்புமிடமும் முயற்சியும் (effort) ஒன்றாகக் கொண்ட எழுத்துக்களைக் குறிக்கும். அதாவது வாயறையில் (ஆஸ்யம) ஒலிப்பிடமும், ஒலி எழுப்பும் முயற்சியும் ஒரே இடமாக இருக்குமானால், அதற்கு ஸவர்ணம் (homogenuous) என்று பெயர்.
ப்ரயத்னம் 2 வகையாகும். ஆப்யந்தர
எ–டு ஒரே வர்க்கத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் வா ரு, கார, ல்ருகாரயோ ஸவர்ணஸம்க்ஞா வக்வ்யா ரு, வும், லருவும் ஸவர்ணமாகக் கூற வேண்டும். ரு, ல்ரு, இரண்டுக்கும் வெவ்வேறு ஆஸ்யமாக இருந்த போதிலும் காத்யாயனர் இவைகளை ஸவர்ணாகக் கொள்ள வேண்டுமென்று கருதுகிறார்.
ஹோத்ரு + ல்ருகார → ஹோத்ருகார

இந்த ஸந்தியில், ருவும் ல்ருவும் இணைந்து, மற்ற ஸவர்ண எழுத்துக்களைப் போன்று, நீட்டித்திருக்கிறது. இவ்வார்த்திகலும், பொது விதிக்கு விலக்கு கூறுகிறது. மற்ற இடங்களில், ஆஸ்யம், ப்ரயத்னம் இரண்டுமே சமமாக இருக்கும்போதுதான் எழுத்துக்கள் ஸவர்ணம் என்று கருதப்படும்.
சவும் ஸ'வும் அண்ணவொலி (palatal) இரண்டுக்கும் ஆஸ்யம் ஒன்றேதான் ஆனால் இரண்டுக்கும் பிரயத்னம் வெவ்வேறு. அதனால் இவ்விரண்டு எழுத்துக்களும் ஸவர்ணமாகா.

1.1.10 நாஜ் ஜ³லௌ
ஒலி எழுப்புமிடமும் முயற்சியும் ஒன்றாக இருந்தாலும் 'அச்' உயிரெழுத்துக்களும் 'ஹல்' மெய்யெழுத்துக்களும் ஸவர்ணமாகா.
எ–டு உயிரெழுத்து 'இ', மெய்யெழுத்து 'ஸ' இவ்விரண்டு எழுத்துக்களுக்கும் முயற்சி, ஒலி எழுப்புமிடம் இரண்டும் ஒன்றேதான். ஆனால் இவைகள் ஸவர்ணமாகா.

சூ.9. இல், ஆஸ்யம், பிரயத்னம் இரண்டும் ஸமமாக இருந்தால் ஸவர்ணம் என்று கூறப்பட்டது. சில உயிர் எழுத்துக்களுக்கும் மெய்யெழுத்துக்களுக்கும் இவ்விரண்டும் ஒன்றாகவே இருக்கும். அதனால் உயிர், மெய்யெழுத்துக்களை ஸவர்ணமாக (ஒரே இன எழுத்தாக)க் கருதலாமா என்ற கேள்வி எழும்பலாம். அதற்கு விடையாகப் பாணினி இந்தச் சூத்திரத்தில், உயிர் எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் ஸவர்ணமாகா என்று கூறுகிறார்.

1.1.11 ஈத், ஊத், ஏத் த்³விவசனம் ப்ரக³ருஹ்யம்
ஈ, ஊ, ஏ ஆகிய உயிர்களைக் கொண்ட இருமைமச் சொற்களின் அவ்வீறுகள் ப்ர்ரக்³ருஹ்யம் என்ற பெயர் பெறும்.

இந்தச் சூத்திரம் எவையெவை ப்ரக்குஹ்யம் என்று குறிப்பிடுகிறது. இதைத் தொடர்ந்து வரும் சில சூத்திரங்களில், ப்ரக்ருஹ்யம் என கருதப்படும் சொற்களைக் கூறுகிறார் பாணினி. ப்ரக்ருஹ்ய உயிர்.

எ–டு வாயூ இதி அக்னீ இதி
பசேதே இதி

1.1.12 அத³ஸோ மாத
'அத³ஸ' என்ற மாற்றுப்பெயர் (Pronoun) சம்பந்தமாக வரும் 'ம்'க் கு பின்னால் வரும். ஈ, ஊ, ஏ ஆகிய எழுத்துக்களும் ப்ரக்ருஹ்யம்.
'அத³ஸ்' இன் முதல் வேற்றுமைப் பன்மை 'அமீ' இதன் ஈறு 'ஈ' அதுவும் ஒ ரு ப்ரக்ருஹ்யமாக அமைவதால், இந்தச் சொல்லும் புணர்ச்சியில் மாறுதலடையாது.

எ–டு அமீ அத்ர, அமூ ஆஸதே

1.1.13 ஸே
'ஸே' என்ற ஒட்டும் ப்ரக்ருஹ்யம் வேத மொழியில் வேற்றுமை உருபுகளுக்குப் பதிலிடாக வரும் 'ஸே' என்ற உருபும் ஒரு ப்ரக்³ருஹ்யமே.
யுஷ்மே–யுஷ்மத் என்ற சொல்லின் 6ம் வேற்றுமைப் பன்மை அஸ்மே–அஸ்மத் 4ஆம் வேற்றுமைப் பன்மை த்வே, மே 7ஆம் வேற்றுமை ஒருமை.

1.1.14 நிபாத ஏகாஜ் அநாங்

'ஆங்' ஐத்தவிர, ஏனைய, ஒரே ஒரு உயிரெழுத்தைக் கொண்ட நிபாதங்களும், ப்ரக்³ருஹ்யம் என்ற பெயர் பெறும்.

எ–டு அ. அபேஹி, இ. இந்த்ரம் பஸ்ய, உ. உத்திஷ்ட

1.1.15 ஒத்

ஒரு நிபாதத்தின் 'ஓ' என்ற ஈறும் ஒரு ப்ரக்³ஹ்யம்

எ–டு அஹோ அபேஹி.

1.1.16 ஸம்பு³த்³தெ³ள ஸாகல்பஸ்ய இதௌ அனார்ஷே

ஸாகல்யரின் கருத்துப்படி விளி வேற்றுமை ஒருமைச் (ஸம்பு³த்³தி⁴) சொற்களில் ஈறான 'ஓ'வுக்குப் பிறகு 'இதி'என்ற சொல் வரும் போது வேத மொழியைத் தவிர மற்ற கிளை மொழிகளில் நிலைச் சொல்லின் ஈறான 'ஓ'ஒரு ப்ரக்ருஹ்யம்.

எ–டு வாயோ இதி (ஸாகல்ய மதம்)

வாயவிதி (மற்றவர் மதம்)

1.1.17 உஞ:

இடைச்சொல் 'உஞ்' உம் 'இதி' என்ற சொல்லுக்கு முன்னால் ஒரு ப்ரக்ருஹ்யம் என்று ஸாகல்யர் கருத்து

எ–டு உ இதி

1.1.18 ஊஞ்

'உ'என்ற இடைச் சொல்லுக்குப் பதிலிடாக 'ஊ'என்ற இடைச்சொல் வேதத்தைத் தவிர மற்ற கிளை மொழிகளில் வரும் இந்த 'ஊ'வும் ஒரு ப்ரக்ருஹ்யம் என்று ஸாகல்யர் கூறுகிறார்.

ஊஞ் இதி

1.1.19 ஈத்³ஊதௌ ச ஸப்தம்யர்தே²

ஏழாம் வேற்றுமைச் சொற்களின் ஈறுகளான 'ஈ', 'ஊ' ஆகிய எழுத்துக்களும் ப்ரக்ருஹ்யம்.

எ–டு ஸோமே கௌ³ரீ அதி⁴ஸரித:

இந்த விதி, பெரும்பாலும் வேதமொழிக்கே

1.1.20 தா³தா⁴க்⁴வத³ாப்

தாது பாடத்தில் குறிப்பிடப்பட்டிரும் 'தா³ங்; 'தா⁴ங்' என்ற தாதுக்களில் 'தா³ப்' என்ற உருவத்தில் அமையும் தாதுக்களைத்தவிர மற்ற தாதுக்கள் 'கு⁴' என்ற பெயர் பெறும்.

இச்சூத்திரம் 'கு' என்ற கலைச் சொல்லால் அழைக்கப்படும் தாதுக்களைக் குறிக்கிறது. தாது பாடத்தில் 'தா³ங்' என்று குறிப்பிடப்படும் தாதுக்கள்நான்கு

து3தாஞ் (தா பா. 1091)
த3ாண (930)
தே3ா (1148)
தே3ங் (962)
தா4ஞ் என்ற தாதுக்கடியில் து3தா4ஞ் (1092)
தே4ட் (902) இரண்டு
அதா3ப் தா3ப் (1059)
தை3ப் (928)
ஆகியவை. இவைகளில் கடைசியாக வரும் இரண்டு தாதுக்களைத் தவிர மற்றவை 'கு' ஆகும்.

1.1.21 ஆதத்3யந்தவத் ஏகஸ்மின்
ஒரெழுத்துச் சொல்லுக்கு ஒரு விதியை ப்ரயோகம் பண்ணும்போது அந்த ஒரெழுத்தையே, முதலாகவும் இறுதியாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.
எ–டு அ + ப்4யாம் → ஆப்4யாம்
ராம + ப்4யாம் → ராமாப்யாம்

1.1.22 தரப், தமப் க4:
தரப், தமப் ஆகிய ஒட்டுக்கள் 'க4' என்ற பெயர் பெறும் இவ்விதி க4, என்ற கலைச் சொல்லுக்குள்ளடங்கிய ஒட்டுக்களை விளக்குகிறது.
தரப் – ஒப்புமை உருபு
தமப் – மீமை
எ–டு குமாரிதரா, குமாரிதமா

1.1.23 ப3ஹு க3ணவது ட3திஸங்க்2யா.
ப3ஹு (பல) க3ண (வகுப்பு)–வது, (5.3.39–டதி (5.2.41) என்ற ஒட்டுக்களில் முடியும் சொற்கள் இவையெல்லாம் ஸங்க2யா என்ற பெயர் பெறும்.
எ–டு ப3ஹுக்ருத்வ:
க3ணக்ருத்வ:
தாவத்க்ருத்வ:
கதிதா4

<u>வார்த்திகம்</u>
அர்த்3த4 பூர்வ பத3ஸ்ய பூரணப்ரத்யயாந்த ஸங்க2யா ஸம்க்ஞ: ப4வத்தி வக்தவ்யம் ஸமாஸ கன் வித்4யாத2ம்.
ஒரு தொகையில் 'அர்த்த' என்ற சொல் முதலுருப்பினராக அமைந்து, அத்தொகை முறைமை எண்ணை (Ordinal)க் குறிக்கும் ஒரு ஒட்டோடு இணையும்போது ஸங்க்2யா என்ற பெயர் பெறும். ஸமாச விதிகளையும் 'கன்' என்ற ஒட்டுக்கான விதிகளையும் பிரயோகப் படுத்த வேண்டி, இத்தொகைக்கு ஸங்க்2யா என்ற பெயர் அளிக்கப்படுகிறது.

எ–டு அர்த்^{3}த^4 பஞ்சம ஸ்ரூப: (2.1.51) அர்த்^{3}த^4 பஞ்சமக: (2.1.56; 2.1.52, 5.1.26, 5.1.28, 5.1.21)

1.1.24 ஷ்ணாந்தா ஷட்

'ஷ்', 'ண்' என்ற எழுத்துக்களை ஈறாகக் கொண்ட எண்ணுப் பெயர்களுக்கு (ஸங்கக்^{2}யா) 'ஷட்' என்று பெயர்.

ஷட் என்ற பெயர் கொண்ட எண்கள் பஞ்சன் (5) ஷ ஷ் (6) ஸப்தன் (7) அஷ்டன் (8) நவன் (9) தஸ1ன் (10)

1.1.25 ட^{3}திச

ட^{3}தி என்ற ஒட்டை ஈறாகக் கொண்ட ஸங்க்^{2}யாக்களும் 'ஷட்' என்ற பெயர் பெறும்.

எ–டு கதி திஷ்டந்தி.

1.1.26 க்த, க்தவது நிஷ்டா

க்த, க்தவது என்ற ஒட்டுக்கள் நிஷ்டா என்ற பெயர் பெறும்

எ–டு க்ரு + க்தவது → க்ருத:/க்ருதவான் செய்தான்

1.1.27 ஸர்வானி ஸர்வநாமானி

'ஸர்வ'என்ற சொல்லிருந்து தொடங்கும் (கணபாடத்தில்) சொற்களுக்கு 'ஸர்வநாமன்' என்ற பெயர். ஸர்வநாமச் சொற்கள் வருமாறு ஸர்வ, விஸ்வ, உப^{1}உபய, கதர, கதம, இதர, அன்ய, அன்யதர, த்வத், த்வ. நேம, ஸம, ஸிம,

ஆனால், ஸர்வ முதலிய சொற்கள் குறிப்புப் பெயராக வரும்போது, ஸர்வநாமமாகா.

இச்சூத்திரம் வேற்றுமை உருபு இணைக்கும்போது ஏற்படும் மாறுதலைக் குறிக்கிறது. இச்சொற்கள் ஸர்வ நாமமாக (மாற்றுப் பெயராகவும்) குறிப்புப் பெயராகவும் செயலாற்றும்.

	மாற்றுப் பெயர்	*குறிப்புப் பெயர்*
4ம் வேற்றுமை.	ஸர்வஸ்மை	ஸர்வாய
4ம் வேற்றுமை	உப^{4}யஸ்மை	உப^{4}யாய

1.1.28 விபா^{3}ஷா திக்ஸமாஸே ப^{3}ஹுவ்ரீஹெென

ப^{3}ஹுவ்ரீஹி மைாசத்தின் ஒரு உறுப்பினராக இச் சொற்கள் அமைந்து அத்தொகை^{3}திசையைக் குறிக்குமானால் (II.2.86) இச்சொற்கள் விருப்பாக (optional) ஸர்வநாமமாகும்.

எ–டு உத்தரபூர்வா 'வடகிழக்கு'

4ம் வேற்றுமை உத்தர பூர்வஸ்யை/உத்தரபூர்வாயை

1.1.29 ந ப^{3}ஹுவ்ரீஹௌ

பஹுவ்ரீஹி சமாசத்தின் ஒரு உறுப்பினராக வரும் ஸர்வ முதலிய சொற்கள் ஸர்வநாமமாகா.

எ–டு ப்ரிய விஸ்வ. 4ம் வேற்றுமை ப்ரியவிஸ்வாய

இச்சூத்திரத்திலிருந்து சில சொற்கள் ஸர்வநாம வகுப்பிலிருந்த போதிலும், சில சூழல்களில் அவைகள் ஸர்வநாமமாகக் கருதக்கூடாது என்ற ப்ரதிஷேத^4 விதி தொடங்குகிறது.

1.1.30 த்ருதீயா ஸமாஸே

மூன்றாம் தத்புருஷ சமாசத்தில் 'ஸர்வ' முதலிப சொற்கள் ஸர்வ நாமமாகா.

எ–டு மாச பூர்வ –மாசபூர்வாய

1.1.31 த்^{3}வந்த^{3}வே ச

துவந்தசமாசத்திலும் (உம்மைத் தொகை) இச்சொற்கள் ஸர்வநாமாமாகா

எ–டு பூர்வாபர்ராணாம் (6–ம்வேற்றுமை பன்மை)

1.1.32 விபாஷா ஜஸ்

(ஆனால்) துவந்துவ ஸமாசத்தில் முதல் வேற்றுமைப் பன்மை உருபுகளோடு (ஜஸ்) இணைக்கப்படும்போது ஸர்வநாமமாகவும் ஆகலாம்.

எ–டு பூர்வா பரே/பூர்வாபரா:

இச்சூத்திரம், முன்கூறிய ப்ரதிஷேத4 விதிக்கு ஒரு விபாஷா (விருப்ப ம்) விதி கூறுகிறது.

1.1.33 பிரத^{2}ம சம தயா அல்ப அர்த^{3}த^4 கதிபய நேமாஸ்

பிரத^2 (முதல்) சரம (இறுதி), தயா என்ற நட்டில் முடியும் சொற்கள், அல்ப (கொஞ்சம்), அர்த்^{3}த^4 (பாதி) கதிபய(சில) நேம(பாதி) ஆகிய சொற்களும் முதல் வேற்றுமைப் பன்மை உருபுகளோடு இணையும்போது விருப்பாக ஸர்வநாமமாக ஆகலாம்.

எ–டு ப்ரத^{2}மா/ப்ரத^{2}மே சரமா/சரமே

1.1.34 பூர்வ பராவர த^{3}ஷிணோத்தர பராத^{4}ராணி வ்யவஸ்தா^{2}யாம் அஸம்க்ஞாயாம்.

பூர்வ(முன்) அபர(பின்) அவர(பின்) தஷிண(தெற்கு), உத்தர(வடக்கு), அபர(மற்றது) அத^{4}ர(தாழ்ந்த) (inferior) முதலியவை.

ஸம்க்ஞாவாக இல்லாமல் வரும்போது ஸர்வநாமமாகவும் 'ஜஸ்' உக்கு முன்னால் செயலாற்றலாம்.

எ–டு தஷிணா. 'கெட்டிக்காரன்'

தஷிணா இமேகாயக^1ா;

1.1.35 ஸ்வம்ஞாதி த^{4}னாக்^{2}யாம்

ஸ்வம் (தன்) ஞாதி அல்லது சொத்து என்ற பொருளைக் குறிக்காமல்

வரும்போது 'ஐஸ்' என்ற வேற்றுமை உருபோடு இணைக்கும்போது ஸர்வநாமாகவும் செயற்படலாம்.

எ–டு ஸ்வே/ஸ்வா புத்ரா

1.1.36 அந்தரம் ப³ஹிர்யோக உபஸம்வ் யானயோ:

அந்தரம் என்ற சொல் எப்போதுமே ஸர்வநாமமானாலும் பஹிர் (வெளி) உபஸ்ம்'வ்யான என்ற பொருளை உணர்த்துவதாக வரும்போது அது ஐஸ்) ஓடு இணைக்கும்போது ஸர்வநாமமாக விருப்பாகக் கருதப்படும்.

எ–டு அந்தரா/அந்தரே க்ருஹா;
அந்தரா/அந்தரே ஸாடகா;

வா: அபுரி இதிவக்தவ்யம் புரி என்ற சொல்லைத் தவிர்த்து

எ–டு அந்தராயாம் புரி வஸதி
வா. விபாஷா ப்ரகரணே தீயஸ்ய
வா ஙித்ஸூ ஸர்வ நாம ஸம்க்ஞா இத்யுபஸங்க்²யானம்
'தீய' என்ற ஒட்டுச் சேர்த்து உருவாகும் சொற்கள் (த்விதிய, த்ருதீய). ஙித் (வேற்றுமை உருபுகளோடு இணைக்கும்போது ஸர்வநாமமாக. விருப்பமாக செயற்படும். ஙித், வேற்றுமை உருபுகள் 4,5,6,7 ஒருமை. த்விதீயஸ்யை

1.1.37 ஸ்வராதி¹ நிபாதம் அவ்யயம்

ஸ்வர் (ஸ்வர்க்கம்) முதலிய சொற்களும் சில நிபாதங்களும் (இடை ச் சொற்கள்) அவ்பயம் என்ற பெயர் பெறும்.

இங்கு அவ்யயத்தின் இலக்கணம் கூறப்படுகிறது. கணபாடத்தில் காணப்படும் ஸ்வர் முதலிய சொற்கள், சில நிபாதங்கள் (1.4.56) (ச.வா. முதலியவை) அவ்யயமாகும்.

1.1.38 தத்³தி⁴தாஸ்'ச அஸர்வவிப⁴க்தி.

தத்³தி⁴த ஒட்டுக்களை இணைத்து உருவாகும் சில சொற்கள் எல்லா வேற்றுமை உருபுகளோடு சேராமல் (சில உருபுகளோடு மாத்திரந்தான் சேரும்) அமையும்போது, அவைகள் அவ்யயம் என்ற பெயர் பெறும்

எ–டு ததஸ் (5ம் வேற்றுமை)

1.1.39 க்ருன் மேஜந்த:

'ம்'–அல்லது ஏ, ஒ, ஐ, ஔ ஆகிய எழுத்துக்களை ஈறாகக் கொண்ட 'க்ருத்'ஒட்டோடு இணைத்து வருப சொற்களும் அவ்யயம் ஆகும்.

எ–டு தா³தும்()
ஜீவஸே

1.1.40 க்த்வா, தோஸுன் கஸுன:
க'த்வா, தோஸுன், கஸுன் ஆகிய ஒட்டுக்களில் முடியும் சொற்களும் அவ்யயம்.
இவ்வொட்டுக்களை இணைத்து உருவாக்கும் சொற்கள் வினையெச்சம் ()
எ–டு க்ருத்வா. செய்து, உதே³தோ

1.1.41 அவ்யயீ பா⁴வஸ'ச
அவ்யயீபாவஸமாசமும் (II.1.5) ஒரு அவ்யயமாகும்.
எ–டு அதிஹரி, அனுரூபம்.

1.1.42 ஸி' ஸர்வநாமஸ்தானம்
ஸி' என்ற ஒட்டு (VII.1.20)க்கு ஸர்வநாமஸ்தானம் என்று பெயர். முதல், இரண்டாம் வேற்றுமை அஃறிணைப் பன்மை ஒட்டுக்கள். 'ஸி' என்று குறிப்பிடப்படும்.
ஸி' யின் 'ஸ்' ஒரு இத் அதனால் உண்மையான ஒட்டு 'இ' ஆகும். 'ஸி',யின் செயல் ஈற்றயல் உயிரை நீட்டலும் (VI.4.8) 'ந்'என்ற எழுத்தை உள்ளொட்டாக சேர்ப்பதும் (VII.1.72)
எ–டு ப²லம் + ஸி → ப²ல + இ → ப²ல + ந் + இ → ப²லானி

1.1.43 ஸுட் அநபும்ஸகஸ்ய
அஃறிணைச் சொல்லின் வேற்றுமையுருபுகளைத் தவிர்த்து ஏனைய சொற்களோடு இணைக்கப்பெரும் 'ஸுட்' என்ற ப்ரத்யாஹாரத்துள்ளடங்கிய வேற்றுமையுருபுகளும் ஸர்வநாமஸ்கானம் ஆகும்.
'ஸுட்' வேற்றுமையுருபுகள் வருமாறு

	ஒருமை	இருமை	பன்மை
1ம் வேற்றுமை	ஸு	ஔ	ஜஸ்
2ம் வேற்றுமை	அம்	ஔட்	

இவ்வைந்து வேற்றுமையுருபுகளும் 'ஸுட்' என்ற ப்ரத்யாஹாரத்தால் குறிப்பிடப்படுகிறது.

எ–டு	1. ராஜா	ராஜானௌ	ராஜான;
	2. ராஜானம்	ராஜானௌ	

சில சொற்கள், வேற்றுமை உருபுகளோடு இணையும்போது இரண்டு வகை அடிச் சொற்கள் கொண்டன, அதாவது (1) ஸர்வநாமஸ்தான உருபுகளுக்கு முன்னாலும் (2) மற்ற இடங்களிலும்
எ–டு ராஜன் என்ற பெயர்ச் சொல் ஸர்வநாமஸ்தான உருபுகளுக்கு

முன்னால் இறுதி 'அ்', 'ஆ'வாகும். மற்ற இடங்களில், இந்த நீட்டமில்லை. 2ம் வேற்றுமைப் பன்மை. ராக்:

1.1.44 ந வா இதி விபா⁴ஷா

தடுத்தல் மாற்றுதல் இந்த இரண்டுக்கும் விபாஷா என்று பெயர். ஒரே இடத்தில் இந்த இரண்டுமே பயன்படுத்தக் கூடிய ஒரு சூழல் எழுமானால் அதற்கு விபாஷா என்றுபெயர்.

(1)ப்ராப்த (2) அப்ராப்த (3)ப்ராப்தாப் ராப்த (1)ஏற்கெனவே முதலில் ஒரு பொது விதி இருக்கும்போது, அதற்கு பிறகு ஒரு விபா⁴ஷா விதி அமைதல் (2) முதலில் ஒரு பொது விதியமையாமல், விபாஷா விதி மாத்திரம் காணப்படும் (3) முதலிரண்டு மே, இங்கு காணப்படலாம்.

எ–டு ஸ்வி1 பெருக்கு லிட்–ஸூஸாவ/ஸூஸூவது:

1.1.45 இக்³யண: ஸம்ப்ரஸாரணம்

'யண்'ப்ரத்யாஹாரத்ரதுள்ளடங்கிய அரை உயிர்கள் 'இக்'என்றப்ரத்யாஹாரத்துள்ளடங்கிய உயிர்களாக மாற்றம் அடைவது ஸம்ப்ரஸாரணம் (ஒலியாக்கம் . 7)

யஜ் → இஷ்டம்
வப் → உப்தம்

யண்	→	இக்
ய் வ் ர் ல்	→	இ உ ரு லரு

1.1.46 ஆத்³யந்தௌ டகிதௌ

'ட்' அல்லது 'க்' எழுத்துக்களை 'இத்'தாகக் கொண்ட ஆகமங்கள் ஒரு சொல்லுக்கு முன்னாலோ பின்னாலோ வரும்.

'ட்', 'க்' என்ற 'இத்'தின் ப்ரயோகத்தைப் பற்றி இச்சூத்திரம் கூறுகிறது. ஒரு ஆகமத்தின் 'இத்', 'ட்' ஆக இருக்குமானால் அந்த ஆகமம் ஒரு சொல்லுக்கு முன்னாலும் 'கித்' ('க்' ஒரு ஆகமம்) என்ற ஆகமம் ஒரு சொல்லுக்குப் பின்னாலும் வரும். 'ய' என்ற மெய்யைத் தவிர மற்ற மெய்களை முதலாகக் கொண்ட ஆர்த³த⁴தா⁴துக ஒட்டுக்கள் 'இட்' என்று கூறப்படுகிறது. (7.2.35). 'இட்'ஆகமம் எங்கு வரவேண்டும், முதலிலா, நடுவிலா அல்லது இறுதியிலா என்ற வினா எழும்புகிறது. இதற்கு, இந்தச் சூத்திரம் விடையளிக்கிறது.

'ஸ்யதி' என்ற ஆர்த்³த⁴தா⁴துக ஒட்டு வருங்காலத்தைக் குறிக்கும். இத்துடன் 'இட்' சேர்க்க வேண்டும்.

பூ⁴ + ஸ்யதி → பூ⁴ + இட் + ஸ்யதி → ப⁴ விஷ்யதி

பீ + ஷுக் + ணிச் + த → பீஷயதே. (VII.3.40)

1.1.47 மித³சோ அந்த்யாத் பர

'ம்' என்ற 'இத்'தைக் கொண்ட ஆகமம், ஒரு சொல்லின் இறுதி உயிர்க்குப் பின்னால் வரும்.

இச்சூத்திரம் 'மித்' ஆகமத்தைப் பற்றிப் பேசுகிறது. அது ஒரு சொல்லில் வருமிடத்தைக் குறிப்பிடுகிறது.

பயஸ் + நும் + இ (1.72 பயாந்ஸி (.4.8)

இங்கு 'ந்', 'ய' வுக்கும் 'ஸ'க்குமிடையில் இணைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, 'ய'வுக்குப் பின்னால் வரும் 'அ' (இறுதி உயிர்)வுக்கு பிறகு 'ந்'– வருகிறது. 'நும்' மில், 'உ' – வும், 'ம்' மும் இத்.

1.1.48 ஏச இக்³க்⁴ ரஸ்வாதே³ஸே.

'ஏச்' (ஏ, ஒ, ஐ, ஔ) ண உக்கு குறில் ஆதேசமாகும்போது

'இக்' (இ,உ) மாத்திரந்தான் வரும் (மற்ற உயிர்கள் அல்ல)

எ–டு	அதி – ரை = அதிரி	
	அதி – நௌ = அதினு	(1.2.47)
	உப – கோ³ = உபகு³	(1.2.48)

1.1.49 ஷ ஷ் டி⁴ ஸ்தா²னே யோகா³

(இவ்விலக்கண நூலில்) சூத்திரத்தின் ஒரு சொல் 6ஆம் வேற்றுமையில் அமைந்திருந்தால், அச் சொல் அதன் இடத்தில் என்ற பொருளைக் கொடுக்கும்.

இது ஒரு பரிபா⁴ஷா சூத்திரம். இது முக்கியமாக, அஷ்டாத்தியாயியின் கருவி மொழியை எவ்வாறு விளக்க வேண்டும் என்று கூறுகிறது. காட்டாக, சூ. 1.1.3 இல் 'இக்' என்ற சொல் ஆறாம் வேற்றுமையில் அமைந்துள்ளது.

இகோ கு³ணவ்ருத்³தி⁴ அதாவது இக: ஸ்'தா²னே

கு³ண வ1ருத்³தி. இதன் பொருள் 'இக்'கின் இடத்தில்,

கு³ணம் (அ) வ்ருத்³தி⁴ வரும்.

இக் – கு³ண/வ'ருத்தி

பார்க்க கருவிமொழி

1.1.50 ஸ'தா²னே அந்தரதமஸ்:

(அதன்) இடத்தில் மிகநெருக்கமானது (ஆதேசமாகும்)

ஏற்கனவே இருக்கும் ஒரு எழுத்துக்குப் பல எழுத்துக்கள் ஆதேசமாக வரலாமென்ற ஒரு சூழலில் எந்த ஒரு எழுத்து முன்னாலே இருக்கும் எழுத்துக்கு மிகவும் நெருங்கியதாக இருக்குமோ அந்த எழுத்துத்தான் ஆதேசமாக இருக்கும்.

சூ. 3 இல் 'இக்' இன் இடத்தில் குணம்/விருத்தி வரும் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், இச்சூத்திரம் எந்த எழுத்து, எந்த எழுத்தின் குணம் என்று தெளிவாகக் கூறவில்லை எந்த எழுத்தை வேண்டுமானாலும்

ஒரு எழுத்துக்குப் பதிலீடாகக் கொள்ள முடியாது, அதற்கு இச்சூத்திரம் விடையாக அமைகிறது.

'இ'க்கு மிக நெருங்கிய ஒற்றுமை உள்ள எழுத்து இரண்டும் ஒரே ஒலிப்பிடத்திலிருந்து பிறக்கிறது.

மிக நெருங்கிய ஒற்றுமை கீழ்க்கண்ட வகைகளில் அமையும்.

(1) ஒலிப்பிடம் (ஸ்தா'னம்) (2)பொருள் (அர்த்தம்) (3)அளவு (ப்ராமாணம்) (4)குணம்

எ–டு (1) அண்ணம், உதடு (3) குறில், நெடில்
(2) ஒருமை, பன்மை (4) உயிர்ப்பொலி

1.1.51 உரண் ரபர:

'ரு' என்ற எழுத்துக்கு 'அண்' ப்ரத்யாஹாரத்துள்ளடங்கிய எழுத்துக்கள் பதிலீடாக வரும்போது 'ர்'அந்த எழுத்துக்குப் பின்னால் வரும்.

'ரு'வுக்கு எந்த எழுத்துச் சரியான பதிலீடு என்பதை இச்சூத்திரம் விளக்குகிறது.

'அண்' (அ,இ,உ) ணின் குணம் அ.ஏ.ஓ. இம் மூன்றில் 'ரு' வுக்கு 'அ'தான் நெருங்கிய ஒற்றுமை உள்ள எழுத்து. அதனால் 'ரு' வின் குண எழுத்து'அ' ஆகிறது. இந்த 'அ' வுக்குப் பிறகு 'ர்' வரவேண்டும் என்று இந்தச் சூத்திரம் கூறுகிறது.

எ–டு க்ரு + தா → க் + அர் + தா → கர்த்தா

1.1.52 அலோ அந்த்யஸ்ய

மேற்கூறிய சூத்திரங்களில் விதிக்கப்பட்ட ஆதேசம் இறுதி எழுத்துக்கு (அல்) மட்டும்தான்.

எ–டு பஞ்சகோ'ணி: (1.2.50)

1.1.53 ஙிச் ச

'ஙித்' எற ப்ரதயாஹாரம் பல எழுத்துக்களைக் கொண்ட போதிலும், இறுதி எழுத்துக்கு மாத்திரந்தான் அது பதிலீடாக வரும். 'ரு'வை இறுதியாகக் கொண்ட சொற்கள் துவந்த்வஸமாஸத்தில், வரும்போது ஆ'னங் (ஙிக்) பதிலீடாக வரும் இந்த ஆதேசம் இறுதி எழுத்துக்குமாத்திரந்தான். முழுச் சொல்லுக்குமல்ல.

எ–டு மாத்ரு + பித்ரு → மாதா பிதரௌ

<u>விதிவிலக்கு</u>

தாதங் (ஒரு ஙித்) எ–டு ஜீவதாத்

1.1.54 ஆதே: பரஸ்ய

ஒரு சூத்திரம் பரஸ்ய (இதற்குப் பின்னால்) என்று விதித்தால், அது முதல் எழுத்துக்குக் பின்னால் என்ற பொருளுடைத்து.

எ–டு த்³வி + அப் → த்³விப

(4.3.97) த்வி என்ற சொல்லுக்குப் பின்னால் 'அப்' வரும்போது, 'அப்'புக்கு 'ஈ' ஆதேசமாகும். இந்த ஆதேசம் 'அப்' என்ற சொல்லின் ஒரே ஒரு எழுத்துக்குத்தான் சூ.52 படி இறுதி எழுத்துக்கு ஆதேசமாக வேண்டும். அச்சூத்திரத்துக்கு சூ.1.1.54 விலக்கு அதாவது, இரண்டு சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்கும்போது இரண்டாவது சொல்லின் முதல் எழுத்துக்குப் பதிலியாக வரும்.

த்³வி + அப் → த்வி + ஈ + ப → த்³வீப பார்க்க சூ.1.1.67

1.1.55 அனேகால் ஸி'த் ஸர்வஸ்ய

அனேக எழுத்துக்களைக் கொண்ட ஒரு ஆதேசம் 'ஸி'த் என்ற ப்ரத்யா ஹாரத்தை உடையதாயின் அது ஆறாம் வேற்றுமையில் கூறப்பட்டி ருக்கும் ஸ்தானி முழுவதுக்குமே ஆதேசமாக வரும். இது சூ.52க்கு ஒரு விதிவிலக்கு

எ–டு 2. 4.53. ப்³ருவோ வசி.

ப்³ரு → வச்/காலம்

'வக்தா' அவன் பேசுவான் (எதிர்காலம்,)

7.1.20, ஐஸ் ஸஸோ, ஸி

எ–டு குண்டானி

1.1.56 ஸ்தா²னிவத் ஆதேஸ, அனல் விதெ⁴ள⁴

ஆதேசம் (பதிலீடு) ஸிதா³னி (நிலைச் சொல்)யை ஒத்தது. ஆனால், ஸ்தா2னிக்குள்ளடங்கிய எழுத்துக்களுக்கு எந்த விதி ப்ரயோகப் படுத்தப்படுகிறதோ அதே விதியை ஆதேசத்திலுள்ள எழுத்துக்களுக்கும் பிரயோகப்படுத்த வேண்டிய அவஸ்யம் இல்லை.

எ–டு க்³ரஹ் + த்வா → க்ரஹ + இ + த்வா → க்ருஹீத்வா (7.2.35

7.2.35 ஒரு 'அல் விதி' அதாவது இந்த விதியின் ப்ரயோகம் எழுத்துக்களால் கட்டுப்படுத்தப்பட்டது ஆனால், ஸம் + க்³ரஹ் + ய→ மைக்ருஹ்ய. இங்கு 'ய' 'த்வா' வின் ஆதேசம். அதனால், 'த்வா' வைப்போல் இங்கும் ஒரு 'இ' யைச் சேர்க்க வேண்டுமாவென்ற வினா எழும்பும். 7 .2.35யின்படி ய என்ற எழுத்து வல் ப்ரத்யாஹாரத்துள் இல்லை அதனால் இங்கு 'இ' யைச் சேர்க்க வேண்டாம். கீழ்க்கண்டவைகளில் ஆதேசம் ஸ்தானி இரண்டுக்கும் ஒரே விதிகள் ணி ப்ரயோகப்படும்.

1. தாது (வேர்) அஸ் → பூ'
2. அங்கம் (அடிச்சொல்) கேவ, காப்யாம் (1.2.103)
3. க்ருத் ப்ரக்ருத்ய (6.1.71)
4. தத்திகம் தா³தி⁴கம் (1.2.46)
5. அவ்யயம் ப்ரஸஹ்ய (2.4.82)
6. ஸுப் (வேற்றுமை உருபுகள்) வ்ருக்ஷாய (7.3.102)
7. திங் அகுருதம் (1.4.14)
8. பதம் (சொல்) வ:, ந: (8.1.16)

1.1.57 அச: பரஸ்மின் பூர்வவிதெ^{4}ள

ஒரு உயிரின் (அசண்:) பின்னால் வரும் (பரஸ்மிகு) அதற்க முன்னால் அமையும் (பூர்வவிதெ^{4}ள) எழுத்துக்கு பிரயோகப்படுத்த வேண்டும்.

ஒரு உயிர்க்கு (ஸ்தானி) ஆதேசமாகவரும் மற்றொரு உயிர் ஸ்தானியைப் போன்று செயல்படும். அந்த உயிருக்குப் பின்னால் வரும் எழுத்தினால், இந்த ஆதேசம் நிகழ்கிறது. மேலும் இந்த ஆதேசமாக வரும் எழுத்துக்கு முன்னால் அமையும் எழுத்துக்குப் ப்ரயோகப்படுத்த வேண்டும்.

இதற்கு முன் கூறியது 'அனல்' விதி. இச்சூத்திரம் 'அல்' விதி.

எ–டு அவதீ^{4}த்' (லுங்) < அ + வத^{4} + ஈத் = அ + வத^{4} + ஈத்6.4.48.

வத → வத்/–ஆர்த^{4} தா^{4}துக ஒட்டு

இங்கு பின்னால் வரும் ஒட்டினால் வத என்ற சொல்லின் இறுதி 'அ' கெட்டது.

இங்கு 2.7. ப்ரயோகப்படுத்த முடியாது. ஏனென்றால், (ஆதேசம்) அதன் ஸ்தானியைப் போல் கருதப்படும். அதனால் .2.7 படி இங்கு வ்ருத்திவர வேண்டும் அதை இந்தச் சூத்திரம் தடுக்கிறது. இல்லாவிட்டால் அதா4வீத் என்ற சொல் தருவிக்கப்படும் இந்தச் சூத்திரம் உயிர் ஆதேசத்தைப் பற்றிப் பேசுகிறது.

1.1.58 ந பத^{3}ாந்த த்விர் வசன வரேய லோப ஸ்வர ஸவர்ண அனுஸ்வார தீ^{3}ர்க^{4} ஜஸ் சர் விதி^{4}ஷு

இதற்கு முன்னால் கூறிய விதிகளுக்கு (ஆதேச) சில இடங்களில் விதிவிலக்கு உண்டாகும் அவை வருமாறு.

(1) ஒரு சொல்லின் இறுதி எழுத்துக்கள் (பதாந்த விதி) (2)எழுத்துக்கள் இரட்டிக்கும்போது (த்விர்வசன) (3) வரச் என்ற ஒட்டு இணைக்கும்போது (4) 'ய' கெடும்போது (5) ஸ்வர விதி (6) ஸவர்ண விதி (7) அனுஸ்வாரம் (8) நீட்டல் (9) ஜஸ் (10) சர் ஆகியறவைகள் பதிலீடாக வரும்போது 'ஆதேசம்' ஸ்தானியைப் போன்று செயற்படா.

1) கௌ ஸ்த: (6.4.111; 8.4.47)
2) த^{3}த்^{4}ய்யத்ர (8.4.47)
3) யாயாவர (3.2.176; 6.4.48)
4) ய கண் டு^{3}தி < கண்டு^{3}யதி (6.1.66)
5) சிக்ஷிக 7.1.1. 6.4.48 ஈ 6.1.193
6) ஸி'ண்டி (3.1.78, 4.4.3 (8.4.47; 8.4.58)
7) ஸி'ஷந்தி (8.3.24; 6.4.3)
8) ப்ரதிர்வ1னா (6.4.134; 8.2.77)
9) ஸ்க்தி^{4}
10) ஜக்ஷி

1.1.59 த்விர்வசேன அசி

இரட்டிக்கும்போது ஒரு உயிருக்குப் பின்னால் வரும் மற்றொரு உயிர் ஆதேசம் ஸ்தானியைப் போல் செயல்படும். இச்சூத்திரம் உருவம் அதிதேஸம் பற்றிக் கூறுகிறது.

எ–டு லிட்

'ஆக்' கெடுதல் (1) பா + அதுஸ் → ப் + அதுஸ் 6.4.64
ப் + ப் + அதுஸ் (6.1.1; 7.4.59)
பபது :

ஈற்றயல் கெடுதல் (2) உறன் + அதுஸ் → உற் +-0 ன்0+அதுஸ் (6.4.98)
உற + உற +அதுஸ் → ஜக்³னது: (6.4.62; 7.3.55)
1. உற → ஜ (7.4.62)
2. உற → க⁴ (7.3.55)

'ணிச்' கெடுதல் (3) அட் + – ணிச், லுங் – ஆடிடது (யண்)
(4) சக்ரது ;
(5) அபாவயவ தேஸ: நிநயு (7.1.91)

1.1.60 அத³ர்ஸனம் லோப:

உருவில்லாவது, லோபம் என்று பெயர் லோபமென்பது, ஒரு, எழுத் தோ, சொல்லோ, கேட்பதற்கோ உச்சரிப்பதற்கோ, அல்லது எழுதுவதற்கோ அகப்படாமை வேண்டும். அதை இந்தச் சூத்திரம் தடுக்கிறது. இல்லாவிட்டால் அதா⁴வீத் என்ற சொல் தருவிக்கப் படும்.

இந்தச் சூத்திரம் உயிர் ஆதேசத்தைப் பற்றிப் பேசுகிறது.

எ–டு ப்சேரன் (6.1.66)

1.1.61 ப்ரத்யயஸ்ய லுக், ஸ்லு, லுப்

ஒட்டுகளின் லோபத்தை, லுக், ஸ்லு, லுப் என்ற பெயர்களால் குறிப்பிடப்படும்.

அத்³ + ஸப் + தி = அத்தி (2.4.72) லுக்லோபம்)

ஹு ஸப் + தி = ஜுஹோதி (2.4.75 ஸ்லு லுக்லோபம்)

வரணா: (4.2.82 லுப்லோபம்)

1.1.62 ப்ரத்யயஸ்ய லோபே ப்ரத்யயலக்ஷணம். ஒரு ஒட்டு மறைந்த பிறகும் அதன் செயல், அது கெடவில்லை போன்று, தொடர்ந்து நீடிக்கும்.

எ–டு அக்னிசித்,

ஒரு பதம் என்பது வேற்றுமை யுருபுகளையோ அல்லது மூவிட விகுதியையோ இறுதியாகக் கொண்டது. (1.4.14) ஆனால் சில அடிச் சொற்களுக்குப்

பின்னால் வரும் ஒட்டுக்கள் கெடும், ஆனாலும், இவைகளையும் ஒரு பதமென்றே கருதப்படும். அதாவது, அவ்வொட்டுக்கள் கெட்ட பிறகும், அவைகளின் செயலாக்கம் தொடரும்.

அக்னிசித் ஸும் --------> அக்னிசித் (ஸுப்லோபம்)
அதோக் (திங் லோபம்)

1.1.63 ந லுமதாங்கஸ்ய

லும் (லுக், ஸ்லுப், லுப்) கெட்ட பிறகு நிற்கும் அடிச் சொல்லில், அவ்வாறு இல்லை.

இந்த விதி, முந்தைய சூத்திரத்திற்கு விதி விலக்கு லுக், ஸ்லு, லுப் ஆகியவைகளினால் கெடும் ஒட்டுக்கள் அவைகளுடைய முக்கிய செயல்களையும் இழக்கும். சூ62ன்படி 'லோப' த்தினால் கெடும் ஒட்டுக்கள், அவைகளின் தன்மையை இழக்கா.

எ–டு கா்க³ + யஞ் -------> கா்ர்க்³ய: (1.105; 2.117)(ஒருமை)
பன்மை. கர்கா: (.4.64)

'யஞ்' என்ற ஒட்டு, 'லுக்' கினால் கெடுகிறது. அதேசமயம்வ்ருத்தியும் அதனோடு கெடுகிறது. அதாவது, கர்கா: என்ற சொல்லில், 'யஞ்' இனால் கிடைக்கப் பெற்ற வ்ருத்தி 'ய' ('யஞ்') என்ற ஒட்டு, இந்த இரண்டுமே கெட்டன.

1.1.64 அசோ அந்த்யாதி

ஒரு சொல்லின் இறுதியில் அமையும் எழுத்து, அதற்கு முன்னால் வரும் உயிருடன் சேர்த்து 'டி' என்ற பெயர் பெரும்.

எ–டு அக்னிசித் என்ற சொல்லின் 'இத்' ஒரு 'டி'

1.1.65 அலோ அந்த்யாத் பூர்வ உபதா⁴

ஒரு சொல்லின் இறுதி எழுத்துக்கு முன்னால் வரும் எழுத்துக்கு உபதா⁴ என்று பெயர்(ஈற்றயல்)

1.1.66 தஸ்மின் இதி நிர்தி³ஷ்டே பூர்வஸ்ய

ஒரு சூத்திரத்தில், ஏழாம் வேற்றுமையில் (தஸ்மின்) ஒரு சொல் அமைத்திருந்தால், அச் சொல்லுக்கு முன்னால் இருக்கும் சொல்லில் அந்த விதியைப் ப்ரயோகப்படுத்த வேண்டுமென்று பொருள்.

எ–டு இகோ யண் அசி (6.1.777)
'அசி' ஏழாம் வேற்றமையில் உள்ளது.
இக் ----> யண்/அசி
(இ,உ.ரு, ல்ரு) ----> (ய,வ,ர்,ல்)/ஒரு உயிர்
த³தி⁴ உத³கம் ----> த³த்⁴யு³தகம்

1.1.67 தஸ் மாத் இதி உத்தரஸ்ய

ஒரு சூத்திரத்தில் 'தஸ்மாத்'. அதாவது ஐந்தாம் வேற்றுமைச் சொல்லைப் பயன் படுத்தியிருந்தால், இச் சொல் அதற்குப் பின்னால் வரும் சொல்லில் இந்த விதியைப் ப்பிரயோகப் படுத்த வேண்டுமென்ற பொருவளக் கொடுக்கும்.

எ–டு உத[3] : ஸ்தா[2]ஸ்தம் போ[4] : பூர்வஸ்ய (.4.61)

இங்கு உத[3] : ஐந்தாம் வேற்றுமை

1.1.68 ஸ்வம் ரூபம் ஸப்தஸ்ய அஸப்தஸம்க்ஞா

இங்கு, ஒரு சூத்திரத்தில் காணப்படும் சொற்கள் அதனதன் உருவம் மாத்திரந்தான் குறிக்கும். ஆனால், ஸம்க்ஞாவாகப் பிரயோகப்படுத்தப் பட்டிருக்கும் சொற்கள், அவைகளால் உணர்த்தப்படும் பொருளையும் சுட்டுவதாகக் கொள்ள வேண்டும்.

எ–டு அக்னோ ட[4]க் (2.33) ஆக்னேயம்

இச்சூத்திரம் 'அக்னி' என்ற சொல்லுக்கு (அ,க்,னி) மட்டுந்தான். இதே பொருளைக் (நெருப்பு) கொண்ட மற்ற சொற்களுக்கு இவ்விதி அல்ல. அதாவது, இதே பொருளைக் கொண்ட 'பாவக', 'ஜ்வலன' என்ற சொற்களில் இவ்விதியைப் ப்ரயோகிக்க முடியாது.

ஒரே பொருளைக் கொண்ட (பல சொற்கள் ஒரு மொழியில் காணப்படலாம்.

இச்சூத்திரம், அத்தகைய சொற்களில், இவ்விதியைப் பயன்படுத்தக் கூடாது, என்ற தடை விதிக்கிறது, இதற்கு விதிவிலக்காக, ஸமக்ஞா சொற்களைக் கூறுகிறார் ஸம்க்ஞாவான ஒரு சொல் ஒரு சூத்திரத்தில் காணப்பட்டால், அது அந்தச் சொல்லின் பொருளை அதாவது அச்சம்க்ஞாவினால் குறிப்பிடப்பட்ட சொற்களைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்

எ–டு க[4], (1.1.20), க[4] (1.1.82)

வா[1] ஸித்தத்[3] விஸேஷாணாம் வ்ருக்ஷாத[3]யர்த[2]ம்

வா. 2. பித் பர்யாய ஃபசனஸ்ய ஸ்வாத்வர்த[2]ம்

வா 3. ஜித் ராஜாத்[3]யர்த[2]ம்

வா. 4. ஜி[4]த் தத்[3] விஸேஷாணாம் மத்ஸ்யாத்[3]யர்த[2]ம்

வா. 1. பார்க்க .4.12	
வா. 2. பார்க்க .4.40	
வா. 3. பார்க்க .4.23	விதிவிலக்கு
வா. 4. பார்க்க .4.35	

1.1.69 அணுதித் ஸவர்ணஸ்ய ச அப்ரத்யய:

'அண்' ப்ரத்யாஹாரத்திலுள்ள எழுத்துக்களும் 'உ' வை 'இத்' தாகக் கொண்ட சொல்லும் தத்தம் உருவத்தையும், பொருளையும் குறிக்கும். ஆனால்

அவைகள் ஒரு ஒட்டாக ப்ரயோகமாகாமல் இருக்கும் போதுதான் இந்த விதி.

எ–டு ஆத் கு^{3}ண: .1.8

ஆத் – அ. ஆ:

நர + ஈஸ்வர: நரேஸ்வர:

மஹா + ஈஸ்வர: – மஹேஸ்வர

கு – க வர்க,சு – சவர்க

1.1.70 தபரஸ் தத்காலஸ்ய

ஒரு எழுத்துக்கு முன்னாலோ பின்னாலோ 'த்' சேர்ந்து ஒரு சூத்திரத்தில் வரும்போது அந்த எழுத்தையும், அதன் ஒலியெழுத்தையும் (உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம்) சேர்த்து குறிக்கும்.

காட்டாக: 'அத்' அ;, உத் உ

உயிர்கள், அதன் உச்சரிக்கும் நேரத்தைப் பொறுத்து குறில் (1 மாத்திரை), நெடில் (2 மாத்திரை), ப்லுதம் (3 மாத்திரை) என்ற பகுக்கப்படுகிறது. இந்த விதியின்படி 'அத்' என்றால் உதாத்த/அனுதாத்த/ஸ்வரிதம் ஆகிய ஒலி யெழுத்தைக் கொண்ட குறில் 'ஆ' என்று பொருள். அதன் நெடிலான 'ஆ' இத்துள் அடங்காது.

எ–டு அதோ பி^{4}ஸ் ஐஸ் (.1.9)

வ்'ருக்ஷ + பி^{4}ஸ் = வ்'ருக்ஷ + ஐஸ் = வ்'ருக்ஷை: (ஆனால்)

க^{2}ட்வா + பி^{4}ஸ் = க^{2}ட்வாபி^{4}ஸ்

1.1.71 ஆதி^{3}ர் அந்த்யேன ஸஹேதா

முதல் எழுத்து, கடையெழுத்தின் 'இத்' இவ்விரண்டுக்குமிடையில் காண ப்படும் எழுத்துக்கள் இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து எடுத்து க் கொள்ள வேண்டும்.

இச்சூத்திரம் ஒரு ப்ரத்யஹாரத்துள்ளடங்கிய எழுத்துக்களைப் பற்றிக் கூறுகிறது.

அக் = அ, இ, உ, ரு, ல்ரு.

பார்க்க சிவசூத்திரம் 1–2

1.1.72 யேன விதி4ஸ் ததந்தஸ்ய

ஒரு சூத்திரத்தில் எந்த ஒரு எழுத்தின் விசேஷணத்தைக் (தனித்தன்மை) குறிப்பிட்டுக் கூறுகிறதோ அந்த விசேஷணத்தையே இறுதியாகக் கொண்ட மற்ற எழுத்துக்களும் அதற்குள்ளடங்கும்.

எ–டு ஏரச் (3.3.56)

'இ' க்குப் பிறகு 'அச்' வரும்

'இ' என்ற எழுத்தை மாத்திரம் அல்லாமல், 'இ' என்ற உயிரை ஈறாகக் கொண்ட மற்ற சொற்களையும் சேர்த்து சுட்டுகிறது இந்தச் சூத்திரம்.

எ–டு 'சி' சய

வா. 1 . ஸமாஸ ப்ரத்யபவிதே: ப்ரதிஷேத[4] : வாக்கவ்ய:
இந்த விதி (தத'ந்த வித), ஸமாசம், ப்ரத்யயம் சம்பந்தப்பட்ட விதிகளுக்குப் ப்ரயோகம் பண்ண முடியாது. 2.1.24. கஷ்டஸ்ரித:

வா. 2. உகித்வர்ண க்ரஹணவர்ஜமிதி வக்தவ்யம். இதுவா. 1க்கு விதி விலக்கு. 'உக்' என்ற 'இத்' தை இணைத்துத் தருவிக்கப்பட்ட சொற்கள் அல்லது எழுத்துக்களைக் குறிப்பிட்டு அமைக்கப்பட்ட விதிகள் இந்த இரண்டு இடங்களும் மேலே குறிப்பிட்ட வார்த்தி சுத்துக்கு விலக்கானவை.

எ–டு த்[3]ராக்ஷி (4.1.95

வா. 3. யஸ்மின் விதி ததா தா[3]வல் க'ரஹணே).

1.1.73 வ'ருத்திரி யஸ்யாசாம் ஆதி[3], தத் வ'ருத்[3]த[4]ம்.

பல உயிர்களைக் கொண்ட ஒரு சொல்லில், முதன் முதலாக அமையும் உயிர், வ1ருத்தியாக இருந்தால் அச் சொல் வ'ருத்[3]த[4]ம் என்ற பெயர் பெறும்.

எ–டு ஸாலீய (4.2.114)

வா. 1. நாமதே ய யஸ்ய வ'ருத்[3]த[4]ஸம்க்[3]ஞா வக்தவ்யம்

ஒரு இயற்பெயர். மேலே கூறிய விதிக்குள்ளடங்காமல் இருந்த போதிலும், வ'ருத்[3]த[4]ம் என்ற பெயர் பெறும். இது ஒரு விருப்பு விதி[4] தேவதத்த+ ச[2]: தேவதத்தீயா: / தேவதத்தா:

வா. 2 கே[2]ாத்ராந்தாவஸமஸ்த வத் ப்ரத்யயோ பவத்தி வக்தவ்யம்.

ஒரு தொகையின் கடைசி உறுப்பினர் கோத்ரத்தைக் குறிக்கம் தத[3]தி[4]த ஒட்டு ''ச''2 இணைக்கும்போது, அதை ஒரு தொகையாகக் கருதுவதில்லை.

எ–டு ரௌடி. ஒரு கோத்ரத்தைக் குறிக்கும் சொல், இது, ஒரு வ'ருத[3]த[4]முமாகும்.

வா.3. ஜிஹ்வாகாத்ய ஹரிதகாத்ய வர்ஜனம்

ஜிஹ்வாகாத்ய, ஹரிதகாத்ய என்ற இரண்டு சொற்களும் விதிவிலக்கு. ஜைஹ்வாகாத: ஹாரிதகாத:

1.1.74 த்யத[3]ாத்[3]னிச

த் 'யத்' முதலிய சொற்களும் வருத்[3]த[4]ம் எனப்படும்.

எ–டு த்யத்யம் (4.1.157)

1.1.75 ஏங் ப்ராசாம் தேஸே

ஒரு சொல், பல உயிர்களைக் கொண்டு, அதன் முதல் உயிர், 'ஏ' அல்லது 'ஓ' வாக இருந்து, அச்சொல் (இந்தியாவின்) கிழக்குப் பகுதி யிலுள்ள ஒரு தேசத்தின் பெயராக இருந்தால், அச்சொல்லும் ஒரு வ்ருத[3]த[4]மே.

எ–டு கோனர்த + ச[2] = கோனர்த்ய

1.2.1. க³ாங் குட்³ாதி³ ப்⁴யோ அஞ் வித் ஙித்

கா³ங் (படி) (இங் என்ற வினைக்குப் பதிலியாக வரும் வினை)

குட் (வளை) என்ற வினையை முதலாகக் கொண்ட கணத்துக்குளடங் கிய வினைகள், ஆகியவைகளுக்குப் பின்னால் வரும் 'ஞ்', 'ன்' ஆகியவைகளை 'இத்' தாகக் கொள்ளாமல் வரும் ஒட்டுக்கள் 'ங்', 'ஐ' இத்தாகக் கொண்டாற் போன்று செயற்படும்.

இது ஒரு அதிதேஸ சூத்திரம் 'ங்' என்ற எழுத்து 'இத்' ஆக இல்லாமலிருந்த போதிலும், சில ஒட்டுக்கள் அதை 'இத்' ஆக கொண்டது போல், சில இடங்களில் செயற்படும்.

1) அதி⁴ + அட் + இங் + ஸிச் + த = அத்⁴ய + கா³ + ஸ் + த (2.4.30)=அத்⁴ய + க்³ + ஸ்த. (6.4.66) =அத்⁴ யக்³ஷ்ட (ஆ → ஈ / –ஸிச்)

இங்கு 'ஸிச்', 'ஞித்', தோ. 'ணித்' தோ அல்ல அதனால் இது ஙித் ஆக, இச் சூத்திரத்தின்படி செயற்படுகிறது. அதனால் வினையடிச் சொல்லின் இறுதி உயிர் 'ஆ' வுக்குப் பதிலியாக 'ஈ' வருகிறது. (ஙித் போல்) (8.3.59 4, 41)

2) குட் + யமன் = குட் + இட் + யமன் (7.2.35) = குடிதும் (ஜித் போன்று, இந்த ஒட்டு செயற்படுகிறது)

ஆனால்,

உத் + குட் + ணிச் + ஸ்ப = உத் கோட் + இ + 'அ' உத்கோடய (7,3.86) 'ணிச்', 'ஙித்' தாகச் செயற்படுகிறது.

வா: வ்யபசே: குடாதித்வம் அமனஸீதி வக்தவயம்

'அஸ்' என்ற ஒட்டு வருமிடங்களைத் தவிர மற்ற இடங்களில் வ யச் ஏமாற்று தாதுவும் 'குட்' முதலியவைகளைப் போன்றது.

விசிதா, விசிதும்

1.2.2 விஜ் இட்

விஜ் (பயப்படு, நகர் தா.ப.1290) என்ற தாதுவுக்குப்பின்னால் வரும் இட் என்ற ஆகமத்தை கொண்ட எல்லா ஒட்டுக்களும் 'ங்' ஐ 'இத்' ஆக உடையது போல் செயல்படும்.

எ–டு உத்³விஜிதா

ஆனால்

உத்³வேஜனம் < உத³ + விஜ் + ல்யுட் 'இட்' ஆகமம் இங்கு வராததால் 'ஙித்' ஆகாது.

1.2.3 விபா⁴ஷா ஊர்ணோ:

ஊர்ண (மூடு) என்ற தாதுவுக்குப் பின்னால் ('இட்' வரும்போது அது, விருப்பாக (optionally) 'ஙித்' ஆகலாம். ப்ர + ஊர்ணு + இ + த – ப்ரோர்ண

விதா (அ) ப்ரோர்ணுவிதா

1.2.4 ஸார்வதா^{4}துகம் அபித்

ஸார்வதா^{4}துக ஒட்டுக்கள் (3.4.113) 'ப்' ஐ 'இத்' தாக கொள்ளாமல் வரும்போது, அவைகள் 'ஙித்' போன்று செயலாற்றும்.

எ–டு. க்ரு + உ + தஸ் → கர் + உ + தஸ் → குரு + தஸ். (3.1.79) குருத (6.4.110)

1.2.5 அஸம்யோகாத் லிட் கித்:

'லிட்' (perfect)இன் பதிலீடாக வரும் ஒட்டுக்கள் (அபித்) கூட்டு மெய்கள் ஈறாக அமையாமல் இருக்கும் தாதுக்களுக்குப் பின்னால் வரும் போது 'க்' ஐ இத்தாகக் கொண்டாற் போல் செயற்படும்.

எ–டு பி^{3}பி^{4}த^{3}து' (< பி^{4}த்)

ஆனால் ஸஸ்ரம்ஸது: < ஸ்ரம்ஸ், ஸ்ரம்ஸ். கூட்டு மெய்களை இறுதியாகக் கொண்டது ஈற்றயல் மூக்கொலியும் கெடவில்லை (6.4.24)

1.2.6 இந்தி^{4}ப^{4}வதிப்^{4}யாம் ச

இந்தி^{4} (எரி) ப^{4}வதி (ஆகு) ஆகிய தாதுக்களுக்கு பின்னால் வரும் 'லிட்' இன் பதிலிகளும் 'கித்' போன்றே செயற்படும்.

ஸம்தே^{4}ப^{3}பூ^{4}வ

வா: ஸ்'ரந்தி^{2} க்^{3}ரந்தி^{2} த^{3}ம்பி^{4} ஸ்வஞ்ஜ் ணாமிதி வக்தவ்யம்

ஸ்'ரந்த்^{2} (தளர்த்து, க்ரந்த^2 (கட்டு), த^{3}ம்ப்^{4} (காயப்படுத்து) ஸ்வஞ்ஜ் (தழுவு) ஆகிய தாதுக்களுக்கு பின்னாலும் என்று கூற வேண்டும்.

ஸ்'ரேத^{2}து:, க்ரேத^{2}து:, தே^{3}ப^{4}து:, பரிஷஸ்வஜே

1.2.7 ம்ருட^3 ம்ருத^3 கு^{3}த^4 கு'ஷ க்லிஸ'^{1} வத^2 வஸ: க்த்வா

ம்ருட^3 (கருணை நிறைந்த), ம்ருத (பொடியாக்கு) கு^{3}த^4(கோபி) கு'ஷ (கிழி), க்லிஸ்' (துன்பப்படுத்து), வத்^{3}(பேசு), வஸ்(வஸி) ஆகிய தாதுக்களுக்குப் பின்னால் வரும் 'க்த்வா' என்ற ஒட்டு 'கித்' போன்று செயற்படும்.

எ–டு ம்ருடி^{3}த்வா

ம்ருதி^{3}த்வா

1.2.8 ருத^3 வித^3 முஷ க்^{3}ஹி ப்ரச்ச^2 ஸம்ஸ்^{1} ச

ருத்^{3} (அழு) வித்^{3} (அறி) முஷ் (திருடு) க்ரஹ் (பிடி) ஸ்வப் (தூங்கு) பரச்ச^2 (கேள்) ஆகிய தாதுக்களுக்குப் பின்னால் வரும் 'கித்வா' வுப 'ஸன்' உம் 'கித்' போன்று செயற்படும் ருதி^{3}த்வா அழுது ஹுணி ருருதி^{3}ஷதி ' (Desiderative) (அவன்) அழ விரும்புகிறான்.

விதி^{3}த்வா, விவிதி^{3}ஷதி

1.2.9 இகோ ஜ^{2}ல்

'இக்' உயிரை ஈறாகக் கொண்ட ஒரு தாதுவுக்குப் பின்னால் வரும் 'ஜ^{2}ல்' ப்ரத்யா ஹாரத்தின் ஒரு எழுத்தை முதலாகக் கொண்ட 'ஸன்' (Desiderative suffix) 'கித்' போன்று செயற்படும்

எ–டு ஜி → ஜிகீஷதி

க்ரு → சி க்ர்ஷதி

ஆனால் பா → பிபாஸதி

1.2.10 ஹலந்தாத் ச

ஒரு மெய்யை இறுதியாகவும், அம் மெய்க்கு முன் வரும் எழுத்து இக் ப்ரத்யாஹாரத்தின் ஒரு உயிராகவும் கொண்ட ஒரு தாதுவுக்குப் பின்னால் வரும் ஜ^{2}ல் ப்ரத்யாஹாரத்தின் ஒரு எழுத்தை முதலாகக் கொண்ட 'ஸன்', 'கித்' போன்று செயற்படும்.

எ–டு பி^{4}த்^{3} பி^{3}பி^{4}த்ஸதி (இங்கு ஈற்றயல் (குறில்) உயிர் குணமாகா து)

ஆனால் விவர்தி^{4}ஷதே < வ்ருத்^{4} (ரு குணமாகிறது.)

1.2.11 லிங் ஸிசௌ ஆத்மனேபதேஷு

ஒரு மெய்யை இறுதியாகக் கொண்டு அதன் ஈற்றயல் இக் ப்ரத்யாயாஹாரத்தின் ஒரு உயிராகவும் அமைந்த ஒரு தாதுவுக்குப் பின்னால், 'ஜ^{2}ல்' ப்ரத்யாஹாரத்தின் ஒரு எழுத்தை முதலாகக் கொண்ட 'லிங்' (3.3.161) (Benedictive) ஸிச் (3.1.44) (Aarist) ஆகியவைகளில் ஒட்டுக்கள் வந்து அவைகள் ஆத்மனேபத ஒட்டுகள் எடுக்கும்போது, லிங், 'ஸிச்', 'கித்' போன்று செயற்படும்.

1.2.20 'ம்ருஷஸ்' திதிக்ஷாயாம்

ம்ருஷ் என்ற தாது 'பொறுத்தல்' என்ற பொருளை உணர்த்தும்போது. அதற்குப் பின்னால் வரும் 'இட்' ஆகமத்தோடு கூடிய (ஸேட்) நிஷ்டா^{4} ஒட்டுக்கள் 'கித்' ஆகாது.

எ–டு மரிஷித் மர்ஷித்வான் (குணாதேஸம் உண்டு) ஆனால்

அபம்ருஷிதம் வாக்யம் ஆஹ தெளிவில்லாமல் பேசினான். இங்கு 'ம்ருஷ்' தெளிவு என்ற பொருளைக் கொண்டது. இங்கு குணாதேஸம் இல்லை.

1.2.21 உத் உபதா^{4}த்^{3} பா^{4}வாதி^{3} கர்மணோர் அன்ய தரஸ்யாம்.

'உ' வை ஈற்றயலாகக் கொண்ட தாதுக்களுக்குப் பின் வரும் 'ஸேட்', நிஷ்டா^{4} ஒட்டுக்கள் பாவ அல்லது ஒரு செயலின் தொடக்கத்தை குறிக்கும்போது விருப்பாக (அன்யதரஸ்யாம்) 'கித்' ஆக செயலாற்றாது.

எ–டு த்^{3}யுதிதம் அனேன/த்^{3}யோதிதம் அனேன (த்^{3}யுத்)

1.2.22 பூங்: க்த்வா ச

(ஸேட்) நிஷ்டா, க்த்வா ஆகிய ஒட்டுக்கள் பூ என்ற தாதுவுக்கு பின்னால் வரும்போது 'கித்' ஆக செயற்படாது. பூ + இட் + க்த = போ+ இ+ த (7.3.84) பவ் + இ+ த (6.1.78) பவித. தூய்மையாக்கினான். பூ + இட் + க்த்வா = பவித்வா தூய்மையாக்கி

1.2.23 ந உபதா^{4}த் த^{2} பா^{2}ந்தாத் வா

'த்^{2}', 'ப்^{2}' ஆகிய எழுத்துக்களை ஈறாகவும் 'ந்' வை ஈற்றயலாகவும் கொண்ட தாதுக்களுக்குப் பின் வரும் (ஸேட்) க்த்வா ஒட்டுக்கள் விருப்பாக 'கித்' ஆக செயற்படும்.

எ–டு க்^{3}ர தி^{2}த்வா/த்வா/க்^{3}ரந்தி^{2}த்வா, (ஒன்றாகக்கட்டி) க்^{3}ரந்த்^{2}.
ஆனால் ரேபி^{2}த்வா ரிப்^{2} (இங்கு குணாதேஸம்) (திட்டிவிட்டு)

1.2.24 வஞ்சி லுஞ்சி ருத ச

வஞ்ச் (ஏமாற்று) லுஞ்ச் (பறி) ருத்(வெறு)

ஆகிய தாதுக்களுக்குப் பின் வரும் ஸேட் க்த்வா ஒட்டுக்களும் விருப்பாக 'கித்' போன்று செயற்படும்.

வசித்வா/வஞ்சித்வா ஏமாற்றிவிட்டு

ருதித்வா/அர்தித்வா வெறுத்துவிட்டு

1.2.25 த்ருஷி ம்ருஷி க்ருஸே': காஸ்'யபஸ்ய

த்ருஷ் (தாகமாகு) ம்ருஷ் (தெளி, தூவு) க்ருஸ்'(மெலி) ஆகிய தாதுக்களுக்குப் பின் வரும் ஸேட் நிஷ்டா கித் ஆக (விருப்பாக) வரும் என்பது காஸ்யபரின் கருத்து.

எ–டு த்ருஷித்வா/தர்ஷித்வா

1.2.26 ரலோ வ்யுபதா^{4}த்^{3} ஹலாதே^{3} :ஸம்ஸ்'ச

ஒரு மெய் முதலாகவும், 'ரல்' ப்ரத்யாஹாரத்தின் ஒரு எழுத்து ஈறாகவும் அதன் ஈற்றயல் 'இ' அல்லது 'உ' (குறில்/நெடில்) ஆகவும் கொண்ட தாதுக்களுக்குப் பின் வரும் 'க்த்வா'வும் ஸன் உம் 'ஸேட்' ஆனால், 'கித்'ஆக (விருப்பாக) செயற்படும்.

எ–டு த்^{3}யுதித் வா/த்^{3} யோதித்வா
லிகி^{2}த்வா/லேகி^{2}த்வா.
(ஸன்) லிலிகி^{2}ஷதி/லிலேகி^{2}ஷதி

1.2.27 ஊகால அச் ஹ்ரஸ்வ தீர்க^{4} ப்லுத

ஹ்ரஸ்வ (குறில்), தீர்க்^{4} (நெடில்) ப்லுத ஆகிய கலைச் சொற்கள் முறையே, ஓர் உயிரின் காலவரையறையை (உச்சரிக்கும்போது) உ, ஊ, ஊ3 எனக் குறிக்கும்.

குறிலின் அளவு ஒரு மாத்திரை, நெடில் 2 மாத்திரை ப்லுதம் 3 மாத்திரை

உ. காலம் ஹ்ரஸ்வம் த³தி⁴, மது⁴

ஊ. காலம் தீர்கம் – கௌர்

ஊ3. காலம் ப்லுதம் – தே³வதத்த ³ அத்ர

1.2.28 அசஸ'ச.

இவைகள் (அதாவது ஹ்ரஸ்வ, தீர்க⁴, ம்லுத) உயிர்களுக்கு மாத்திரந்தான் ஆதேசமாக வரும்.

இது ஒரு பரிபாஷா சூத்திரம்.

எ–டு அதிரை–அதிரி. அதிநௌ–அதிநு. உபகௌ³–உபகு (பார்க்க 1.2.47) (ஹ்ரஸ்வ)

தீர்க⁴–சி + யங் + தே = சீயதே (7.4.23)

ப்லுத–தேவதத்த3. ஓ தேவதத்த (8.2.82)

1.2.29 உச்சைர் உத³த்த:

ஓர் உயிர் மேல் சுரத்தில் உச்சரிக்கும்போது அது உதாத்தம் என்ற பெயர் பெறும்

எ–டு அக்னி – இங்கு 'இ' உதாத்தம்

1.2.30 நீசைர் அனுத³த்த:

கீழ்சுரத்தில் உச்சரிக்கப்படும் உயிர் அன த³த்தம்

எ–டு அக்னி – இங்கு 'அ' அனுதாத்தம்

1.2.31 ஸமாஹார: ஸ்வரித:

உதா³த்தம் அனுதா³த்தம் இவ்விரண்டுக்கும் இடைப்பட்டது ஸ்வரிதம் எனப்படும். எழுதும்போது, ஓர் உயிர்க்குக் கீழே ஒரு கோடு இட்டு அனுதாத்தம்

குறிக்கப்படுகிறது. (அ) உயிர்க்கு மேலே ஒரு செங்குத்துக்கோடு இட்டு ஸ்வரிதம் குறிக்கப்படும் (அ') உதாத்தம் உழுதும் போது எழுத்தில் குறிக்கப்படுவதில்லை.

ஸ்வரங்கள் வேத இலக்கியங்களில் மட்டும்தான் காணப்படும்.

1.2.32 தஸ்ய ஆதி³த உதா³த்தம் அர்த⁴ஹ்ரஸ்வம்.

இந்த ஸ்வரிதத்தில், முதலிலிருந்து அரை மாத்திரை அளவு உயிர் உத³த்தம். அதாவது, குறில் ஸ்வரித உயிரில் முதல் பாதி உதாத்தமும், இரண்டாவது பாதி அனுதாத்தமும் ஆகும். நெடில் ஸ்வரித உயிரின் முதல் பாதியைத் தவிர்த்து, மீதியுள்ள 1 1/2 அனுதாத்தம் ப்லுதஸ்வரித உயிரில், மீதியுள்ள 2 1/2 அனுதாத்தம் ஆகும்.

1.2.33 ஏகஸ்'ருதி தூ3ராத் ஸம்பு3த்3தெ4ள,
தொலைவில் இருக்கும் ஓர் ஆளைக்கூப்பிடும் போது (தூ3ராத் ஸம்பு3த்3தெ4ள), அக்கூற்று ஒற்றைச்சுரம் (ஏகஸ்'ருதி) என்ற பெயர் பெறும். மேலே குறிப்பிட்ட சுரங்கள் (2931) இச்சூழலில் வேறுபாடில்லாமல் ஒன்றாக ஆகிறது.

1.2.34 யக்ஞகர்மணி அஜப – ந்யூங்க2 ஸாமஸு
யக்ஞகார்யங்களில் மந்திரங்களை உச்சரிக்கும்போது கீழ்க்கண்ட இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் ஒற்றைச் சுரத்திலமைகிறது. (1) ஜபம் (அதாவது மந்திரங்களை மனதுக்குள் மௌனமாகச் சொல்வது) (2) ந்யூங்க2 16 விதமான 'ஓ' வை இடையில் புகுத்தும்போது (3) ஸாமன். (அதாவது ஸாம மந்திரங்களைப் பாடும்போது)

1) அதாவது. யாகம் பண்ணும்போது மந்திரங்கள் ஒற்றைச் சுரத்தில் உச்சரிக்கப்படுகிறது.
2) இதற்கு விதிவிலக்கு மேலே குறிப்பிட்ட 3 இடங்கள்

1.2.35 உச்சைஸ்தரம் வா வஷட்கார:
யக்ஞ கார்யங்களில் 'வஷட்' என்ற மந்திரத்தை உச்சரிக்கும்போது ஒற்றைச் சுரத்திலோ அல்லது மேல் சுரத்திலோ உச்சரிக்கப்படும்.

1.2.36 விபா3ஷா ச2ந்த3ஸி
வேதங்களைப் படிக்கும்போது (ஸ்வாத்4யாய), ஒற்றைச் சுரத்துடனோ அல்லது அதனதன் ஒலியெழுத்தத்துடனோ உச்சரிக்கலாம்

1.2.37 ந ஸுப்3ரஹ் மண்யாயாம் ஸ்வரிதஸ்ய து உதாத்த:
ஸுப்ரஹ்மண்யா ஸூக்தம் சொல்லும்போது, ஒற்றைச் சுரமாக அல்ல இதில் ஸ்வரித உயிர்கள் உதா3த்தமாக உச்சரிக்கப்படுகின்றன.

1.2.38 தே3வ ப்ராஹ்மணோர் அனுத3ாத்த:
இந்த பாட்டில் காணப்படும் தே3வ ப்3 ராஹ்மண ஆகிய சொற்கள் ஸ்வரிதத்துக்குப் பதிலாக அனதாத்தத்தோடு உச்சரிக்கப்படும்.

1.2.39 ஸ்வரிதாத் ஸம்தாத் ஸம்ஹிதாயாம் அனுதாத்தானாம்
தொடர்ந்து உச்சரிக்கும்போது (ஸம்ஹிதாயாம்) அனுதாத்த உயிர்களுக்குப் பதிலாக ஒற்றைச் சுரம் ஸ்வரிதத்துக்குப் பின்னால் வரும்.

1.2.40 உத3ாத்த ஸ்வரித பரஸ்ய ஸன்னதரா:
உதாத்தம் (அ) ஸ்வரித உயிர்களுக்க முன்னால் அமைந்துள்ள அனுதாத்தத்துக்குப் பதிலியாக ஸன்னதர என்கிற ஒலியமுத்தம் வரும்.

1.2.41 அப்ருக்த ஏகால் ப்ரத்யய:

ஒரே ஒரு எழுத்தைக் கொண்ட ஒட்டுக்கு அப்ருக்தம் என்று பெயர்.

எ–டு க்வின் ஒரு அப்ருக்தம். இங்கு 'வ்' (எழுத்து) ஒட்டு மற்ற க், இ, ன் 'இத்'

ஒரு அடிச்சொல் (லோடு இணைக்கப்பட்ட அப்ருக்தம் கெடும் (6.1.67) க்4ருதஸ்ப்ருஸ் + க்வின் = க்4ருதஸ்ப்ருக் வ் (3.2.58) க்4ருதஸ்பருக்

1.2.42 தத் புருஷ ஸமானாதி4கரண: கர்மதா4ரய

ஸமான (ஒரே/ஒத்த வேற்றுமையில் அமைந்துள்ள பதங்களைத் தொகுத்து உருவாக்கிய தத்புருஷ ஸமாசத்துக்கு (வேற்றுமைத் தொகை) கர்மதா4ரயம் என்று பெயர்(பண்புத் தொகை)

எ–டு நீலோத் பலம் (நீலம் உத்பலம்)

1.2.43 ப்ரத2மா நிர்தி3ஷ்டம் ஸமாஸ உபஸர்ஜனம்

(இந்த இலக்கண நூலில்) ஸமாஸத்தைப் பற்றிப் பேசும் இடங்களில் எந்தவொரு சொல் முதல் வேற்றுமையில் அமைந்துள்ளதோ அச்சொல்லுக்கு உபஸர்ஜனம் என்று பெயர்.

எ–டு த்3விதீயா ஸ்ரித அதீத பதித க3த (2.1.24) என்ற சூத்திரத்தில் 'த்3விதீயா' என்ற சொல் ப்ரத2மா விப4க்தியில் முதல் வேற்றுமையில் அமைந்துள்ளது. இது உபஸர்ஜனம், காட்டாக, கஷ்டஸ்ரித: என்ற தத்புருஷ ஸமாஸத்தில் கஷ்ட என்ற சொல் உபஸர்ஜனம்.

1.2.44 ஏக விப4க்தி : சாபூர்வநிபாதே

ஒரு ஸமாஸத்தின் ஒரு உறுப்பினர் எப்போதுமே ஒரே வேற்றுமையு ருபைக் கொண்டதாயும் (ஏகவிபக்தி) (புதைநிலையில்) அது முதல் உறுப்பினரல்லாததவும் அமையும்போது அவ்வுறுப்பினர் உபஸர்ஜனம் என்ற பெயர் பெறும்.

எ–டு

1) நிஷ்க்ராந்த:	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்பி3
2) நிஷ்க்ராந்தம்	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்பி3ம்
3) நிஷ்க்ராந்தேன	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்பி3னா
4) நிஷ்க்ராந்தாய	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்ப3யே
5) நிஷ்க்ராந்தாத்	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்பே3
6) நிஷ்க்ராந்தஸ்ய	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்பே3
7) நிஷ்க்ராந்தே	கௌஸாம்ப்3யா:	நிஷ்கௌஸாம்பெ3ள

இங்கு முதல் உறுப்பு பல வேற்றுமைகளில் காணப்பட்டாலும் 2வது உறுப்பு. 5ம் வேற்றமையிலேயே எல்லா இடங்களிலும் அமைந்திருக்கிறது. இதற்கு, அதாவது, 'கெஸாம்ப்யா' என்ற சொல் உபஸர்ஜனம் எனப் பெயர் பெறுகிறது.

1.2.45 அர்த²வத் அதா⁴துர் அப்ரத்யய: ப்ராதிபதிகம்.
தாதுவோ, ப்ரத்யயமோ (ஒட்டு) அல்லாத, பொருளை உணர்த்தும். ஒரு சொல், ப்ராதிபதி³கம் எனப்படும்.
எ–டு குண்டம் பானை

1.2.46 க்ருத் தத்³தி⁴த ஸமாஸாஸ்¹ ச
க்ருத். தத்³தி⁴த ஒட்டுக்களை இணைத்து உருவாக்கும் சொற்கள் ()உம், ஸமாஸங்களும் கூட ப்ராதிபதி³கம் எனப் பெயர் பெறும்.
எ–டு க்ருத்–காரக: க்ரு + ணவுல் (3.1.133, 7.1.1, 2.115) தத்³தி⁴த – ஔபக³வ உபகோர் அபத்யம் உபகு +அண் (4.1.92)
ஸமாஸ–ரஜபுருஷ: ராக்கு: புருஷ: (2.4.71 , 8.2.7)

1.2.47 ஹ்ரஸ்வோ நபுமம்ஸகே ப்ராதி பதி³கஸ்ய
ப்ராதிபதிகத்தின் இறுதி உயிர்க்குப் பதிலாக ஒரு குறில் அஃறிணையில் (நபும்ஸகே) வரும்.
எ–டு அதிரை – அதிரி; ஆனால் க்ராமணீ (ஆண்பால்)

1.2.48 கோ³ ஸ்த்ரியோர் உபஸர்ஜனமஸ்ய
உபஸர்ஜனமாக வரும் கோ³ என்ற சொல்லின் இறுதி உயிர்க்கும், பெண்பால் ஒட்டுக்களில் முடியும் ப்ராதி பதி³ கத்தின் இறுதி உயிர்க்கும் பதிலாகக் குறில் வரும்.
எ–டு சித்ர + கோ³ = சித்ரகு³ ; அதி + மாதா = அதிமாத:

வா: ஈயஸி ப³ஹுவ்ரீஹே ப்ரதிஷேதோ⁴ வக்தவ்ய: 'ஈயஸி' என்ற ஒட்டில் முடியும் பெண்பால் சொற்கள், பஹூ வ்ரீஹிஸமாசத்தில் வரும்போது, இந்த விதிக்கு விலக்காகும்.
எ–டு ப³ஹுஸ்ரேயஸி

1.2.49 லுக் தத்³தி⁴த லுகி.
ஒரு தத்³தி⁴த ஒட்டு கெடும்போது (லுக்) அத்துடன், உபஸர்ஜனத்தி ன் பெண்பால் ஒட்டுக்களும் 'லுக்' இனால் கெடும்.
பஞ்ச இந்த்ராண்யோ தே³வதா அஸ்ய
பஞ்ச + ஜஸ் + இந்த்ர + ஆனுக் + ஙீஷ் + ஐஸ் + தேவதா + ஐஸ் = பஞ்ச+ 0/ இந்த்ர 0 0 ஸு + பஞ்சேந்த்ர
4.2.24 படி 'அண்' ஒட்டு இணைக்கப்படுகிறது. 4.1.88,' அண்' ஒட்டு 'லுக்' கினால் கெடும். தத்தித ஒட்டுக்கு 'லுக்' ஆதேஸம் வரும்போது பெண்பால் ஒட்டு 'ஙீஷ்' உம் மறையும் அதனால் பஞ்சேந்த்ர (5 இந்திர ாணிக்குரிய யாகத்தின் ஆப்பம்) என்ற புறநிலையில் உள்ள தொகை கிடைக்கிறது.

1.2.50 இத்3 கோ3ண்யா

கோணி ஒரு அளவு என்ற பெயர்ச் சொல்லோடு இணைக்கப்பட்ட தத்3தி4த ஒட்டு லுக் கினால் கெடும்போது, அதன் இறுதி உயிர் குறிலாகும்.

எ–டு பஞ்ச கோ3ணி : பஞ்ச: பி4: கோ3விபி4: க்ரித:

பஞ்ச + பி4ஸ கோ3ணி பி4ஸ் க்ரீத + ஸி + பஞ்ச 0 கோணி ॰

த2க் (5.1.19 37) பஞ்ச – கோணீ 0 (5.1.28) பஞ்ச கே3ாணி ஸு 5 சாக்குக்கு வாங்கியது.

1.2.51 லுபி யுக்த வத்3 வ்யக்தி வசனே


த^{3}ந்தானாம் ராஜா ராஜத^{3}ந்த: 'கோரப்பல்' வனஸ்ய அக்^{3}ரே፡அக்^{3}ரே வணம்

இவ்வகுப்பைச் சேர்ந்த தொகைகளில் உபஸர்ஜனம் மாத்திரம் இறுதியில் நிற்கவில்லை மற்ற விதிகளின்படி, முதலில் நிற்க வேண்டிய சொற்களும், இதில், கடை உறுப்பினராக அமையும்.

உலூ க^{2}ல முஸலம்፡முஸலம் ச உலூ க^{2}லம்

ச. 2.1.49 மூலம், முஸ'லம் (குறைந்த அளவில் உயிரெழுத்து அமைந்திருப்பதால்) முதல் உறுப்பினராக அமைந்திருக்க வேண்டும். ஆனால், இது, ராஜதந்தாதி வகுப்பைச் சேர்ந்ததால், உலூ க^{2}லம் முதலில் நிற்கிறது.

த்^{3}ருஷது^{3}பலம். உபலம் முதலில் வரவேண்டும் (பார்க்க 2.2.33)

ஆரக்வாயன ப^{3}ந்த^{4}கீ

சித்ரரக^{2} வாஹ்லீகம்

ஆவந்த்யஸ்மகம்

ஸூத்^{3}ரார்யம்

ஸ்னாதக ராஜானௌ

விஷ்வக்ஸேனார்ஜுனௌ

இவைகளில் 2வது உறுப்பினர் முதலுறுப்பினராக அமைந்திருக்க வேண்டும்.

2.2.32 த்^{3}வந்த்^{3}வே கி^{4}

த்^{3}வந்த்^{3}வ ஸமாஸத்தில் (உம்மைத் தொகை)

கி^{4} (1.4.7)யினால் குறிப்பிடப்பட்ட சொற்கள் முதலில் அமைய வேண்டும்.

ஹரிஸ்1ச ஹரஸ்1ச ஹரிஹரௌ

ஒன்றுக்கும் மேற்பட்ட 'கி' சொற்கள் ஒரு உம்மைத் தொகையில் அமையும்போது அவைகளில் ஒன்று முதலில் நிற்கும். மற்றவைகளுக்குக் கட்டாயமான விதி இல்லை. படும்ருது^{3} ஸுக்யா:/படு'ஸுக்ல ம்ருத^{3}வ:

ஆனால்

விஸ்பஷ்ட'படு': (தத்புருஷன்)

2.2.33 அஜாதி^{3} அத^{3}ந்தம்

த்வந்த்வ ஸமாஸத்தில் உயிரெழுத்தை முதலாகவும் குறில் 'அ'வை ஈறாகவும் கொண்ட சொற்கள் முதலில் நிற்கும்.

உஷ்ட்'ர க²ரம் 'ஒட்டகமும் கழுதையும்'

வா: பஹுஷு அநியம:

(அத்தகைய) பல சொற்களைச் சேர்த்து ஆக்கப்பட்ட உம்மைத் தொகையில் எது முதலில் அமைய வேண்டும் என்பதற்கு கட்டாயமான விதி இல்லை.

அஸ்'வ ரதே²ந்த்³ரா:/இந்த்ர ரத²ாஸ்'வா:

வா: த்³வந்த்³வே கி⁴ அந்தாத் அஜாதி³

அத³ந்தம் விப்ரதிஷேத⁴ன

அஜாத்³யத³ந்த விதி'யினால் தடுக்கப்படாத நிலையில்தான் 'கி⁴' யின் சொற்கள் த்³வந்த்³ ஸமாஸத்தில் முதலில் நிற்கும்.

இந்த்³ராக்னீ, இந்த்³ரவாயூ

இங்கு அக்³னி, வாயு ஆகிய சொற்கள் 'கி⁴' ஆனாலும் அவைகள் முதலில் நிற்கவில்லை. ஏனென்றால் இந்த்³ர (உயிரை முதலாகவும், 'அ' வை இறுதியாகவும் கொண்ட சொல்) விப்ரதிஷேத⁴ விதியின் படி (1.4.2) முன்னுரிமை பெறுகிறது.

2.2.34 அல்பாச்தரம்

த³வந்த்³வ ஸமாஸத்தில், குறைந்த எண்ணிக்கையில் அமைந்த உயிரைக் கொண்ட சொற்கள் முதல் உறுப்பினராக நிற்கும் ப்லக்ஷந்யக்³ரோத⁴

வா: ருதுநக்ஷத்ராணாம் அனுபூர்வ்யேண

ஸமானாக்ஷராணாம் பூர்வநிபாதோ வக்தவ்ய:

சமமான எண்ணிக்கையில் அசைகளைக் கொண்ட பருவம், நக்ஷத்திரங்களின் பெயர்கள் அவைகளின் இயற்கையான வரிசைப்படி அமைய வேண்டும்.

ஹேமந்த 'ஸிஸி1ர வஸந்தா:

சித்ராஸ்வாதீ

ஆனால் க்³ரீஷ்ம வஸந்தௌ இங்கு சமமான எண்ணிக்கையில் அசைகள் (Syllable) இல்லை. அதனால், வரிசைமாறி அமைந்திருக்கிறது.

வா: லகு⁴ அக்ஷரம் பூர்வ நிபததீதி வக்தவ்யம்

லகு⁴ (மெல்லிய) உயிர்களைக் கொண்ட சொற்கள் முதலில் நிற்க வேண்டும்.

குஸ' காஸம் ,ஸ'ரஸ'ாத³ம்

வா: அப்⁴யர்ஹிதம் ச பூர்வம் நிபததீதி வக்தவ்யம்

இருவர்களில் யார் சிறப்பாக மதிப்புக்குரியவரோ அவரைக் குறிக்கும் சொல் முதலில் நிற்க வேண்டும்.

மாதா பிதரௌ – தாய் தந்தை

வா: வர்ணானாம் அநு பூர்வ்யேண பூர்வ நிபாத:
ஜாதியைக் குறிக்கும் சொற்களை, ஜாதிகளின் வரிசைக்கிரமப்படி தொகையில் அமைக்க வேண்டும்.
ப்ராஹ்மண க்ஷத்ரியவிட்¹ ஸூத்³ரா;
இங்கு அசையின் எண்ணிக்கையைப் பற்றிய வரையறையில்லை.

வா: ப்⁴ராதுஸ்'ச ஜ்யாயஸ: பூர்வநிபாத: வக்தவ்ய:
ஸஹோதரர்களின் பெயர்களைச் சேர்த்து ஆக்கும் தொகையில் மூத்த ஸஹோதரனின் பெயரை முதலில் வைக்க வேண்டும். யுதி⁴ஷ்டிரார்ஜுனௌ

வா: ஸங்க்²யாயா: அல்பீயஸ்யா: பூர்வநிபாதோ வக்தவ்யம் எண்களின் பெயர்களைக் கொண்டு ஆக்கும் தொகையில் குறைந்த எண்ணின் பெயர் முதலில் நிற்கும்.
த்³வித்ரா:, த்ரிசதுரா:

2.2.35 ஸப்தமி விஸே'ஷணே ப³ஹுவ்ரீஹௌ
ப³ஹுவ்ரீஹி ஸமாஸத்தில் 7 ஆம் வேற்றுமைச் சொல், விஸே'ஷணம் (அடை) ஆகியவை முதலில் நிற்கும்.
கண்டே²கால: யஸ்யஸ:-கண்டே²கால;
கருப்புநிறக் குறியைக் கழுத்தில் கொண்ட சிவன்
சித்ர: க³ாவ: யஸ்ய - சித்ரகு³:
பஹுவ்ரீஹித் தொகையில் உறுப்பினர்கள் எல்லாமே உபஸர்ஜனமாகக் கருதப்படுவதால் இந்த விதி அவைகளுக்கு ஒரு ஒழுங்கான வரிசைக் கிரமத்தை ஏற்படுத்துகிறது.

வா: ஸர்வநாம ஸங்க்²யயோ: உபஸங்க்²யானம்
ஸர்வநாமன், ஸங்க்²யா ஆகியவைகளும் முதலில் நிற்கும்.
ஸர்வ: ஸ்'வேத: யஸ்யஸ: ஸர்வஸ்'வேத:
த்³வௌ ஸுக்லௌ யஸ்யஸ: த்³விஸுக்ல:
ஸர்வநாமன், எண்ணுப் பெயர்கள், இரண்டுமே சேர்ந்து தொகையாகும்போது எண்ணுப் பெயரை முதலில் வைக்க வேண்டும்.
த்³வௌ அன்யௌ யஸ்ய ஸ: த்³வ்யன்ய:

வா: வாபிரியஸ்ய பூர்வநிபாத:
ப்ரிய என்ற சொல்லோடு ஒரு தொகையாக்கும்போது, ப்ரிய, முதலில் விருப்பாக வரும்.
கு³ட³: ப்ரிய: யஸ்யஸ:-கு³ட³ப்ரிய:
அல்லது ப்ரியகு³ட³:

வா: ஸப்தம்யா: பூர்வநிபாதே ப்ராப்தே

க3ட்3வாதிப்4ய: ஸப்தம்யந்தம் பரம்
க3டு3 முதலிய சொற்களுக்குப் பின் 7ஆம் வேற்றுமைச் சொல் நிற்கும்.
கண்டே3 க3டு3: யஸ்ய ஸ:-க3டு3 கண்ட:

2.2.36 நிஷ்டா4
நிஷ்டா ஒட்டுக்களை இறுதியில் கொண்ட சொற்களோடு ஆக்கப்படும் ப3ஹுவ்ரீஹி தொகையில், நிஷ்டாந்தங்கள் முதலில் அமையும்.
க்ருத: கட: யேனஸ:-க்ருதகட: யாரால் பாய் செய்யப்பட்டதோ அவன்.
செய்தவன் பாய் எவனால், அவன்.

வா: நிஷ்டாயா: பூர்வநிபாதே ஜாதிகால
ஸுக2ாதி3ப்4ய: ப்ரவசனம்.
இனம், காலம், மகிழ்ச்சி (ஸுக2ம்)
முதலியவைகளைக் குறிக்கும் சொற்களோடு, நிஷ்டாந்தங்கள் வரு ம்போது ஜாதிகாலம் முதலியவைகள் பின்னால் நிற்கும்.
ஸாரங்கம் ஜக்3த4ம் யயா ஸா - ஸாரங்க3
ஜக்3தீ4: யாரால் ஸாரங்கம் விழுங்கப்பட்டதோ அவள்.
மாஸ: ஜாத: யஸ்யா ஸா - மாஸ ஜாதா 'யார் பிறந்து ஒரு மாத மாகிறதோ அவள்.

வா: ப்ரஹரணார்தே2 ப்1யஸ்1 ச பரே
நிஷ்டாஸப்தம்யௌ ப4வத இதி வக்தவ்யம்
ப்ரஹரண (அடித்தல்) என்ற பொருளை உணர்த்தும் சொற்களும் நிஷ்டாவில் முடியும் சொற்கள் அல்லது 7ஆம் வேற்றுமைச் சொற்களும் சேர்ந்து தொகையாகும்போது நிஷ்டா, 7ஆம் வேற்றுமைச் சொற்கள் இரண்டாவதாக நிற்கும்.
த3ண்ட3: பாணௌ யஸ்ய ஸ:
த3ண்ட3பாணி: ''யார் கையில் தண்டம் இருக்கிறதோ அவன்''
அஸி உத்யத:-(கோஷாத் நிஷ்க்ராந்த: அஸி: யஸ்யஸ)

2.2.37 வா ஆஹிதாக்3னி ஆதி3ஷு
ஆஹிதாக்னி முதலிய தொகைகளில் நிஷ்டாந்த ஒட்டுக்களால் ஆக்கப்பட்ட சொற்கள் விருப்பாக முதலில் நிற்கும்
அக்3ன்யாஹித:/ஆஹிதாக்3வி: (<ஆஹித: அக்னி: யேனஸ:)

2.2.38 கடா3ரா: கர்மத4ாரயே
'கடா3ர:' முதலிய சொற்கள் கர்மத4ார
யஸமாஸத்தில் விருப்பாக முதலில் வரும் கடா3ரஜைமினி:/ஜைமினிகடா3ர:
கடாரஸ்'சாஸௌ ஜைமினிஸ்1 ச

2.3.1 அனபி^{4}ஹிதே
குறிப்பிடப்படாமலிருக்கும்போது
இது ஒரு அதிகார சூத்திரம். இந்தச் சூத்திரத்திலிருந்து சூ. 70 வரை அனபிஹிதே என்ற சொல் அனுவிருத்தி மூலம் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.
திங் (இடப்பெயர்களைக் குறிக்கும் ஒட்டுக்கள்) 'க்ருத்' ஒட்டுக்கள், தத்^{3}தி^{4}த ஒட்டுக்கள் ஸமாஸம் (தொகை) ஆகியவற்றால்
குறிப்பிடப்படாமலிருக்கும்போது என்ற பொருள்.
காட்டாக:
திங்– க்ரியதே கட
செய்யப்படுகிறது பாய்
க்ருத்– க்ருத: கட:
செய்யப்பட்டது பாய்
தத்^{3}தி^{4}த– ஸ'திக:/ ஸ'த்ய: ஸ'தேன^{3}க்ரீத:
நூற்றுக்கு வாங்கியது
ஸமாஸம் – ப்ராப்தோத^{3}கம் க்^{3}ராமம்
(ப்ராப்தம் உத^{3}கம்)

2.3.2 கர்மணி த்^{3}விதியா
செயப்படுபொருளைக் குறிக்க, பெயர்ச் சொல்லுடன் 2ஆம் வேற்றுமை (மும்மை) உருபுகளைப் பயன்படுத்த வேண்டும். (வேறு வகையில் இதைக் குறிப்பிடாமலிருந்தால்)
க்^{3}ராமம் (2) க^{3}ச்ச^{2}தி
கிராமத்துக்குப் போகிறான்
கடம் (2) கரோதி
பாயைச் செய்கிறான்

வா: உப^{4} ஸர்வதஸோ: கார்யா
தி^{4}க் உபர்யாதி^{3}ஷு த்ரிஷு/
த்^{3}விதீயா ஆம்ரேடி^{3} தாந்தேஷு
ததோ அன்யத்ராபித்^{3}ருஸ்^{3}யதே
'தஸ்' ப்ரத்யத்தை ஈறாகக் கொண்ட 'உப^{4}' 'ஸர்வ' ஆகிய சொற்களோடு, அதாவது உப^{4}யத:, ஸர்வத: என்ற சொற்களோடு வரும் பெயர்ச் சொற்கள் 2ம் வேற்றுமையில் அமையும். இதே போல், 'தி^{4}க்' என்ற சொல்லோடும், ஆம் ரேடி^{3}தாந்தங்கள் அதாவது இரட்டைக் கிளவி 'உபரி–உபரி' அதி^{4}அதி^{4} அதோ^{4} போன்றவைகளோடும் 2ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொற்கள் வரும்.
உப^{4}யதோ க்ராமம் (2)
இருபக்கத்திலும் கிராமம்
கிராமத்தின் இருபக்கத்திலும்
ஸர்வதோ க்ராமம் (2)

சுற்றிலும் க்ராமத்தை
கிராமத்தைச் சுற்றிலும்
தி^{4}க் தேவதத்தம்
உபரி உபரி க்ராமம்(2)
மேலே மேலே கிராமம்
அதி^{4} அதி^{4} க்^{3}ராமம்(2)
ஒவ்வொரு கிராமத்திலும்
அதோ^{4} அதே^{4}ா க்ராமம்(2)
கீழே கீழே கிராமம்

வா: அபி^{4}த: பரித: ஸமயா நிகஷா ஹா ப்ரதி யோகே^{3}ஷுச த்ருஸ்^{1}யதே.
அபித: (இருபக்கம், பரித: (நாலு பக்கம்) ஸமயா (பக்கத்தில், நிகஷா (பக்கத்தில், ஹா, ப்ரதி ஆகிய சொற்களுடன் 2ஆம் வேற்று மைச் சொல் காணப்படும்.
அபி^{4}த: க்ராமம்(2)
இருபக்கமும் கிராமம்
பரிதோ க்ராமம்(2)
சுற்றி கிராமம்
ஸமயா
நிகஷா க்ராமம் (2)
அருகில் கிராமம்
ஹா தேவதத்தம்
பு^{1}பு^{4}க்ஷிதம் ந ப்ரதிப^{4}ாதி கிஞ்சித்
உண்ணவிரும்புவான் இல்லை தெரிகிறது கொஞ்சம்
உண்ணவிரும்புவனாகக் கொஞ்சங்கூடத் தெரியவில்லை

2.3.3 த்ருதீயா ச ஹோஸ்^{1} ச^{2}ந்த^{3}ஸி
வேதமொழியில் ஹு (யாகம் பண்ணுதல்) என்ற வினையோடு, 3 அல்லது 2ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல், செயப்படுபொருளாக நிற்கும்.
யவாக்^{3}வா (3) யாவாகு3ம்(2) அக்னிஹோத்ரம் ஜுஹோதி பார்லி யால்/ பார்லியை அக்னிஹோத்ரம் செய்கிறான்.

2.3.4 அந்தராந்தரேண யுக்தே
அந்தரா (இடையே), அந்தரேண (அன்றி), (இல்லாமல்) ஆகிய அவ் யயங்களுடன் 2ஆம் வேற்றுமைப் பெயர் சொற்கள் வரும்.
அந்தரா/அந்தரேண த்வாம் ச மாம் கமண்டலு:
அந்தரேண புருஷகாரம் ந இஞ்சித் லப்^{4}யதே
இல்லாமல் மனிதனின் முயற்சி ஒன்றும் கிடைக்காது
மனிதனின் முயற்சி இல்லாமல் ஒன்றும் அடைய முடியாது.

2.3.5 காலாத்4வ னோ: அத்யந்த ஸம்யோகே3
காலம், தூரம் ஆகியவைகளைக் குறிக்கும் சொற்கள். காலம், தூரம் முழுவதையும் உணர்த்தும் சூழலில், 2ம் வேற்றுமையுருபுகளுடன் வரும்.
மாஸம்(2) அதீ4தே
மாதம் முழுவதும் படிக்கிறான்
க்ரோஸ'ம்(2) குடி'லா நதீ3
ஒருகோச தூரம் வளைந்த நதீ
நதி ஒரு கோச தூரம் (முழுவதும்) வளைந்து (இருக்கிறது/ஓடுகிறது) ஆனால்
மாஸஸ்(6) த்3வி: அதீ5தே
மாதம் இருமுறை படிக்கிறான்
இங்கு 6ம் வேற்றுமை
க்ரோஸ'ஸ்ய (6) ஏக தே3ஸே' பர்வத:
ஒரு கோச தூரத்தின் ஒரு இடத்தில் மலை இருக்கிறது.

2.3.6 அபவர்கே3 த்ருதீயா
ஒரு செயலைச் செய்து முடிக்க இவ்வளவு காலம்(அ) தூரம் ஆயிற்று என்று குறிப்பிடும்போது, அச்சொற்களுடன் 3ஆம் வேற்றுமையுருபுகளைச் சேர்க்க வேண்டும்.
மாஸேன(3) அனுவாக: அதீ4த:
ஒரு மாதத்தில் அனுவாகத்தைப் படித்து முடித்தான்
ஆனால்
மாஸம்(2) அதீ4த: அனுவாக: ந சானேன க்3ருஹீத;
ஒரு மாதம் அனுவாகம் படித்தான் ஆனால் அதை அவன் புரிந்து கொள்ளவில்லை.

2.3.7 ஸப்தமீ பஞ்சம்யௌ காரக மத்4யே
இரண்டு காரகங்களுக்கு (செயல்கள்)ம் இடையே காணப்படும் காலம்(அ) தூரத்தைக் குறிக்க ஏழு அல்லது ஐந்தாம் வேற்றுமை சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.
அத்3ய பு4க்த்வா த்3வ்யஹே(7)/த்வ்யஹா த்3வா(5) பே4க்தா.
இன்று உண்டுவிட்டு இரண்டு நாட்களில் உணவு அருந்துவான்.
இஹஸ்தே2 அயம் இஷ்வாஸ: க்ரோஸே'(7)
க்ரோஸா'த்(5) வா லக்ஷ்யம் வித்3த்4யதி
இந்த வில்லாளி இங்கு நின்று கொண்டு இங்கிருந்து ஒரு கோஸத்திலிருக்கும் ஒரு பொருளைக் குறிவைத்து அடிப்பான்.

2.3.8 கர்ம ப்ரவசனீய யுக்தே த்3விதீயா
கர்ம ப்ரவசநீயங்களுடன் வரும் பெயர்ச் சொல் இரண்டாம் வேற்றுமையில் அமைய வேண்டும்.
ஸாகல்யஸ்ய(6) ஸம்ஹிதாம் அனு ப்ராவர்ஷத்

ஸாகல்ய ஸம்ஹிதாவைப் படித்த உடனே மழை பெய்தது.

2.3.9 யஸ்மாத்^{3} அதி^{4}கம் யஸ்ய ச ஈஸ்'வர வசனம் தத்ர ஸப்தமீ
ஒன்றிலிருந்து (யஸ்மாத்) மற்றது பெரிது (அதி^{4}கம்) அல்லது ஒன்றின் ஆள்பவன் ஆகிய பொருளைக் குறிக்கும்போது அப்பொருளைக் கொடுக்கும் கர்மப்ரவசனீயங்களுடன் நிற்கும் சொற்கள் 7ஆம் வேற்றுமையில் அமைய வேண்டும்.

1. உபக^{2}ார்யாம்(7) த்^{3}ரோண:
காரியைக் காட்டிலும் த்ரோணத்தின் அளவு பெரிது
2. அதி^{4} பஞ்சாலேஷு(7) ப்^{1}ரஹ்ம மத^{3}த்த:
பஞ்சாலத்தை ஆள்பவன் ப்ரஹ்ம தத்தன்

2.3.10 பஞ்சமீ அபாங் பரிபி^{4}:
அப, ஆங், பரி ஆகிய கர்ம பரவசனீயங்களுடன் வரும் பெயர்ச் சொல்லுடன் 5ஆம் வேற்றுமையுருபுகளை இணைக்க வேண்டும்.
அப த்ரிக^{3}ர் தேப்^{4}யோ(5) வ்ருஷ்டோதே^{3}வ:(1.4.89) த்ரி க^{3}ர்தத் தைத் தவிர்த்து (அப) மற்ற இடங்களில் மழை பெய்தது (1.4.88)
ஆ பாடலி புத்ராத்^{3}(5) வ்ருஷ்டோ தே^{3}வ: (1.4.88)
பாடலிபுத்திரம் வரை(ஆ) மழை பெய்தது.
பரி பாடலிபுத்ராத்(5). . . .
பாடலி புத்திரத்தைச் சுற்றி மழை பெய்தது.

2.3.11 ப்ரதிநிதி^{4} ப்ரணி த^{3}ானே ச யஸ்மாத்
ப்ரதி நிதி^{4}, ப்ரதித^{3}ான (பண்டமாற்றம்)
என்ற பொருளைக் குறிக்கும் கர்மப்ரவசனீயங்கள். 5ஆம் வேற்று மைப் பெயர் சொல்லுடன் வரும்.
அபி^{4}மன்யு: அர்ஜுனத: ப்ரதி
அபிமன்யு அர்ஜுனனின் ப்ரதிநிதி
மாஷான் அஸ்மை திலேப்^{4}ய: ப்ரதியச்'ச^{2}தி
உளுந்தை அவனுக்கு எள்ளுக்குப் பதிலாகக் கொடுக்கிறான்.

2.3.12 க^{3}தி அந்த^{2}கர்மணி த்^{3}விதீயா சதுர்த்^{2}யௌ சேஷ்டாயாம் அனத்^{4}வனி
'செல்தல்' என்ற பொருளைக் குறிக்கும் வினைச் சொல்லோடு உண்மையாகவே ஒரு இயக்கம் ஏற்படும்போது அச்சொல் 'வழி' என்ற பொருளில் அமையாமல் வந்தால், அவ்வினையோடு நிற்கும் பெயர்ச் சொல், இரண்டு அல்லது நான்காம் வேற்றுமையில் அமையும்.
க்^{3}ராமம்(2)/க்^{3}ராமாய(4) க^{3}ச்'ச^{2}தி
அவன் கிராமத்துக்குப் போகிறான்

2.3.13 சதுர்தீ2 ஸம்ப்ரத3ானே

ஸம்ப்ரத3ான காரகத்தைக் குறிக்க, ஒரு பெயர்ச் சொல்லுடன் நான்காம் வேற்றுமையுருபுகளை இணைக்க வேண்டும்.

உபாத்4யாய(ய4) கா3ம்(2) த3த3ாதி

ஆசிரியர்க்குப் பசுவைக் கொடுக்கிறான்

வா: சதுர்தீ2 வித4ானே தாத3ர்த்2யம் உப ஸம்க்2யானம்

'அதன் பொருட்டு' (தாத3ர்த்2ய) என்ற பொருளை உணர்த்த நான்காம் வேற்றுமையுருபுகளைப் பெயர்ச் சொல்லோடு இணைக்க வேண்டும்.

யூபாய(4)தா3ரு:– யூபம் பண்ணுவதற்காக மரம்

குண்டலாய(4) ஹிரண்யம்

குண்டலத்திற்காகப் பொன்

வா: க்ல்ருபி ஸம்பத்3யமானே சதுர்தீ2 வக்தவ்யா

தகுந்த, தகுதியான என்ற பொருளைக் கொண்ட 'க்ல்ருப்' என்ற சொல்லும், அதே பொருளைக் கொண்ட மற்ற சொற்களும் நான் காம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லுடன் அமையும்.

ப4க்தி: க்3ஞானாய(4) கல்பதே/ஸம்பத்3யதே/ஜாயதே

பக்தி ஞானத்தைக் கொடுக்கிறது

வா: உத்பாதேன க்3ஞாப்யமானே சதுர்தீ4 வக்தவ்யா

ஒரு உற்பாதம், இடுக்கண் நிகழும் என்று உணர்த்தும்போது அதைக்குறிக்கும் சொற்கள் 4ஆம் வேற்றுமையில் வரும்.

வாதாய(4) கபிலா வித்3யுத்

சூறாவளி சிவப்பு மின்னல்

அதபாய(4) அதிலோஹினீ

சூடு மிகுதியான சிவப்பு

பீதா வர்ஷாய(4) விக்ஞேயா

மஞ்சள் மழை புரிந்துகொள்ள வேண்டும்.

துர்பி4க்ஷாய(4) ஸிதா ப4வேத்

பஞ்சம் வெள்ளை ஆகும்.

மின்னல் சிவப்பாக இருந்தால் சூறாவளி காற்றையும், மிகுதியான சிவப்பாக இருந்தால் சூட்டையும், மஞ்சளாக இருந்தால் மழையையும், வெள்ளையாக இருந்தால் பஞ்சத்தையும் அறிகுறியாக உணர்த்தும்.

வா: ஹிதயோகே சதுர்தீ2 வக்தவ்யா

ஹிதம் என்ற சொல்லுடன் 4ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல் வரும்.

கோ3ப்யோ(4) ஹிதம்

பசுக்களுக்கு நல்லது

2.3.14 க்ரியார்த^{2} உபபதஸ்ய ச கர்மணி ஸ்த^{2}னின:
'செய்தல்' என்ற பொருளை உணர்த்தும் சொல் உபபதமாக அமையும்போது அதன் கர்மன் 4ஆம் வேற்றுமையில் அமையும் இந்த உபபதம் மறைமுகமாக நிற்கும்.
புறநிலை: ப^{2}லேப்^{4}யோ(4) யாதி
பழங்களுக்காகச் செல்கிறான்
புதைநிலை: ப^{2}லாளி(2) ஆஹர்தும் யாதி
பழங்களைக் கொண்டுவரப் போகிறான்
இங்கு துமர்த^{2} அதாவது ஆஹர்தும் என்ற சொல் மறைமுகமாகவும் அதன் செயப்படு பொருள் 4ஆம் வேற்றுமையிலும் அமைகிறது.

2.3.15 துமர்தா^{2}ஸ் ச ப^{4}ாவ வசனாத்
பாவவசன உணர்த்தும் ஒரு ஒட்டை ஈறாகக் கொண்டதும் 'தும்' என்ற ஒட்டின் பொருளை உணர்த்துவதாகவும் அமைந்த ஒரு பெயரடிச் சொல்லுடன் 4ஆம் வேற்றுமை உருபுகளை இணைக்க வேண்டும்.
யாகாய வ்ரஜதி = யஷ்டும் வ்ரஜதி
(அவன்)யாகம் பண்ண போகிறான்
யாகாய 4ஆம் வேற்றுமை, இச்சொல்,
யஷ்டும் 'தும்' இன் பொருளை உணர்த்துகிறது.

2.3.16 நம: ஸ்வஸ்தி ஸ்வாஹா ஸ்வத^{4}ா அலம் வஷட் யோக^{3}ாத்ச
நம:, ஸ்வஸ்தி, ஸ்வாஹா ஸ்வதா^{4} அலம்
வஷட் ஆகிய சொற்களோடு நிற்கும் பெயர் சொல்லோடு நான்காம் வேற்றுமையுருபுகளை இணைக்க வேண்டும்.
நமோ தேவேப்^{4}ய:(4)
வணக்கம் தேவர்களுக்கு
ஸ்வாஹா அக்^{3}னயே(4)
அர்ப்புணம் அக்னிக்கு
ஸ்வஸ்தி ப்ரஜாப்^{4}ய:(4)
நன்மை குடிகளுக்கு
குடிகளுக்கு நன்மை உண்டாகட்டும்
ஸ்வத^{4}ா ப்த்ருப்^{4}ய:
அர்ப்பணம் பித்ருக்களுக்கு

அலம்
ப்ரபு^{4} } மல்லோ மல்லாய(4)
க்த:

தகுந்தவன் மல்ல்ன் மல்லனுக்கு
மல்லன் மல்லனுக்குத் தகுந்தவன்/ஏற்றவன்
வுஷட் அக்^{3}னயே(4)
அக்னிக்கு

2.3.17 மன்யகர்மனி அனாதரே விப⁴ாஷா அப்ராணிஷு
மன்ய(நினை) என்ற வினையின் செயப்படு பொருளை (அயல்)க் குறிக்கும்போது, அச்செயப்படுபொருள் உயிரல், திணையாக (அப்ராணிஷு) அமைந்து, இகழ்ச்சி என்ற பொருளை உணர்த்துமானால், நான்காம் வேற்றுமையுருபுகள் விருப்பாக இணைக்கப்படும்.
நத்வாம்(2) த்ருணம்(2)/த்ருணாய(4) மன்யே
நான் உன்னை புல்லுக்கு சமமாகக்கூட மதிக்கவில்லை.
ஆனால் உயிருள்ள பொருட்களோடு 2ம் வேற்றுமைச் சொல்தான் செயப்படுபொருளாக 'மன்ய' என்ற வினையோடு வரும்.
நத்வாம்(2) ஸ்'ருக³ாலம் மன்யே
நான் உன்னை நரியாகக்கூட கருதவில்லை.
இங்கு விருப்பம் (Optionality) 'மன்யே' என்ற வினை இகழ்ச்சியைக் குறிக்கும்போது மட்டுந்தான். மற்ற இடங்களில் 'மன்யே' 2ஆம் வேற்றுமையுடன்தான் வரும். 4ஆம் வேற்றுமை வராது.

வா: யதே³தத் ப்ராணிஷு தத்³ அநாவாதி³ஷு
இதி வக்தவ்யம்
'அப்ராணிஷு' என்பதற்குப் பதிலாக
"அநாவாதி³ஷு'' என்று சூத்திரம் அமைய வேண்டும்.
'நாவாதி³' (படகு/கப்பல் முதலிய) வகுப்பைச் சேர்ந்த சொற்கள் அனைத்தும் 4ஆம் வேற்றுமைச் சொற்களுடன் ஒருபோதும் வாரா. இவைகள் 2ஆம் வேற்றுமைச் சொற்களுடன்தான் வரும்.
நத்வா(2) நாவம்(2) மன்யே
இல்லை உன்னை படகு நினைக்கிறேன்

2.3.18 கர்த்ரு கரணயோர் த்ருதீயா
கர்த்தா, கரணம் (கருவி) ஆகியவைகளைக் குறிப்பிட 3ஆம் வேற்றுமையுருபுகளை, அப்பெயர்ச் சொல்லுடன் இணைக்க வேண்டும்.
தே³வத³த்தேன(3) க்ருதம்
தேவதத்தனால் செய்யப்பட்டது(கர்த்தா)
த³ாத்ரேண(3) லுனாதி
(அவன் அரிவாளால் வெட்டுகிறான் (கருவி)

வா: த்ருதீயா வித⁴ானே ப்ரக்ருத்யாதீ³னாம் உபஸம்க்²யானம்
ப்ரக்ருதி முதலிய சொற்களும் 3ஆம் வேற்றுமையுருபுகளோடு வரும்.
ப்ரக்ருத்யா(3) த³ர்ஸ'னீய:
இயற்கையாக அழகானவன்
ப்ராயேண(3) வையாகரணா:
பெரும்பாலும் இலக்கண நூலார்
க³ார்க்³யோ அஸ்மி கே³ாத்ரேண(3)

கா³ர்க்³ய இருக்கிறேன் கோத்திரத்தினால்
நான் கா³ர்க்³ய கோத்திரத்தைச் சேர்ந்தவன்
ஸமேன(3) தா⁴வதி
நேராக ஓடுகிறது
விஷமேண(3) தாவதி
வளைந்து ஓடுகிறது
ஸாஹஸ்ரேண(3) அஸ்வான் க்ரீணாதி
ஆயிரத்தால் குதிரைகளை வாங்குகிறான்.
அவன் குதிரைகளை ஆயிரத்துக்கு வாங்குகிறான்.

2.3.19 ஸஹ யுக்தே அப்ரதா⁴னே

ஸஹ (கூட, உடன்) என்ற அவ்யயத்தோடு வரும் பெயர்ச்சொல் முக்கியமான கர்த்தாவாக அமையாமல் இருந்தால் அத்துடன் 3ஆம் வேற்றுமையுருபுகளை இணைக்க வேண்டும்.

புத்ரேண(3) ஸஹ ஆக³த: பிதா
பிள்ளை ஒடு வந்தான் தகப்பன்
தகப்பன் பிள்ளையோடு வந்தான்

'ஸஹ' என்ற சொல், அதே பொருளைக் குறிக்கும் மற்ற சொற்களையும் உள்ளடக்கியது.

புத்ரேண ஸமம்/ஸார்த⁴ம் ஆக³த: பிதா

2.3.20 யேன அங்க³விகார:

உடலின் குறையைக் குறிப்பிடும்போது எந்த ஒரு அவயவத்தில் குறையுள்ளதோ அந்த அவயவத்தோடு 3ஆம் வேற்றுமையுருபுகளை இணைக்க வேண்டும்.

அக்ஷ்ணா(3) காண:
(ஒரு) கண்ணினால் குருடு
பாதே³ன க³ஞ்ஜ்;
ஒரு காலால் நொண்டி
ஆனால்
அக்ஷி காணம் அஸ்ய
கண் குருடு இவனுடைய

இங்கு அக்ஷி ஒரு அவயவம், உடல் அல்ல. அதனால், இது 3ஆம் வேற்றுமையில் வராது.

2.3.21 இத்'த²ம் பூ⁴த லக்ஷணே

ஒரு அடையாளத்தினால் உணர்த்தும் ஒரு நிலைமையைக் குறிப்பிட, அந்த அடையாளத்தைக் குறிக்கும் பெயர்ச் சொல்லுடன் 3ஆம் வேற்றுமை உருபுகளை இணைக்க வேண்டும்.

ஜடா'பி⁴(3) தாபஸ:

சடையினால் துறவி
அதாவது சடையிருப்பதால் அவன் துறவியென்று தெரிகிறது.
ஸி'க^{2}யா(3) பரிவ்ராஜக:
குடுமியால் பரிவ்ராஜகன்

2.3.22 ஸம்க்^{3}ஞோ அன்யதரஸ்யாம் கர்மணி
ஸம் + க்ஞா (அடையாளம் கண்டுகொள்) என்ற வினையின் செயப்படுபொருள் விருப்பாக 2 அல்லது 3ஆம் வேற்றுமையில் அமையும்.
பித்ரா(3)/பிதரம்(2) ஸம்ஜானீதே
(அவன்) தகப்பனை அடையாளம் கண்டுகொள்கிறான்

2.3.23 ஹேதெள
காரணத்தைக் குறிப்பிடும் பெயரடிச் சொல் 3ஆம் வேற்றுமையிலமையும்
வித்^{3}யாயா(3) யஸ:
படிப்பினால் புகழ்
அதாவது படிப்பினால் புகழ் அடைகிறான்

2.3.24 அகர்தரி ருணே பஞ்சமி
'கடன்' என்ற' பொருளைக் கொண்ட சொல் ஒரு செயல் செய்வதற்குக் காரணமாக அமைந்து, அச்சொல் கர்த்தாவாக இல்லாமல் அவ்வாக்கியத்தில் வரும்போது அச்சொல் 5ஆம் வேற்றுமையில் வரும்.
ஸ'தாத்3(5) ப^{3}த்^{3}த^{4}:
நூறு(5) சிறைப்பட்டான்
நூறு கடன் வாங்கியதால்/திருப்பிக் கொடுக்காததால் சிறைப்பட்டான் இங்கு ஸ'தம் கடனாகவும், ஹேதுவாகவும் அமைகிறது
ஆனால்
ஸ'தேன(3) ப^{3}ந்தி^{4}த:
இங்கு, ஸ'தம், ருணமாகவும்(கடன்) ப்ரயோஜகமாகவும் அதாவது ப்ரயோஜக கர்த்தாவாகவும் (இயக்கும் கர்த்தா) அமைகிறது. அ தனால் இங்கு ஸ'தம் 3ஆம் வேற்றுமையில் அமைகிறது.

2.3.25 விபா^{4}ஷா கு^{3}ணே அஸ்த்ரியாம்
பெண்பால் அல்லாத குணத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல் காரணமாக அமையும்போது அப்பெயர்ச்சொல் விருப்பாக 5 அல்லது 3ஆம் வேற்றுமையில் அமையும்.
ஜாட்^{3}யாத்(5)/ஜாட்^{3}யேன(3) ப^{3}த்^{3}த^{4}:
மூடத்தனத்தினால் சிறைப்பட்டான்.
ஆனால்
ப்ரக்^{3}ஞயா(3) முக்த: அறிவினால் விடுதலையடைந்தான்
ப்ரக்^{3}ஞா–பெண்பால்

2.3.26 ஷஷ்டீ² ஹேது ப்ரயோகே³

காரணத்தை உணர்த்த 'ஹேது'வையே பயன்படுத்தும்போது அத்துடன் வரும் பெயர்ச்சொல் 6ஆம் வேற்றுமையில் அமையும்.

அத்⁴யயனஸ்ய(6) ஹேதோ: வஸதி

படிப்பின் காரணம் வசிக்கிறான்

படிப்பின் காரணமாக வசிக்கிறான்

அதாவது படிப்பதற்காக வசிக்கிறான்

2.3.27 ஸர்வ நாம்ன: த்ருதீயா ச

காரணத்தை உணர்த்த 'ஹேது' என்ற சொல்லையே பயன்படுத்தும்போது அத்துடன் மாற்றுப் பெயர் வருமானால், அம்மாற்றுப் பெயர் 3ஆம் வேற்றுமையிலும் வரலாம். அதாவது 6ஆம் வேற்றுமை, 3ஆம் வேற்றுமை இரண்டுமே வரலாம்.

கேன ஹேதுனா(3)/கஸ்ய ஹேதோ:(6) வஸதி

எதற்காக அவன் வசிக்கிறான்(இங்கு)

வா: நிமித்த காரண ஹேதுஷு ஸர்வா ஸாம் ப்ராயதர் ஸ'னம

நிமித்த, காரண, ஹேது ஆகிய சொற்கள் மாற்றுப் பெயர்களோடு வரும்போது எல்லா வேற்றுமைகளுடனும் காணப்படுகின்றன.

(2) கிம் நிமித்தம் அத்ர வஸதி
(3) கேன நிமித்தேன அத்ர வஸதி
(4) கஸ்மை நிமித்தாய அத்ர வஸதி
(5) கஸ்மாத் நிமித்தாத் அத்ர வஸதி
(6) கஸ்ய நிமித்தஸ்ய அத்ர வஸதி
(7) கஸ்மின் நிமித்தே அத்ர வஸதி

} எதற்காக அவன் இங்கு வசிக்கிறான்.

கிம் காரணம். கேன காரணேன

வா: ஹேதுவின் பொருளைக் கொண்ட மற்ற சொற்களும் இத்துடன் அடங்கும்.

கிம் ப்ரயோஜனம் கேன ப்ரயோஜனேன

2.3.28 அபாத⁴ானே பஞ்சமி

அபாதான காரகத்தைக் (1.4.23 & 24) குறிக்க 5ஆம் வேற்றுமையுருபுகளைப் பெயர்ச் சொல்லோடு இணைக்க வேண்டும்.

க்³ராமாத்³(5) ஆக³ச்சதி

கிராமத்திலிருந்து வருகிறான்

பர்வதாத்³(5) அவரோஹதி

மலையிலிருந்து இறங்குகிறான்.

வா: (1) பஞ்சமி வித⁴ானே ல்யல்லோபே கர்மணி

உபஸம்க்^{2}யானம்

'ல்யல்' என்ற ஒட்டை ஈறாகக் கொண்ட வினை, கெட்ட பிறகு (லோபம்) அதன் செயப்படுபொருளை 5ஆம் வேற்றுமையுருபுகளால் உணர்த்த வேண்டும்.

ப்ராஸாத^{3}ாத்(5) ப்ரேக்ஷதே(புறநிலை)

அரண்மனையிலிருந்து பார்க்கிறான்

ப்ராஸாதம்(2) ஆருஹ்ய ப்ரேக்ஷதே (புதைநிலை)

அரண்மனை ஏறி பார்க்கிறான்

இங்கு ஆருஹ்ய (<ஆ + ருஹ் + ல்யப்) (வினையெச்சம்) லோபம் (கெடுகிறது) ஆருஹ்ய என்ற வினையின் செயப்படுபொருள் ப்ராஸாதம் புதைநிலையில் காணப்படும் இச்சொல் புற நிலையில் மறைகிறது. புதைநிலையில் செயப்படுபொருளாக அமைந்த ப்ராஸாதம், புற நிலையில் 5ஆம் வேற்றுமையில் அமைகிறது (ப்ராஸாத^{3}ாத்)

வா: (2) அதி^{4}கரணே உபஸம்க்^{2}யானம்

மேலே குறிப்பிட்ட சூழலில், செயல் நிகழ்ந்த இடத்தைக் குறிக்கும்போது (அதி^{4}கரணே) அது 7ஆம் வேற்றுமையில் அமையும் ஆஸனாத்(5) ப்ரேக்ஷதே (புறநிலை அமைப்பு)

இருக்கையிலிருந்து பார்க்கிறான்

ஆஸனே(7) உபவிஸ்'ய ப்ரேக்ஷதே (புதைநிலை)

இருக்கையில் அமர்ந்துகொண்டு பார்க்கிறான்

வா: (3) ப்ரஸ்'ன ஆக்^{2}யானயோஸ்' ச பஞ்சமீ வக்தவ்யா

கேள்வி பதிலைக் குறிப்பிடும்போது 5ஆம் வேற்றுமைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

குதோ(5) பவான்? பாடலிபுத்ராத்(5)

எங்கிருந்து நீங்கள்? பாடலிபுத்திரத்திலிருந்து

வா: .. (4) யதஸ்' ச அத்^{4}வ கால நிர்மாணம்

தத்ர பஞ்சமீ வக்தவ்ய

எந்த இடத்திலிருந்து தூரம்/நேரம்

(காலம்) அளவிடப்படுகிறதோ, அதைக் குறிக்கும் சொற்கள் 5ஆம் வேற்றுமையில் அமையும்.

க^{3}வீது^{4}மத:(5) ஸாங்காஸ்யம் கவீ தூமத்திலிருந்து ஸாங்காஸ்யம்

சத்வாரி யோஜனானி நான்கு யோஜனைகள்.

கார்திக்யா(5) ஆக்ரஹாயனி மாஸே(7)

கார்த்திகையிலிருந்து ஆக்ரஹாயனி ஒருமாஸத்தில்

கார்த்திகையிலிருந்து மார்கழி ஒரு மாதம்.

வா: (5) தத்^{3}யுக்காத் காலே ஸப்தமீ வக்தவ்ய

அவ்வாறு அமையும் வாக்கியத்தில் (வா. 4) காலத்தைக் குறிக்கும் சொல்

7ஆம் வேற்றுமையாகும்.

வா: (6) அத்⁴வன: ப்ரத²மா ஸப்தமீ ச வக்தவ்யா:

வா. 4இல் கூறப்பட்டிருக்கும் சூழலில், தூரத்தைக் குறிக்கும் சொல் 1 அல்லது 7ஆம் வேற்றுமையாக இருக்கும்.

க³வீதூ⁴மாத். . . சத் வாரி(1) யோஜனானி(1)

க³வீதூ⁴மாத். . . சதுர்ஷு(7) யோஜனேஷு(7)

2.3.29 அன்ய ஆராத் இதர ருதே தி³க்ஸப்³த³

அஞ்சு உத்தர பத/ ஆச் ஆஹி யுக்தே

அன்ய (தவிர) ஆராத் (அருகில்), இதர (மற்றது), ருதே (தவிர, இல்லாமல்), திசையைக் குறிக்கும் சொற்கள், 'அஞ்சு' என்ற சொல்லை கடை உறுப்பினராகக் கொண்ட தொகை, ஆச்(அ)ஆஹி, ஆகியவைகளில் முடியும் சொற்கள், 5ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லுடன் வரும்.

10 அன்ய 'அன்ய'வின் பொருளைக் கொண்ட மற்ற சொற்களும் இதில் அடங்கும்.

அன்ய: தேவத³த்தாத்(5)

தவிர தேவத³த்தன்

தேவதத்தனைத் தவிர்த்து மற்றவர்

பி⁴ன்ன: தே³வத³த்தாத்(5)

அர்தா²ந்தரம் தே³வத³த்தாத்

2) ஆராத்: ஆராத்³ யக்³ஞத³த்தாத்(5)

அருகில் யக்ஞதத்தன்

யக்³ஞதத்தனுக்கு அருகில்

3) இதர: இரண்டு பொருட்களில், ஒன்றைச் சிறப்பாகக் குறிப்பிட்டுக்கூறி, இரண்டாவதை 'இதர' என்ற சொல்லால் குறிப்பிடப்படும்.

இதர: தேவதத்தாத்(5)

மற்ற தேவதத்தனிடமிருந்து

ஒப்பிடும் வகையில் 'இதர' என்ற சொல் வரும். காட்டாக தே³வத³த்த: ஸூர: இதர: காதர:

தேவதத்தன் ஸூரன் மற்றவன் கோழை

4) ருதே ருதே யக்ஞத³த்தாத்(5)

தவிர்த்து யக்ஞதத்தன்

யக்ஞதத்தனைத் தவிர்த்து

5) தி³க்ஸப்³த³:

பூர்வ: க்³ராமாத்(5) பர்வத:

கிழக்கு கிராமம் மலை
கிராமத்துக்குக் கிழக்கில் மலை (இருக்கிறது)

6) அஞ்சுத்தரபத³:
ப்ராக்³ க்³ராமாத்(5)
கிழக்கு கிராமம்
கிராமத்தின் கிழக்கு
ப்ர + அஞ்சு = ப்ராக்

7) ஆச்: இது ஒரு ப்ரத்யபம்
த³க்ஷிணதா க்³ராமாத்(5)
தெற்கு கிராமம்

8) ஆஹி: இதுவும் ஒரு ப்ரத்யயம்
உத்தராஹி க்ராமாத்(5)
வடக்கு கிராமம்
கிராமத்தின் வடக்கில்
உத்தரா + ஆயி = உத்தராயி (5.3.37)

2.3.30 ஷஷ்டீ அதஸர்த² ப்ரத்யயேன
அதஸ் (5.3.28) என்ற ஒட்டின் பொருளைக் கொண்ட ஒட்டுக்களோடு முடியுப் சொற்களுடன், 6ஆம் வேற்றுமைச் சொல் வரும்.
உத்தரத: க்³ராமஸ்ய(6)
வடக்கு கிராமம்
கிராமத்தின் வடக்கு
புரோ/புரஸ்தாத் (5.3.39; 27) க்ராமஸ்ய(6)
கிராமத்தின் கிழக்கில்
உபரி/உபரிஷ்ட²ாத்³ (5.3.31) க்³ராமஸ்ய(6)
மேல் கிராமத்தின்
கிராமத்தின் மேல்

2.3.31 ஏனபா த்³விதீயா
ஏனப் (5.3.35) என்ற ஒட்டை இறுதியாகக் கொண்ட சொற்களோடு நிற்கும் பெயர்ச் சொற்கள் 2ஆம் வேற்றுமையில் அமையும்.
உத்தரேண க்³ராமம்(2)
வடக்கு கிராமம்
கிராமத்துக்கு வடக்கில்

2.3.32 ப்ருத²க் வினா நாநாபி4ஸ் த்ருதீயா அன்யத்ரஸ்யாம்
ப்ருத2க் (வேறு), வினா (இல்லாமல்) நாநா (வேறுபட்ட) ஆகியவற்றுடன் 3

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

அல்லது 5ஆம் வேற்றுமைச் சொற்கள் விருப்பாக வரும் இதற்கு முந்திய சூத்திரத்திலிருந்து அனுவ்ருத்தி மூலம், 2ஆம் வேற்றுமையும் விருப்பாகப் பயன்படுத்தலாம்.

ப்ருத^{2}க் ராமேண(3)/ராமாத்(5)/ராமம்(2)
ராமனிடமிருந்து வேறுபட்ட
வினா ராமேண/ராமாத்/ராமம்
ராமனில்லாமல்
நாநா ராமேண ராமாத்/ ராமம்

2.3.33 கரணே ச ஸ்தோக அல்ப

க்ருச்^{1}ச^{2}ர கதிபயஸ்ய அஸத்வ வசனஸ்ய ஸ்தோக (குறைந்த எளிது) க்ருச்^{1}ச்^{2}ர (கடுமையாக) அல்ப (கொஞ்சம்) கதிபய(சில) ஆகிய சொற்கள் ஒரு பொருளைக் குறிக்காமல் அமையுமானால், அவைகளைக் காரணமாகப் பயன்படுத்தும்போது 3(அ) 5ஆம் வேற்றுமையுருபுகளை அவைகளுடன் இணைக்க வேண்டும்.

1) ஸ்தோகேன(3)/ஸ்தோகாத்^{3} முக்த:
எளிதில் விடுபட்டான்
2) அல்பேன/அல்பாத் முக்த:
எளிதில் விடுபட்டான்.
3) க்ருச்^{1}ச்^{2}ரேண/க்ருச்^{1}ச்^{2}ராத் முக்த:
கஷ்டப்பட்டு விடுதலையடைந்தான்
4)கதிபயேன/கதிபயாத் முக்த:
ஆனால் ஸ்தோகேன/அல்பேன விஷேண ஹத:
குறைந்த விஷத்தால் கொல்லப்பட்டான், இங்கு 'விஷம்' ஒரு பொருள். அதனால் இங்கு விருப்பம் (Optionality)இல்லை.

2.3.34 தூ^{3}ர அந்திகார்தை^{2}: ஷஷ்ட^{2} அன்யதரஸ்யாம்.

தூ^{3}ரம்(தொலைவு) அந்திகம்(அருகில்) என்ற பொருளை உணர்த்தும் சொற்களோடு நிற்கும் பெயர்ச்சொல் 6ஆம் வேற்றுமையில் விருப்பாக அமையலாம். அதாவது 5(அ) 6ஆம் வேற்றுமையாகும்.

தூரம் க்^{3}ராமாத்(5)/க்^{3}ராமஸ்ய(6)
கிராமத்திலிருந்து தொலைவில்
அந்திகம் க்^{3}ராமாத்/க்ராமஸ்ய
கிராமத்துக்கு அருகில்
'அன்யதரஸ்யாம்' என்ற சொல், 3ஆம் வேற்றுமையை விலக்க, இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2.3.35 தூ^{3}ராந்திகார்த^{2}ஸ்ய த்ருதீயா ச

3தூர (தொலைவு) அந்திக (பக்கம்) என்ற பொருளை உணர்த்தும் சொற்களோடு 2ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லும் வரும்.

'ச' என்ற சொல் 5, 3ஆம் வேற்றுமையையும் உள்ளடக்கியது என்று குறிப்பால் உணர்த்துகிறது.

தூ3ரம்/தூ3ராத்/தூ3ரேண க்3ராமஸ்ய

கிராமத்துக்குத் தொலைவில்

அந்திகம்/அந்திகாத்/அந்திகேன நக3ரஸ்ய

நகரத்துக்கு அருகில்

2.3.36 ஸப்தமீ அதி4கரணே ச

அதி4கரண காரகத்தை (1.4.48) (இடம்) குறிக்க 7ஆம் வேற்றுமைச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

தூராந்திகார்த்தத்தைக் 7ஆம் வேற்றுமைச் சொல்லும் பயன்படுத் தலாம் என்று 'ச' உணர்த்துகிறது.

கடே(7) ஆஸ்தே

பாயில் அமர்கிறான்

ஸ்த2ால்யாம்(7) பசதி

பானையில் சமைக்கிறான்

தூ3ரே(7) நக3ரஸ்ய

அந்திகே(7) க்3ராமஸ்ய

இச்சூத்திரங்களிலிருந்து

தூ3ர, அந்திக ஆகிய சொற்களும், அவற்றின் பொருளைக் கொண் ட மற்ற சொற்களும், 2, 3, 5, 7ஆம் வேற்றுமைச் சொற்களுடன் அமையலாமென்று கிடைக்கிறது.

வா: ஸப்தமீ வித4ானே க்தஸ்ய இன் விஷயஸ்ய கர்மணி உபஸம்க்2யானம். 'க்த'உடன் 'இன்' என்ற ஒட்டைச் சேர்த்து ஆக்கப்படும் சொல்லின் கர்மன் (செயப்படு பொருள்) 7ஆம் வேற்றுமையில் அமையும்.

அதீ4தீ வ்யாகரணே(7)

படிக்கிறவன் இலக்கணம்

இலக்கணம் நன்றாகப் படித்தவன்

பரிக3ணீதீ யாக்3ஞிகே(7)

நன்றாக அறிந்தவன் யாககர்மங்கள்

யாககர்மாக்களை நன்றாக அறிந்தவன்

வா: ஸாது4 அஸாது4 ப்ரயோகே3

ச ஸப்தமீ வக்தவ்யா

ஸாது4(நல்ல) அஸாது4(கெட்ட) ஆகிய சொற்களுடன் 7ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல் வரும்.

ஸாது4 தே3வதத்த மாதரி(7)

நல்ல தேவதத்தன் தாய்

தேவதத்தன் தாய்க்கு நல்லவன்

அஸாது4 தேவதத்த: பிதரி(7)
தேவதத்தன் தகப்பனுக்குக் கெட்டவன்

வா: காரகார்ஹாணாம் ச காரகத்வே
ஸப்தமீ வக்தவ்யா
காரகமாக ஆவதற்குத் தகுதியுள்ள சொற்களைக் காரகமாக அமைக்கும்போது அவைகள் 7ஆம் வேற்றுமையில் அமையும்.
ருத்3தே4ஷு(7) பு4ஞ்ஜானேஷு(7) த3ரித்3ரா ஆஸதே
பணக்காரர்கள் உண்ணும்போது இல்லாதவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்.

வா: காரகார்ஹாணாம் ச அகாரகத்வே
ஸப்தமீ வக்தவ்யா
காரகமாக அமையத் தகுந்தது காரகமாகாமல் வரும்போதும் 7ஆம் வேற்றுமையில் அமையும்.
த3ரித்3ரேஷு(7) ஆஸீனேஷு(7) ருத்3தா4 பு4ஞ்ஜதே
இல்லாதவர்கள் உட்கார்ந்திருக்கும்போது இருக்கிறவர்கள் உண்கிறார்கள்

வா: தத்3விபர்யாஸே ச ஸப்தமீ வக்தவ்யா
மேலே குறிப்பிட்டவைகளுக்கு மறுதலையாக வருமிடங்களிலும் 7ஆம் வேற்றுமைச் சொல் பயன்படுத்த வேண்டும்.
ருத்3தே4ஷு(7) ஆஸுனேஷு(7) த3ரித்3ரா பு4ஞ்ஜதே

வா: நிமித்தாத் கர்ம ஸம்யோகே3 ஸப்தமீ வக்தவ்யா
ஒரு பயனை உத்தேசித்துச் செய்யப்படும் செயலைக் குறிக்கும் செ ால்லோடு, அச்செயலின் செயப்படுபொருளும் அவ்வாக்கியத்தில் அமையும் போது முன்னால் குறிப்பிட்ட சொல் 7ஆம் வேற்றுமையில் அமையும்.
ஒரு பயனை அடைவதற்காகச் செயல் செய்யும்போது அந்தப் பய னே நிமித்தம் ஆகும். அச்சொல் 7ஆம் வேற்றுமையில் வரும்.
சர்மணி(7) த்3வீபினம் ஹந்தி
தோலுக்காக புலியைக் கொல்கிறான்
த3ந்தயோர்(7) ஹந்தி குஞ்ஜரம்
தந்தத்துக்காகக் கொல்கிறான் யானையை
கேஸேஷு(7) சமரீம் ஹந்தி
வாலுக்காக சமரியைக் கொல்கிறான்
ஸீமினி(7) புஷ்கலகோ ஹத
கோரோஜனைக்காக மான் கொல்லப்படுகிறது.

2.3.37 யஸ்ய ச ப4ாவேன பாவலக்ஷணம்
ஒரு செய்கையின் மூலம் மற்றொரு செய்கையை உணர்த்தும் காலை, முதலில் குறிப்பிட்ட செய்கை 7ஆம் வேற்றுமையில் அமையும்

கே^{3}ாஷு(7) து^{3}ஹ்யமானாஸு(7) ^{3}கத:
பசு பால்கறக்கும்போது சென்றான்

2.3.38 ஷஷ்டீ சானாத^{3}ரே
மேலே குறிப்பிட்ட வகையில் அமைந்த வாக்கியம் மதிக்காமை (அனாத^{3}ரே) என்ற பொருளைக் குறிக்குமானால், 6ஆம் வேற்றுமை சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.
முந்திய சூத்திரத்தின் அனுவ்ருத்தி மூலம் 7ஆம் வேற்றுமையும் இங்கு இடம் பெறும்.
ருத^{3}த:(6) ருத^{3}தி(7) ப்ராவ்ராஜீத்
அழும் போது துறந்தான்
அழும்போது (அதை மதிக்காமல்) வாழ்க்கையைத் துறந்தான்

2.3.39 ஸ்வாமி ஈஸ்'வர அதி^{4}பதி தா^{3}யாத^{3}
ஸாக்ஷி ப்ரதிபூ ப்ரஸூதஸ்' ச
ஸ்வாமி, ஈஸ்'வர (யஜமானன்), அதி^{4}பதி (அரசன்) தா^{3}யாத^{3}(வாரிசு) ஸாக்ஷி(சாட்சி) ப்ரதிபூ^{4} (உத்தரவாதம்) ப்ரஸூத (குழந்தை) ஆகிய சொற்களுடன் 6 அல்லது 7ஆம் வேற்றுமை சொல் வரும்.
க^{3}வாம்(6)/கே^{3}ாஷு(7) ஸ்வாமி
பசுக்களின் யஜமானன்
நராணாம்(6)/நரேஷு ஈஸ்வர:
நராணாம்(6)/நரேஷு(7) அதி^{4}பதி
மனிதர்களின் அரசன்
ஹரே:(6)ஹரௌ(7) தா^{3}யாத^{3}:
ஹரியின் வாரிசு
க^{3}வாம்/கே^{3}ாஷு ஸாக்ஷி
பசுக்களின் சாட்சி
க^{3}வாம்(6) கே^{3}ாஷு ப்ரதிபூ:
பசுக்களுக்கு உத்தரவாதம்(அளிப்பவன்)
க^{3}வாம்(6) கே^{3}ாஷு ப்ரஸூத:
பசுக்களின் கன்று

2.3.40 ஆயுக்த குஸ'லாப்^{4}யாம் ச ஆஸேவாயாம்
ஆயுக்த (ஈடுபடு) குஸ'ல (வல்லவன்)
ஆகிய சொற்கள் மற்றொரு பெயர்ச் சொல்லுடன் 'முழுமையாக ஈடுபடுதல்' என்ற பொருளைக் குறிக்கும்போது, 7ஆம் வேற்றுமையி லோ அல்லது 6ஆம் வேற்றுமையிலோ வரும்.
ஆயுக்த: கட'கரணே (7)/கட'கரணஸ்ய(6)
ஈடுபடு பாய் செய்தலில்
பாய் செய்வதில் முழுமையாக ஈடுபட்டான்

குஸ'ல: கட'கரணே(7)/கட'கரணஸ்ய(6)
பாய் செய்வதில் நிபுணன்
ஆனால்
ஆயுக்த கெ³ள: ஸ'கடே(7)
கட்டப்பட்டிருக்கிறது மாடு வண்டியில்
வண்டியில் மாடு கட்டப்பட்டிருக்கிறது

2.3.41 யதஸ' ச நிர்த⁴ாரணம்
ஒன்றிலிருந்து (யதஸ') மற்றொன்றைப் பிரித்துச் சுட்டும்போது 7 அ ல்லது 6ஆம் வேற்றுமை பெயர்ச் சொல் வரும்.
நராணாம்(6)/நரேஷு(7) க்ஷத்ரிய: ஸூரதம:
மனிதர்களுள் க்ஷத்திரியர்கள் மிகத் துணிவுள்ளவர்கள்
இரண்டு பொருட்களை ஒப்பிட்டுக் கூறும்போது எந்த வேற்றுமையில் அவை வருமென்பதைச் சுட்டுகிறது இந்த விதி.

2.3.42 பஞ்சமீ விப⁴க்தே
ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தனியாகப் பிரித்துச் சுட்டும்போது, முன்னதிலிருந்து மற்றது வேறாக அமையுமானால் 5ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல் வரும்.
மாது²ரா: பாடலிபுத்ரகேப்⁴ய:(5) ஸுகுமார தரா: மதுரையின் மக்கள் பாடலிபுத்திரத்து மக்களைக் காட்டிலும் மென்மையானவர்கள்

2.3.43 ஸாது⁴ நிபுணாப்⁴யாம் அர்சாயாம் ஸப்தமீ அப்ரதே:
ஸாது, நிபுண என்ற சொற்கள் மரியாதை என்ற பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொற்களுடன் நின்று 'ப்ரதி' என்ற கர்மப்ரவச னீயம் அத்துடன் அமையாமல் வரும்போது 7ஆம் வேற்றுமையுருபுகளை அப்பெயர்ச் சொற்களுடன் இணைக்க வேண்டும்.
மாதரி(7) ஸாது⁴:
தாயிடம் நன்றாக நடந்து கொள்வான்
ஆனால்
மாதரம்(2) ப்ரதி ஸாது⁴:
பிதரி(7) நிபுண:
பிதரம்(2) ப்ரதி நிபுண:
ஆனால்
ஸாது⁴: ப்⁴ருத்ய: ராக்³ஞ:
அரசனின் வேலைக்காரன் நல்லவன்
தத்வகத²னே ந ப⁴வதி
உண்மை பேசுவதில் இல்லை
அப்ரதியாதி³பி⁴: இதி வக்தவ்யம்
விதி விலக்கு 'ப்ரதி' முதலிய உபசர்க்கங்களுக்குமென்று அமைய வேண்டும்.

ஸாது⁴: தே³வத³த்த: மாதரம் பரி/அனு

2.3.44 ப்ரஸுத உத்ஸுகாப்⁴யாம் த்ருதீயா ச

ப்ரஸித (ஏங்குதல்) உத்ஸுக (விரும்புதல்) ஆகிய சொற்களுடன் வரும் பெயர்ச் சொல் 3ஆம் வேற்றுமையாகவும் இருக்கும். அதாவது மூன்றும் ஏழும் ஆக அமையும்.

கேஸை:(3)/கேஸேஷு(7) ப்ரஸித:
தலைமுடிக்காக ஏங்கினான்
நித்³ரயா/நித்³ராயாம் உத்ஸுக:
தூக்கத்தை விரும்புகிறவன்

2.3.45 நக்ஷத்ரே ச லுபி

நக்ஷத்திரத்தைக் குறிக்கும் சொல்லோடு நிற்கும் காலத்தைக் குறிக்கும் ஒட்டு மறையுமானால், அந்நக்ஷத்திரப் பெயரோடு 7 அல்லது 3ஆம் வேற்றுமையுருபுகளை இணைக்க வேண்டும்.

புஷ்யேண/புஷ்யே வா பாயஸ மஸ் னீயாத்
புஷ்ய நக்ஷத்திரத்தில் சந்திரன் இருக்கும்போது(அவன்)
பாயஸம் அருந்த வேண்டும்.
ஆனால்
மக³ா ஸு க்³ரஹ³:
மகத்தில் இருக்கும் கிரஹம்

இங்கு 'லுப்' மறைவு இல்லை. இடத்தையும் உணர்த்தி லுப் மறைவும் ஏற்படும்போதுதான் 3 அல்லது 7ஆம் வேற்றுமை பயன்படுத்த வேண்டும்.

2.3.46 ப்ராதி பதி³கார்த² லிங்³ பரிமாண வசனமாத்ரே ப்ரத²மா

முதல் வேற்றுமையுருபுகளை கீழ்க்கண்ட பொருளைக் குறிக்கும் சொற்களோடு மட்டும் இணைக்க வேண்டும்.

1) ப்ராதி பதி³கார்த² (பெயரடிச் சொல்லின் பொருள்) காட்டு; உச்சை; நீசை;
2) லிங்கம்(பால்) வ்ருக்ஷ:(ஆ) நதீ(பெ)குண்டம்(அஃறிணை)
3) பரிமாணம்(அளவு) த்³ரோண; க²ாரி:
4) வசனம் (எண்)ஏக; த்வௌ, பஹவ:

2.3.47 ஸம்பே³ாத⁴னே ச

ஒருவரைக் கூப்பிடும்போதும் (ஸம்பே³ாத⁴னம் விளி) அப்பெயர்ச் சொல்லுக்குப் பின் முதல் வேற்றுமையுருபுகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஹே, தே³வத³த்த ஹே தே³வத³த்தௌ, ஹே தேவதத்தா:

2.3.48 ஸா ஆமந்த்ரிதம்

மேற் சூத்திரத்தில் கூறப்பட்ட விளி வேற்றுமைச் சொற்கள் ஆமந்த்ரிதம் எனப்படும்.

2.3.49 ஏகவசனம் ஸம்புத்^{3}தி^{4}
ஆமந்த்ரிதத்தின் ஒருமைச் சொல் ஸம்பு3த்தி எனப்பெயர் பெறும் ஹே தேவதத்த

2.3.50 ஷஷ்டீ ஸே^{1}ஷே
மேற்சூத்திரங்களில் விளக்கப்பட்ட காரக உறவுகளைத் தவிர, ஏனைய உறவுகளை (அதாவது கிழமைப் பொருள் போன்றன) உணர்த்த 6ஆம் வேற்றுமைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.
ராக்^{3}ரு: (6) புருஷ:
அரசனின் வேலைக்காரன்
பஸோ:(6) பாத^{3}:
பசுவின் கால்

2.3.51 க்^{3}ஞோ அவித^{3}ர்த^{2}ஸ்ய கரணே
'க்ஞ' என்ற வினை 'தெரிந்து கொள்' என்ற பொருளில் அல்லாமல் பயன்படுத்தும்போது அதன் கருவி (கரணம்) 6ஆம் வேற்றுமையாகும்.
ஸர்பிஷா(6) ஜானீதே
நெய்யால் ஈடுபடுகிறான்
நெய்யைக் கொண்டு வேள்வியில் ஈடுபடுகிறான் அல்லது
நெய்யல்லாததை நெய்யென்று தவறாகப் புரிந்து கொள்கிறான்
ஆனால்
ஸ்வரேண புத்ரம் ஜானாதி
குரலினால் பிள்ளையை தெரிந்து கொள்கிறான்

2.3.52 அதீ^{4}க^{3}ர்த^{2} த^{3}யா ஈஸ^{1}ாம் கர்மணி
அதீக^{3}ர்த^{2} (நினை என்ற பொருளை உணர்த்தும் சொற்கள்)
'த^{3}யா,' 'கொடு, காப்பாற்று' ஈஸ்^{1} 'ஆள்' ஆகிய வினைகளின் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் அமையும்.
மாது:(6) அத்^{4}யேதி/ஸ்மரதி
தாயை நினைக்கிறான்
ஸர்பிஷோ(6) த^{3}யதே
நெய் கொடுக்கிறான்
ஸாபிஷோ(6) ஈஷ்டே^{1}

2.3.53 க்ருஞ: ப்ரதியத்னே
'க்ருஞ்' என்ற வினையின் செயப்படுபொருள் ஒரு பொருளின் குணத் தை மாற்றியமைத்தல் என்ற பொருளில் பயன்படுத்தும்போது, அச் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் வரும்.
ஏத^{4}: உத^{3}கஸ்ய(6) உபஸ்குருதே
எரிபொருள் தண்ணீரின் குணத்தை மாற்றுகிறது

2.3.54 ருஜார்த²னாம் ப⁴ாவவசனானாம் அஜ்வரே

'நோவு' என்ற பொருளை உணர்த்தும் (ருஜார்த²னாம்) வினை, இயக்குவினையாக அமையாமல் (அதாவது ஜ்வரய – 'காய்ச்சலின் அடையாளமுள்ள') அவ்வினையின் செயப்படுபொருள நுண்மைப் பெயராக அமைந்தால் 6ஆம் வேற்றுமையில் வரும்.

சௌரஸ்ய(6) ருஜதி ரோக³:

திருடன் துன்புறுத்துகிறது பிணி

ருஜ்–ய–தே அனேன ‹ ருஜ் + க⁴ங் › ரோக³:

ஆனால்

நதீ கூலானி(2) ருஜதி

ஆறு கரையை உடைக்கிறது

சோரம்(2) ஜ்வரயதி ஜ்வர:

திருடனை காய்ச்சுகிறது காய்ச்சல்

வா: அஜ்வரி ஸந்தரப்யோரிதி வக்தவ்யம்

ஜ்வரம், ஸந்தாபம் ஆகிய வினைகளைத் தவிர்த்து என்று கூற வேண்டும்.

சௌரகம்(2) ஸந்தாபயதி தாப:

திருடனை காய்ச்சல் வருத்துகிறது.

2.3.55 ஆஸி'ஷி நாத²:

நாத்² என்ற வினை 'வாழ்த்துதல்' என்ற பொருளில் பயன்படுத்தும் போது அதன் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் அமையும்.

ஸர்பிஷோ(6) நாத²தே

நெய்யை வாழ்த்துகிறான்

ஆனால்

மாணவகம்(2) உபநாத²தி

மாணவனை பரிந்து கூறுகிறான்

2.3.56 ஜாஸி நிப்ரஹண நாட' க்ராத² பிஷாம் ஹிம்ஸாயாம்

ஜாஸி ('ஜஸ்' + ணிச்), நிப்ரஹன் (நி + ப்ர + ஹன்)

'அடி, காயப்படுத்து, நாட' (நட் + ணிச்) 'காயப்படுத்து', க்ராத² (க்ரத்² + ணிச்), பிஷ், 'நசுக்கு, தூளாக்கு' ஆகிய வினைகள் 'துன்பப்படுத்து' என்ற பொருளை உணர்த்தும்போது அவற்றின் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் அமையும்.

சௌரஸ்ய (6) உஜ்ஜாஸயதி

திருடனை அடிக்கிறான்

சௌரஸ்ய(6) நிப்ரஹந்தி

சௌரஸ்ய நிஹந்தி

சௌரஸ்ய ப்ரஹந்தி

சௌரஸ்ய ப்ரணிஹந்தி
திருடனை அடிக்கிறான்
சௌரஸ்ய(6) உன்னாட்'யதி
திருடனை நாசம் பண்ணுகிறான்
சௌரஸ்ய(6) உத்க்ராத²யதி/க்ராத²யதி
திருடனை அடிக்கிறான்
சௌரஸ்ய(6) பினஷ்டி'
திருடனை நசுக்குகிறான்
ஆனால்
தானா:(2) பினஷ்டி
தான்யத்தைப் பொடிக்கிறான்
இங்கு ஹிம்ஸார்த²ம் இல்லை அதனால் 2ஆம் வேற்றுமையில் காணப்படுகிறது.

2.3.57 வ்யவஹ்ரு பணோ: ஸமர்த²யோ:

வ்யவஹ்ரு (வி + அவ + ஹ்ரு), பண் ஆகிய வினைகள் ஒரே பொருளை உணர்த்துவதாக அமையும்போது (அதாவது வியாபாரம் பண்ணுதல், சூதாடுதல் என்ற பொருள்) அவைகளின் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் அமையும்.
ஸ'தஸ்ய(6) வ்யவஹரதி/பணதி
நூறு பணயம் வைக்கிறான்
நூறு வாங்கி விற்பனை செய்கிறான்
ஆனால்
ஸ'லாகாம்(2) வ்யவஹரதி
பகடையை எண்ணுகிறான்
ப்'ராஹமணான்(2) பணாயதே
பிராம்மணர்களைப் புகழ்கிறான்

2.3.58 தி³வஸ் ததர்த²ஸ்ய

'திவ்' என்ற வினை மேற்குறிப்பிட்ட பொருளை உணர்த்தும்போது அதன் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் வரும்.
ஸ'தஸ்ய தீ³வ்யதி
நூறு பணயம் வைக்கிறான்
நூறு வாங்கி விற்பனை செய்கிறான்
ஆனால்
ப்³ராஹ்மணம்(2) தீ³வ்யதி
பிராமணனைப் புகழ்கிறான்

2.3.59 விப⁴ாஷா உபஸர்கே³

உபசர்க்கங்களுடன் 'திவ்' வரும்போது அதன் செயப்படுபொருள் 6ஆம்

வேற்றுமையில் விருப்பாக வரும்
ஸ[1]தஸ்ப(6) ஸ[1]தம்(2) வா ப்ரதிதீ[3]வ்யதி
ஆனால்
ஸ[1]தஸ்ய(6) தீவ்யதி
இங்கு உபசர்க்கம் இல்லை. அதனால் 6ஆம் வேற்றுமை மட்டுந்தான் வரும்.

2.3.60 த்[3]விதீயா ப்[3]ராஹ்மணே
பிராமண இலக்கியங்களில், தி3வ் என்ற வினை மேலே குறிப்பிட்ட பொருளை உணர்த்தும்போது 2ஆம் வேற்றுமையில் அமையும்.
க[3]ாம்(2) அஸ்ய(6) தத[3]ஹ: ஸபா[4]யாம்
பசுவை அவன் அன்று அவையில்
தீ[3]வ்யேயு: (மை.ஸம்.1.6.11,56)
பணயம் வைக்க வேண்டும்
ஒரு பசுவை அன்று அவையில் அவனுக்குப் பணயம் வைக்க வேண்டும்.

2.3.61 ப்ரேஷ்ய ப்[3]ருவோர் ஹவிஷோ தேவதா ஸ்ம்ப்ரத[3]ானே
ப்ரேஷ்ய (ப்ர + இஷ்), ப்[3]ரூஹி ஆகிய வினைகள், ''ஹவிஸை யாகத்தில் ஒரு தேவதைக்கு அளித்தல்'' என்ற பொருளை உணர்த்தும்போது அவற்றின் செயப்படுபொருள் 6ஆம் வேற்றுமையில் அமையும்.
அக்னயே(4) ச[2]ாக[3]ஸ்ய(6) ஹவிஷ:(6)
அக்னிக்கு ஆடு ஹவிஸ்
வபாயா(6) மேத[3]ஸோ(6) ப்ரேஷ்ய/அனுப்[3]ரூஸி
கொழுப்பு எலும்புமச்சை அளி
ஆடு, கொழுப்பு, எலும்பு மச்சை (Marrow) ஆகியவைகளை அக்னிக்கு ஹவிஸாக அளி.
அக்[3]னயே ச[2]ாக[3]ம்(2) ஹவிர் வபாம்(2) மேதோ[3] ஜுஹுதி[4]
இங்கு வினை 'ஹு'. அதனால் கர்மன் 2ஆம் வேற்றுமையில் அமைகிறது.

வா: ஹவிஷ: ப்ரஸ்தி[2]தஸ்ய ப்ரதிஷேதே[4]ா வக்தவ்ய:
'ஹவிஸ்' உடன் ப்ரஸ்தி[2]த 'தனியாக எடுத்துவை' என்ற சொல் வரும்போது இதற்கு விதிவிலக்கு
இந்த்[3]ராக்[3]னி ப்[4]யாம்(4) ச[2]ாக[3]ம்(2) ஹவிர்வ
பாம்(2) மேதே[3]ா(2) ப்ரஸ்தி[2]தம் ப்ரேஷ்ய
இந்திரனுக்கும் அக்னிக்கும் தனியாக வைத்துள்ள ஹவிஸை (ஆடு முதலியவை) அனுப்பு.
இங்கு செயப்படுபொருள் 2ஆம் வேற்றுமையில் அமைகிறது.

2.3.62 சதுர்த்[2]யர்தே[2] பஹுலம் ச[2]ந்த[3]ஸி
வேதமொழியில், 4ஆம் வேற்றுமைப் பொருளை உணர்த்த 6ஆம் வேற்றுமைப் பலவகையில் பயன்படுத்தப்படுகிறது.

புருஷம்ருக³: சந்த்ரமஸ(6)
சந்திரனுக்கு ஒரு ஆண்மான் (அளிக்க வேண்டும்)
அல்லது புருஷம்ருக³: சந்த்ரமஸே(4)

வா: ஷஷ்ட்²யர்தே² சதுர்தீ வக்தவ்யா
ஆறாம் வேற்றுமைப் பொருளில் 4ஆம் வேற்றுமை, வேதத்தில் காணப்படுகிறது என்று கூற வேண்டும்.
யா க²ர்வேண பிப³தி தஸ்யை(4) காண:
தஸ்யை(4)-தஸ்யா:(6)

2.3.63 யஜேஸ்' ச கரணே
'யஜ்' என்ற வினையின் கரணம் (கருவி) வேதத்தில் 6ஆம் வேற்றுமையில் வரும்.
இங்கு ப³ஹுலம் 'பலவகையாக' என்ற சொல்லையும் சேர்த்து விளக்க வேண்டும்.
க்⁴ருதஸ்ய(6)/க்⁴ருதேன(3) யஜதே
நெய் கொண்டு வேள்வி செய்கிறான்

2.3.64 க்ருத்வோ அர்த²ப்ரயோகே³ காலே அதி⁴கரணே
காலத்தைக் குறிக்கும் சொல், க்ருத்வஸுச் (5.4.17) என்ற ஒட்டின் பொருளை உணர்த்துவதாக அமையும்போது (அதாவது பலதடவை என்ற பொருள்), இடப் பொருளில் அதாவது 7ஆம் வேற்றுமை பொருளில் 6ஆம் வேற்றுமையில் அமையும்.
பஞ்சக்ருத்வ: அஹ்னோ(6) பு⁴ங்க்தே
5 தடவை நாள் உண்கிறான்
நாளைக்கு 5 தடவை உண்கிறான்
ஆனால்
அஹனி(7) ஸேதே
பகலில் தூங்குகிறான்
இங்கு எத்தனை தடவையென்று குறிப்பிடவில்லை. அதனால் 7ஆம் வேற்றுமை.
த்³வி: காம்ஸ்யபாத்ர்யாம்(7) பு⁴ங்க்தே
2தடவை பித்தளைப் பாத்திரத்தில் உண்கிறான்
இங்கு காலம் குறிப்பிடவில்லை. அதனால் 7ஆம் வேற்றுமை

2.3.64 கர்த்ரு கர்மணோ: க்ருதி
'க்ருத்' என்ற ஒட்டில் முடியும் சொற்களோடு நிற்கும் கர்த்தா, கர்மன் இரண்டுமே 6ஆம் வேற்றுமையில் அமையும்.
கர்மன்
புராம்(6) பே⁴த்தா

கோட்டைகளுடைய உடைத்தவன்
கோட்டைகளைத் தகர்த்தவன்
புதைநிலையில்
ஸ: புர:(2) பி⁴னத்தி
அவன் கோட்டைகளை உடைக்கிறான்

கர்த்தா
காலிதாஸ'ஸ்ய(6) க்ரியா
காலிதாஸனுடைய நூல்

புதைநிலை
காலிதாஸ: காவ்யம்(2) கரோதி
காலிதாஸன் காவ்யம் படைக்கிறான்

2.3.66 உப⁴யப்ராப்தௌ கர்மணி
மேற்சூத்திரத்தில் குறிப்பிட்ட சூழலில், கர்த்தா, கர்மன் இரண்டுமே ஒரு வாக்கியத்தில் அமையுமானால் கர்மன் மட்டும் 6ஆம் வேற்றுமையில் வரும் (கர்த்தா அல்ல)
ரோசதே மே ஒதனஸ்ய(6) போஜனம் தேவதத்தேன(3)
பிடிக்கும் எனக்கு அன்னம் உண்ணுதல் தேவதத்தனால்

புறநிலை ஒதனஸ்ய(6) போஜனம்(2) தே³வத³த்தேன
சோறு உண்ணுதல் தேவதத்தனால்

புதைநிலை தேவதத்த: ஒத³னம்(2) பு⁴ங்க்தே
தேவதத்தன் சோறு உண்கிறான்

வா: அகாகாரயோ: ஸ்த்ரீப்ரத்யயோ:
ப்ரயோகே நேதி வக்தவ்யம்
அக: அகார. ஆகிய பெண்பால் ஒட்டுக்களோடு வரும்போது இந்த விதி பயன்படுத்தப்படுவதில்லை.
பே⁴தி³கா தே³வத³த்தஸ்ய(6) காஷ்ட²னாம்(6)
உடைத்தல் தேவதத்தனின் விறகுகளுடைய

புதைநிலை தே³வத³த்த: காஷ்டான்(2) பி⁴னத்தி
தேவதத்தன் விறகுகளை உடைக்கிறான்
கீரீர்ஷா தே³வத³த்தஸ்ய(6) கடஸ்ய(6)

புதைநிலை தேவதத்த: கடம்(2) சிகீர்ஷதி
தேவதத்தன் பாய் செய்ய விரும்புகிறான்

வா: ஸேஷே விப4ாஷா

அக, அகாரத்தில் முடியும் பெண்பாற் சொற்களைத்தவிர்த்து, மற்ற பெண்பாற் சொற்கள் (க்ருதந்தம்) வரும்போது விருப்பாக 6ஆம் வேற்றுமையில் வரும்.
விசித்ரா ஹி ஸூத்ரஸ்ய(6) க்ருதி:
பாணினே:(6)/பாணினினா(3) வா
பாணினியால் செய்யப்பட்ட சூத்திரங்கள் அருமையானவை

2.3.67 க்தஸ்ய ச வர்தமானே

'க்த' என்ற 'க்ருத்' ஒட்டில் முடியும் நிகழ்காலத்தை உணர்த்தும் வினையுடன் நிற்கும் கர்த்தா, கர்மன் ஆகியவைகளைக் குறிக்கும் பெயர்ச் சொல் 6ஆம் வேற்றுமையில் அமையும்.
ராக்3ஞாம்(6) பூஜித:
அரசனால் மதிக்கப்பட்டவன்

புதைநிலை ராஜா தம் பூஜயதி
அரசன் அவனை மதிக்கிறான்
ஆனால்
ஓத3னம்(2) பசமான: ('க்த' இல்லை இங்கு ஸ'ானச்)
க்ராமம்(2) க3த: (நிகழ்காலம் அல்ல கடந்த காலத்தைக் குறிப்பது)
இது கு 69க்கு புறனடை

வா: நபும்ஸகே பா4வ உபஸம்க்2யானம்

'க்த' என்ற 'க்ருத்'ஐச் சேர்த்து ஆக்கப்பட்ட சொல், அஃறிணை நுண்மைப் பெயராக வரும்போது இவ்விதி செயற்படும்.
மயூரஸ்ய(6) ந்ருத்தம்
மயிலின் நடனம்
புதைநிலை மயூர: ந்ருத்யதி
மயில் ஆடுகிறது

வா: ஸே'ஷவிக்3ஞானாத் ஸித்3த4ம்

'ஸேஷ' (மற்ற) என்ற சொல்லிலிருந்து, கர்த்தா 3ஆம் வேற்றுமையிலும் வரும் என்ற பொருள் கிடைக்கிறது.
ச2ாத்ரேண(3) ஹஸிதம்
மாணவனால் சிரிக்கப்பட்டது
புதைநிலை ச2ாத்ர: ஹஸதி
மாணவன் சிரிக்கிறான்

2.3.68 அதி4கரண வாசினஸ்' ச

'க்த' என்ற ஒட்டினால் ஆக்கப்பட்ட சொல் அதிகரணம் அதாவது இடத்தைச் சுட்டும் சொல்லோடு வரும்போதும் 6ஆம் வேற்றுமையில் அமையும்

இத³ம் ஏஷாம்(6) ஆஸிதம்
இது அவர்களுடைய இருத்தல்
அவர்கள் உட்கார்ந்த இடமிது
'க்ருத்' ஒட்டைச் சேர்த்து ஆக்கப்பட்ட சொற்கள் கர்த்தாவாகவும் இரண்டு செயற்படுபொருட்களைக் கொண்டதாகவும் அமையும் வாக்கியத்தில், இரண்டு கர்மன்களும் 6ஆம் வேற்றுமையில் அமையும்.
நேதா அஸ்'வஸ்ய(6) க்³ராமஸ்ய(6) சைத்ர:
புதைநிலை
சைத்ர: அஸ்'வம்(2) க்ராமம்(2) நயதி
சைத்ரன் குதிரையை கிராமத்துக்கு அழைத்துச் செல்கிறான்
சிலர் ப்ரத⁴ான கர்மன் மாத்திரம் 6ஆம் வேற்றுமையில் அமையும் என்று கருதுகிறார்கள்.
நேதா அஸ்வஸ்ய(6) க்³ராமம்(2) சைத்ர:

2.3.69 ந ல, உ, உக, அவ்யய நிஷ்²டா க²லர்த² த்ருனாம்
'க்ருத்' ஒட்டில் முடியும் வினையின் கர்த்தாவாகவோ, கர்மனாகவோ அமையும் பெயர் சொல்லுக்குப்பின் 6ஆம் வேற்றுமையுருபுகள் கீழ்க்கண்ட இடங்களில் வாரா.
அ) வினை 'ல'வுக்குப் பதிலாக இருந்தால் அதாவது
ஸ'த்ரு, ஸ'ானச் (3.2.124), கானச் (3.2.106), க்வஸு (3.2.107), கி, கின் (3.2.171)
ஆ) உ (3.2.168)
இ) உக (3.2.124)
ஈ) அவ்யயம்: க்த்வா,
உ) நிஷ்டா: க்த, க்தவது (1.1.26)
ஊ) 'க²ல்' இன் பொருளைக் கொண்ட சொற்கள் (3.3.126)
எ) த்ருன் (3.2.135)
அ) ஒதனம் பசன்
ஒதனம் பசமான: } சோறு சமைத்துக் கொண்டு
ஒதனம் பேசான: சோறு சமைத்துக் கொண்டிருந்த
ஒதனம் பேசிவான்: சோறு சமைத்தான்
பபி: ஸோமம்: ஸோமரஸம் பருகுபவன்
ஆ) கடம் சிகீர்ஷு: (ஸன்னந்த)
பானை செய்ய விரும்புவன்
இ) ஆகாமுகம் வாராணஸிம் ரக்ஷ ஆஹு
ராக்ஷஸனை வாராணஸிக்கு வர்விரும்புகிறவன் என்று கூறுகிறார்கள்.
வார்த்திகம் உகப்ரதிஷேதே⁴ கமேர் ப⁴ாஷாயா மப்ரதி⁴ஷே:
பேச்சு வழக்கில், 'உக'வுடன் வரும் 'கம்' என்ற வினைக்கு இத்தடை யில்லை.
த³ாஸ்யா:(6) காமுக:
தாஸியை விரும்புகிறான்

ஈ) கடம் க்ருத்வா
பாய் செய்துவிட்டு
வார்த்திகம் அவ்யயப்ரதிஷேதே^{4}
தோஸுன் கஸுனோரப்திஷேத^{4}:
அவ்யயங்களாகிய தோஸுன், கஸுன் என்ற ஒட்டுக்களுக்கு அவ்யயங்களுக்கான தடையில்லை.
வ்யுஷ்டாயாம் புரா ஸூர்யஸ்ய(6)
விடியலில் முன்பு சூரியனுடைய
உதே^{3}தோ:(6) ஆதே^{4}ய
உதித்தல் வைக்க வேண்டும்
உதே^{3}தோ: 'கர்மன்' ஆகும், இங்கு விதிவிலக்கு செயற்படவில்லை.

உ) தே^{3}வத^{3}த்தேன(3) க்ருதம்
தேவதத்தனால் செய்யப்பட்டது
ஒத^{3}னம்(2) பு^{4}க்தவான்
சோறு உண்டவன்

ஊ) ஈஷத்கர: கடோ ப^{4}வதா(3)
எளிது பாய் உங்களால்
உங்கள் மூலம் பாய் செய்வது எளிது

எ) ஸோமம்(2) பவமான: (3.3.128) ('ஸானன்)
சோமம் பருகிக் கொண்டு
ந^{1}டம்(2) ஆத்^{4}னான: (3.2.129) (சானஸ்')
மூங்கிலை ஊதிக்கொண்டு
அதீ^{4}யன் பாராயணம் (3.2.130) (ஸத்ரு)
படிக்கும் பாராயணம்
பாராயணம் பண்ணும்
கர்தா கடான் (2) (3.2.134) (த்ருன்)
செய்பவன் பாய்களை
வார்த்திகம் த்^{3}விஷ: ஸ'த்ருர்வா வசனம்
'ஸ'த்ரு' ப்ரத்யயத்தோடு கூடிய 'த்^{3}விஷ்' என்ற வினையோடு வரும் பெயர்ச்சொல் 6 அல்லது 2ஆம் வேற்றுமையில் வரும்.
சௌரம்(2) சௌரஸ்ய(6) த்^{3}விஷன்
திருடனை வெறுத்துக்கொண்டு

2.3.70 அகேனோ: ப^{4}விஷ்யத் ஆத^{4}மர் ண்யயோ:
'அக்', 'இன' ஆகிய ஒட்டு(க்ருத்)க்களை சேர்த்து ஆக்கப்பட்ட வினையோடு வரும் செயப்படுபொருள் பின்னால் நிகழப் போகும் செயலையோ அல்லது கடனாளி என்ற பொருளைச் சுட்டியோ வரும்போது, அப்பெயர்ச் சொல் 6ஆம்

வேற்றுமையில் அமையாது.

அக – ஓத³னம் (2) போ⁴ஜக வ்ரஜதி
சோறு உண்ண போகிறான்
சோறு உண்பதற்குப் போகிறான்

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
LIBRARY.
Accession No 48967
Date of purchase
Call Number: 491.2045
N8

இன் – ஸ'தம்(2) த³ாயி
100 கொடுக்க வேண்டியவன்
நூறு கடன் வாங்கியவன்

2.3.71 க்ருத்யானாம் கர்தரி வா
'க்ருத்ய'த்தைச் சேர்ந்த 'க்ருத்' ஒட்டினால் ஆக்கப்பட்ட சொல்லோ நிற்கும் பெயர்ச் சொல், கர்த்தாவாகும்போது, அது 6ஆம் வேற்றுமையில் விருப்பாக அமையும்.
ப⁴வத:(6)/ப⁴வதா(3) கட`: கர்தவ்ய:
உன்னால் பாய் செய்யப்படவேண்டும்
2.3.66இன்படி 'க்ருத்' ஒட்டில் முடியும் சொற்களோடு வரும் பெயர்ச் சொற்கள் எப்போதுமே 6ஆம் வேற்றுமையில் வரும் 'க்ருத்' ஒட்டுக்களில் ஒன்றான 'க்ருத்ய' ஒட்டுக்களோடு நிற்கும்
கர்த்தா 6அல்லது 3ஆம் வேற்றுமையில் வரும். ஆனால் கர்மன் 6ஆம் வேற்றுமையில் ஒருபோதும் அமையாது.
ஆனால்
கே³யோ மாணவக: ஸாம்னாம்(6)
ஸாமம் சொல்லும் மாணவன்

வா: உப⁴யப்ராப்தௌ க்ருத்யே ஷஷ்ட்யா:
ப்ரதிஷேதோ⁴ வக்தவ்ய:
கர்த்தா, கர்மன் இரண்டுமே 6ஆம் வேற்றுமையில் வரலாம் என்று சூழலில் 'க்ருத்ய' வினைகளோடு வரும்போது இவ்விரண்டுமே 6ஆம் வேற்றுமையில் அமையாது.
நேதவ்யா க்³ராமம்(2) அஜா தேவதத்தேன(3)
கொண்டுபோக கிராமத்துக்கு ஆடுகள்தேவதத்தனால்
வேண்டும்.
தே³வத³த்தன் மூலம் ஆடுகள் கிராமத்துக்கு கொண்டு போக வே ண்டும்.

2.3.72 துல்யார்தை²: அதுலோபமாப்⁴யாம் த்ருதீயா ்அன்யதரஸ்ய ாம்
துலா, உபமா என்ற சொற்களைத் தவிர்த்து மற்ற 'துல்ய', 'ஈடு' என்ற பொருளை உணர்த்தும் சொற்களோடு 3ஆம் வேற்றுமைச் சொல் விருப்பாக வரும். அதாவது இங்கு 3 அல்லது 6ஆம் வேற்றுமை வ்ரும்.
துல்ய: தே³வுத³த்தேன/தே³வத³த்தஸ்ய ஸத்³:

ஸத்3ருஸ: தே3வத3த்தேன/தே3வத3த்தஸ்ய
தேவதத்தனுக்கு ஈடானவன்
ஆனால்
உபமா க்ருஷ்ணஸ்ய(6) ந வித்3யதே
கிருஷ்ணனுக்கு ஈடானவன் யாருமில்லை.

2.3.73 சதுர்தீ4 ச ஆஸி'ஷி ஆயுஷ்ய மத்3ர
ப4த்3ர குஸ'ல ஸுக2ார்த2 ஹிதை:
'வாழ்த்துதல்' என்ற பொருளை உணர்த்தும் ஆயுஷ்ய, மத்3ர, ப4த்3ர, குஸ'ல 'ஸுக' என்ற பொருளைக் கொண்ட சொற்கள், 'ஹித' ஆகிய சொற்களோடு நிற்கும் பெயர்ச் சொல் 4ஆம் வேற்றுமையில் அமையும். 'ச' என்ற சொல் 6ஆம் வேற்றுமையும் ஆகும் என்ற பொருளைச் சுட்டும்.
- ஆயுஷ்யம் தேவதத்தாய(4)/தேவதத்தஸ்ய பூ4யாத்
தேவதத்தனுக்கு நீண்ட ஆயுள் உண்டாகட்டும்
மத்3ரம்/ப4த்3ரம் தேவதத்தாய/தேவதத்தஸ்ய பூ4யாத்
தேவதத்தனுக்கு மகிழ்ச்சி உண்டாகட்டும்
குஸ'லம் தேவதத்தாய/தேவதத்தஸ்ய பூ4யாத்
ஸுக2ம் தேவதத்தாய/தேவதத்தஸ்ய பூ4யாத்
அர்த2ம் தேவதத்தாய/தேவதத்தஸ்ய பூ4யாத்
ஹிதம் தேவதத்தாய/தேவதத்தஸ்ய பூ4யாத்

வா: அத்ர ஆயுஷ்யாதீ3னாம் பர்யாய க்3ரஹணம் கர்தவ்யம்
இங்கு 'ஆயுஷ்யம்' முதலியவைகளின் பொருளைச் சுட்டும் மற்ற சொற்களும் உள்ளடங்கியவை.
ஆயுஷ்யம்/சிரம் தேவதத்தாய. . . .
குஸ'லம்/நிராமயம். . . . .

அர்த2:/ப்ரயோஜனம் . . . .
ஹிதம்/பத்2யம். . . . .

2.4.1 த்3விகு3ர் ஏகவசனம்
த்விகுஸமாஸம் (எண்ணுத்தொகை) ஒருமையில் அமையும் அதாவது ஒரே ஒரு பொருளைக் கொண்டதாக நிற்கும்.
பஞ்சக3வம் '5 பசுக்கள்'
இது ஸமாஹாரத்3விகு3

2.4.2 த்3வந்த்3வஸ்' ச ப்ராணி ஸேனாங்க3னாம்
த்3வந்த்3வ ஸமாஸத்தின் உறுப்பினர்கள் (அ) ப்ராணிகளின் உறுப்பு (ஆ) பாடகர்கள் (இ) நடனமாடுபவர்கள் தொகுதி (ஈ) படைகளின் ஒரு பகுதி ஆகியவைகள் சுட்டும் வகையில் அமைந்தால், இத்தொகையும் ஒரே ஒரு

பொருளைக் குறிக்கும். அதாவது ஒருமையிலமையும்.

அ) பாணிபாதம்–கைகால்கள்

ஆ) மார்த3ங்கி3க பாணவிகம் ``மிருதங்கம் வாசிப்பவனும் பணவம் வாசிப்பவனும்''

இ) ரதி4காஸ்'வாரோஹம்–ரதத்தில் ஏறிய வீரர்களும் குதிரையின் மேலமர்ந்த வீரர்களும்

2.4.3 அனுவாதே3 சரணானாம்

வேதத்தின் பல கிளைகளைச் சார்ந்தவர்களின் பெயர்களைக் கொண்டு ஆக்கும் த்3வந்த்3வ ஸமாஸம்.

திருப்பிச் சொல்லுதல் என்ற பொருளைக் குறிக்கும்போது, ஒரே ஒரு பொருளைக் குறிக்கும். உத3க3ாத் கட4கலாபம் 'கடவும் கலாபமும் எழுந்தன ஆனால் உத3கு3: கட4கலாபா:

வா: ஸ்தே3ணோர் அத்3யதன்யாம் ச

இதி வக்தவ்பம்

ஸ்2தா, இண் ஆகிய தாதுக்களுடனும்

அத்3யதனி (லுங்) உடனும் என்று அமைய வேண்டும்.

அனந்தி3ஷு: கட2கலாபா:

உத்3யந்தி கட2கலாபா:–இங்கு 'லட்' அதனால்

ஏகவத்3 பாவமில்லை.

2.4.4 அத்4வர்யுக்ரது: அநபும்ஸகம்

யஜுர் வேதத்தில் கூறப்பட்டிருக்கும் (அத்4வர்யுக்ரது) நபும்ஸகமல் லாத யாகங்களின் பெயர்களை உறுப்பினர்களைக் கொண்ட த்3வ ந்த்3வ ஸமாஸம் ஒரே ஒரு பொருளைக் குறிப்பதாகக் கருதப்படும்.

அர்காஸ்'வமேத4ம், ஸாயாஹ்னாதிராத்ரம்

ஆனால் இஷு வஜ்ரௌ (ஸாமவேத க்ரது) ராஜஸூய

வாஜ்பேயே. இது ஆண்பாலாகவும் நமம்ஸகமாகவும் வரலாம்.

2.4.5 அத்4யயனத: அவிப்ரக்ருஷ்டாக்2யானம்

படிக்க வேண்டிய தலைப்புகளின் வரிசைக் கிரமத்தில் ஒன்றுக்கொன்று நெருங்கியதாக உள்ளவைகளைப் படித்தவர்களின் பெயர்களினால் ஆக்கிய த்வந்த்வஸமாஸம் ஒரே ஒரு பொருளைக் குறிப்பதாக அமையும்.

பத3க்க்ரமகம்–பதபாடம் அத்யயனம்

பண்ணுபவர்களும் க்ரம பாடம் அத்யயனம் பண்ணுபவர்களும் ஆனால்

யாக்3ஞிகவையாகரணௌ

வேள்வி முறையறிந்தவரும் இலக்கணாசிரியரும் இங்கு இவ்விரண்டும் ஏகவத்3ப4ாவமாகாது.

2.4.6 ஜாதி: அப்ராணிஷு,
உயிருள்ள பொருள்களைச் சுட்டும் ஜாதியைத் தவிர, மற்ற ஜாதி (இனம்)யைச் சுட்டும் பெயர்ச் சொற்களால் ஆக்கப்பட்ட த்³வந்த்³வம் ஒருமையிலமையும்.
ஆராஸஸ்த்ரி
ஆனால் நந்தகபாஞ்ச ஜன்யெள. விஷ்ணுவின் கத்தி, சங்கு இவைகளின் பெயர். அதனால் இருமை.
ப்³ராஹ்மண க்ஷத்ரிய விட்ஸூத்³ரா: இங்கும் ஏகவத்³ப⁴ாவமில்லை.

2.4.7 விஸிஷ்ட லிங்கே³ா நதீ தே³ஸோ³ அக்³ராம:
கிராமத்தின் பெயர்களைத் தவிர்த்து மற்ற வெவ்வேறு பால்களில் அமைந்த தேஸத்தின் பெயர்கள் (இடப் பெயர்கள்) அல்லது நதியின் பெயர்கள் ஆகியவைகளை உறுப்பினர்களாக கொண்ட த்3வந்த்3வ ஸமாஸம் ஒருமையில் அமையும்.
க³ங்க³ா ஸோ¹ணம்–கங்கையும் ஸோணமும்
குருகுருக்ஷேத்ரம்–குருவும் குருக்ஷேத்திரமும்
ஆனால் கங்கா யமுனே. இங்கு இரண்டுமே பெண்பாலில் அமைந்திருப்பதால், இத்தொகை இருமையிலமைந்திருக்கிறது. மத்³ ர கேகயா: (பன்மை) மக்களின் பெயர்

வா: அக்³ராமா இத்யத்ர நகராணாம்
ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய:
நகரங்களின் பெயர்களைத் தவிர்த்து என்று 'அக்ராமா' என்பதில் கூறியிருக்க வேண்டும்.
மது²ரா பாடலிபுத்ரம்(=மது²ரா ச பாடலிபுத்ரம்(ச) இங்கு இர ண்டு சொற்களும் நகரத்தின் பெயர்கள். அதனால் ஏகவத்3பாவம்

வா: உப⁴யதஸ்¹ ச க்³ராமாணாம் ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய:
கிராமம், நகரம் ஆகியவைகளின் பெயர்களை தொகுத்து துவந்துவஸமாஸம் ஆக்கும்போதும் கிராமத்தின் பெயர்கள் விலக்காகும்.
ஸௌர்ய கேதவதே–ஸௌர்யமும் கேதவதமும், ஸௌர்யம் – ஒரு நகரம்: கேதவதம் ஒரு கிராமம். அதனால் ஸௌர்ய கேதவதே இருமையில் காணப்படுகிறது.

2.4.8 க்ஷுத்³ரஜந்தவ:
சிறிய உயிரினங்களின் பெயர்களைக் கொண்டு ஆக்கும் துவந்துவஸமாஸமும் ஒருமையாகும்.
த³ம்ஸ¹மஸ¹கம் ''மூட்டையும் கொசுவும்''
ஆனால் ப்³ராஹ்மணக்ஷத்ரியெள

2.4.9 யேஷாம் ச விரோத⁴: ஸா'ஸ்'வதிக:
எப்போதுமே ஒன்றுக்கொன்று பகையுள்ள உயிரினங்களை உறுப்பினர்களாகக் கொண்ட துவந்த்வஸமாஸமும் ஒருமையில் அமையும்.
மார்ஜார மூஷிகம்– 'எலியும் பூனையும்'
அஹிநகுலம் – 'பாம்பும் கீரியும்'
ஆனால் கெ³ளபாலி ஸா'லங்காயனா: கலஹாயந்தே.
கௌ பாலிஸாலங்காயனர்கள்.
சண்டையிடுகிறார்கள். சிலசமயங்களில்தான் சண்டை எப்போதுமல்ல. அதனால் இத்தொகை ஒருமையிலமையவில்லை. 'ச' என்ற சொல், மிருகங்களையும் பக்ஷிகளையும் சேர்த்து என்றுணர்த்தும்.
அஸ்'வமஹிஷம் – 'குதிரையும் எருமையும்'
காகோலூகம் – 'காகமும் ஆந்தையும்'

2.4.10 ஸூத்³ராணாம் அநிர்வஸிதானாம்
மேல்தட்டு ஜாதி மக்களுடன் கலந்து கொள்வதினின்று விலக்கப்படாத சூத்திரர்களின் பெயர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட துவந்துவஸமாஸம் ஒருமையிலமையும்.
தக்ஷாயஸ்காரம்–''தக்ஷனும் கொல்லனும்''
ராஜகதந்துவாயம்–''வண்ணானும் சேணியனும்''
ஆனால், சண்டாலம்ருதபா:
சில சூத்திரர்கள் உணவுண்ட பாத்திரங்களை மந்திரங்களாலும் சுத்தம் பண்ண முடியாது என்று சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. இதிலடங்காத ஏனைய சூத்திரர்களை 'அநிர்வஸித' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வகையைச் சேர்ந்த சூத்திரர்கள் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களின் தாலத்திலிருந்து உணவு உண்ண அனுமதிக்கப்படுகிறார்கள்.

2.4.11 க³வாஸ்'வப்ரப்⁴ருதீ³னி ச
க³வாஸ்'வம் முதலிபவைகளும் ஒருமையிலமையும் துவந்துவம் ஆகும்.
க³வாஸ்வம் – ''பசுவும் குதிரையும்''
ஸ்த்ரீகுமாரம்

வா: க³வாஸ்வாதிஷுயதே³ச்சாரிதம் த்³வந்த³
வ்ருத்தம் க³வாஸ்வம் முதலியவைகள், கணபாடத்தில் எந்த வரிசயிலமைகிறதோ அதே வரிசையில் அவைகளைச் சேர்த்துத் துவந்துவம் ஆக்கும் போதுதான் இந்த விதி. அவைகளை மாற்றியமைக்கும் போது இந் த விதிபயன்படாது.
கே³அஸ்வம், அல்லது கே³அஸ்'வௌ

2.4.12 விப^{4}ாஷா வ்ருக்ஷம் ருக^{3}த்ருணதான்ய
வ்யஞ்ஜன பஸுஸகுனி அஸ்'வ வட^{3}வ
பூர்வ அபர அத^{4}ர உத்தராணாம்
ஒரு துவந்துவஸமாஸத்தின் உறுப்பினர்கள், கீழ்க்கண்டவைகளாக அமையும்போது அத்தொகை விருப்பாக ஒருமையாகும்.

1. மரங்களின் பெயர்கள்
ப்லக்ஷந்யக்^{3}ரோத^{4}ம் (அல்லது) ப்லக்ஷந்யக்ரோத^{4}ா:
(நபும்ஸகம் ஒருமை) (பன்மை)

2. விலங்குகளின் பெயர்கள்
ருருப்ருஷதம் (அ) ருருப்ரஷதா:

3. புற்களின் பெயர்கள்
குஸ'காஸம் (அ) குஸ'காஸா:

4. தான்யங்களின் பெயர்கள்
வ்ரீஹியவம் (அ) வ்ரீஹியவா:
'பார்லியும் அரிசியும்'

5. சுவையூட்டும் பொருட்களின் பெயர்கள்
த^{3}தி^{4}க்^{4}ருதம் (அ) த^{3}தி^{4} க்^{4}ருதே:
'தயிரும் நெய்யும்'

6. வீட்டு விலங்குகள்
கே^{3}ாமஹிஷம் (அ) கே^{4}ாமஹிஷா:
'பசுவும் எருமையும்'

7. பறவைகள்
தித்திரிகபிஞ்ஜலம் (அ) தித்திரிகபிஞ்ஜலா:

8. அஸ்'வ வட^{3}வம் (அ) அஸ்'வவட^{3}வா:
"ஆண் குதிரையும் பெண் குதிரையும்"

9. பூர்வா பரம் (அ) பூர்வாபரே
'முதலும் இறுதியும்'

10. அத^{4}ரோத்தரம் (அ) அத^{4}ரோத்தரே
'கீழும் மேலும்' 8-10 விதிக்குப் புறம்பாக அமைந்த தொகைகள்.

வா: ப³ஹு ப்ரக்ருதி: ப³லஸேனாவனஸ்பதி
ம்ருக³ ஸ'குனி க்ஷுத்³ரஜந்துத⁴ான்ய
த்ருணானாம்
ப³ல ஸேனா வனஸ்பதி முதலியவைகள் பன்மையாக அமையும்போதுதான், அவைகள் ஒரே பொருளைக் குறிப்பதாகக் கருதப்படும். அவைகள் இருமையாக நிற்கும்போது ஒரே பொருளைக் குறிப்பதாக ஆகாது. அதனால் அவைகள் இருமையாகவே அமையும்.
பத³ராமலகே, ரதி²காஸ்'வாரோஹௌ,
ப்லக்ஷந்யக்³ரோதௌ⁴, ருருப்லக்ஷௌ,
ஹம்ஸ சக்ரவாகௌ, யூகாலிக்ஷே,
வ்ரீஹியவே, குஸ'காஸௌ.

2.4.13 விப்ரதிஷித்த⁴ம் ச அனதி⁴கரணவாசி
ஒன்றுக்கொன்று மாறுபட்டபொருளைக் கொண்ட சொற்கள். ஒரு பருப்பொருளைக் குறிப்பதாக அமையாமல் (அனதி⁴கரணவாசி) நிற்கும்போது, இச்சொற்களாலாக்கப்பட்ட துவந்துவஸமாஸம் விருப்பாக ஒருமையாகும்.
1ஸிதோஷ்ணம்/ஸி'தோஷ்ணே
'குளிரும் வெப்பமும்'
ஜீவித மரணம்/ஜீவிதமரணே
'வாழ்வும் சாவும்'
ஆனால் காமக்ரோதௌ⁴
'காமமும் கோபமும்' இவையிரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வையல்ல.
ஸிதோஷ்ணே உத³கே
குளிர்ந்ததும் சூடுமான தண்ணீர்
இங்கு 'தண்ணீர்' ஒரு பொருள்.
இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளும் இருமையாகின்றன.

2.4.14 ந த³தி⁴ பயாதீனி
த³தி⁴பய, முதலிய துவந்துவஸமாஸங்கள் ஒருமையிலமையா
த³தி⁴பயஸி (இருமை) 'தயிரும் பாலும்'
உலூக²ல முஸலே (இருமை) உரலும் உலக்கையும்
ப்³ரஹ்மப்ரஜாபதீ (இருமை) 'பிரமனும் பிராஜாபதியும்'
ஆத்³யாவஸானே (இருமை) 'முதலும் முடிவும்'

2.4.15 அதி⁴கரண ஏதாவதத்வே ச
பருப்பொருட்களை உணர்த்தும் சொற்களால் ஆக்கப்பட்ட துவந் துவஸமாஸம், அவைகளின் எண்ணிக்கையைக் குறிக்குமாறு அமைந்த ால், அத்தொகை ஒருமையாகாது.
த³ஸத³ந்தோஷ்டா: ''பத்து பற்களும் உதடுகளும்'

2.4.16 விபாஷா ஸமீபே

பருப்பொருட்களை உணர்த்தும் சொற்களான துவந்துவஸமாஸத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஏறத்தாழ குறிப்பிடும்போது அத்தொகை விருப்பாக ஒருமையாகும்.

உபத^{3}ஸம் ^{3}தந்தோஷ்டம்/உபத^{3}ஸா:

த^{3}ந்தோஷ்டா: ''ஏறத்தாழப் பத்து பற்களும் உதடுகளும்''

2.4.17 ஸநபும்ஸகம்

மேலே விளக்கப்பட்ட துவந்துவஸமாமமும் துவிகு ஸமாஸமும், நபும்ஸகம். அதாவது அத்தொகைகளின் பால் அஃறிணை. பாணி பாதம்; பஞ்சக^{3}வம் இது 2.4.26க்குப் புறனடை.

வா: அகாராந்தோத்தரபதே^{3}ா த்^{3}விகு^{3}:

ஸ்த்ரியாம் ப^4ாஷ்யதே

'அ'வை ஈறாக் கொண்ட உறுப்பினரை இறுதியாகக் கொண்ட த்விகுஸமாஸம் பெண்பாலில் அமையும்.

த^{3}ஸ$'$ரதீ (த^{3}ஸா$'$னாம் ரத^{2}னாம் ஸமாஹார

த^{3}ஸ$'$ரத^2 + ஙீப் (4.1.21) - த^{3}ஸரதீ ''பத்துத் தேர்கள்''

வா: ஆப^{3}ந்த: ஸ்த்ரியாமிஷ்ட:

'ஆப்'ஐ ஈறாக் கொண்ட பெண்பால் பெயர்ச் சொல் இறுதி உறுப்பினராகக் கொண்ட த்^{3}விகு^{3} ஸமாஸம். விருப்பாக பெண்பாலில் அமையும்.

பஞ்சக^{2}ட்வம்/பஞ்சக^{2}ட்வீ

வா: அனோ ந லோபஸ்^{1} ச வாத்^{3}விகு: ஸ்த்ரியாம்

'அன்'ஐ ஈறாகக் கொண்ட சொல் இறுதி உறுப்பினராக நிற்கும் 'த்விகு' ஸமாஸம் விருப்பாக பெண்பாலாகும். அதன் ஈறான 'ன்' கெடும்.

பஞ்சதக்ஷம்/பஞ்சதக்ஷீ (பஞ்ச + தக்ஷன்)

வா: பாத்ராதி^{3}ப்^{4}ய: ப்ரதிஷேதே^{4}ா வக்தவ்ய:

'பாத்திரம்' முதலிய சொற்கள் இத்தொகையின் இறுதி உறுப்பினராக நிற்கும்போது இத்தொகை பெண்பாலாகாது.

பஞ்சபாத்ரம், சதுர்யுகம்

2.4.18 அவ்யயீ ப^4ாவஸ் ச

அவ்யயீபாவஸமாஸமும் அஃறிணையாகும் (நபும்ஸகம்)

அதி^{4}ஸ்த்ரி, 'பெண்ணைப் பற்றி'

அவ்யயீ பாவஸமாஸத்தின் முதல் உறுப்பினர் முக்கியமானது முக்கியமான உறுப்பினரின்பால் தொகையின் பாலாக பொதுவாக அமையும். ஆனால் அவ்யயீபாவஸமாஸத்தின் முக்கியமான உறுப்பினர் அதன் முதல் உறுப்பினர்.

அது ஒரு அவ்யயமானதால் இத்தொகைக்கு பால் எதுவும் கிடையாது என்று ஆகும். அல்லது, மற்ற தொகைகள் போல் அதன் இறுதி உறுப்பினரின் பாலைக் கொண்டதாக அமைய வேண்டும். இதனால், இத்தொகையின் பாலைப் பொறுத்தவரையில் ஒரு குழப்பம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கவே இச்சூத்திரம். இச்சூத்திரத்தின் மூலம், அவ்யயீ பாவஸமாஸம் நபும்ஸகம் என்று தெரிகிறது.

வா: புண்யஸுதி^{3}னாப்^{4}யாம் அஹ்ன: க்லிப^{3}தேஷ்யதே
புண்ய, ஸுதின ஆகிய சொற்களுக்குப் பின் 'அஹன்' நிற்கும்போது நபும்ஸகமாகும். புண்யாஹம்
அஹன். 5.4.91; 2.4.29இன்படி ஆண்பாலாக வேண்டும். இச்சூத்திரம் இதற்கு நபும்ஸகம் விதிக்கிறது.

வா: பத^{2}: ஸம்க்^{2}யயாதே^{3}: க்லிப^{3}தேஷ்யதே
எண் அல்லது அவ்யய ங்களை முதலாக் கொண்ட பத^{2} என்ற சொல்லோடு ஆக்கப்பட்ட தொகையும் நபும்ஸகமாகும் த்ரிபத^{2}ம்

வா: க்ரியாவிஸே'ஷணானாம் சக்லிப^{3}தேஷ்யதே
வினையடைகளும் நபும்ஸகமாகும். ம்ருத^{3}பசதி.

2.4.19 தத்புருஷோ அனஞ் கர்மத^{4}ாரய:
எதிர்மறை தத்புருஷஸமாஸத்தைத் தவிர்த்து, மற்ற தத்புருஷஸமாஸமும், கர்மதாரயஸமாஸமும் (இதற்குப் பிறகு வரும் சூத்திரங்களில் விளக்கப்படுபவை) நபும்ஸகமாகும்.
இது ஒரு அதிகார சூத்திரம். இதைத் தொடர்ந்து வரும் விதிகள் எப்போது தத்புருஷஸமாஸம் நபும்ஸகமாகும் என்று விளக்குகின்றன.
ப்^{3}ராஹ்மணஸேனம்/ப்^{3}ராஹ்மணஸேனா
(2.4.25, ஸேனா என்ற சொல்லோடு அமையும் தொகையின் பால் விருப்பாக அமையும் என்று கூறுவதால்)
ஆனால் த்ருட^{3}ஸேன: ராஜா. (பஹுவ்ரீஹி தொகை அதனால் ஆண்பால்)
அஸேனா (பெண்பால். எதிர்மறை தத்புருஷம்)
பரமஸேனா (கர்மத^{4}ாரயம்)

2.4.20 ஸம்க்^{3}ஞாயாம் கந்த^{2}: உஸினரேஷு
கந்த^{2}ா (பட்டினம்) என்ற சொல்லை இறுதியில் கொண்ட தத்புருஷ ஸமாஸம் ஒரு பெயராக அமைந்து, அந்தப் பட்டினம் உஸினரதேஸ த்தில் உள்ள இடப்பெயராக அமைந்தால், அத்தொகை நபும்ஸகம் ஆகும்.
ஸௌஸமிகந்த^{2}ம் "ஸௌஸமியிலுள்ள ஒரு பட்டினம்"
ஆனால் வீரணகந்த^{2}ா (இது பெயரல்ல)
தா^{3}க்ஷீகந்தா^{2} இது உஸினரத்தில் இல்லை.

2.4.21 உபக்3ஞா உபக்ரமம் தத்ஆத்3யா அஸிக்2ய ஆஸாயாம்

உபக்3ஞா (புதிது புனைதல்) உபக்ரம (தொடக்கம்) என்ற சொற்களை இறுதியாகக் கொண்ட தத்புருஷஸமாஸம். அதன் தொடக்கத்தை அறிவிக்கும் விருப்பத்தைக் குறிப்பிடும் வகையில் அமைந்தால் அத்தொகை நபும்ஸகம் பாணினி உபக்3ஞமாகாலபகம் வ்யாக்ரணம் பாணினியால் புதிதாகப் புனைந்த இலக்கணத்தில் தொடங்கியது. கலாப இலக்கணம் முதலியவை.

நந்தே3பக்ரமாணி மானானி. அளவு முறை நந்தர்களால் புதிதாகக் கண்டுபிடிக்கப்படடவை.

ஆனால் வால்மீகிஸ்'லோகா:

வால்மீனியின் சுலோகங்கள்

2.4.22 ச2யா ப1ஹுல்யே

ச2யா (நிழல்) என்ற சொல்லை கடை உறுப்பினராகக் கொண்ட தத்புருஷம், 'நிறைய, அதிகம்' என்ற பொருளை அதன் முதல் உறுப்பினர் சுட்டுமாறு அமைந்தால் அத்தொகை நபும்ஸகமாகும்.

ஸ'லப4ச்ச2யம்–'பல வீட்டில் பூச்சிகளின் நிழல்'

இக்ஷுச் சா2யம் கரும்பின் நிழல் அதாவது கரும்புத்தோட்டம் 2.4.25 படி ச2யாவுடன் அமையும் தொகையின் பால் விருப்பாக அமையும். இங்கு நபும்ஸகமாக கண்டிப்பாக அமையும் என்று குறிப்பிடப்படுகிறது.

ஆனால் குட்3யச்ச2யா 'சுவரின் நிழல்'

2.4.23 ஸப4ா ராஜா அமனுஷ்யபூர்வா.

ராஜா என்ற சொல்லின் பொருளைக் குறிக்கும் சொற்கள் மனிதனைக் குறிக்கும் சொற்களைத் தவிர்த்த ஏனைய சொற்கள் முதல் உறுப்பினராகவும், ஸபா என்ற சொல் இறுதி உறுப்பினராகவும் அமைந்த தத்புருஷஸமாஸம், நபும்ஸகமாகும்.

இனஸப4ம் 'அரசரின் சபை'

ஈஸ்'வரஸ்ப4ம் 'கடவுளின் சபை'

ரக்ஷ:ஸப4ம்

பிஸா1சஸப4ம்

ஆனால் ராஜஸபா

2.4.24 அஸா1லா ச

ஸப4ா என்ற சொல், வீடு, அரண்மனை என்ற பொருளைச் சுட்டாமல் இறுதி உறுப்பினராக நிற்கும் தத்புருஷஸமாஸம் நபும்ஸகமாகும்.

ஸ்த்ரீஸப4ம்–பெண்கள் குழு/கூட்டம்

ஆனால்

,அநாத2ஸப4ா–'அனாதை இல்லம்'

2.4.25 விப4ாஷா ஸேனா ஸுரா
ச2ாயா ஸ1ாலா நிஸ1ாகாம்

ஸேனா (படை), ஸுரா (மது), ச2ாயா (நிழல்), ஸ1ாலா (இல்லம்) நிஸ1ா (இரவு) ஆகிய சொற்கள் இரண்டாவது (இறுதி) உறுப்பினராக நிற்கும் தத்புருஷஸமாஸம் விருப்பாக நபும்ஸகமாகும்.

ப்3ராஹ்மண ஸேனம்/ப்3ராஹ்மணஸேனா 'பிராம்மணர்கள் படை'
யவஸுரம்/யவஸுரா 'பார்லிசாறு'
குட்3மச்'ச2ாயம்/குட்3மச்'ச2ாயா 'சுவரின் நிழல்'
கே3ாஸ1ாலம்/கே3ாஸ1ாலா 'தொழுவம்'
ஸ்'வநிஸ1ம்/ஸ்'வநிஸ1ா 'நாயின் இரவு அதாவது எந்த இரவில் நாய் பைத்தியம் பிடித்துக் குறைக்கிறதோ அந்த இரவு ஸ்'வநிஸம்/ஸ்'வநிஸ'ா என்று கூறப்படுகிறது. இது கிருஷ்பைக்ஷச்சதுர்த்தசியாகும்.

2.4.26 பரவத் லிங்கம் த்3வந்த்வதத்புருஷயோ:

துவந்துவம், தத்புருஷத் தொகைகள் அவைகளின் இறுதி உறுப்பினரின் பாலைக் கொண்டதாக அமையும்.

ஸமாஹார துவந்தும் நபும்ஸகலிங்கமாக அமையும் என்று ஏற்கெனவே கூறப்பட்டதால், இங்கு துவந்துவம், இதரேதர துவந்துவத்தைக் குறிக்கும்.

குக்குட' மயூர்யெள இமே அல்லது
மயூரீகுக்குடெ'ள இமௌ

முதல் எடுத்துக்காட்டில், மயூரீ கடைஉறுப்பினராக இருப்பதால் மயூரியின் பாலான பெண்பாலில் இத்துவந்துவம் அமைகிறது.

இரண்டாவதில் குக்குட1 இரண்டாவது உறுப்பினராக நிற்பதால், அதன் பாலான ஆண்பாலில் இத்தொகை அமைகிறது.

அர்த்3த4 பிப்பலீ என்ற தத்புருஷஸமாஸத்தில் பிப்பலீ பெணபாலாவதால், இத்தொகையும் பெண்பாலிலமைகிறது.

வா: த்3விகுப்ராப்த ஆபன்ன அலம்பூர்வ க3திஸ்
மாஸேஷு ப்ரதிஷேத4ா வக்தவ்ய:

த்3விகு3, ப்ராப்த, ஆபன்ன, அலம் என்ற சொற்களை முதலாகக் கொண்ட தொகை, கதிஸமாஸம் ஆகியவைகள் இதற்குப் புறனடை.

பஞ்சகு3:–5 பசுக்கள்
ப்ராப்தஜீவிக:/ஆபன்னஜீவிக:
அலம் ஜீவிக: (அலம் ஜீவிகாயை)
நிஷ்கௌஸாம்பி (கதிஸமாஸம்)

இச்சூத்திரத்தின் பொருள் த்விகுஸமாஸம். ப்ராப்த, ஆபன்ன ஆகியவைகளோடு ஆக்கப்பட்ட தொகை, கதிஸமாஸம் ஆகியவைகள், தத்புருஷமாஸத்துள்ளடங்கியவையானாலும் இவைகள், இறுதி உறுப்பினரின் பாலில் அமையாது என்று சுட்டிக்காட்டுகிறது இச்சூத்திரம்.

2.4.27 பூர்வவத் அஸ்'வவட³வெள
'அஸ்'வவட³வெள' என்ற தொகையின் பால் அதன் முதல் உறுப்பினரின் பாலை ஒத்தது.
அஸ்'வஸ் ச வட³வா ச = அஸ்'வவட³வெள
'ஆண்குதிரையும் பெண்குதிரையும்'
இந்த விதி, இதற்கு முந்திய விதிக்குப் புறனடை.

2.4.28 ஹேமந்தஸி' ஸி'ரெள அஹோராத்ரே ச ச்'ச²ந்த³ஸி
வேதமொழியில் ஹேமந்தஸி'ஸிரெள.
அஹோராத்ரே ஆகிய தொகைகள், அவைகளின் முதல் உறுப்பினரி ன் பாலை ஒத்தது. இது சூ. 26க்குப் புறனடை.
ஆனால் மற்ற கிளை மொழிகளில்
து³:கே² ஹேமந்த ஸி'ஸி'ரே
அஹோராத்ரெள இமெள புண்யெள

2.4.29 ராத்ர, அஹ்ன அஹா: பும்ஸி
ராத்ர (இரவு) அஹ்ன, அஹா (பகல்) ஆகிய சொற்கள் இறுதியாக அமையும் துவந்துவ, தத்புருஷத் தொகைகளின் பால் ஆண்பாலாகும்.
த்³விராத்ர: 'இரண்டு இரவுகள்'
பூர்வாஹ்ண: 'முற்பகல்'
த்ர்யஹ: 'மூன்று பகல்'

வா: அனுவாகாத³ய: பும்ஸிதிவக்தவ்யம்
அனுவாக முதலியவைகள் ஆண்பால் என்று கூற வேண்டும்.
அனுவாக: ஸூக்த:

2.4.30 அபத²ம் நபும்ஸகம்
'அபத²ம்' என்ற தத்புருஷஸமாஸம் நபும்ஸகம் அபத²னி க³ாஹதே மூட⁴: (பார்க்க 5.4.72)
'மூடன் தவறான பாதையில் திரிகிறான்'

2.4.31 அர்த⁴ர்சா: பும்ஸி ச
அர்த⁴ர்ச முதலிய தொகைகள் ஆண்பாலுமாகும். அதாவது இவைகள் நபும்ஸகமும் ஆண்பாலுமாகும்.
அர்த⁴ர்ச:/அர்த⁴ர்சம் 'பாதிச் செய்யுள்'
கோ³மய:/கே³ாமயம் 'சாணி'
அர்த⁴ர்ச முதலியவைகளுக்கு 2 வகையான பால்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இவைகளின் பால் பொருளடைப்படியில் வேறுபடும். பத்³மஸங்க² என்ற சொல் நிதி என்ற பொருளில் ஆண்பாலாகும். ஆனால் தண்ணீரிலிருந்து பிறந்தவைசொல்லை (ஜலஜ) என்ற பொருளில் ஆண்பால்,

நபும்ஸகம்
என்ற இரண்டு பால்களிலும் அமையும்.
பூ4த என்ற சொல், 'பிசாசு' என்ற பொருளில் இருவகைப் பாலிலும் வரலாம். இச்சொல் ஒருவினைப் பெயராக வரும் போது, இது எந்த பெயர்ச் சொல்லுக்கு அடையாக வருகிறதோ அதன்பாலிலமையும்.
பூத: க4ட:/பூ4தா ஸா1டீ/பூ4தம் வஸ்த்ரம்
(ஆண்பால்) (பெண்பால்) நபுஸகம்

2.4.32 இத3மோன்வாதே3ஸே1 அஸ அனு த3த்தஸ்1 த்ருதீயாதெ3ள
இதம் 'இது' என்ற மாற்றுப் பெயரை இரண்டாவது தடவை அதே வாக்கியத்தில் அடுத்து வருமிடங்களில் பயன்படுத்தும்போது
அனுதாத்த 'அஸ்', 'இதம்' என்ற சொல்லுக்குப் பதிலாக, 3ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லிலிருந்து தொடங்கி எல்லா வேற்றுமைச் சொற்களுக்கும் முன் வரும் அஸ்மை ச2த்ராய கம்ப3லம் தே3ஹி/அ2தோ அஸ்மை ஸா1டகமபி கேஹி
இந்த மாணவனுக்குக் கம்பளி கொடு. இவனுக்குத் துணியும் கொடு.
அஸ்ய ச2த்ரஸ்ய ஸோ1ப4னம் ஸீ1லம்/அதோ2 அஸ்ய ப்ரபூ4தம் ஸ்வம்
இந்த மாணவனின் நடத்தை சிறப்பானது
இவனுடைய சொத்துமிகப் பெரியது.

2.4.33 ஏதத3ஸ் த்ரதலோ த்ரதஸெள சானுதாத்தெள
ஏதத் (இது) என்ற மாற்றுப் பெயர் மறுபடியும் இரண்டாவது முறையாக ஒரே வாக்கியத்தில் பயன்படுத்தப்படும்போது இச்சொல்லுக்குப் பதிலாக அனுதாத்த சுரத்துடன் கூடிய 'அஸ்', 'தர', 'தஸ்' என்ற ஒட்டுக்களுக்கு முன்னால் வரும் த்ர, தஸ் ஆகிய ஒட்டுக்களும் அனுதாத்த சுரம் பெறும்.
ஏதஸ்மாத் ச2த்ராத் ச2ந்தே3ா அதீ4ஷ்வ
அதே2ா அதோ வ்யாகரண மதீ4ஷ்வ

"இந்த மாணவனிடம் யாப்பிலணக்கணம் கற்றுக் கொள் அவனிடம் இலக்கணமும் கற்றுக்கொள்"
ஏதஸ்மின் க்3ராமே ஸுக2ம் வஸாம:
அதே2ா அத்ர யுக்தா அதீ4 மஹே
"இந்தக் கிராமத்தில் சுகமாக வாழ்வோம் ஆகையால் இங்கு கவ னத்துடன் நாம் படிப்போமாக"

2.4.34 த்3விதீயா டெ1ளஸ்ஸ்வேன:
இரண்டாம் வேற்றுமையுருபுகள், டா1 (3ஆம் வேற்றுமை ஒருமையுருபு) ஓஸ் (6ஆம், 7ஆம் வேற்றுமை இருமையுருபுகள்)
ஆகியவைகள் தொடர்ந்து வரும் போது 'இதம்', 'ஏதத்' ஆகிய மா ற்றுப் பெயர்களுக்குப் பதிலாக, அனுதாத்த சுரத்துடன் கூடிய 'ஏன' அம்மாற்றுப் பெயர்களுக்குப் பதிலாக (அவைகளை, இரண்டாவது முறையாக

அவ்வாக்கியங்களில் பயன்படுத்தும்போது) வரும்.

1) இமம் ச^{2}ாத்ரம் ச^{2}ந்தே^{3}ா அத்^{4}யாபய;
அதே^{2}ா ஏனம் வ்யாகரணமத்^{4}யாபய
"இந்த மாணவனுக்கு யாப்பிலக்கணம் கற்றுக்கொடு இவனுக்கு இலக்கணமும் கற்றுக் கொடு"

2) அனேன ச^{2}ாத்ரேண ராத்ரிரதீதா
அதே^{2}ா ஏனேன அஹரபி அதீ^{4}தம்
"இந்த மாணவன் இரவில் படித்தான் இவன் பகலிலும் படித்தான்"

3) அனயோஸ்^{1} ச^{2}ாத்ரயோ: ஸோ^{1}ப^{4}னம்
ஸீ^{1}லம், அதோ^{2} ஏனயோ: ப்ரபூ^{4}தம் ஸ்வம்
"இந்த இரண்டு மாணவர்களுடைய நடத்தை சிறந்தது. இவர்களுடைய சொத்து பெரியது"

வா: ஏனதி^{3}தி நபும்ஸக ஏகவசனே வக்தவ்யம்
'ஏனத்' என்ற நபும்ஸகலிங்க ஒருமை 'இதம்', 'ஏன', என்ற இரண்டுக்கும் அன்வாதேசம் ஆகும்.
இதம் குண்டம் ஆனய; ப்ரக்ஷாலய ஏனத்
இந்தப் பானையைக் கொண்டுவா. இதை அலம்பு

2.4.35 ஆர்த^{4} த^{4}ாதுகே
ஆர்த^{4} த^{4}ாதுக ஒட்டுக்களுக்கு முன்
இது ஒரு அதிகார சூத்திரம். ஆர்த^{4}த^{4}ாதுக ஒட்டுக்கள் பற்றிய விதி , இச்சூத்திரத்திலிருந்து 2.4.58 வரை கூறப்படுகிறது.

2.4.36 அதே^{3}ா ஜக்^{3}தி^{4}: ல்யப் தி இதி
'அத்^{3}' என்ற தாது முழுவதுக்கும் 'ல்யப்' என்ற ஆர்த^{4} தா^{4}துக ஒட்டுக்கள் அதைத் தொடர்ந்து வரும்போதும், 'த' என்ற எழுத்தை முதலாகக் கொண்ட 'கித்' என்ற ஒட்டுக்கள் அதைத் தொடர்ந்து வரும்போதும், 'ஜக்^{3}தி^{4}' பதிலியாக வரும்.
ப்ரஜக்^{3}த்^{4}ய = ப்ர + அத்^{3} +க்த்வா = ப்ர + அத்^{3} + ல்யப் = ப்ர + ஜ க்^{3}தி^{4} + ய = ப்ர + ஜக்^{3}த்^{4} + ய = ப்ரஜக்^{3}த்^{4}ய = நன்றாக உண்டு வி ட்டு
ஜக்^{3}த^{4}: = அத்^{3} + க்த = த = ஜக்^{3}தி^{4} + த = ஜக்^{3}த^{4} + த = ஜக்^{3}த்^{4} + த^{4} + (8.2.40) = ஜக்^{3}0 + த்^{4} + ஜக்^{3}த^{4}: (8.4.65) 'உண்டான்'
ஜக்^{3}த^{4}வான் (அத்^{3} + க்தவது) 'உண்டான்'

2.4.37 லுங் ஸனோ: க^{4}ஸ்ல்ரு
லுங் (Aorist), ஸன் (Desiderative) ஒட்டுக்கள் தொடர்ந்து வரும்போது

'க4ஸ்ல்ரு', 'அத்3'துக்கு ஆதேசமாக வரும்.
அக3ஸத்(லுங்) 'அவன் உண்டான்'
அத்3 + லுங் + திப் + க4ஸ்ல்ரு ⟶ க4ஸ் ⟶ அக4ஸ் + தி ⟶ அக4ஸத்

வா: க4ஸ்ல்ரு ப4ாவே அசி உபஸம்க்2யானம்
'அத்3'துக்குப் பதிலியாக 'க்4ஸ்ல்ரு' வந்து அதைத் தொடர்ந்து 'அச்' ஒட்டு வரும்போதும் இந்த விதி செயற்படும்.
ப்ர + அத் + அச் + ப்ரக4ஸ: (பெருந்) 'தீனி தின்கிறவன்'

2.4.38 க4ஞ் அபோஸ்' ச
ஆர்த4த4ாதுக ஒட்டுக்களான 'க4ஞ்' (3.3.18), 'அப்' (3.3.59) ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'அத்3'துக்குப் பதிலியாகவும் 'க4ஸ்ல்ரு' வரும்.
க4ாஸ: 'புல்' (அத்3 + க4ஞ் + க4ாஸ் + அ(3.3.19)
ப்ரக4ஸ: (ப்ர + அத் + அப் + 'புல்') + ப்ர + க4ஸ் + அ)
'பெருந்தீனி தின்கிறவன்'

2.4.39 பஹுலம் ச2ந்த3ஸி
'அத்3' துக்கு ஆதேசமாக, 'க4ஸ்ல்ரு' பல வகையில் வேத மொழியில் வரும்.
க4ஸ்தாம் நூனம் (அத்3 + லுங்தஸ் தாம் + க4ஸ்ல்ரு – க4ஸ் + ச்லி + தாம் + க4ஸ் + θ
தாம் (2.4.80): க4ஸ்தாம் + நுனம் (6.4.75)
க4ஸ்தாந்னூனம் (அனுஸ்வாரம், பரஸ்வர்ணம்)
அல்லது
ஆத்தாமத்3ய மத்4ய தோ மேத உத்ப்4ருதம்
அத்3 + லுங் தஸ்தாம், ஆட் ஆகமம் + ஆத்தாம். இங்கு 'க4ஸ்ல்ரு' ஆதேசமில்லை.

2.4.40 லிடி' அன்யதரஸ்யாம்
லிட் (Perfect) ஆர்த4த4ாதுக ஒட்டு 'அத்3'தைத் தொடர்ந்து வரும்போது, 'அத்'துக்குப் பதிலியாக 'க4ஸ்ல்ரு' விருப்பாக வரும்.
ஜக4ாஸ, ஜக்ஷது: ஜக்ஷீ: அல்லது
ஆத3 ஆத3து: ஆது3
அத் + லிட். திப், ணல் + அ (3.4.82)
க4ஸ் – இரட்டித்தல் + க4க4ஸ் + அ ⟶ ஜக4ஸ் – அ ⟶ ஜக4ாஸ 'உண்டான்'
அல்லது
அத3 + லிட் + திப் + ணல் + அ + அஅத3 + அ + ஆத3

2.4.41 வேஞோ வயி:
வேஞ் (நெய்தல்) என்ற தாதுவுக்குப்பின் ஆர்த4தா4 துக 'லிட்' ஒட்டுக்கள்

வரும்போது அதற்குப் பதிலியாக 'வயி' விருப்பாக வரும்.
உவாய ஊயது: ஊயு: அல்லது
உவாய ஊவது: ஊவு:
வேஞ் + லிட் = திப் = ணல் = அ = வய் + அ = வவய் + அ (6.1.17) = உவய் + அ
உவாய
அல்லது
வே + ணல் = அ, த்வித்வ வேவே + அ = உவே + அ = உவை + அ (7.2.115) =
உவாய 'நெய்தான்'

2.4.42 ஹனோ வதே^{4}ா லிஙி

ஆர்த^{4} தா^{4}துக ஒட்டுக்களான லிங் (Benedictive) ஹன் (கொல்) தாதுவைத் தொடர்ந்து வரும்போது, 'வத்' அதற்கு ஆதேஸமாக வரும்.
ஹன் → வத்^{4}/–லிங்
வத்^{4}யாத் வத்^{4}யாஸாம் வத்^{4}யாஸு:
ஹன் + லிங் ஆஸீ: = திப் (3.4.116) = வத்^{4} + தி, யாஸுட் = யாஸ் = வத்^{4}யாத்

2.4.43 லுஙி ச

லுங் (Aorist) ஒட்டுக்கள் தொடர்ந்து வரும்போது 'ஹன்' உக்குப் பதிலியாக 'வத்^{4}' வரும்.
ஹன் → வத்/–லுங்
அவதீ^{4}த் அவதி^{4}ஷ்டாம் அவதி^{4}ஷு 'கொன்றான்'

2.4.44 ஆத்மனேபதேஷு அன்யதரஸ்யாம்

'ஹன்' என்ற தாதுவுக்குப்பின் நிற்கும் ஆர்த்^{4}ம^{4}தாதுக 'லுங்'ஐத் தொடர்ந்து ஆத்மனேபத ஒட்டுக்கள் வரும் காலையில், 'வத்' விரு ப்பாக அதற்குப் பதிலியாக வரும்.
ஆவதி^{4}ஷ்ட ஆவதி^{4}ஷதாம் ஆவதி^{4}ஷத
அல்லது
ஆஹத ஆஹஸாதாம் ஆஹஸத
ஆங் + ஹன் (1.3.28) = ஆங் + வத்^{4} + லுங் = த = ஆவத்^{4} + த, அட், ஸிச், இட் = ஆ + அ
வத^{4} இ ஸ் த → ஆவதிஷ்ட

2.4.45 இணோ க^{3}ா லுஙி

இண் (போ) என்ற தாதுவுக்குப் பின் ஆர்த^{4}த^{4}ாதுக லுங் வரும்போ து 'க^{3}ா' அதற்கு ஆதேஸமாகும்.
இண் → க^{3}ா/–லுங்
அக^{3}ாத், அக^{3}ா தாம் அகு^{3}:
இண் + லுங் = திப் = க^{3}ா + லுங் = தி,

அட் + க³ா + ஸிச் + தி = அ + க³ா + ஸ் + த் = அக³ா + 0 + த் (2.4.77) = அக³ாத் (ஒருமை)

அக³ா + ஜி² = அக³ா + ஜுஸ் = உஸ் (3.4.110)

அக³ா + உஸ் = அகு³: (பன்மை)

வா: இண்வதி³க இதி வக்தவ்யம்

'இண்' ஐப் போன்று 'இக்'ஐயும் விளக்க வேண்டும். அதாவது, 'இண்'உக்கு 'க³ா' அதேஸமாக வருவது போல், அதே சூழலில் 'இக்' உக்கும் 'க³ா' ஆதேஸமாக வரும். 'அதி⁴' என்ற உபசர்க்கத்துடன் 'இக்' தாது 'நினைவு கூர்தல்' என்ற பொருளில் வரும்.

அத்⁴யக³ாத் அதி⁴ இ + லுங் = அதி⁴க³ா + லுங் = அதி⁴ + அ + க³ா + லுங் = திப் = ஸிச் = அதி⁴ + அ + க³ா + த் (3.4.100) = அத்⁴யக³ாத்

'நினைவு கூர்ந்தான்'

2.4.46 ணௌ க³மிரபோ³த⁴னே

'இண்' தாதுவுக்குப் பின் ஆர்த⁴த⁴ாதுக 'ணிச்' வரும்போது, 'க³ம்' அதற்கு ஆதேஸமாகும் – 'புரிந்து கொள், அறிந்து கொள்' என்ற பொருளை அவ்வினை சுட்டாமலிருந்தால்:

இ → க³ம்/–ணிச்

இ + ணிச் = க³மி

க³மி – லட் – திப் – ஸப்

கம் – ஏ → கம் – அய் + திப் = 'கமயதி' அனுப்பி வைக்கிறான்', 'அனுப்பி வை'

ஆனால் ப்ரத்யாயயதி

ப்ரதி + இ + டிணடச = ப்ரதி + ஆய் + இ = ப்ரத்யாயி = லட் திப்ஸப் = ப்ரத்யாயதி

அறிந்து கொள்ள வைக்கிறான்.

அதனால் 'இ'க்கு க³ம்' ஆதேசமில்லை.

அதிக³மயதி (வா. இண் வதிக. . . .படி)

2.4.47 ஸனி ச

ஆர்த⁴த⁴ா துகஸன் (Desiderative) ஒட்டுக்களுக்கு முன் 'இண்' தாதுவுக்கு ஆதேசமாக 'க3மி' 'அறிந்துகொள்' என்ற பொருளை சுட்டாமலமையும்போது வரும்.

ஜிக³மிஷதி ''போக விரும்புகிறான்''

ஜிக³மிஷத:, ஜிக³மிஷந்தி

இண் – ஸன் – க³மி = க3ம + ஸ (க³க³ம + ஸ)

(6.1.3) = ஜக³ம + ஸ (7.4.62) = ஜிக³ம + ஸ

(7.4.79) = ஜிகமிஷ (7.2.58) = ஜிக³மிஷதி.

ஆனால்

அர்த^{2}ான் ப்ரதீஷிஷதி 'பொருளை அறிந்து கொள்ள விரும்புகிறான்'
அதி^{4}ஜிக^{3}மிஷதி (வா. இண்வதிக....படி)

2.4.48 இங்ஸ்' ச

'இங்' (படி) என்ற தாதுவைத் தொடர்ந்து ஆர்த^{4}த^{4}ாதுக 'ஸன்' நிற்கும்போதும் 'க^{3}ம்' அதற்குப் பதிலியாகும்.

இங் ⟶ க^{3}ம்/–ஸன்

அதி^{4}ஜிக^{3}ாம்ஸதே 'படிக்க விரும்புகிறான்'

அதி^{4}ஜிக^{3}ாம் ஸேதே, அதி^{4}ஜிக^{3}ாம் ஸந்தே

அதி^{4} + இங் + ஸன் = அதி^{4} + க^{3}ம் + ஸ = அதி^{4}ஜிக^{3}ாம் + ஸ (6.4.16) = அதி^{4}ஜிக^{3}ாம் ஸதே

(8.3.24இன்படி 'ம்' அநுஸ்வாரமாகும்)

2.4.49 க^{3}ாங்லிடி'

'இங்' தாதுவைத் தொடர்ந்து ஆர்த^{4}த^{4}ாதுக 'லிட்' நிற்கும்போது, 'க^{3}ாங்' அதற்குப் பதிலியாகும்.

அதி^{4}ஜகே^{3}, அதி^{4}ஜக^{3}ாதே, அதி^{4}ஜகி^{3}ரே

அதி^{4} + இங் + லிட் = அதி^{4}க^{3}ாங் = க^{3}ா + லிட் = த = அதி^{4}க^{3}ா + ஏ (3.4.81) = அதி^{4} + ஜக^{3}ா + ஏ = அதி^{4}ஜகே^{3} (6.4.64)

2.4.50 விப^{4}ாஷா லுங் ல்ருஙோ:

ஆர்த^{4}தாதுகலுங் (Aorist), ல்ருங் (Conditional) ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'இங்'உக்கு 'க^{3}ாங்' விருப்பாக ஆதேசமாகும்.

அத்^{4}யகீஷ்ட அத்^{4}யகீ^{3}ஷாதாம், அத்^{4}யகீ^{3}ஷத

அல்லது

அத்^{4}யைஷ்ட அத்^{4}யைஷாதாம் அத்^{4}யைஷத

ல்ருங்

அத்^{4}ய கீஷ்யத அத்^{4}யகீ^{3}ஷ்யேதாம்

அத^{4}ய கீ^{3}ஷ்யந்த

அல்லது அத்^{4}யைஷ்யத அத்^{4}யைஷ்யேதாம் அத்^{4}ய கீ^{3}ஷ்யந்த

2.4.51 ணௌ ச ஸம்ஸ்' சஙோ:

இயக்கு வினையாக (Casval) 'இங்' பயன்படுத்தப்படும்போது அதைத் தொடர்ந்து ஆர்த^{4}த^{4}ாதுக ஒட்டு 'ஸன்', 'சங்' நின்றால், 'க^{3}ாங்' விருப்பாக அதற்குப் பதிலியாகும்.

ஸன் அதி^{4}ஜிகா^{3} பயிஷதி அல்லது

அத்^{4}யா பிபயிஷதி

சங் (Aorist)

அத்^{4}யஜிகிபத் அல்லது

அத்^{4}யாபிபத்

2.4.52 அஸ்தேர் பூ^{4}

ஆர்த^{4}த^4ாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'அஸ்' தாதுவுக்குப் பதிலி யாக 'பூ^{4}' வரும்.

ப^{4}விதா, ப^{4}விதும், ப^{4}விதவ்யம்

அஸ் + துமுன் = பூ^{4} + இட் + தும் = பூ^{4} + இதும் = பவிதும் (குணாதேஸம்)

அஸ் +த்ருச், பூ^{4} + த்ரு, இட் ⟶ ப்^{4} + ஒ த்ருஇட் ப^{4}வ், த்ருஇட் = ப^{4}வித்ரு

அஸ் + த்வயம் = பூ^{4} + தவ்யம், (இட் கு^{3}ண அவா தேஸம்)

ப^{4}விதவ்ய + மு, அம், பூர்வ ரூப – ப^{4}விதவ்யம்

லிட் (Perfect) உம் ஆர்த^{4}த^4ாதுகந்தான்

'அஸ்' இன் 'லிட்' உம் 'பூ^{4}' வின் 'லிட்' போன்று அமையும் அதாவது.

ஆஸ + ஆஸது: + ஆஸு

ப^{3}பூ^{4}வ + ப^{3}பூ^{4}வது: + ப^{3}பூ^{4}வு:

இதற்கு ஒரு முக்கியமான புறனடை உண்டு. அதாவது 'அஸ்' தாது ஒரு துணை வினையாகச் செயற்படும்போது இவ்வினையின் 'லிட்' இத்புறனடை 3.1.40இல் விளக்கப்பட்டிருக்கிறது.

ஈஹாமாஸ

2.4.53 ப்^{3}ருவோ வசி

ஆர்த^{4}த^4ாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ப்^{3}ரூ' தாதுவுக்கு 'வசி' ஆதேசமாகும்.

வக்தா, வக்தும், வக்தவ்யம்

ப்^{3}ரூ + த்ருச் = வக் + த்ரு (8.2.30) = வக்த்ரு

வக்தா (முதல் வேற்றுமை ஒருமை)

ப்^{3}ரூ + துமுன் = வச் + துமுன் = வக்தும்

ப்^{3}ரூ + தவ்ய = வச் + தவ்ய = வக்தவ்ய:

2.4.54 சக்ஷிங் க^{2}யாஞ்

ஆர்த^{4}த^4ாதுக ஒட்டுக்கு முன் நிற்கும் 'சக்ஷிங்' (கூறு, அறிவி) என்ற தாதுவுக்கு 'க்^{2}யாஞ்' பதிலியாகும்.

ஆக்^{3}யாதா, ஆக்^{3}யாதும், ஆக்^{3}யாதவ்யம்

ஆங் + சக்ஷிங் + த்ருச் = ஆக்^{2}யா + த்ரு = ஆக்^{3}யாதா 'அவன் சொல்வான்'

ஆங் + சக்ஷிங் + துமுன் = ஆக்^{3}யாதும் 'சொல்ல'

ஆங் + சக்ஷிங் + தவ்யம் = ஆக்^{2}யாதவ்யம் 'சொல்ல வேண்டும்'

'சஷிங்' எப்போதும் ஆத்மனேபதமாவதால், அதன் பதிலியாக வரு ம் 'க^{2}யாஞ்' உம் ஆத்மனேபதமாக வேண்டும் அப்படியானால் ஆதேசமாக வரும் 'க்யாஞ்' இன் அனுபந்தமான 'ஞ்' உக்கு வாய்ப்பு இல்லாமல் வரும். அதனால் ஆதேஸம் பரஸ்மைபதம் ஆத்மனேபதம் 2 வகையாகவும் பயன்படுத்த வேண்டும்.

ஆக்^{3}யாஸ்யதி/ஆக்^{3}யாஸ்யதே

வா: க்ஸ்'ாதி^{3}ரப் யயமாதே^{3}ஸ், இஷ்யதே

'க்ஸ' முதலியபவைகளிலும் இந்த ஆதேசம் விரும்பத்தக்கது. ஆக்ஸ்'ாதா, ஆக்ஸ்'ாதும், ஆக்ஸாதவ்யம்

வா: வர்ஜனே ப்ரதிஷேதே^{4}ா வக்தவ்யம்

'சக்ஷிங்' தாது 'தவிர்த்தல்', 'நீக்கல்' என்ற பொருளைச் சுட்டுமாறு அமையும்போது அதற்கு 'க்^{2}யாஞ்' ஆதேசம் வரத்தடைவிதிக்க வேண்டும்.

து^{3}ர்ஜனா: ஸம்சக்ஷ்யா:

கெட்ட மனிதர்கள் விலக்கப்பட வேண்டியவர்கள்

வா: அஸனயோஸ் ச ப்ரதிஷேதே^{4}ா வக்தவ்ய:

'அஸ்', 'அன்' ஆகிய ஒட்டுக்கள் தொடர்ந்து வரும்போது இவ்விதி செயற்படாது.

ந்ருசக்ஷா: ரக்ஷ:

மனிதர்களைக் கொல்பவர்கள், ராக்ஷதர்கள்

அன்: விசக்ஷண: பண்டித: 'படிப்பாளி'

வா: ப^{3}ஹுலம் ஸம்க்^{3}ஞா ச^{2}ந்தநஸோரிதி வக்தவ்யம்

பெயர்களைக் குறிக்கும்போதும் வேதமொழியில் இத்தகைய ஆதேசம் பல வகையில் அமையும்.

அன்னம் 'உணவு' அத்^{3} (ஜக்^{3}தி, ஆதேசமில்லை)

வத^{4}கம், 'கொலையாளி' ஹன் (வத்^{4}ஆதேசம்)

கா'த்ரம் 'உடல்' (இண் + ஷ்டரன்)

விசக்ஷண: (விசக்ஷ + அன இங்கு 'ஷ்' உக்குப் பதிலியாக 'க^{2}யா' வருவதற்குத் தடை, ஏனென்றால் அதைத் தொடர்ந்து 'அன' வருகிறது)

அஜிரம் (அஜ் கிரச் இர். இங்கு 2.4.56 இன்படி 'அஜ்' க்கு 'வீ' ஆதேசமாகவில்லை) 'முற்றம்'

2.4.55 வா லிடி

'லிட்'க்கு முன் நிற்கும் 'சக்ஷிங்' என்ற தாதுவுக்குப் பதிலியாக 'க^{2}யாஞ்' விருப்பாக வரும்.

ஆசக்^{2}யெள ஆசக்^{2}யது: ஆசக்^{2}யு: அல்லது

ஆசசக்ஷே ஆசசக்ஷாதே ஆசசக்ஷிரே

ஆங் + சக்ஷிங் + லிட் = திப் + ணல் + ஆக்^{2}யா + ணல் = ஆக்^{2}யா ணல் ஆச^{2}க்^{2}யா + ணல் = ஆசக்^{2}யா ணல் ஆசக்யா ஔ (7.1.34) ஆசக்^{2}யெள அல்லது

ஆசக்ஷ் + லிட் + த + ஏஸ்' = ஆசசக்ஷ் + ஏ = ஆசசக்ஷே

2.4.56 அஜேர் வ்யக^{4}ஞ் அபோ

கஞ் (3.3.18) அப் (3.3.58) ஆகிய ஒட்டுக்களைத் தவிர மற்ற ஆர்த^{4} தாதுக ஒட்டுக்களுக்கு முன்நிற்கும் 'அஜ்' (ஒட்டு) என்ற தாதுவுக்குப் பதிலியாக 'வீ'

வரும்.

ப்ரவாயணீய: (3.1.96), ப்ரவாயக: (3.1.133)

ப்ர + அஜ் + அனீயர் = ப்ரவய் + அனீயா = ப்ரவபணீய: (8.4.29)

ப்ர + அஜ் + ண்வுல் = ப்ரவீ + அக: + ப்ரவை அக: ப்ரவாயக: 'ஒட்டுநர் ஆனால் ஸமாஜ: = (ஸம் + அஜ் + க^{4}ஞ் + அ) 'சமுதாயம்'

வா: க^{4}ஞபோ: ப்ரதிஷேதே^{4} க்யப உபஸம்க்^{2}யானம் கர்தவ்யம்

க^{4}ஞ், அப் ஆகியவைகளுடன் க்யப் என்ற ஒட்டையும் சேர்த்து இங்கும் 'அஜ்'உக்கு ஆதேசமாக 'வீ'வராது என்று கூற வேண்டும்.

ஸமஜ்யா (ஸம் + அஜ் + க்யப் (3.3.99) = ஸமஜ் + ய + டாப் = ஆ = ஸமஜ்யா 'கூட்டம், புகழ்'

வா: ப^{3}லாத^3ாவார்த^{4}த^4ாதுகே விகல்ப இஷ்யதே 'ப^{3}ல்' ப்ரத்யாஹாரத்தைச் சேர்ந்த எழுத்தை முதலாகக் கொண்ட ஆர்த^{4}த^4ாதுக ஒட்டுக்கள் தொடரும்போது இந்த ஆதேஸம் விருப்பாக அமையும்.

ப்ரவேதா (அ) ப்ராஜிதா

ப்ரவேதும் (அ) ப்ராஜிதம்

ப்ர + அஜ் + த்ருச் = ப்ர + வீ + த்ருச் = ப்ரவேதா

2.4.57 வா யௌ

ஆர்த^{4}த^4ாதுக ஒட்டு 'யு'வுக்கு முன் நிற்கும் 'அஜ்'க்கு 'வீ' ஆதேசமாக விருப்பாக வரும்.

ப்ரவயணோ/ப்ராஜணோ தண்ட: = சாட்டை கயிறு'

ப்ர + அஜ் + ல்யுட் = யு ⟶ ப்ரவீ + யு ⟶ ப்ரவீ + அன ப்ரவ் ஏ + அன ப்ரவ் – அய + அன ⟶ ப்ரவயன ⟶ ப்ரவயண

ப்ர + அஜ் + யு = அன = ப்ராஜன

2.4.58 ண்ய க்ஷத்ரிய ஆர்ஷ ஞிதோ லுக் அணி இஞோ:

'அண்', 'இஞ்' ஆகிய ஒட்டுக்கள் கீழ்க்கண்ட இடங்களில் கெடும் 'லுக்' ஆதேசம் வரும்)

1) 'ண்ய' (4.1.151) என்ற கோத்ர ஒட்டை இறுதியாகக் கொண்ட பெயரடிச் சொல்லுக்குப்பின் வரும்போது

குர்வாதி^{3}ப்^{4}ய: ண்ய: (4.1.1510

குரு + ண்ய = ய ⟶ கௌரு + ய –> கௌ – ரோ – ய –> கௌரவ்ய:, கௌரவ்ய: + இஞ் (4.1.95) –> கௌரவ்ய: – 0 = கௌரவ்ய: பிதா

கௌரவ்ய: புத்ர:

2) க்ஷத்திரிய வழித்தோன்றலைச் சுட்டும் ஒட்டுக்குப்பின் (4.1.162)

ஸ்'வா ப^{2}ல்க: பிதா (4.1.114); ஸ்வா ப^{2}ல்க: புத்ர:

3) ரிஷியின் வழித்தோற்லைச் சுட்டும் ஒட்டுக்குப்பின் (4.1.11)

வாஸிஷ்ட^{2}: பிதா, வாஸிஷ்ட^{2}: புத்ர:

4) 'ஞ்' என்ற எழுத்தை 'இத்'தாகக் கொண்ட கோத்ர ஒட்டை ஈறாக கொண்ட 'அண்' 'இஞ்' ஆகிய ஒட்டுக்கள், 'வழித்தோன்றல்' என்ற பொருளைச் சுட்டும் சொற்களை ஆக்கப்பயன்படுத்தும் பே ாது இந்த ஒட்டுக்களுக்குப் பதிலாக 'லுக்' ஆதேஸம் வரும்.

வித^{3}ஸ்ய கோத்ரா பத்யம் = வைத^{3}

ஞித் – வைத^{3}: பிதா, வைத^{3}: புத்ர (4.1.104) அண் – தைகாயனி: பிதா, தைகாயனி: புத்ர:

(4.1.154; 4.1.83)

ஆனால்

கௌஹட^{3}: பிதா, கௌஹடி^{3}: புத்ர:

(3.1.12; 4.1.95)

இங்கேயும் 'அண்', 'இஞ்' ஆகிய ஒட்டுக்களைச் சேர்த்து இச்சொற்கள் தருவிக்கப்பட்டாலும், இங்கு 'லுக்' ஆதேசமில்லை.

வாமரதா^{2}: (வாமரத்^{2}யஸ்ய ச^{2}ாத்ரா:)

(4.1.151; 4.2.111) இங்கு 'அண்' என்ற ஒட்டுக்கு 'லுக்' ஆதேசமில்லை, இது, 'மாணவன்' என்ற பொருளைச் சுட்டுகிறது. வழித்தோன்றல் என்ற பொருளில் அல்ல.

த^{3}ாக்ஷாயண: (த^{3}ாக்ஷே: அபத்யம் யுவா)

இங்கு 'அண்', 'இஞ்' ஒட்டுக்கள் இணைக்கப்படவில்லை. அதனால் 'லுக்' இல்லை.

வா: அப்^{3}ராஹ்மண கோத்ரமாத் ராத்^{3}யுவ ப்ரத்யயஸ்யோப ஸம்க்^{2}யானம்

பிராம்மண கோத்திரத்தைச் சுட்டும் சொற்களைத் தவிர்த்து, மற்ற கோத்திரச் சொற்களுக்குப்பின் நிற்கும் 'வழித்தோன்றல்' என்ற பொருளை உணர்த்தும் ஒட்டுக்கள் மறையும்.

பெ^{3}தி^{4}: பிதா, பெ^{3}தி^{4}: புத்ர:

பு^{3}த^{4} + இஞ் = பெ^{3}ளதி^{4}: (4.1.173)

பெ^{3}ளதி^{4} + ப^{2}க் = பெ^{3}ளதி^{4} (4.1.101)

2.4.59 பைலாதி^{3}ப்^{4}யஸ்' ச

'பைல' முதலியவைகளுக்குப் பிறகும் வழித் தோன்றலைச் சுட்டும் ஒட்டுக்களுக்கு 'லுக்' ஆதேசம் வரும்.

பீலா + அண் = பைல: (4.1.118)

பைல: + பி^{2}ஞ் (4.1.156) = பைல:

பைல, ஸாலங்கி, ஸாத்யகி, ஸாத்யகாமி, தைவி. . . .

2.4.60 இஞ: ப்ராசாம்

'இஞ்' என்ற கோத்திர ஒட்டு, கிழக்குத் திசை மக்களைக் குறிக்கும்போது,

இந்த ஒட்டில் முடியும் சொற்களுக்குப் பின் நிற்கும் வழித்தோன்றலைச் சுட்டும்
ஒட்டு கெடும்.
பான்னாக^{3}ரி பிதா; பான்னாகரி: புத்ர: பான்னாக^{3}ர + இஞ் = (4.1.95) + பான்னாகரி:
ப^{2}க் (4.1.101) = பான்னாக^{3}ரி:
ஆனால், த^{3}ாக்ஷி: பிதா, த^{3}ாக்ஷாயண: புத்ர:
(கீழ்த்திசை மக்களல்ல)

2.4.61 ந தௌல்வலிப்4ய
'தௌல்வலி' முதலியவைகளுக்குப் பின் வரும் யுவன் (வழித்தோன்றல்) ஒட்டுக்கள் கெடா.
தௌல்வலி: பிதா; தௌல்வலாயன: புத்ர:
தௌல்வலி; த^{4}ாரணி, ராவணி, பாரணி, தை^{3}லோபி. . . .

2.4.62 தத்^{3}ராஜஸ்ய ப^{3}ஹுஷு தேனைவ அஸ்த்ரியாம்.
தத்^{3}ராஜ ஒட்டுக்களை (4.1.172, 5.3.119) இணைத்து ஆக்கப்படும் சொற்கள், பன்மையாக அமைந்து, அப்பன்மையே அந்த தத்ராஜ ஒட்டுக்களால் தருவிக்கப்பட்டதாகவும், அவ்வாறு தருவிக்கப்பட்ட சொல் பெண்பாலைக் குறிக்காமலும் நிற்கும்போது. தத்^{3}ராஜா ஒட்டுக்கள் கெடும்.
அங்க^{3} + அண் ⟶ (4.1.171) ⟶ ஆங்க^{3}: (ஒருமை), ஆங்கௌ (இருமை)
ஆனால், பன்மையில் 'அண்' கெடுவதால் 'வ்ருத்தி' வராது.
அதனால் பன்மையில் 'அங்க^{3}ா: ஆகும்.
பெண்பால் ஆங்க்^{3}ய:

2.4.63 யஸ்காதி^{3}ப்^{4}யோ கே^{3}ாத்ரே
'யஸ்க' முதலிய சொற்களுக்குப்பின் வரும் கோத்ர ஒட்டுக்களும், (4.1.162) (அச்சொற்களே, பன்மையாகவும் பெண்பாலைக் குறிக்காமலும் நிற்கும்போது) கெடும் (லுக்)
யஸ்க + அண் = யஸ்கா: (பன்மை)
யாஸ்க: (ஒருமை), யாஸ்கௌ (இருமை)
யாஸ்க்ய: (பெண்பால்)

2.4.64 யஞ் அஞோஸ்^{1} ச
கோத்ர ஒட்டுக்களான 'யஞ்' (4.1.105) அஞ் (4.1.104) ஆகியவைகளும் மேலே குறிப்பிட்ட சூழலில் மறையும் (லுக்)
க^{3}ர்க்^{3} + யஞ் = க^{3}ார்க்^{3}ய: (ஒருமை)
க^{3}ர்க^{3}ா: (பன்மை) (4.1.105)
வித்^{3} + அஞ் = வைத^{3}: (ஒருமை) வித: (பன்மை) (4.1.104)

க3ர்க்3ய: (பெண்பால்)
வைத்3ய: (பெண்பால்)

வா: யஞாதீ3னாம் ஏகத்3வயோர் வா தத்
புருஷே ஷஷ்ட்2யா உபஸம்க்2யானம்
6ஆம் வேற்றுமை, ஒருமை, இருமை தத்புருஷஸமாஸமாக்கும் போது, 'யஞ்' முதலிய கோத்ர ஒட்டுக்கள் விருப்பாகக் கெடும் (லுக்)
கா3ர்க்3யஸ்ய (ஒருமை) குலம் = கா3ர்க்3யகுலம்/க3ர்க3குலம்
கா3ர்க்3யயோ: (இருமை) குலம் = கா3ர்க்3யகுலம்/க3ர்க்3குலம்
வைத3ஸ்ய (ஒருமை) குலம் = வைத்3குலம்/வித3குலம்
ஆனால் ஆங்க3குலம்
க3ர்கா3ணாம் (பன்மை) குலம் = க3ர்க்3குலம் (No opionality)

2.4.65 அத்ரி ப்4ருகு3குத்ஸ வஸிஷ்ட2
கோ3தமாங்கி3ரோப்4யஸ்1 ச
பன்மையிலமையும் அத்ரி, ப்4ருகு3குத்ஸ வஸிஷ்ட2
கோ3தம, அங்கி3ரஸ முதலியவைகளின் கோத்ர ஒட்டுக்கள் மறையு ம் (லுக்), (அவைகள் பெண்பால் அல்லாதபோது) •
அத்தரய; (<அத்ரி)
ஆத்ரேய: (ஒருமை)
ஆத்த்ரேய்ய (பெண்பால்)
ப்4ருக3வ:, குத்ஸா:, வஸிஷ்டா2:, கோ3மா: அங்கி3ரஸ:

2.4.66 ப3ஹ்வச இஞ: ப்ராச்யப4ரதேஷு
பல உயிரெழுத்துக்களை (அச்)க் கொண்ட பெயர்ச் சொற்களுக்கு ப்பின், ப்ராச்ய பரத ஆகிய மக்களின் கோத்திரத்தைச் சுட்டும் ஒட்டான 'இஞ்' (4.1.95) வரும்போது, அச்சொற் பன்மையில் நின்றால் அந்த ஒட்டு கெடும் (லுக்)
ப்ராசய
ப்னனாகாரா: (பன்மை) பன்னாகாரி (ஒருமை)
பரத
யுதி4ஷ்டி2ரா: (பன்மை) யௌதி4ஷ்டி2ரி: (ஒருமை)
ஆனால் வைகய: (பன்மை); வைகி; (ஒருமை)
பல உயிரெழுத்துக்களைக் கொண்டதல்ல.
பரதர்களும் ப்ராச்யர்கள்தான். இந்தச் சொல்லைத் தனித்துக் குறிப்பிட்டதின் நோக்கம் 'ப்ராச்ய' என்பதைக் குறிப்பிட்ட இடங்களிலெல்லாம் 'பரத'வையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை என்று உணர்த்தத்தான்.
(பார்க்க 2.4.60) ஆர்ஜுனி: பிதா.
ஆர்ஜுனாயன: புத்ர: (4.1.101)

2.4.67 ந கோ3பவனாதி3ப்4ய:

'கோபவன' முதலிய சொற்களுக்குப் பிறகு நிற்கும் கோத்ர ஒட்டுக்கள், பன்மையிலும் கெடா (லுக் ஆதேசமாகாது)

கெ^{3}ளபவனாப: கோபவன + அஞ் (4.1.104) இச்சூத்திரம் கோபவன முதலியவைகளில் 2.4.64ஐப் பயன்படுத்தத் தடை விதிக்கிறது. 'கே^{3}ாபவன' முதலியவைகள் 'வித^3ாதி' வகுப்பைச் சேர்ந்தவை (பார்க்க 4.1.104) இதிலடங்கியவை. 8 சொற்கள் மாத்திரந்தான், இந்த விதியின் கீழ் வரும். மீதியுள்ள சொற்கள் 2.4.64 விதியினால் 'லுக்' ஆதேசம் பெறும் (கெடும்) ஹரிதா: (பன்மை)

2.4.68 திககிதவாதிப்^{4}யோ த்^{3}வந்த்^{3}வே

'திககிதவ' முதலிய சொற்கள் துவந்த்வஸமாஸப் பன்மையாகப் பயன்படுத்தும்போது அதன்பின் நிற்கும் கோத்ர ஒட்டுக்கள் 'லுக்' இனால் கெடும்.

திக + பி^{2}ஞ் · தைகாயனி: (4.1.154)

தைகாயன ஸ்'ச கைதவாயனஸ்'ச + பி^{2}ஞ் · திககிதவா: 'திககிதவ கோத்திரத்தில் தோன்றியவர்கள்'

ப^{3}ஹ்வர ப^{4}ண்டீரத^2ா: (இஞ் கெடுதல் 4.1.95)

உபகலமகா: (ப^{2}க்கெடுதல் (4.1.99)

பப^{3}கநரகா: (இஞ்கெடுதல் 4.1.95)

ப^{3}கநக^{2}ஸ்'வகு^{3}த^3 பரிணத்^{3}த^4ா: (4.1.95)

உப்ஜகருப^4: (இஞ், அண் (4.1.112) கெடுதல்). . .

2.4.69 உபகாதி^{3}ப்^{4}யோ அன்யதரஸ்யாம் அத்^{3}வந்த்^{4}வே

'உபக' முதலிய சொற்களுக்குப் பின்வரும் கோத்ர ஒட்டு அவைகள் பன்மையாக அமையும்போது விருப்பாக மறையும் அவைகள் துவந்துவமாக அமைந்தாலும் இல்லாவிட்டாலும் விருப்பாக இவ்வொட்டு கெடும்.

உபகா:/ஔபகாயன:

லமகா:/லாமகாயன:

திககிதவ வகுப்பிலடங்கிய 3 சொற்கள், (உபகலமாக;, ப்^{4}ரஷ்டககபிஷ்டலா:, க்ருஷ்ணாஜின க்ருஷ்ணஸுநகரா:) இத்துள்ளடங்கும். இம்மூன்றின் துவந்துவத்திலும் கோத்ர ஒட்டு மறைதல் கட்டாயமாக நிகழும். அவைகள் தனித்தனியாக வரும்போது ஒட்டு மறைதல் விருப்பாக நிகழும்.

இவ்வகுப்பைச் சேர்ந்த ஏனைய சொற்கள் தனித்தனியாக வரும்போதும், துவந்துவமாக அமையும்போதும் விருப்பாக 'லுக்' ஆதேசம் வரும்.

2.4.70 ஆக^{3}ஸ்த்ய கௌண்டின்யயோர் அக^{3}ஸ்திகுண்டின ச

ஆகஸ்த்ய, கௌண்டின்ய ஆகிய சொற்களுக்குப் பின் நிற்கும் 'அண்' 'யஞ்' ஆகிய கோத்ர ஒட்டுக்கள், அச்சொற்கள் பன்மையில் அமையும்போது கெடும் (லுக்), ஒட்டுக்கள் மறைந்தபின் அவைகளின் அடிச்சொல்லுக்குப் பதிலியாக 'அகஸ்தி' 'குண்டினச்' அமையும்

அகஸ்தய: (பன்மை) (அகஸ்தய + அண் 4.1.114)
குண்டினா: (பன்மை) குண்டின + யஞ் 4.1.105)
'குண்டினச்' இன் இறுதி 'ச' ஒரு 'இத்' அது சுரத்தைச் சுட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குண்டினி என்ற சொல்லில் உதாத்தம் நடுவில் அமையும் அதேபோன்று அதற்கும் பதிலியாக வரும் சொல்லிலும் சுரம் அமையும்.

2.4.71 ஸுபோ த^{4}ாதுப்ராதி பதி^{3}கயோ:
தாது, ப்ராதிபதிகம் ஆகியவைகளுக்குப் பிறகு வரும் 'ஸுப்' (வேற்றுமையுருபுகள்) கெடும் (லுக்)
புத்ரீயதி (புத்ரம் இச்^{1}ச^{2}தி 3.1.32) இங்கு
2ஆம் வேற்றுமையுருபு கெடுகிறது.
கஷ்டஸ்ரித: (கஷ்டம் ஸ்^{1}ரித: (1.2.46)
2ஆம் வேற்றுமை கெடுகிறது)
கும்ப^{4}கார: (கும்ப^{4}ம் கரோதி 2ஆம் வேற்றுமை கெடுகிறது)
ஆனால் வ்ருக்ஷ:, ப்லக்ஷ:

2.4.72 அதி^{3} ப்ரப்^{4}ருதிப்^{4}ய: ஸப:
அத்^{3} (உண்ணுதல்) முதலிய தாதுக்களின் பின்வரும் ஸப் (விகரணம் 3.1.68) 'லுக்' இனால்கெடும்.
அத்^{3} + ஸப் + தி = அத்^{3} + 0 + தி = அத்தி 'உண்கிறான்'

2.4.73 ப^{3}ஹுலம் ச^{2}ந்த^{3}ஸி
தாதுக்களுக்குப் பின்வரும் 'ஸப்' வேத மொழியில் பல விதமாகக் கெடும் (லுக்)
வ்ருத்ரம் ஹனதி (ருக்வேதம்)
ஹனதி (= ஹன் + ஸப் = அ + தி = ஹனதி)
ஹந்தி (மற்ற இடங்களில்)
ஸ^{1}யதே (ஸு^{1}ங் + ஸப = அ + தே = ஸ^{1}யதே)
ஸே^{1}தே (மற்ற இடங்களில்)
'லுக்' இந்த இரண்டு சொற்களிலும் ஏற்படவில்லை.
ஆனால், அத^{3}ாதி^{3} கணத்தைச் சேராத தாதுக்களுக்குப்பின் நிற்கும் 'ஸப்' கெடுகிறது.
த்ராத்^{4}வம் நோ தே^{3}வா: (ருக் வேதம்)
த்ரை + ஸப் + த்^{4}வம் = த்ரா + ஸப் + த்^{4}வம் (6.1.45
த்ரை + ஸப் + த்^{4}வம் = த்ராய் + அ + த்^{4}வம் = த்ராயத்^{4}வம் (மற்ற இடங்களில்)

2.4.74 யஙோ அசி ச
அச் (3.1.134) ப்ரத்யயத்துக்கு முன் நிற்கும் 'யங்' (3.1.22) உம் பலவகையில் 'லுக்' ஆகும். இந்த 'லுக்' ஆதேசம் வேதம் பேச்சு மொழி இரண்டிலும் நிகழும்

லோலுவ:

லூஞ் + யங் (3.1.22) → லு + லூங் + யங் + (6.1.9) → லோலூய (7.4.82) + யஞ் → லோலுவ: (3.1.124; 1.1.4; 64, 77)

'அடிக்கடி வெட்டுபவன்'

2.4.75 ஜுஹோத்யாதி4ப்4ய: ஸ்லு:

ஹு (வேள்வி செய்) முதலிய தாதுக்களுக்குப் பின்னால் 'ஸப்'புக்கு ப் பதிலியாக 'ஸ்லு' வரும்.

சூ. 6.1.10, 'ஸ்லு' உக்கு இரட்டித்தல் விதிக்கிறது. அதாவது 'ஹு' வ குப்பைச் சேர்ந்த தாதுக்கள் 'ஸ்லு' பின் தொடர்ந்து வரும்போது இரட்டிக்கும்

ஹு + ஸப் + தி (3.1.68) → ஹு + ஸ்லு + தி (1.1.61) → ஹு + ஹு + தி (6.1.10) → ஜுஹோதி.

2.4.76 ப3ஹுலம் ச2ந்த3ஸி

வேதத்தில் 'ஸப்'புக்கு 'ஸ்லு' பதிலியாக பலவகையில் வரும்.

எங்கு இது பேச்சு மொழியில் காணப்படுகிறதோ அங்கு இது வராது. வேறு இடங்களில் இந்த ஆதேஸம் வேத மொழியில் காணப்படும்.

த3ாதி ப்ரியாணி. 'விருப்பமான பொருட்களைக் கொடுக்கிறான்' த3த3ாதி (பேச்சு மொழி)

ஜனிமா விவக்தி

2.4.77 க3ாதி ஸ்த2ா கு4பா பூபேப்4ய:

ஸிச: பரஸ்மைபதேஷு.

க3ாதி (போ), ஸ்த2ா (நில்), 'கு4' என்ற ஸமக்ஞாவினால் குறிப்பிடப்பட்ட வினைகள் (1.1.20)

பா (அருந்து), பூ (இரு), ஆகிய தாதுக்களுக்குப் பின்வரும் ஸிச் (Aoris t) பரஸ்மைபதமாக அமையும்போது 'லுக்' (கெடுதல்) ஏற்படும்.

இண் + லுங் + தி → க3ா + லுங் + தி (2.4.45) = அ + க3ா + திச்லி → அக3ா + ஸிச் + தி = அக3ாத் (3.4.100) 'போனான்'

அஸ்தாத், க4 – அத3ாத், அத4ாத், அபாத், அபூத்

வா: க3ா போர்க்ரஹணே இண் பிப3த்யோர் க்3ரஹணம்.

இச்சூத்திரத்தில், கூறப்பட்ட 'கா3', 'பா' என்ற தாதுக்கள் 'இண்' 'பிபதி' என்ற வினைகளைத்தான் சுட்டுகின்றன. அதாவது கை3 (பாடு) என்ற தாது சில இடங்களில் 'க3ா' என்ற உருவத்திலும், 'பா' என்ற தாது 'காப்பாற்றுதல்' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுவதைக் காண்கிறோம். இச்சூத்திரம் இவைகளைச் சுட்டவில்லை.

கை3 – அக3ாஸீத் 'பாடினான்'

பா – அபாஸீத் 'காப்பாற்றுகிறான்'
இங்கு 'லுக்' மறைதல் இல்லை.

2.4.78 விப⁴ாஷா க்⁴ரா தே³ட் ஸாச் ச²ா ஸ:
க்⁴ரா (முகர்தல்) தே²ட் (அருந்துதல்)
ஸ¹ாச் (ஸோ) (சீவு) ச²ா (சே²ா) (வெட்டுதல்)
ஸா (ஸோ) அழி ஆகிய வினைகளுக்குப்பின் நிற்கும் 'ஸிச்' பரஸ்மைபதத்தில் விருப்பாக லுக் (கெடுத்ல்) ஆகும்.
அக்⁴ராத்/அக்⁴ராஸீத் 'முகர்ந்தான்'
அத²ாத்/அத²ாஸீத் 'குடித்தான்'
அஸ¹ாத்/அஸ¹ாஸீத் 'சீவினான்'
அச்'ச²ாத்/அச்'ச²ாஸீத் 'வெட்டினான்'
அஸாத்/அஸாஸீத் 'அழித்தான்'

2.4.79 தனாதி³ப்⁴ய: தத²ாஸோ;
'தன்' முதலிய வினைகளுக்குப் பின் 'ஸிச்' ஒட்டுக்கள், அதைத் தொடர்ந்து ஆத்மனேபத ஒட்டுக்களான 'த' 'த²ாஸ்' நிற்கும்போது விருப்பாக மறையும்.
அதத, அதத²ா: 'விரிவுபடுத்தினான்'
அதனிஷ்ட அதானிஷ்டா:
தன் + லுங் = த, அட்ஸிச = அதன் + ஸ் + த = அதன் + θ – த = அதத (6.4.37)
அல்லது
அதன் + இஸ் + த ⟶ அதன் + இ + ஷ் + ட = அதனிஷ்ட

2.4.80 மந்த்ரே க⁴ஸ ஹ்வரணஸ வ்ருத³ஹ
ஆத் வ்ருச் க்ரு த³மி ஜனிப்⁴யோ: லே
வேதங்களின் மந்திர பகுதியில் காணப்படும் தாதுக்கள் க⁴ஸ், (உ ண்) ஹ்வ்ரு (வளைந்திரு), ணஸ் (அழி), (மறை) வ்ருங் (மூடு, தோ்ந் தெடு) வ்ருஞ் (மூடு, தோ்ந்தெடு) த³ஹ் (எரி), 'ஆ'வை ஈறாக் கொண்ட வினைகள். வ்ருஜ் (தவிர்) அல்லது வ்ருச் அல்லது வ்ருக் (எடு) க்ரு (செய்), க்³ம் (போ) ஜன் (பிற) ஆகிய தாதுக்களுக்குப் பின் வரும் 'லி' (Aorist or perfect) கெடும் (லுக்)
லி = ச்லி
க⁴ஸ் – அக்ஷன் பிதரோ அமீமதந்த பிதர
அத்³ + லுங் – க⁴ஸ் (2.4.37) + லுங் + ஜி²
அட், ச்லி = லி (3.1.43 = அக⁴ஸ் + லி + ஜி² = அக⁴ஸ் + θ + ஜி² (2.4.80) = அக⁴ஸ் + அந்தி (7.1.3) = அக⁴ஸ் + அந்த் (3.4.100) = அக⁴ஸ் + அன் (8.2.83) = அக⁴ஸ் + θன் (6.4.98) = அக⁴ஷ் + ன் (8.3.60) = அக்³ஷ் + அன் (8.4.53) = அக்ஷ் = அன் (8.4.55 = அக்ஷன் 'உண்டான்')

2) ஹ்வர மா ஹ்வாமித்ரஸ்யத்வம்
ஹ்வ்ரு + லுங் = திப், ச்லி – ஹ்வ்ரு + ச்லி + ஸிச் + தி ஹ்வர் (3.4.100, 8.2.23)

3) ணஸ் – ப்ராணட்[3] ፡ ப்ராணங் மர்த்யஸ்ய
நஸ்[1] + ச்லி + த் ፡ அநஸ்[1] + ஸிச் + த் ፡ அணஷ்
ஸிச் + த் (8.2.36) ፡ அணட்[3] + ஸிச் + த (8.2.39) ⟶ ப்ராணட்[1]/ப்ராணட்[3] (8.4.56)

வ்ரு – ஸுருசோ வேன ஆவ:
வ்ரு + லுங் ፡ ஸிப், (ஆட் ஆகம) ஆவ்ரு + தி,
ச்லி ፡ ஆவ்ரு + தி + 0 ⟶ ஆவர் + தி ፡ ஆவர்ஸி ⟶ ஆவர் 0 ⟶ ஆவ:

தஹ் – மான ஆ த[4]க்
த[3]ஹ் + லுங் ፡ ஸிப், ச்லி ⟶ த[3]ஹ் + ஸி ⟶ த[3]ஹ் + இ (6.1.68) ⟶ த[3]க[4] + இ (8.2.32) ⟶ த[4]க்[4] (8,2.37) + இ ⟶ த[4]க்[3] ⟶ த[4]க்[1] ፡ த[4]க்

ஆத் – ஆப்ரா த்[3]யாவாப்ருதிவீ அந்தரிக்ஷம் (ப்ராத்)
வ்ருச் மா நோ அஸ்மின் மயாத[4]னே
பராவர்க் ப[4]ார ப்[4]ருத்[3]யத[2]ா (பராவர்க்)
க்ரு – அக்ரன் கர்ம கர்மக்ருத: (அக்ரன்)
க[3]மி – ஸத்ய புஷ்டி நிருத்த[4]ாஸோ (அக்மன்)
ஜனி – அக்[3]ஞத வா அஸ்ய த[3]ந்தா:

2.4.81 ஆம:
'ஆம்' உக்குப்பின் வரும் 'லி' (Periphrastic Perfect)யும் கெடும்.
ஈஹாம்சக்ரே

2.4.82 அவ்யயாத் ஆப் ஸுப்:
அவ்யயத்துக்குப்பின் வரும் ஆப் (பெண்பால் ஒட்டு) உம், வேற்றுமை யுருபுகளும் (ஸுப்) மறையும் (லுக்)
தத்ர ஸ[1]ாலாயாம்
இங்கு 'தத்ர' என்ற அவ்யயம் ஸ[1]ாலாயாம் என்ற சொல்லின் விஸேஷணமாக அமைகிறது. இந்த அவ்யயம் 'தஸ்யாம்' என்ற பொருளை சுட்டும்.
தத் ⟶ தத் + த்ரல் (5.3.10) ⟶ தத்ர (7.2.102) (6.1.97) ⟶ தத்ர + டாப் (4.1.4) தத்ர + டாப் (ஆண்பால் 6.3.35). 1.1.38 இனால், 'த்ரல்' அவ்பயம் என்ற ஸமக்ஞா பெரும். அதனால் டாப் ፡ ஆப் இந்த சூத்திரத்தினால் கெடும்.

2.4.83 ந அவ்யயீ ப[4]ாவாத் அதோ அம்து அபஞ்சம்யா:
'அ'வை ஈறாகக் கொண்ட அவ்யயீ பாவஸமாஸத்துக்குப்பின் வரும் வேற்றுமையுருபுகள் கெடுவதில்லை (லுக்). அவ்வேற்றுமையுருபு 5ஆம் வேற்றுமையுருபாகாவிட்டால் அதற்குப் பதிலியாக 'அம்' வரும்.
உபகும்ப[4]ம் திஷ்ட[2]தி – பானையின் பக்கத்தில் நிற்கிறான்

2.4.84 த்ருதீயா ஸப்தம்யோர் ப³ஹுலம்:

மேலே குறிப்பிட்ட மாற்றம், 3ஆம் வேற்றுமை, 5ஆம் வேற்றுமையுருபுகளுக்குப்பின் பல வகையில் ஏற்படும்.

உபகும்பே⁴ன (3) க்ருதம்/உபகும்ப⁴ம்(2) க்ருதம். உபகும்பே⁴(7) க்ருதம்/ உபகும்ப⁴ம் க்ருதம்

வா: ஸப்தம்யா ருத்³தி⁴ நதீ³ ஸமாஸ

ஸம்க்²யா அவபவேப்⁴யோ நித்யம்

'அம்' இதி வக்தவ்யம்.

ருத்³தி⁴ (செழிப்பு), நதீஸமாஸ (நதிகளின் பெயர்களாலாக்கப்பட்ட தொகை) எண்ணுப் பெயர்களை உறுப்பினராகக் கொண்ட தொகை ஆகியவைகளுக்குப் பின் நிற்கும் 7ஆம் வேற்றுமையுருபுகளுக்குப் பதிலியாக 'அம்' கட்டாயமாக வரும்.

பரஸ்மைபதம்

க்ரு + லுட் + திப் ⟶ க்ரு + தாஸ் + தி (3.1.33) ⟶ (தி ட³ா ⟶ ஆ) கர் + தாஸ் + ஆ + ⟶ கர் + த் 0 + ஆ ⟶ கர்த்த் ('த்' இரட்டிப்பு) + ஆ = கர்த்தா. (ஒருமை)

க்ரு + லுட் = தஸ் தாஸ் = க்ரு + தாஸ் + தஸ் (தஸ் ⟶ ரௌ); க்ரு + தாஸ் + ரௌ = கர்தாஸ் + ரௌ ⟶ கர்தா 0 + ரௌ (7.4.51) ⟶ கர்த்தா + ரௌ ⟶ கர்த்தா + ரௌ ⟶ கர்தாரௌ (இருமை)

க்ரு + லுட் = தி = ரஸ் தாஸ் ⟶ – கர்தாஸ் + ரஸ் ⟶ கர்தா 0 + ரஸ் ⟶ கர்த்தார = (பன்மை)

ஆத்மனேபதம்

அதி⁴இங் + லுட் = த ⟶ அதி⁴இ + த தாஸ் ⟶ அதி⁴ ஏ + தாஸ் + த யண தர ⟶ டா டி = ஆஸ் = 0 அத்⁴பேத் ஆ = அத்⁴யேதா. ஆனால் ஸ்வ: கர்தாஸி ஸ்வ: அத்⁴யேதாஸே

1) ஸுமத்³ ரம் (மத்³ராணாம் ஸம்ருத்³தி⁴:)
(மத்ர தேசத்து மக்களின் செழிப்பு)

2) உன்மத்தக³ங்க³ம் (உன்மத்தா க³ங்கா யஸ்மின் தே³ஸே) "எந்த தேசத்தில் கங்கா கொந்தளிக்கிறதோ அது"

3) ஏகவிம்ஸ'தி ப⁴ாரத்³வாஜம் (ஏகவிம்ஸ'தி. ப⁴ாரத்³வாஜா யஸ்மின் வம்ஸ்யா:)

2.4.85 லுட: ப்ரதமஸ்ய ட³ா ரௌ ரஸ: லுட் (எதிர்காலம்) டின் படர்க்கையின் 3 ஒட்டுக்களுக்கும் முறையே, ட³ா, ரௌ, ரஸ: ஆகிய ஒட்டுகள் பதிலியாகும் (பரஸ்மைபதம் ஆத்மனேபதம் இரண்டிலும்) கர்த்தா, கர்தாரௌ, கர்தார: (பரஸ்மைபதம்) அத்⁴யேதா, அத்⁴யேதாரௌ, அத்⁴யேதார: (ஆத்மனேபதம்).

3.1.1 ப்ரத்யய:

ஒரு ஒட்டு இது ஒரு அதிகார சூத்திரம். இச்சூத்திரத்திலிருந்து 5ஆம் அத்தியாய த்தின் முடிவு வரை (கீழ்க்காணும் இடங்களைத் தவிர்த்து) விளக்கப் படுபவைகள் ப்ரத்யயம் என்ற பெயர் பெறும். ப்ரக்ருதி (அடிச்செ ால் (Base), உபபதம் (சார்ந்து நிற்கும் சொற்கள்), உபாதி[4] (அ டை), விகாரம், (conjugational sign) ஆகமம் ஆகியவைகள், ப்ரத்யய ம் என்ற ஸம்க்3ஞாவிலிருந்து விலக்கப்படும்.

எ–டு தவ்யத் தவ்ய அனீய: (3.1.96)

3.1.2 பரஸ்' ச

தொடர்ந்து

இதுவும் ஒரு அதிகார சூத்திரம் அல்லது இது ஒரு பரிப[4]ாஷா சூத்தி ரமாகவும் கருதலாம். ஒட்டுக்கள் வினையடிச் சொற்களுக்கும் பெயரடிச் சொற்களுக்கும் பின்னால் நிற்கும்.

ஆனாலும், இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கும் சில ஒட்டுக்கள் (காட்டாக உணாதி ஒட்டுக்கள்) சில சமயங்களில், முதலிலும், நடுவிலும் வைக்கப்படுகின்றன.

3.1.3 ஆத்யுத[3]ாத்தஸ்' ச

ஒட்டுக்களெனப்படுபவை, அதன்முதல்ஆசையில் (syllable) உதாத்த சுரத்தைக் கொண்டவை. இதுவும் ஒரு அதிகார சூத்திரந்தான் அல்லது இதை பரிபாஷா சூத்திரமாகவும் எடுத்துக் கொள்ளலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட உயிரெழுத்துக்களைக் கொண்ட ஒட்டு அதன் முதல் உயிரெழுத்தில் உதாத்த சுரம் பெறும். காட்டாக 'த்வ்யம்' என்ற ஒட்டில், அதன் முதல் உயிரெழுத்தான 'அ' உதாத்தசுரம் பெறுகிறது. இந்த சுரத்தைப் பற்றிய பொது விதி, வேறு சிறப்பு வித எதுவும் இல்லாமலிருக்கும்போதுதான் பயன்படும்.

3.1.4 அனுதாத்தௌ ஸுப்பிதௌ

ஸுப் (வேற்றுமையுருபுகள்) ப்–ஐ இத்தாகக் கொண்ட ஒட்டுக்கள் ஆகிபவைகள் அனுதாத்தசுரம் கொண்டவை.

இது, சூ. 3க்குப் புறனடை. த்[3]ருஷத் + ஔ = த்[3]ருஷதௌ[3] 'ஔ' என்ற வேற்றுமையுருபு அனுதாத்தசுரம் கொண்டது.

'பசதி' என்ற வினைச் சொல்லின் 'திப்'பும் அனுதாத்தம்.

3.1.5 கு[3]ப் திஜ் கித்[3]ப்[4]ய: ஸன்

'ஸன்' என்ற ஒட்டு, கு[3]ப் (மறை), திஜ (கூர்மையாக்கு)

கித் (அறி) ஆகிய தாதுக்களுக்குப் பின்னால் வரும்.

ஜுகு[3]ப்ஸதே, 'அவன் வெறுக்கிறான்'

திதிஷதே 'அவன் பொறுமையாகத் தாங்கிக் கொள்கிறான்'

சிகித்ஸதே 'அவன் குணப்படுத்துகிறான்.'

வா: நிந்தாக்ஷமாவ்யாதி⁴ப்ரதீகாரேஷு ஸன்
னிஷ்யதே அன்யத்ர யத²ாப்ராப்தம் ப்ரத்யயா ப⁴வந்தி

நிந்தித்தல், பொறுத்தல், வியாதியைக் குணப்படுத்துதல் என்ற பொருட்களைச் சுட்டும்போது, இந்த தாதுவோடு 'ஸன்' ஒட்டுச் சேர்க்க வேண்டும்.

கோபாயதி	–	'அவன் காப்பாற்றுகிறான்.'
தேஜயதி	–	'அவன் கூர்மையாக்குகிறான்.'
ஸங்கேதயதி	–	'அவன் குறியிடுகிறான்.'

ஒட்டுக்களும்(திங்)வே
வேற்றுவேற்(திங்),வேற்

3.1.6 மான் ப³த⁴த³ான் ஸ'ான்ப்⁴யோ தீ³ர்க⁴ஸ்
சாப்⁴யாஸயஸ்ய

மான் (மதித்தல்), ப³த⁴ (சுட்டுதல்,) த3ான்(வெட்டுதல்) ஸான்(கூர்மையாக்குதல்) ஆகிய வினைகளுக்குப்பின் ஸன் ஒட்டு வரும், இரட்டித்த (6.1.4) அசையின் இ (7.4.79) நீட்டிக்கப்படும்.

மீமாஸதே ஆய்கிறான்
பீ³ப⁴த்ஸதே வெறுக்கிறான்
தீ³த³ாம்ஸதே நேராக ஆக்குகிறான்
ஸீ'ஸாம்ஸதே கூர்மையாக்குகிறான்.

இந்த சூத்திரத்திலும் இதற்கு முந்திய சூத்திரத்திலும் குறிப்பிடப்பட்ட வினைகள் உருவத்தினால் Desiderative ஆனால் பொருளால் அல்ல. இதற்கு அடுத்த சூத்திரத்தில் கூறப்பட்ட ச விருப்பு (Optionality) இந்தச் சூத்திரத்திலும் சேர்த்துக் கொண்டு விளக்கலாம்.

மானயதி	–	மதிக்கிறான்/மதிக்க வைக்கிறான்
ப⁴ாத⁴யதி	–	கட்டுகிறான்/கட்ட வைக்கிறான்
த³ானயதி	–	வெட்டுகிறான்/வெட்ட வைக்கிறான்
நிஸ'ானயதி	–	கூர்மையாக்குகிறான்

இவைகள் சுராதி வகுப்பைச் சேர்ந்தவைகளாகவும்/இயக்குவினையாகவும் பொருள் கொள்ளலாம்.

3.1.7 த⁴ாதோ: கர்மண: ஸமானகர்த்ருகா திச்'ச²யாம் வா.

'ஸன்' என்ற ஒட்டு, விருப்பத்தைச் சுட்டும் வகையில், ஒரு வினைக்குப்பின்னால் விருப்பாக இணைக்க வேண்டும், அந்த தாதுவின் செயல், விருப்பத்தை உணர்த்தும் அதன் கர்மனாகவும், இவ்விரண்டும் ஒரே கர்த்தாவைக் கொண்டதாகவும் (ஸமான கர்த்ருக) அமையும்போதுதான்,

'ஸன்' ஒட்டை ஒரு தாதுவோடு இணைக்க வேண்டும்.

அதாவது ஒரு தாதுவின் பொருள் கர்மனை (செயப்படுபொருள்)யும், ஸமான கர்த்தருகத்வத்தையும் அதாவது இரண்டு செயலையும் செய்பவன் ஒரே கர்த்தாவாகவும் அமையும்போது. 'ஸன்' ஒட்டை விருப்பாக இணைத்தல் வேண்டும்.

கர்தும் இச்'ச²தி - சிகீர்ஷதி 'அவன் செய்ய விரும்புகிறான்'

இங்கு செயல் செய்பவனும், செயல் செய்ய விரும்புவனும் ஒருவனே. 'இச்'ச²ா' தாதுவுக்கு செயப்படு பொருளாக நிற்கும் தாது 'க்ரு' அதனால் ஸமானகர்த்ருக மாகும்.

க்ரு + ஸன் → க்ரூ + ஸன்(6.4.16) → கீர் + ஸ(7.1.100) → சீகீர் + ஸ→ கிகீர் + ஸ → சிகீர் + ஸ (7.4.62) → சிகீர்ஷ் (8.3.59) → சிகிர்ஷதி (3.1.32)

'ஸன்' ஒட்டு ஒரு தாதுவுக்குப் பின்தான் வரும். அதனால், ஒரு தாது உபசர்கத்துடன் வரும்போது. முதலில் தாதுவுக்குப் பின் இந்த ஒட் டைச் சேர்த்து Desiderative தருவிக்கவேண்டும். இல்லாவிட்டால், உபசர்க்கத்துடன் சேர்ந்து தாதுவுக்கு இந்த விதி பயன்படுத்தினா ல், எதிர்பார்க்கும் சொல் தருவிக்க முடியாது.

காட்டாக

ப்ரகர்தும் ஜச்சத்-ப்ராகீர்ஷத் இங்கு, ப்ர க்ரு+ஸவில் இந்த விதி பயன்படுத்தினால், முதலில் நிற்கும் உயிரான் ப்ர–வுக்கு இரட்டித்தல் முதலியவைகள் வந்து சரியான சொல் தருவிக்க முடியாமல் போகும். ஆனால் கமனேன(3) இச்'ச²தி செயப்படுபொருளில்தான் இந்த விதி பயன்படுத்த முடியும். கரணம் ஆகியவைகளிலல்ல.

தே³வ த³த்தஸ்ய பே⁴ாஜனமிச்'ச²தி யக்³ருத³த்த:

இங்கு இரண்டு தனித்தனியான கர்த்தாக்கள் காணப்படுகின்றன.

உண்ணும் செயலின் கர்த்தா தேவதத்தன்

விரும்பும் செயலின் கர்த்தா யக்ஞதத்தன்

அதனால் இங்கும் இந்த விதி பயன்படுத்த முடியாது.

வா: ஆஸ'ங்காயா முபஸம்க்²யானம்

ஆஸ'ங்கா (ஒரு செயல் நிகழக்கூடும் என்ற பொருளை உணர்த்தவு ம் ஒரு தாதுவுக்குப்பின் ஸன் ஒட்டு சேர்க்க வேண்டும்.

ஆஸ'ங்கே பதிஷ்யதி நதீகூலம்

"ஆற்றின் கரை விழுந்துவிடுமென்று ஐயுறுகிறேன்"

நதீகூலம் உயிரற்ற பொருளானதால் விரும்புதல் என்ற செயலைச் செய்ய இயலாது ஆகையால், இத்தகைய பொருளைச் சுட்டுதற்கா க இந்த வார்த்திகம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியத்தின் பொருள் பிபதிஷதி நதீகூலம்.

வா: இச்'ச^{2}ா ஸனதாத் ப்ரதிஷேதே^{4}ா வக்தவ்ய:
விரும்புதல் என்ற பொருளைச் சுட்டும் 'ஸன்' ஐச் சேர்த்து தருவிக்கப்பட்ட வினைக்குப் பிறகு மறுபடியும் ஸன் சேர்க்கப்பட மாட்டாது.
சிகீர்ஷிது மிச்'ச^{2}தி

3.1.8 ஸுப ஆத்மன: க்யச்
வேற்றுமையுருபுகளில் முடியும் ஒரு பெயரடிச் சொல்லுக்குப்பின் 'க்யச்' என்ற ஒட்டு (அப்பெயரடிச் சொல், விரும்புதல் என்ற செயலின் செயப்படுபொருளாகவும், இவ்விரண்டு செயல்களின் கர்த்தா ஒருவராகவும் அமையும்போது) தனக்கு வேண்டும் என்ற விருப்பத்தைச் சுட்ட விருப்பாக இணைக்கப்படும்.
ஆத்மன : புத்ரம் இச்'ச^{2}தி – புத்ரீயதி
புத்ரம் + க்யச் • ய → புத்ர + ய (3.1.32 2.4.71) → புத்ரிய (7.4.33) → புத்ரீயதி (லட், திப், ஸப்) ஆனால்
ராக்ஞ : புத்ரமிச்'ச^{2}தி
அரசனுக்குப் பிள்ளை (வேண்டுமென்று) விரும்புகிறான்.

வா. க்யசி மாந்த அவ்யய ப்ரதிஷேதே^{4}ா வக்தவ்ய :
'ம்'வை ஈறாகக் கொண்ட சொற்கள், அவ்யயம் ஆகியவைகளில் க்யச் ஒட்டுச் சேர்க்க கூடாது.
'ம்'வை ஈறாகக் கொண்ட சொல் மாற்றுப் பெயர் இதம் இச்'ச^{2}தி
அவ்யயம் உச்சை இச்'ச^{2}தி

வா: ச^{2}ந்த^{3}ஸி பரேச்'ச^{2}ாயாமிதி வக்தவ்யம்
வேதமொழியில், விருப்பம் அற்றவர்கள் சம்பந்தமாக அமைந்தாலும் 'க்யச்' சேர்க்கப்படும்.
மா த்வா வ்ருகா அக4ாயவோ வித்வன் (வாஜ ஸம்)
அக^{4}ம் இச்சதி = அக^{4} + க்யச் = ய = அக^{4}ாய (7.4.37) → அக^{4}ாயு (3.2.170) → அக^{4}ாயவ: (7.3.109) முதல் வேற்றுமைப் பன்மை

3.1.9 காம்யச் ச
மேலே குறிப்பிட்ட சூழலில் 'காம்யச்' என்ற ஒட்டும், அதே பொருளைச் சுட்ட ஒரு தாதுவுக்குப் பின் இணைக்கப்படும்.
ஆத்மன: புத்ரம் இச்சதி புத்ரகாம்யதி
இச்சூத்திரத்தையும் மேலே கூறப்பட்ட சூத்திரத்தையும் ஒன்றாக இணைத்து ஒரே சூத்திரமாக அமைக்காமல், இரண்டையும் தனித்னி சூத்திரமாக ஆக்கியதின் காரணம், இதைத் தொடர்ந்து வரும் சூத்திரத்தில் 'க்யச்' தான் அனுவ்ருத்தி மூலம் வர வேண்டும் 'காம்யச்' அல்ல என்று உணர்த்தத்தான்.

3.1.10 உபமானாத³ாசாரே

உபமானத்தைக் குறிக்கும் வேற்றமையுருபுகளில் முடியும் சொற்களுக்குப்பின் 'க்யச்' விருப்பாக இணைக்கப்படும். அச்சொல் 'நடந்துகொள்' என்ற பொருளைச் சுட்டும். புத்ரமிவ ஆசரதி ச²ாத்ரம்:புத்ரீயதி ச²ாத்ரம்
பிள்ளையைப் போன்று நடத்துகிறான் மாணவனை
மாணவனைப் பிள்ளையைப் போன்று நடத்துகிறான்.

வா: அதி⁴கரணாச்ச இதி வக்தவ்யம்

அதிகரணத்துக்குப்பின் (அதாவது 7ஆம் வேற்றுமைச் சொல்லுக்குப் பின்) என்று கூற வேண்டும்.
ப்ராஸாதீயதி குட்³யே –'அரண்மனையில் வாழ்வது போல் குடிசையில் வாழ்கிறான்.'
ப்ராஸாத + க்யச் = ப்ராஸாதய → ப்ராஸாதீய → ப்ராஸாதீயதி

3.1.11 கர்து: க்யங் ஸலோபஸ்'ச

நடந்து கொள்ளுதல் என்ற பொருளில் க்யங் என்ற ஒட்டு விருப்பாக உபமானமாக அமையும் கர்த்தாவைச் சுட்டும் வேற்றுமைச் சொல்லுக்குப் பின்வரும். அச்சொல் ஸவை ஈறாக் கொண்டிருந்தால் ஸ–கெடும்.
ஸ்'யேன இவ ஆசரதி காக: = ஸ்'யேனாயதே ''காகம் கழுகு போன்று நடந்து கொள்கிறது''
பயஸ்யதே/பயாயதே பாலாகிறது.
ஸ்'யேன + க்யங் → ஸ்'யேன + ய → ஸ்'யேனாய (7.4.25) → ஸ்'யேனாய – லட் = தஸப், டி¹ → ஏ = ஸ்'யேனாயதே

வா: ஓஜஸோப்ஸரஸோ: நித்யம்

ஓஜஸ், அப்ரஸரஸ் ஆகிய சொற்களின் 'ஸ்' கட்டாயமாக மறையும்.
ஓஜாயதே அப்ஸராயதே

வா: ஆசாரே அவக³ல் ப⁴ க்'லிப்³ ஹோடே³
ப்⁴ய க்'விப்³வா வக்தவ்ய:

அவக³ல்ப⁴, க்'லிப³, ஹோட ஆகியவற்றின் பின்னால் 'க்விப்' என்ற ஒட்டு ஒருவர்/ஒன்று மற்றவர்/மற்றது போன்று நடந்து கொள்ளுதல் என்ற பொருளில் விருப்பாக வரும்.
அவக³ல்ப⁴தே/அவக³ல்ப⁴ாயதே
க்'லிப³தே/க்'லிப³ாயதே
ஹோட³தே/ஹோட³ாயதே

வா: ஸர்வப்ராதிபதி³ கேப்⁴ய: இத்யேகே

எல்லா ப்ராதிபதிகங்களுக்குப் பிறகும் நடந்து கொள் என்ற பொ ருளில் க்விப்

வருமென்பது சிலர் கருத்து.
அஸ்'வாயதே (க்யப் உடன்)
கர்த³மாயதே (க்யப் உடன்)
அஸ்'வதி (க்விப் உடன்)

3.1.12 ப்⁴ருஸாதி³ப்யோ பு⁴வ்யச்வேர் லோபஸ்' ச ஹல:
'ப்⁴ருஸ்'' முதலியபவைகளுக்குப்பின், இதற்க முன்னாலில்லாமலிருந்த ஒன்றாக ஆதல் என்ற பொருளில் 'க்யங்' என்ற ஒட்டு விருப்பாக வரும். அந்த அடிச் சொல்லுக்குப்பின் 'ச்வி' (5.4.50) நிற்காமல் அமைந்தபோது இச்சொற்களின் இறுதி மெய் கெடும்.
ப்⁴ருஸ'ாயதே • அப்⁴ருஸ': ப்⁴ருஸே'ா பவதி) அவன் பெரிதாக ஆகியிருக்கிறான் (அதாவது சிறியவனிலிருந்து)
ப்ருஸ: + க்யங் → ப்ருஸ'ாய (7.4.25) → 'ப்ருஸ'ாயதே'

3.1.13 லோஹிதாதி³ ட'ாஜ்ப்⁴ய: க்யப்
லோஹித முதலிய சொற்களுக்குப் பின்னும், 'ட'ாச்', என்ற ஒட்டில் (5.4.57) முடியும் சொற்கள் 'ச்வி' (5.4.50) என்ற ஒட்டோடு வராமல் அமையும்போதும், 'க்யப்' இவைகளுக்குப்பின் விருப்பாக், முன்பு இல்லாத ஒன்றாக ஆகுதல் என்ற பொருளை சுட்டும் வகையில் வரும்.
லோஹிதாயதி/லோயிதாயதே 'அவன் சிவப்பாகிறான்'
படபட'ாயதி/படபட'ாயதே 'அவன் படபடவென்று சத்தம் போடுகிறான்.'
லோஹித: + க்யப் (தாதுஸம்க்ஞா, விபக்திலுக் 'அ' நீடித்தல் → லோஹிதா + ய → லோஹி தாயதி (1.3.90) லோஹிதாயதே
(அலோஹித: லோஹித: ப⁴வதி)
பட'பட'ாயதி/பட'பட'ாயதே (பட'த் + இதி கரோதி. பட்'த்பட'த்ட³ாச் = அ)5.4.57

3.1.14 கஷ்டாய க்ரமணே
'கஷ்ட' (தவறு) 4ஆம் வேற்றுமையில் அமைந்து, அச்சொல் க்ரம் (வஞ்சகமாக முயல்தல்) என்ற வினையின் அயல் செயப்படுப்பொருள் (Indirest object) அமையும்போது அதன்பின் க்யங் என்ற ஒட்டு விருப்பாக வரும்.
கஷ்ட'ாய கர்மணே க்ராமதி=கஷ்ட'ாயதே
கஷ்டாய + க்யங் (தாதுஸம்க்³ஞா, விபக்திலுக்)
கஷ்ட + ய = கஷ்டா (7.4.25) = கஷ்ட'ாயதே
(ஆத்மனேபதம்) ''அவன் வஞ்சகச் செயலில் முனைகிறான்''

வா: ஸத்தர கஷ்ட கக்ஷ க்ருச்'ச்²ர க³ஹனேப்⁴ய:
கண்வசிகீர்ஷாயமிதி வக்தவ்யம்
ஸத்தர, கஷ்ட' கக்ஷ க்ருச்'ச்²ர க³ஹன ஆகிய சொற்களுக்குப்பின் கெடுதி செய்தல் என்ற பொருளில் 'க்யங்' தொடரும் ஸத்தராயதே, கஷ்ட'ாயதே, கக்ஷாயதே, க்ருச்'ச்²ராயதே, க³ஹனாயதே

3.1.15 கர்மணோ ரோமந்த²தபோப்⁴யாம் வர்த்திசரோ:

ரோமந்த² (அசை போடுதல்) தபஸ் (தவம்) ஆகிய சொற்கள், முறையே வர்த்தி (மறுபடி செய்தல்) சர் (செயல் செய்தல்) ஆகியவைகளின் செயப்படுபொருளாக வரும் போது க்யங் என்ற ஒட்டு அவைகளின் பின் வரும்.

ரோமந்த²ம் வர்தயதி:ரோமந்த²ாயதே கெ³ள: 'பசு அசைபோடுகிறது'

வா: ஹனுசலனமிதி வக்தவ்யம்

தாடையை அசைத்தல் என்று கூற வேண்டும். அதாவது தாடையை அசைத்தல் என்ற பொருளில் மட்டும்தான் க்யங் உடன் சேர்ந்து இ ச்சொல் ஆக்க வேண்டும்.

கீடோ ரோமந்த²ம் வர்தயதி. இங்கு 'க்யங்'
ஒட்டு சேர்க்கப்படமாட்டாது.

வா: தபஸ: பரஸ்மைபதம் ச

'தபஸ்' என்ற சொல்லோடு க்யங் வரும்போது பரஸ்மைபதமாகும்.

தப: சரதி:தபஸ்யதி: 'அவன் தவம் செய்கிறான்.'

3.1.16 ப³ாஷ்ப ஊஷ்மபப்ாம் உத்³வமனே

ப³ாஷ்ப (ஆவி) ஊஷ்மன் (சூடு) ஆகிய சொற்கள்,
உத்²வமன 'வெளிக் கொணர்தல்' என்ற வினையின்
செயப்படுபொருளாக வரும்போது 'க்யங்' என்ற ஒட்டு அவைகளுக் குப்பின் சேர்க்கப்படும்.

ப³ாஷ்பம் உத்³வமதி = ப³ாஷ்பாயதே
ஆவியாகிறது(அ) கண்ணீர் வடிக்கிறது
ஊஷ்மாணம் உத்³வமதி:ஊஷ்மாயதே 'சூட்டை வெளிப்படுத்துகிறது.'

வா: பே²னாச்'ச' இதி வக்தவ்யம்

பே²னம் (நுரை) என்ற சொல்லுக்குப்பின்பும் என்று அமைய வேண்டும்.

பே²னமுத்வமதி – பே²னாயதே – நுரை கக்குகிறது.

3.1.17 ஸ'ப்³த³ வைர கலஹாப்⁴ர கண்வமேகே⁴ப்⁴ய:

கரணே:

ஸ'ப்³த³ (சத்தம்), வைர (பகை), கலஹ(சண்டை) அப்⁴ர (மேகம்), கண்வ(கெடுதல்), மேக⁴(மேகம்) ஆகியவைகளுக்குப்பின்'க்யங்'ஒட்டு 'செய்தல்' என்ற பொருளில் வரும்.

ஸப்த³ாயதே (=ஸ'ப்³த³ம் கரோதி)
'ஒலி எழுப்புகிறான்.'
வைராயதே (வைரம் கரோதி) 'பகைக்கிறான்.'
கலஹாயதே 'சண்டையிடுகிறான்'
அப்⁴ராயதே 'மேகமாகிறது'

கண்வாயதே 'கெடுதல் செய்கிறான்'
மேக⁴ாயதே 'மேகமாகிறது.'

வா: ஸுதி³ன து³ர்தி³ன நீஹாரேப்⁴யஸ்' ச இதி வக்தவ்யம்
ஸுதி³ன, து³ர்தி3ன, நீஹார ஆகிய சொற்களுக்குப் பின்னும் 'க்யங்' வரும் என்ற கூற வேண்டும்.
ஸுதினாயதே (ஸுதி³னம் கரோதி)
து³ர்தினாயதே, நீஹாரயதே

வா: அட' – அட்ட'ா – ஸீகா – கோட'ா – போட'ா
ஸோட'ா – கஷ்ட'ா க்³ரஹணம் கர்தவ்பம்
அட, அட்டா, ஸீகா, கோட'ா – போட'ா, ஸோட'ா கஷ்டா ஆகியவைகளை இத்துடன் சேர்த்துக் கூற வேண்டும்.
அட'ாயதே, அட்ட'ாயதே, ஸீகாயதே, கோட'ாயதே, போட'ாயதே, ஸோட'ாயதே, கஷ்ட'ாயதே.

3.1.18 ஸுக²ாதி³ப்ய :கர்த்ரு வேத³னயாம்
அனுத்யம்	–	சொல்லக்கூடாத
பாண்யம்	–	புகழத்தகுந்த
வ்ருத்யா	–	மணக்கத் தகுந்தவன்

'வர்யா' என்ற சொல் பெண்பால் சொல்லாக ஆக்கும் போதுதான், 'யத்' ஒட்டோடு இணைந்து விதிப்படி அமையாது. ஆனால் ஆண்பால் சொல்லாக ஆக்கும்போது 'ண்யத்' ஒட்டுச் சேர்க்கப்பட்டு, விதிப்படி அமையும்.

வ்ரு'ங் + ண்யத் = வார்யா வார்யா ரு'த்'விஜ:

3.1.102 வஹ்யம் கரணம்

போக்கு வரத்துக்கு (வஹ்யம்)ப் பயன்படுத்தப்படும் கருவி என்ற பொருளைச் சுட்டும் சொல்லான வஹ்யம் விதிப்படியமையாதது.

வஹ்யம் ஸ'க'ட'ம் – 'இழுக்கும் வண்டி'

வஹ்+யத்=வஹ்யம்

ஆனால் வேறு பொருளைச் சுட்டும்போது வாஹ்ய என்று அமையும்.

வஹ்+ண்யத்=வாஹ்ய: 'எருது'

3.1.103 அர்ய: ஸ்வாமி வைஸ்' யயோ;

'ரு' (போ) என்ற தாது 'யத்' என்ற ஒட்டோடு சேர்ந்து 'சுவாமி', 'வைசியன்' என்ற பொருளைக் கொடுக்கும் 'அர்ய' என்ற சொல் ஆகுகிறது. இச்சொல் ஒரு நிபாதனமாகும்.

ரு' + யத் = அர் + ய = அர்ய:

சூ. 3.1.124 ரு' என்ற ஒட்டுக்குப்பின் 'ண்யத்' வரவேண்டும் என்ற விதியமைக்கிறது. ஆனால், இச்சூத்திரத்தில் குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும்போது, 'யத்' ஒட்டு வரவேண்டும்.

வா: யதோ அனா வ (6.1.213) இத்யாத்[3]யுத[3]ாத் தத்வே ப்ராப்தே, ஸ்வாமின் யந்தோதாத்தத்வம் வக்தவ்யம்.

சூ. 6.1.213இன்படி 'அர்ய' என்ற சொல் முதல் அசையில் உதாத்த சுரம் பெறும். இச்சூத்திரத்தின்படி 'சுவாமி' என்ற பொருளைக் கொடுக்கும் 'அர்ய' என்ற சொல் இறுதியில் உதர்த்த சுரம் பெறும். அதாவது 'அர்ய' என்ற சொல் 'சுவாமி' என்ற பொருளில் இறுதி அசையில் உதாத்தசுரம் பெறும். ஆனால் 'வைசியன்' என்ற பொருளைக் கொடுக்கும்

அதே சொல் முதலசையில் உதாத்தசுரம் பெறும்.

ஆனால்

ஆர்யோ ப்'ராஹ்மண – 'மதிப்புக்குரிய பிராமணன்'

ரு'+ ண்யத் – வ்ருத்[3]தி[4] – ஆர் + ய = ஆர்ய

3.1.104 உபஸர்யா கால்யா ப்ரஜனே

உபஸர்யா என்ற சொல், பருவமெய்திய (கால்ய) அல்லது சினைப்படுத்தத் தகுந்த (ப்ரஜனே) என்ற பொருளை உணர்த்தும் போது 'யத்' என்ற ஒட்டுடன் சேர்ந்து விதிப்படியாக்கப்படாத சொல்லாகும்.

உப'ஸர்யா கெ[3]ள: பருவமெய்தி யபசு

உப'+ ஸ்ரு'+ யத் = உப'+ ஸர் + ய = உப'ஸர்யா

உப'ஸர்யா பட[3]வா–பருவமெய்திய பெண் குதிரை.

ஆனால் உப'ஸார்யா ஸ'ரதி[3] மது[4]ரா

மதுரை சரக்காலத்தில் அணுகத்தகுந்தது.

3.1.105 அஜர்யம் ஸங்க³தம்

அஜர்யம் (அழியாத, நிலையான) என்ற சொல், ஸங்க³த்ம் (தோழமை, சந்திப்பு) என்ற பொருளைச் சுட்டுமானால், அது 'யத்' என்ற ஒட்டைச் சேர்த்து விதிப்படியாக்காத சொல்லாகும்.

அ + ஜ்ரு' + யத் = அ + ஜர் + ய = அஜர்ய

நம் தோழமை அழியாததாக/நிலையாக அமையட்டும்.

ஆனால்

அஜரிதாகம்ப³ல: 'பழையதாக ஆகாத கம்பளி'

இங்கு, தோழமையைக் குறிக்காததால், யத் ஒட்டு வராமல் த்ரு'ச் ஒட்டுச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அ ஜ்ரு' + த்'ரு'ச் = அஜர் + த்ரு = அஜரிதா.

3.1.106 வத³: ஸுபி' க்யப் ச

உபசர்க்கத்துடன் சேராமல் தனியாக நிற்கும் வத்³, (பேசு, கூறு) என்ற தாதுவுடன் ஒரு வேற்றுமைச் சொல் நிற்கும் போது அத்துடன் க்யப் என்ற ஒட்டும் இணைக்கப்படும். அதாவது இங்கு, க்யப் அல்லது யத் ஒட்டு இணைக்கலாம்.

ப்³ரஹ்ம + வத்³ + க்யப் = ய = ப்³ரஹ்ம + உத்³ய = ப்³ரஹ்மோத்யம் 'பிராம்மணனால் கூறப்பட்டது'

அல்லது

ப்³ரஹ்ம + வத்³ + யத் = ய = ப்³ரஹ்மவத்³யம்

'பிராம்மணனால் கூறப்பட்டது'

ஆனால்

வாத்³யம் (வத்³ + ண்யத்:ய 'சங்கீதக் கருவி'

ப்'ரவாத³ம் (ப்'ர + வத் + ண்யத் = ய)

3.1.107 பு⁴வோ ப⁴ாவே

(உபசர்க்கத்தோடு சேர்க்கப்படாத ஒரு வேற்றுமை சொல்லுடன் வரும்)'பூ⁴' என்ற தாதுவுடன் நிலைமை என்ற பொருளில் 'க்யப்' இணைக்கப்படும்.

ப்³ரஹ்ம + பூ⁴ + க்யப்' = ய = ப்³ரஹ்மபூ⁴ய

ப்³ரஹ்மபூ⁴யம் க³த: = 'பிரமனின் நிலையையடைந்தான்'

மற்ற சூழலில் 'கய்ப்' வராது.

ப⁴வ்யம் = பூ⁴ + யத் = ய = ப்³ஒ, உ ய = ப⁴வ்பம் (6.1.71)

ப்'ரப⁴வ்யம் = (ப்'ர + பூ⁴ + யத்)

3.1.108 ஹனஸ்த்ச

(உபசர்க்கத்தோடு சேர்க்கப்படாத, வேற்றுமைச் சொல்லுடன் வரும்) ஹன் (கொல்) என்ற தாதுவுடனும், நிலைமை என்ற பொருளில், க்யப் ஒட்டு இணைக்கப்படும்.' ஹன்' தாதுவின் இறுதியான 'ன்'க்குப் பதிலாக த் வரும்.

ப்³ரஹ்ம + ஹன் + க்யப் = ய = ப³ரஹ்ம ஹத்ய + டாப் = ப்³ரஹ்ம

ஹத்யா – 'பிராமணனைக் கொல்லுதல்' மற்ற சூழலில்
க^{4}ாத' (= ஹன் + க^{4}ஞ்) அடி
ப்ரக^{4}ாத: வர்த'தே' – சண்டை நடக்கிறது

3.1.109 ஏதி ஸ்து ஸா'ஸ் வ்ரு'த^{3}ரு'ஜுஷ: க்யப்
இ(போ), ஸ்து(புகழ்), ஸா'ஸ்(ஆள்) வ்ரு (தேர்ந்தெடு), த்^{3}ரு'(மதி), ஜுஷ் (மகிழ்வி) ஆகிய தாதுக்களுக்குப்பின் 'க்யப்' இணைக்க வேண்டும்.
இத்ய: 'போகக்கூடியது'
இ + க்யப் = ய – இ + துக் = த் (6.1.71) + ய = இத்ய:
ஸ்துத்ய: – புகழத் தகுந்த
ஸி'ஷ்ய: (ஸா'ஸ் + க்யப் = ய) → ஸி'ஸ் (6.4.34)
ய=ஸிஷ்ய: (8.3.60) கற்பிக்த் தகுந்த (அதாவது மாணவன்)
வ்ரு'த்ய : –'தேர்ந்தெடுக்கத்தக்க'
ஆத்^{3}ரு'த்ய: –' மதிக்கத் தகுந்த'
ஜுஷ்ய: 'மகிழ்விக்கத் தகுந்த'
இதற்கு முந்திய சூத்திரத்திலிருந்து அனுவ்ருத்தி மூலம் 'க்யப்' ஒட்டு இச்சூத்திரத்திற்கும் வரும். இருந்தாலும். 'க்யப்' – ஐ இச்சூத்திரத்திலும் திருப்பிக் கூறியிருப்பதன் காரணம், சூ. 3.1.125ஐப் போன்றவை, இத்தாதுக்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்பதைக் குறிப்பிடத்தான். 3.1.125இன் படி 'உ' – வை இறுதியாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின் கட்டாயமாக என்ற பொருளில் 'ண்யத்' இணைக்கப்பட வேண்டும் அதன்படி ஸ்து என்ற தாதுவுக்குப்பின் 'ண்யத்' வரவேண்டும். இச்சூத்திரம் ண்யத் ஒட்டு இணைப்பதற்குத் தடை விதிக்கிறது.
அவஸ்யஸ்துத்ய: (அவஸ்யம் + ஸ்து + க்யப் = ய)
'கட்டாயமாகப் புகழ்த்தகுந்த'

வா: ஸம்ஸி, து^{3}ஹி கு^{3}ஹிப்^{4}யோவா இதி வக்தவ்யம்
ஸம்ஸ்(புகழ்), து^{3}ஹ்(பால்கற), கு^{3}ஹ்(மூடு, மறை) ஆகிய தாதுக்களுக்குப்பின் க்யப் விருப்பாக வரும்.
ஸ'ஸ்யம் / ஸம்ஸ்யம்

ஸம்ஸ் + க்யப் = ய = ஸ'ஸ்யம்
ஸம்ஸ் + ண்யத் = ய = ஸம்ஸ்யம்
து^{3}ஹ்யம் / தே^{3}ாஹ்யம்
து^{3}ஹ் + க்யப் = ய = து^{3}ஹ்யம்
து^{3}ஹ் + ண்யத் = ய = தே^{3}ாஹ்யம்
கு^{3}ஹ்யம்/கோ^{3}ாஹ்யம்

வா: ஆங்பூர்வாத^{3}ஞ்ஜே: ஸம்க்^{3}ஞாயாமுப ஸம்க்^{3}யானம் 'ஆ'வுடன் சேர்ந்து வரும் அஞ்ஜ் (பூசு, தடவு) தாது, பெயர்ச் சொல்லைக் கு றிக்கும்படி

வரும்போது 'க்யப்' அத்துடன் இணைக்கப்படும்.
ஆங் + அஞ்ஜ் + க்யப்
ஆ + அஸ் (6.4.24) + ய = ஆஜ்யம் 'நெய்'

3.1.110 ரு'து^{3}பத^{4}ச்சாக்ல்ரு'பிச்ரு'தே:
க்ல்ரு'ப்(தகு') ச்ரு'த்(காயப்படுத்து) ஆகிய தாதுக்களைத் தவிர, ஏனைய 'ரு' குறில்லை, ஈற்றயலாகக் கொண்ட தாதுக்களுக்குப் பின் 'க்யப்' ஒட்டு இணைக்க வேண்டும்.
வ்ரு'த்^{1} – வ்ரு'த்^{1}யம் (வ்ரு'த்^{1} + க்யப்)
வ்ரு'த்^{4} – வ்ருத்^{4}யம் (வ்ரு'த்^{4} + க்யப்)
க்ல்ரு'ப் – கல்ப்பம் – (க்ல்ரு'ப் + ண்யத்)
ச்ரு'த் – சர்த்யம் (ச்ரு'த் + ண்யத்)
இந்த விதி 'ரு' குறிலாக அமையும்போதுதான் பயன்படுத்தப்படும். இது நெடிலாகும்போது 'ண்யத்' தான் தொடரும்.
க்ரு'த் + ண்யத் = ய = கீர்த்யம்

வா: பாணௌ ஸ்ரு'ஜே ண்யத் வக்தவ்ய:
'பாணி' என்ற சொல்லுடன் வரும் 'ஸ்ரு'ஜ்' தாதுவுக்குப்பின் 'ண்யத்' வரும்.
பாணிஸர்க்^{4}யா ரஜ்ஜூ:–
கைபால் முறுக்க வேண்டிய கயிறு

வா: ஸமவபூர்வாச்ச
ஸ்ரு'ஜ் தாதுவுக்குமுன் ஸம், அவ ஆகியவை நிற்கும்போதும் 'ண்யத்' வரவேண்டும்.
ஸம்/அவஸர்க்^{3}யா

3.1.111 ஈ ச க^{2}ன:
'க^{3}ன்' (தோண்டு) தாதுவுக்குப்பின் 'க்யப்' ஒட்டுப் பயன்படுத்த வேண்டும். தாதுவின் இறுதி எழுத்துக்குப் பதிலாக 'ஈ' வரும்.
க^{2}ன் + க்யப் - க^{2} + ஈ + ய = கே^{2}யம்
'தோண்ட வேண்டிய'

3.1.112 ப்^{4}ரு'ஞோ அஸம்க்^{3}ஞாயாம்
ப்^{4}ரு' (தாங்கு) தாது ஒரு பெயராகப் பயன்படுத்தாத போது அதற்குப்பின் 'க்யப்' வரும்.
ப்^{4}ரு' + க்யப் = ப்^{4}ரு'த்ய: 'வேலைக்காரன்'
ஆனால் ப^{4}ார்ய: 'க்ஷத்திரியன்' இங்கு ஒரு பெயராவதால் ப்^{4}ரு^{4} + ண்ய த்

வா: ஸம்பூர்வாத்^{3}விபா^{4}ஷா
'ஸம்' என்ற உபசர்க்கத்துடன் வரும் 'ப்^{4}ரு'வுடன்' 'க்யப்' விருப்பாக வரும்

ஸம்ப்^{4}ரு'த்யா:/ஸம்ப^4ார்யா:

3.1.113 ம்ரு'ஜே: விப^4ாஷா
ம்ருஜ் (துப்புரவாக்கு) தாதுவுக்குப்பின் விருப்பாக 'க்யப்' வரும்
பரிம்ரு'ஜ்ய:/பரிமார்க்^{3}ய:
இது ப்ராப்தவிப^4ாஷாவுக்கு ஒரு எடுத்துக்காட்டு சூ.110இன்படி 'ம்ரு'ஜ்'க்குப்பிறகு 'க்யப்' வரவேண்டும். இச்சூத்திரம் அதற்கு ஒரு விபா ஷாவைக் குறிப்பிடுகிறது.
பரிம்ரு'ஜ் + ண்யத் (3.1.124) = பரிம்ருஜ் + ய (7.3.52) = பரிமார்க்^{3}ய: (7.2.114)

3.1.114 ராஜஸூய ஸூர்ய ம்ரு'ஷோத்^{3}ய
ரு'ச்ய கு'ப்ய க்ரு'ஷ்ட' பச்ய அவ்யத்^{2}யா:
ராஜசூய சூர்ய ம்ரு'ஷோர்^{3}ய, ரு'ச்ய
கு'ப்ய க்'ரு'ஷ்ட' பச்ய அவ்யத்^{3}ய ஆகியவை' க்யப்'
ஒட்டோடு சேர்ந்து விதிப்படி ஆக்கப்படாத சொற்கள் ராஜ + ஸூ + க்யப் =
ராஜஸூய:– ஒரு யாகத்தின் பெயர்
ஸ்'ரு'/ஸூ + க்யப் = ஸூர்ய: சூரியன்
ம்ரு'ஷ் + வத்^{3} + க்யப் = ம்ருஷாத்^{3}யம்' பொய் வார்த்தை'
ரு'ச் + க்யப் = ரு'ச்ய: 'விரும்பத் தகுந்தவன்'
கு^{3}ப் + க்யப் = கு'ப்யம் – 'விலை மதிப்புக் குறைந்த உலோகம்'
க்ருஷ்ட பச் + க்யப் = க்ருஷ்டபச்யம்
அவ்யத்^{3}ய: 'பாம்பு'

3.1.115 பி^{4}த்^{3}யோத்^{3}த்^{4}யௌ நதே^{3}
பி^{4}த்^{3}ய, உத்^{3}த்^{4}ய ஆகிய சொற்கள், 'நதி' என்ற பொருளில் 'க்யப்' என்ற சேர்ந்து விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள்.
பி^{4}த்^{3} + க்யப் = பி^{4}த்^{3}ய எது (வேகமாக ஓடுவதால்)
கரையை உடைக்குமோ அதாவது ஆறு, பித்தியம் என்ற ஆறு
உத்^{3}த்^{4} + க்யப் = உத்^{3}த்^{4}ய: எதில் தண்ணீர் கரை புரண்டு ஒடுகிறதோ அது உத்தியம் என்ற ஆறு.
ஆனால் பே^{4}த்தா, உடைப்பவன்
உஜ்'ஜி^{2}த்தா, உடைப்பவன்

3.1.116 பு'ஷ்ய ஸித்^{3}த்^{4}யௌ நக்ஷத்ரே
பு'ஷ்ய, ஸித்^{3}த்^{4}ய என்ற சொற்கள் நக்ஷத்திரத்தின் பெயராக வரும்போது 'க்யப்' ஒட்டு இணைக்கப்பட்டு ஆக்கிய நிபாதனமாகும்.
பு'ஷ் + க்யப் = புஷ்ய:
ஸித்^{4} + க்யப் = ஸித்^{3}த்^{4}ய: நக்ஷத்திரங்களின் பெயர்கள்
வேறு பொருளில்
போஷணம் (புஷ் + ல்யுட்)

3.1.117 விபூய விநீய ஜி'த்யா முஞ்ஜ' க'ல்க' ஹலிஷு

விபூய, விநீய ஜி'த்ய என்ற சொற்கள் முறையே முஞ்ஜ என்ற புல், வண்டல் (விநீய) ஏர் (ஹல) ஆகிய பொருட்களைச் கட்டும்போது 'க்யப்' ஒட்டைச் சேர்த்து ஆக்கப்பட்ட நிபாதனமாகும்.

வி + பூ' + க்யப் = பிபூ'ய:

வி + நீ + க்யப் = விநீய:

ஜி + க்யப் = ஜித்ய:

விதிப்படி ஆக்கப்பட்ட சொற்கள்

விபாவ்யம் (வி + பூ' + யத்)

விநோயம் (வி + நீ + யத்)

ஜேயம் (ஜி + யத்)

3.1.118 ப்'ரத்'ய பிப்^{4}யாம் க்^{3}ரஹேஸ்' ச^{2}ந்த^{3}ஸி

'க்^{3}ரஹ்'(பிடி) என்ற தாது, ப்ரதி, அபி, ஆகிய உபசர்க்கங்களுடன், வரும்போது வேதமொழியில், 'க்யப்' ஒட்டு அத்தாதுவைத் தொடர் ந்து வரும்.

மத்'தஸ்ய நப்'ரதி'க்^{3}ரு'ஹ்யம் தஸ்மாந்

நாபிக்^{3}ரு'ஹ்யம்

ப்ரதி + க்^{3}ரஹ் + க்யப் = ப்'ரதி'க்^{3}ருஹ்யம்

வேறு கிளை மொழிகளில்

ப்ரதி'க்^{3}ராஹ்யம், அபி'க்^{3}ராஹ்யம்

3.1.119 ப'த^{3}ாஸ்வைரி ப^{3}ாஹ்யா பக்ஷயேஷு ச

க்^{3}ரஹ் என்ற தாதுவுக்குப்பின் கீழ்க்கண்ட பொருட்களை உணர்த்த க்யப் ஒட்டு இணைக்கப்படும் (1) சொல் (ப'த^{3}) (2)சார்ந்த (அஸ்வைரி) (3)வெளியே நிற்கும் (ப^{3}ாஹ்யா) (4)ஒரு பக்கத்தைச் சார்ந்த (பக்ஷய)

ப்'ரக்^{3}ரு'ஹ்யம் பத^{3}ம் (பார்க்க 1.1.11)

அவக்^{3}ரு'ஹ்யம் பத^{3}ம்

க்^{3}ரு'ஹ்யகா: ஸு'கா: 'சிறைப்படுத்தப்பட்ட கிளிகள்'

க்^{3}ராமக்^{3}ரு'ஹ்யா ஸேனா – 'கிராமத்துக்கு வெளியே நிற்கும் படை'

வாஸுதேவ க்^{3}ரு'ஹ்யா – 'கிருஷ்ணன் பக்கம் உள்ளவர்கள்'

3.1.120 விப^{4}ாஷா க்ரு' வ்ரு'ஷோ:

க்'ரு' (செய்), வ்ரு'ஷ் (மழைபெய்) என்ற தாதுக்களுடன் 'க்யப்' ஒட்டு விருப்பாக வரும்.

க்'ரு'த்யம் = (க்'ரு' + க்யப்)

கார்யம் = (க்ரு + ண்யத்)

வ்ரு'ஷ்யம் = (வ்ரு'ஷ் + க்யப்) செய்யவேண்டியது

வர்ஷ்யம் (வ்ரு'ஷ் + ண்யத்)

3.1.121 யுக்³யம் ச பத்ரே

வாகனம் (பத்த்ரம்) என்ற பொருளைக் குறிக்கும் 'யுக்³யம்' நிபாதனமாகும். யுக்³யோ கெ³ள: வண்டியில் பூட்டப்பட்ட காளை யோக்³யம் (யுஜ்+ண்யத்) விதிப்படி ஆக்கப்பட்ட சொல்

3.1.122 அமாவாஸ்யா³ன்யதரஸ்யாம்

அமாவாஸ்யா என்ற சொல் விருப்பாக நிபாதனமாகும்.

'வஸ்' என்ற தாதுவுடன் அமா (உடன்) என்ற சொல், காலத்தைக் குறிக்கும் வகையில் அமைந்தால், அத்தாதுவுக்குப் பின் 'ண்யத்' ஒட்டு இணைக்கப்படும் இங்கு 'வ்ரு'த்³தி' விருப்பாக வரும். அமாவஸ்யா அல்லது (விருத்தியுடன்) அமாவாஸ்யா

3.1.123 ச²ந்த³ஸி நிஷ்ட'ர்க்ய தே³வஹூய
ப்ரணீய உன்னீய உச்'சி²ஷ்ய மர்ய
ஸ்த'ர்யாத்⁴வர்ய க²ன்ய க²ான்ய தே³வ யஜ்யா
ப்ரு'ச்'ச²ய, ப்ரதிஷீவ்ய ப்³ரஹ்ம, வாத்³ய
ப⁴ாவ்ய ஸ்தாவ்ய உபச'ாவ்ய ப்ருட்³ாணி

வேதமொழியில் கீழ்க்கண்ட சொற்கள் விதிப்படியமையாதவை

1) நிஷ்ட'ர்க்ய: (நிஸ் + க்ருத் + ண்யத்)
2) தே³வஹூய: (தே³வ + ஹ்வே + க்யப்) அல்லது (தே³வ + ஹூ + க்யப்)
   கடவுளை அழைத்தல்
3) ப்'ரணீய: (ப்ர + நீ + க்யப்)
4) உந்நீய: (உத்' + நீ + க்யப்)
5) உச்'சி²ஷ்ய: (உத்' + ஸி'ஷ் + க்யப்)
6) மர்ய: (ம்ரு' + யத்)
7) ஸ்த'ர்யா: (ஸ்த்'ரு' + யத் + டாப்)
8) த்⁴வர்ய: (த்⁴வ்ரு' + யத்)
9) க²ன்யா: (க²ன் + யத்)
10) க²ான்ய: (க²ன் + ண்யத்)
11) தே³வயஜ்வா (தே³வ + யஜ் + யத் + டாப்)
12) ஆப்ரு'ச்'ச²ய: (ஆங் + ப்ரச்'ச² + க்யப்)
13) ப்ரதிஷீவ்ய: (ப்ரதி – ஸீவ் + க்யப்)
14) ப்³ரஹ்மவாத்³ய: (ப்³ரஹ்ம – வத் + ண்யத்)
15) ப⁴வ்ய (பூ⁴ + ண்யத்)
16) ஸ்த'ாவ்ய: (ஸ்து' + ண்யத்)
17) உப'ச'ாம்ய ப்'ருட்³ம் (உப – சி' + ண்யத்)

உபச'ாம்ய + ப்'ருட்³ம் 'ப்'ருட³ம்' இரண்டாவது சொல்லாக நிற்கும் போது நிபாதனமாகும்.

வா: ஹிரண்ய இதி வக்தவ்யம்

'தங்கம்' என்ற பொருளில் உபசாம்ய ப்ருட'ம் நிபாதனமாகும் என்று கூற வேண்டும் வேறு பொருளில் உபசேயப்ருட'ம் – (உபசி + யத்)

3.1.124 ரு'ஹலோர் ண்யத்

ரு'(குறில்/நெடில்)வை ஈறாக் கொண்ட தாதுக்களுக்கும் ஒரு மெய் யை ஈறாகக் கொண்ட தாதுக்களுக்கும் பின்னால் ண்யத் சேர்க்க வேண்டும்.

க்ரு' + ண்யத் = கார்யம்

வச் + ண்யத் = வாக்யம்

3.1.125 ஓர் ஆவஸ்'யகே

'உ' (குறில்/நெடில்)வை ஈறாகக் கொண்ட தாதுவுக்குப்பின் 'ண்யத்' அவசியம் என்ற பொருளை உணர்த்தும்போது இணைக்கப்படும்.

லாவ்யம் (லு + ண்யத்) 'கட்டாயமாக வெட்ட வேண்டும்'

ஆனால்

லவ்யம் (லு + யத்) 'வெட்டக் கூடியது'

3.1.126 ஆஸுயுவபிரபிலபித்' ரபிசமஸ்ச

'ஆங்' உடன் சேர்ந்த ஸு (வடி), யு (இணை)வப் (விதையிடு), ரப், லப் (பேசு), த்ரப்(வெட்கப்படு), சம் (உண்/அருந்து) ஆகிய தாதுக்களுக்குப் பின்' ண்யத்' சேர்க்கப்படும்.

ஆஸாவ்யம்	–	வடிக்கத் தகுந்த
யாவ்யம்	–	சேர்க்கத் தகுந்த
வாப்யம்	–	விதைக்கத் தகுந்த
ராப்யம்/லாப்யம்	–	கூறத் தகுந்த
த்ராப்யம்	–	நாணத்தகுந்த
ஆசாம்யம்	–	அருந்தத் தகுந்த

மேலே கூறிய தாதுக்களைத் தவிர இதைப்போன்ற மற்ற தாதுக்களும் இத்துடன் சேர்க்க வேண்டுமென்பதை'ச' (சூத்திரத்தில்) உணர்த்துகிறது.

3.1.127 ஆநாய்யோ அநித்யே

நிலையில்லாத (அநித்யே) என்ற பொருளைக் குறிக்கும் ஆநாய்ய என்ற சொல் நிபாதனமாகும்.

ஆங் + நீ + ண்யத் = ஆநாய்ய

ஆநாய்ய: த'க்ஷிணாக்னி:

இது ஒருவகையான தக்ஷிணாக்னி. இது க'ார்ஹபத்யாக்னியிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த நெருப்பு எப்போதுமே எரிந்து கொண்டிருப்பதல்ல. அதனால் இதை ஆநாய்ய என்று கூறப்படுகிறது. ஒரு செல்வந்தரான வைசியன் வீட்டிலிருந்தோ அல்லது எரியும் இடத் திலிருந்தோ, க'ார்ஹபத்யம் என்ற நெருப்பிலிருந்தோ தக்ஷிணாக்னி எடுத்துக் கொள்ளலாம். ஆனால்

க³ார்ஹபத்தியாக்னியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது மட்டும் ஆநாய்யதக்ஷிணாக்னி என்ற பெயர் பெறும்.

எல்லா நிலையற்ற பொருட்களும் ஆநாய்ய என்ற பெயரால் குறிக்கப்படுவதில்லை. மந்திரங்களால் ஏற்றப்பட்ட இத்தக்ஷிணாக்னி மட்டும் இப்பெயர் பெறும். மற்ற பொருளில் அதாவது கொண்டுவர வேண்டும் என்ற பொருளில் ஆநேயமாகும்.

3.1.128 ப்ரணாய்யோ அஸம்மதெ³ள

'உடன்பாடின்மை கண்டனம் தெரிவி' என்ற பொருளை உணர்த்தும் ப்ரணாய்ய: ஒரு நிபாதனம்

ப்ர – ணீ + ண்யத் = ப்ரணாய்ய:

ப்ராணாய்ய: சோர: 'கண்டிக்கத்தகுந்தவன் திருடன்'

விதிப்படியமைந்த சொல் ப்ரணேய:

3.1.129 பாய்ய ஸான்யாய்ய நிகா³ய்ய தா⁴ய்யாமான உறவிர் நிவாஸ ஸாமிதே⁴னீஷூ

பாய்ய, ஸான்னாய்ய, நிகாய்ய, தா⁴யயா ஆகிய சொற்கள் முறையே அளவு (மான) அவிசு(உறவிர்), இருப்பிடம் (நிவாஸ) ஒரு ருக்வேத மந்திரம் (ஸாமிதே⁴நீ) என்ற பொருட்களில் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்களாகும்.

1) மாங் + ண்யத் = பாய்யம்
2) ஸம் + நீ + ண்யத் – ஸான்னாய்யம்
3) நி + சி + ண்யத் = நிகாய்யம்
4) தா⁴ + ண்யத் = தா⁴ய்யா

விதிப்படியாக்கப்பட்ட சொற்கள் மேபம், ஸன்னேயம், நிசேயம், தே⁴யம்

3.1.130 க்ரதௌ கு³ண்ட³பாய்ய ஸஞ்சாய்யௌ

'யாகம்' என்ற பொருளில் வரும் கு³ண்ட³பாய்ய: ஸஞ்சாய்ய: என்ற சொற்கள் விதிப்படியமையாதவை கு³ண்ட³ + பா + யத் = குண்ட³பாய்ய: ஒரு யாகத்தின் பெயர் 'பானையால் சோமரஸம் பருகப்படும் இந்த வேள்வியில் என்ற பொருள்.

ஸம் + சி + ண்யத் = ஸஞ்சாய்ய: – ஒரு யாகத்தின்பெயர் இந்த யாகத்தில் ஸோமரஸம் சேர்க்கப்படுகிறது என்ற பொருள்.

3.1.131 அக்³னௌ பரி சாய்யோபசாய் யஸமூஹ்யா:

நெருப்பின் பெயரைக் குறிக்கும் பரிசாய்ய, உபசாய்ய, ஸமூஹ்ய, என்ற சொற்கள் விதிப்படியாக்கப்படாதவை.

பரி + சி + ண்யத் = பரி + சை + ய = பரி + சாய் + ய = பரிசாய்ய:

'ய' – வுக்கு முன் நிற்கும் 'ஐ', 'ஆய்' ஆக மாறுவது விதிப்படியல்ல.

பரிசாய்ய:– வட்டமாக அமைக்கப்பட்டிருக்கும் வேள்வித் 'தீ'

உபசாய்ய: (= உப + சி + ண்பத்) ஒரு வகையான வேள்வித் 'தீ'

ஸமூஹ்ய: (சம் + வஹ் + ண்யத்) ''ஒரு வேள்வித் தீயைக் குறிக்காமல் வரும்போது பரிசேயம், உபசேயம், ஸம்வாஹ்யம் முறையே குவிக்க வேண்டும், அதிகரிக்க வேண்டும், எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்ற பொருட்களை உணர்த்தும்.

3.1.132 சித்'யாக்³னிசித்'யே ச

சித்'ய, அக்³னிசித்'யா என்ற சொற்களும், வேள்வித்தீ என்ற பொருளில் நிபாதனமாகும்.

சித்'யோ அக்னி: 'இறுதிச் சடங்குக்கான தீ'

அக்னிசித்யா 'அக்னிசயனம்'

3.1.133 'ண்வுல் த்'ரு'சௌ'

ண்வுல் (-அக), த்'ரு'ச் (த்'ரு') என்ற ஒட்டுக்கள் தாதுவுடன் இணைக்கப்படும் ண்வுல், த்ருச் ஒட்டுக்கள் கர்த்தாவைக் குறிக்கும் ஒட்டுக்கள்

க்ரு' + ண்வுல் - கார + உ (7.2.115)-

கார + அக (7.1.1) - காரக: 'செய்பவன்'

க்ரு' + த்ரு'ச் - கர் + த்ரு' (7.3.84) கர்த்ரு' செய்பவன்.

3.1.134 நந்தி³க்³ரஹி பசாதி³ப்⁴யோ ல்யுணின்யச:

நந்த்³, க்³ரஹ், பச், ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த தாதுக்களுக்குப்பின், முறையே, 'ல்யு', 'ணினி', 'அச்' என்ற ஒட்டுக்களை கர்த்தாவைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் ஆக்குவதற்கு இணைக்க வேண்டும்.

நந்த்³ + ல்யு - யு - நந்த்³ + அன (7.1.1) - நந்தன: மகன் (மகிழ்விப்பவன்)

வா: நந்தி³ வா'ஸி மதி³ தூ³ஷி ஸாதி⁴ வர்தி³தி⁴
ஸோ'பி⁴ ரோசிப்⁴யோ ண்யந்தேப்⁴ய: ஸம்க்³ஞாயாம்.

நந்த்³, வாஸி' ஆகிய வார்த்திகத்தில் குறிப்பிட்ட தாதுக்கள் இயக்குவினையாக வரும்போது அவைகள், பெயர்ச் சொல்லைக் குறிப்பதாக அமைந்தால், அவைகளுக்குப் பின் ல்யுட் ஒட்டு இணைக்க வேண்டும்.

நந்த³ன:	–	மகிழ்விப்பவன்
வா'ஸன:		
மத³ன:	–	மன்மதன்
தூ³ஷண:	–	ஒரு அசுரனின் பெயர்
ஸாத⁴ன:		
வர்த்³த⁴ன:		
ஸோ'ப⁴ன:		
ரோசன:		

வா: ஸஹிதபித³மேஸம்க்³ருாயாம்

இயக்குவினையல்லாதஸஹி,த'பித³மிஆகியவைகளுக்குப்பின்னும்'ல்யுட்' ஒட்டு பெயர்ச் சொல்லைத் தருவிக்கஇணைக்க வேண்டும்.

ஸஹன:

த'பன: முனிவர்

தமன:

க்ரஹ் + ணினி = இன் – க்³ராஹி – பிடித்துக் கொள்பவன்

உத்ஸஹ் + ணினி = இன் = உத்ஸாஹி

வா: ரக்ஷ ஸ்'ரு' வஸ்பவ'ஸ்'ாம் நெள

'நி'யுடன் சேர்ந்து நிற்கும், ரக்ஷ, ஸ்'ரு', வஸ் வப், ஸ'ா ஆகிய தாதுக்களுக்குப்பின் 'ணினி' ஒட்டு வரும்.

நிரக்ஷீ

நிஸ்'ரவீ

நிவாஸீ

நிவாபீ

நிஸாயீ

வா: யாசி வ்யாஹ்ரு' ஸம்வ்யாஹ்ரு வ்ரஜ் வத்³ வாஸாம் ப்ரதிஷித்³தா³னாம்.

எதிர்மறைப் பொருளில், யாசி, வ்யாஹ்ரு ஆகிய தாதுக்களுக்குப் பின் 'ணின்' ஒட்டு சேர்க்கப்படும்.

அயாசீ (அயாச + ணினி) யாசிக்காதவன்

அவ்யாஹாரீ	–	பேசாதவன்
அஸம்வ்யாஹாரீ	–	பேச்சு வார்த்தையில் கலந்து கொள்பவன்.
அவ்ராஜீ	–	தெரியாதவன்
அவாதீ³	–	'பேசாதவன்'
அவாஸீ	–	'வசிக்காதவன்'

வா: அசாமசித்த கர்த்ரு' காணாம்

எதிர்மறைப் பொருளை உணர்த்தும், ஓர் உயிரெழுத்தை ஈறாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின் 'ணினி 'ஒட்டு, இணைக்க வேண்டும்.

அகாரீ (அக்'ரு ணினி)

வா: விஸ'யீ விஷயீ தே³ஸே'

இடம் என்ற பொருளில் வி'ஸயீ, விஷயீ என்ற சொற்கள் 'ணினி' ஒட்டு சேர்க்கப்பட்டுத் தருவிக்கப்பட்டவை.

வா: அபி⁴பா⁴வீ பூ⁴தே கடந்தகாலத்தை உணர்த்தும் 'அபி⁴ப⁴ாவீ' என்ற சொல் நிபாதனமாகும். பச (பச் + அச் = அ) வச, வப

3.1.135 இகு3ப'த4க்3ஞாப்1ரீ கிர: க:

'இக்1' ப்ரத்யாஹாரத்தைச் சேர்ந்த உயிரை (இ, உ, ரு1, ல்ரு1) ஈற்றயலாகக் கொண்ட தாதுக்களுக்குப் பின்பும், க்3ஞா (அறி), ப்1ரீ, 'மகிழ்', 'க்ரூ1'(சிதறடி) ஆகிய தாதுக்களுக்கு பின்பும் 'க' என்ற ஒட்டு கர்த்தாவைக் குறிக்கும் பெயர்ச் சொல் ஆக்குவதற்கு இணைக்கப்படும்.

விக்ஷிப: (விக்ஷிப் + க = அ)

பு3த4 : (பு3த்4 + க = அ)

க்3ஞ (க்3ஞா + க = அ – க்ஞ + அ (6.4.64)=

க்ஞ: அறிவாளி

ப்ரிய: (ப்1ரீ + க = அ → ப்ர் – இய்,

(6.4.77) + அ = ப்ரிய: 'மகிழ்விப்பவன்'

கிர: (க்ரு1+ க = அ → க்இர் + அ = கிர:) 'பன்றி'

தேவ, ஸேவ, மேஷ ஆகிய சொற்கள் 'பச்' வகுப்பைச் சேர்ந்தன. இச்சொற்கள் முறையே தி3வ், ஸிவ், மிஷ், தாதுக்களிலிருந்து தருவிக்கப்பட்டவை, இத்தாதுக்களின் ஈற்றயல், 'இக்1' ப்ரத்யாஹாரத்தைச் சேர்ந்த 'இ'யாகும். ஆனால், இச்சூத்திரத்தின்படி 'க்' ஒட்டைச் சேர்த்தால் தவறான சொற்கள் (தி3வ, ஸிவ, மிஷ கிடைக்கும்)

3.1.136 ஆத'ஸ்'ச உபஸர்கே3

உபசர்க்கத்தோடு சேர்ந்த 'ஆ'வை ஈறாக் கொண்ட தாதுவுக்குப் பின்னும் 'க' இணைக்கப்படும்.

ப்ரஸ்த2: (ப்ரஸ்த2ா + க) ஒத்து போகிறவன். இச்சூத்திரம் 3.1.40க்குப் புறனடை. இது 'ண' வருவதைத் தடுக்கிறது.

3.1.137 ப1ாக்4ராத்4மா தே4ட்1 த்3ருஸ1 ஸ1:

பா (குடி, அருந்து), க்4ரா (முகர்) த்4மா (ஊது), தே4ட்1 (உறிஞ்சு), த்3ருஸ் (பார்) ஆகிய தாதுக்களுக்குப் பின் 'ஸ' ஒட்டுச் சேர்க்க வேண்டும்.

உத்1பிப3: (உத்1ப1ா + ஸ1= அ → உத் பிப3) (7.3.78) 'குடிப்பவன்'

உஜ்1ஜி2க்4ர: உத்3த4ம: உத்3த4ய: உத்1ப'ஸ்ய:

ஜிக்4ரதே: ஸம்க்3ஞாயாம் ப்ரதிஷேதோ4 வக்தவ்ய:

'க்4ரா' தாதுவுக்குப்பின் அதிலிருந்து பெறப்பட்ட சொல் ஒரு பெயராக அமையும்போது 'ஸ' ஒட்டு வருதைத் தடை செய்ய வேண்டும்.

வ்யாக்4ர: 'புலி'

(வி + ஆ + க்4ரா + க = இ)

3.1.138 அனுபஸர்க3ால் லிம்ப விந்த3 த4ாரி

பாரி வேத்3யு தே3ஜி சேதி1 ஸாதி1 ஸாஹிப்4யஸ்1 ச

கீழ்க்கண்ட தாதுக்கள், உபசர்க்கத்தோடு சேராமல், தனித்து வரும்போது அவைகளுக்குப்பின் 'ஸ' என்ற ஒட்டு இணைக்க வேண்டும்.

லிம்ப: (லிப் + ஸ1= அ) 'பூசுபவன்'

விந்த³: (வித் + ஸ¹ = அ) 'கிடைக்கப் பெற்றவன்'
த⁴ராய: (த⁴ாரி + ஸ¹) 'தாங்குபவன்'
பா¹ராய: (பாரி + ஸ¹) 'கரைகண்டவர்'
வேத³ய: (வேதி³ + ஸ¹) 'அறிவிப்பவர்'
உதே³ஜய: (உத் – ஏஜி + ஸ்) 'ஆட்டுபவர்
சே¹த³ய: (சித் + ணிச் = சிதி + ஸ்) 'உணர்பவர்'
ஸாதய: (ஸாத் + ஸ¹) உதவியாளர்
ஸாஹய: (ஸாஹி + ஸ¹) ஆதரவாளர்

வா: நெள லிம்பேரிதி, வக்தவ்யம்.
'நீ' உபசர்கத்துடன் கூடிய 'லிப்' என்ற தாதுவுக்குப்பின் 'ஸ¹' வரும்.
நிலிம்பா நாம தே³வா: சில கடவுள்களின் பெயர்.

வா: க³வாதி³ஷு விந்தே³ ஸம்க்³ஞாயாம்
'கோ' முதலிய சொற்களுடன் சேர்ந்து நிற்கும் 'விந்த³' என்ற தாதுவின் பின் 'ஸ' என்ற ஒட்டை ஒரு பெயரைக் குறிக்கும் சொல்லாக தருவிக்கப்பட்ட சொல் அமையும்போது, இணைக்க வேண்டும். கே³ாவிந்த³ :அரவிந்த³:

3.1.139 த³த³ாதி³ த³த⁴ாத்யோ: விப⁴ாஷா
உபசர்க்கத்தோடு சேராமல், தனியாக வரும் த³ா (கொடு) தா⁴ (தாங்கு) என்ற தாதுக்களுக்குப்பின் 'ஸ¹'விருப்பாக வரும்.
இது 'ண' ஒட்டைச் சேர்ப்பதற்குத் தடை விதிக்கிறது.
த³த³: (த³ா + ஸ¹, த³ாத³ா (6.1.17), த³த³ா அ → த³த்³அ (6.4.112) = த³த³ 'கொடையாளி'
அல்லது த³ாய: (த³ா + ண) பரம்பரைச் சொத்து
த³த⁴: (த⁴ா + ஸ) 'தாங்குபவன்'
த⁴ாய: (த⁴ா + ண) 'தாங்குபவன்'

3.1.140 ஜ்வலிதி கஸந்தேப்⁴யேண:
(உபசர்க்கமில்லாமல் தனியாக நிற்கும்) ஜ்வல் (ஒளிவிடு) என்ற தாதுவில் தொடங்கி, கஸ் (போ) என்ற தாதுவில் முடியும் வகுப்பைச் சேர்ந்த, எல்லா தாதுக்களுக்குப்பின் 'ண' என்ற ஒட்டை விருப்பாக சேர்த்து கருத்தாவைக் குறிக்கும் பெயர்ச் சொல் தருவிக்கப்படும்.
இது அச் ஒட்டுக்குப் புறனடை
ஜ்வால: ஜ்வல் + ண = அ = ஜ்வால:அல்லது ஜ்வல: (ஜ்வல் + அச் = அ). 'எரிதல்', 'ஒளிவிடுதல்' இதில் கூறப்பட்ட தாதுக்கள் மொத்தம் 56. இவை 'ப்⁴வாதி' வகுப்பைச் சேர்ந்தவை.
'ண' ஒட்டின் 'ண்' ஒரு 'இத்', ஈற்றயல் உயிரை, இந்த 'இத்' விருத்தியாக்கும். ஆனால், உபசர்க்கத்துடன் சேர்ந்து வரும் தாதுக்களுக்குப் பின் 'அச்' தான் இணைக்க வேண்டும்.

வா: தனோதே: ணஸ்ய உபஸம்க்²யானம்

தன் (விரி) என்ற தாதுவுக்குப்பின்னால் 'ண' வரவேண்டுமென்று கூற வேண்டும்.

'விருப்பாக' (விய⁴ாஷா) உபசர்க்கமில்லாமல் (அனுபஸர்காத்) ஆகியவை இந்த வினைக்கு இல்லை.

அவதான: (அவதன் + ண) 'விரித்து வைப்பவர்'

3.1.141 ஸ்'யாத்³ வ்யத⁴ாஸ்ரு' ஸம்ஸ்ருவதீண
வஸா' ஹ்ரு' லிஹ ஸ்'லிஷஸ்' வஸஸ்' ச

ஸ்'யா (போ), 'ஆ'வில் முடியும் தாதுக்கள், வ்யத்⁴ (துளைத்து, உட்செல்) ஆஸ்ரு', ஸம்ஸ்ரு' (ஊறு) அதி + இண் (மீறு), அவ + ஸா (முடி) அவஹ்ரு' (எடுத்துக் கொள்) லிஹ்(நக்கு)ஸ்லிஷ்(அணை, கட்டிக்கொள், பிடி) ஸ்'வஸ் (மூச்சுவிடு) ஆகிய தாதுக்களுக்குப்பின்னும், 'ண' ஒட்டு, கர்த்தாவைக் குறிக்கும் சொல்லைத் தருவிக்க இணைக்க வேண்டும்.

அவஸ்'யாய: அவ + ஸ்'யை = ஸ்'யா + ண = அ

அவ + ஸ்'யா + ய் + அ (7.3.23) = அவஸ்யாய

'ஸ்'யை' என்ற தாது, ஒட்டுக்கள் தொடரும்போது ஸ்'யா வாக மாறும் (6.1.45) ஆகையால் 'ஆ'வை ஈறாகக் கொண்ட தாதுக்கள் (ஆத்) என்பதில் இது அடங்கும். இதைத் தனியாகப் பிரித்துக் கூறுவதின் பயன் என்ன, 'ண' ஒட்டைச் சேர்ப்பதற்குத் தடை விதிக்கும் எல்லாவிதியும் இதில் பயன்படுத்தக்கூடாது என்று உணர்த்த இதைத் தனியாகக் குறிப்பிட்டிருக்கிறது. இதை ப3ாத4க43ாத4னம் என்று கூறுவார்கள். அதாவது தடை விதிக்குத் தடை.

காட்டாக 3.1.136, உபசர்க்கத்துடன் கூடிய 'ஆ'வை இறுதியாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின் 'க' ஒட்டை

தாதுக்களுக்குப்பின் 'க' ஒட்டை இணைக்க வேண்டுமென்று கூறுகிறது. ஆனால் இந்த விதி 'ஸ1யா'வுக்குப் பயன்படுத்தக் கூடாது.

அவஸ்'யாய:	–	'உறைபனி'
ப்ரதிஸ்'யாய:	–	'உறைபனி'
த³ாய:	–	பரம்பரை உடைமை
த⁴ாய:	–	தாங்குபவன்/ஆதரவாளர்
வ்பாத⁴:	–	வேட்டைக்காரன்
ஆஸ்ராவ:	–	நீர்வெளியேறுதல், சளி
ஸம்ஸ்ராவ:	–	ஒன்றாகப் பாய்தல், சந்திப்பு
அத்யாய:	–	வரம்பு கடத்தல்
அவஸாய:	–	முடிவு
அவஹார :	–	எடுத்துக் கொள்பவன்
லேஹ:	–	நக்குபவன்
ஸ்'லேஷ:	–	அணைப்பவன்
ஸ்வாஸ :	–	'மூச்சு'

3.1.142 து³ன்யோரனுபஸர்கே³
உபசர்க்கமில்லாமல், தனியாக நிற்கும் து³(எரி), நீ (முன்செல்) என்ற தாதுக்களுக்குப்பின் 'ண' வரும்.
த³ாவ: (து³ + ண = அ) 'காட்டுத்தீ'
நாய: (நீ + ண = அ) 'தலைவன்'
ஆனால், ப்ரத³வ: ப்ரணய: 'காதலன்'

3.1.143 விபா⁴ஷா க்³ரஹ:
'க்³ரஹ்' (பிடி)என்ற தாதுவுக்குப்பின் 'ண' விருப்பாக வரும்.
இது 'அச்' (3.1.134)க்குப் புறனடை
க்³ராஹ: (க்³ராஹ் + ண = அ) முதலை
க்³ரஹ: 'கிரஹம் (சோதிடத்தில்) க்³ரஹ் + அச்

வா:. ப⁴வதேஸ்' ச இதி வக்தவ்யம்
'பூ⁴' என்ற தாதுவுக்குப் பின்னும் 'ண' விருப்பாக வரும்.
பா⁴வ: (பூ⁴ + ண = அ) 'நிலைமை'
ப⁴வ: (பூ + அச் = அ)

3.1.144 கே³ஹே க:
க்³ரஹ் (பிடி) என்ற தாதுவுக்குப்பின் அதனால் தருவிக்கப்பட்ட சொல் 'வீடு' என்ற பொருளை உணர்த்தும்போது 'க' ஒட்டு வரும்.
க்³ரு'ஹம் – 'வீடு' (க்³ரஹ் + க = அ)

3.1.145 ஸி'ல்பினி ஷ்வுன்
ஒரு தாதுவுக்குப்பின் 'ஷ்வுன்' ஒட்டு, அதனால் தருவிக்கப்பட்ட சொல் 'கலைஞன்' என்ற பொருளை உணர்த்தும்போது இணைக்க வேண் டும்.
வா ந்ரு'தி க²னி ரஞ்ஜிப்⁴ய: பரிக³ணனம் கார்தவ்யம்
இந்த ஒட்டு, அ தாவது ஷ்வுன், ந்ரு'த், 'நாட்டியமாடு' க²ன் (தோண்டு) ரஞ்ஜ் (சாயம் ஏற்று) ஆகிய மூன்று ஒட்டுக்களோடு மட்டுந்தான் சேர்க்க வே ண்டும்.
ந்ரு'த் + ஷ்வுன் = உக: = நர்தக: 'நாட்டியக்காரன்'
நர்தகீ (பெண்பால்)
க²னக: 'தோண்டுபவர், க²னகீ (பெண்பால்)
ரஜக: 'வண்ணான்' ரஜகீ (பெண்பால்)

3.1.146 க³ஸ்த²கன்
கை³ (பாடு) என்ற தாதுவுக்குப்பின், த²கள் = (த²க) என்ற ஒட்டு, தருவிக்கப்பட்ட சொல், கலைஞன் என்ற பொருளை உணர்த்தும்போது இணைக்கவேண்டும்.
கா³த²க: (கை³ + த²கன் = த²க) 'பாடகன்'
கா³த²கீ (பெண்பால்)

3.1.147 ண்யுட்'ச

மேலே குறிப்பிட்ட பொருளில், 'கை³', என்ற தாதுவுக்குப் பின்னும் 'ண்யுட்' ஒட்டும் வரும்.

கை³ + ண்யுட்ஷ்யு = அன → க³ாயன: 'பாடகன்'

க³ாயனீ (பெண்பால்)

3.1.148 ஹஸ்'ச வ்ரீஹிகாலேயோ:

'ஹா' என்ற தாவுக்குப்பின்னும் 'ண்யுட்' ஒட்டு இணைக்கப்படும். தருவிக்கப்பட்ட சொல், 'அரிசி', 'காலம்' என்ற பொருளைக் குறிக்கும்.

ஹா + ண்யுட்ஷயு=அன=ஹாயன ஒருவகையான அரிசி, ஆண்டு இவ்விரண்டு சொற்களிலும் சுரம் மாறுபடும்.

3.1.149 ப்ருஸ்ருல்வ: ஸமபி⁴ஹாரோவுன்

ப்ரு(போ) ஸ்ரு' (இயங்கு) லூ (வெட்டு) ஆகிய தாதுக்களுக்குப்பின், 'வுன்' என்ற ஒட்டு, 'சிறந்த' என்ற பொருளை உணர்த்தும் ப்ரவக: (ப்ரு + வுன் = அக) 'நன்றாக முன்னேறுகிறவன்'

ஸரக: 'நன்றாக இயங்குபவன்'

லவக: நன்றாக வெட்டுபவன்

3.1.150 ஆ'ஸிஷிச

'ன்' ஒட்டு, 'வாழ்த்துதல்' என்ற பொருளைக் குறிக்கும் போது எல்லா தாதுக்களுக்குப் பின்னாலும் வரும்.

ஜீவக: 'வாழட்டும்'

நந்த³க: 'மகிழட்டும்'

3.2.1 க'ர்மணி அண்

செயப்படுபொருளை (கர்மன்) உபபதமாகக் கொண்ட தாதுவுக்குப்பின் 'அண்' (க்ருத் ஒட்டு) இணைக்க வேண்டும். கர்மனை, நிவர்த்யம், விகார்யம், ப்ராப்யம் என்று 3 வகையாகப் பிரிக்கலாம். நிவர்த்யமென்பது முதலில் இல்லாத ஒன்றை உருவாக்குவது. காட்டாக – கும்ப⁴கார: 'குயவன்' என்ற தொகையில், கும்ப⁴ம் 'பானை' உபபதம் க'ார:= க்'ரு' + அண் உபபதமாக நிற்கும் கு'ம்ப⁴ம் என்ற சொல் செயப்படுபொருள் விகார்யம் என்பது, முதலில் இருக்கும் பொருளை மாற்றமடையச் செய்வது, காண்டலாவ: 'கிளைவெட்டுபவன்' (காண்டம் + லூ + அண்) ப்ராப்யம் என்பது, இல்லாத ஒன்றை உருவாக்குவதோ அல்லது இருக்கிற பொருளை மாற்றமடையச் செய்வதோ அல்ல. இவ்விரண்டுமே அல்லாமல், செயலினால் மாத்திரம் புலப்படுவது. காட்டாக, வேத³ாத்யாய:– 'வேதம் படித்தல்', வேத³ம் + அதி⁴ – ஈங் + அண். இங்கு, வேதம் நிரந்தரமாக உள்ளது. இதில் மாற்றம் எதுவும் நிகழவில்லை. 'படிப்பது 'என்ற வினை, படித்தல் என்ற செயலை மாத்திரம் குறிக்கிறது.

வா: ஸீ'லிகாமி ப^{4}க்ஷ்ய ஆசரிப்^{4}யோ ண பூர்வ
பத ப்ரக்ரு'தி ஸ்வரத்வம் ச வக்தவ்பம்
ஸீ'லி, காமி, ப^{4}க்ஷ்ய், ஆசர் என்ற தாதுக்களுக்குப்பின் ண வரும். இத்தாதுக்களுடன் நிற்கும் பெயர்ச் சொல் அதன் சுரத்துடன் வரும் (ப்ரக்'ரு'திஸ்வரம்)
மாம்ஸஸீல: மாம்ஸம் + ஸீ'ல + ண = அ)
மாமிசம் சாப்பிடும்(கெட்ட)பழக்கத்திற்கு அடிமையான;
மாம்ஸகாம: (மாம்ஸம் + காமி (கம் + ணிச்) + ண = அ)
'மாமிசத்தை விரும்புகிற' மாம்ஸப^{4}க்ஷி (மாம்ஸம் + ப^{4}க்ஷி (ப^{4}க்ஷ் + ணிச்) + ண = அ)
கல்யாணாசார: (கல்யாணம் + ஆசர் + ண = அ)
'நன்னடத்தையுள்ளவன்'
இந்த எடுத்துக்காட்டுகளில், மாமிசம், கல்யாணம் ஆகிய சொற்கள் உபபதங்கள்

வா: ஈக்ஷி க்ஷமிப்^{4}யாம் சேதி வக்தவ்பம்
ஈக்ஷ், க்ஷம், ஆகிய தாதுக்களுக்குப்பிறகும் (அதே சூழலில்) 'ண' வர வேண்டும் என்று கூற வேண்டும்.
ஸுக^{2}ப்'ரதீ'க்ஷ: (ஸுக^{2}ம் + ப்ரதி – ஈக்ஷ் + ண = அ)
'மகிழ்ச்சியை எதிர்பார்க்கிற'
ப^{3}ஹுக்ஷம: 'மிகவும் பொறுமையுள்ள'

3.2.2 ஹ்வா வா மஸ்'ச
ஹ்வா, (அழை), வா (நெய்), மா(அள) ஆகிய தாதுக்களுடன் அவைகளின் செயப்படுபொருளாக அமையும் பெயர்ச் சொற்கள், உபபதமாக நிற்கும்போது இத்தாதுக்களுடன் 'அண்' ஒட்டு வரும்.
ஸ்வர்க^{3}ஹ்வாய: 'சுவர்க்கத்தை யழைப்பவன்'
ஸ்வர்க^{3}ம் + ஹ்வே – ஹ்வா + அ = ஸ்வர்க^{3}ம்
ஹ்வா – ய் + அ (7.3.33)
தந்துவாய: (தந்தும் + வே + அ = தந்தும் வா ய் + அ = தந்துவாய) 'நெசவாளர்'
த^{4}ான்யமாய: (= த^{4}ான்யம் + மா + அ) 'தானியத்தையளப்பவன்' இச்சூத்திரம் 'க' வருவதைத் தடுக்கிறது (3.2.3)

3.2.3 ஆதோ அநுபஸர்கே^{3} க:
'ஆ'வை இறுதியாகவும், உபசர்க்கமில்லாமலும் அமையும் தாதுக்களுக்குப்பின் மேற் குறிப்பிட்ட சூழலில் 3.2.1) 'க' என்ற (க்ரு'த்)ஒட்டு வரும்.
இது 'அண்' வருவதைத் தடை செய்கிறது
கோ^{3}த^{3} : (க^{3}ாம் + த^{3}ா + க = அ = கோ^{3}த^{3}ா + அ
கோ^{3}த + அ (6.4.64) = கோ^{3}த^{3} : 'பசுவைக் கொடுப்பவன்'

அங்கு^{3}லித்ரம் (= அங்கு^{3}லித்ரை + அ = அங்குலித்ரா (6.1.45)
அங்குலித்ரம் 'விரல் முனைப்பூண்'
ஆனால்
கோ^{3}ஸந்த^{3}ாய: (கோ^{3} + ஸம்த^{3}ா + அண் = அ)
'பசு தானம் செய்பவன்'

3.2.4 ஸுபி ஸ்த^{2}:

ஒரு வேற்றுமைச் சொல்லை உபபதமாகக் கொண்டு நிற்கும் ஸ்த^{2}ா (நில்) என்ற தாதுவுக்குப்பின் 'க' ஒட்டு வரும்.

ஸமஸ்த^{2} = ஸமே (7) திஷ்ட^{2}தி 'அணுகக்கூடியவன்' இதற்கு முன் கூறப்பட்ட3 சூத்திரங்களிலும் உபபதமாக வரும் சொல், 2ஆம் வேற்றுமைச் சொல்லாக அமையும். இச்சூத்திரம், ஸ்த^{2}ா என்ற தாதுவுடன் வரும் உபபதம் எந்த வேற்றுமையிலும் அமையலாம் என்று உணர்த்துகிறது.

இச்சூத்திரத்தை இரண்டாகப் பகுத்துவிளக்க வேண்டும்

(யோக^{3}லிப^{4}ாக^{3})

1) ஸுபி 'க' என்ற ஒட்டு, 'ஆ'வை ஈறாகக் கொண்ட தாதுவுக்குப்பின் (வேற்றுமைச் சொல்லை உபபதமாகக் கொண்டு நிற்கும்போது) இணைக்க வேண்டும்.

த்^{3}விப: (த்^{3}வி + பா + க = அ (6.4.64)
'இரண்டு அவயவங்களால் குடிப்பவன்' அதாவது யானை
பாத^{3}ப: மரம், (பாத + பா + க = அ)
கச'ச^{2}ப: (கச'ச^{2} + பா + க = அ) 'ஆமை'

2) ஸுபிஸ்த^{2} : மேலே விளக்கப்பட்டது

இவைகள் இரண்டிலும், 'ஆ'வை ஈறாகக் கொண்ட தாதுக்கள்தான் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால், இவைகளைத் தனித்தனியாகப் பிரிப்பதனால் என்ன பயன், முதலில் விளக்கப்பட்ட விதி, கர்த்தாவைக் குறிக்கிறது. இரண்டாவது ஒரு நிலைமையையும் குறிக்கலாம் என்று உணர்த்துகிறது.

ஆக்ஷு^{2}த்'த^{2} : (ஆக்ஷு^{2} + உத் + ஸ்தா + க = அ) எலிக்கூட்டம் ஸ'லபே^{4}ாத்'த^{2} 'வெட்டுக்கிளி கூட்டம்'

இதைத் தொடர்ந்து வரும் சூத்திரங்களில் 'கர்மணி' 'ஸுபி' என்ற இரண்டு சொற்களுமே அனுவ்ருத்தி மூலம் பயன்படுத்தலாம். செயப்படுபொருள் குன்றாவினைகளோடு 'கர்மணி' என்ற சொல்லும், செயப்படுபொருள் குன்றிய வினைகளோடு 'ஸுபி' என்ற சொல்லையும் சேர்த்துக் கொண்டு அவைகளை விளக்க வேண்டும்.

3.2.5 து'ந்த^{3} ஸோ'ாக'யே: பரிம்ருஜ'ா பநுதே^{3}ா:

பரிம்ருஜ்(கழுவு), அப'நுத்^{3}(விரட்டு) என்ற தாதுக்கள் முறையே து' ந்த^{3} (தொப்புள்), ஸோக (வருத்தம்) ஆகிய சொற்கள், செயப்படுபொருட்களாக,

அவ்வினைகளுடன் கூட வரும்போது, 'க' என்ற ஒட்டு அத்தாதுக்களுக்குப்பின் வரும்.

து'ந்த^3 பரிம்ரு'ஜ': ஆஸ்தே – 'சோம்பேறியாக உட்கார்ந்திருக்கிறான்'.

ஸோ'காபநுத^3: புத்'ர ஜாத: 'வருத்தத்தை விரட்டும் மகன் பிறந்திருக்கிறான்'.

வா: ஆலஸ்ய ஸுக^2ாஹரணமிதி வக்தவ்யம்

சோம்பேறி, மகிழ்ச்சியளிப்பவன் என்ற பொருட்களைத் தருவிக்கப்பட்ட சொல் உணர்த்தும்போது மட்டுந்தான் இந்த ஒட்டைப் பயன்படுத்த வேண்டும்.

மற்ற இடங்களில் து'ந்த^3 பரிமார்ஜ': (இங்கு அண்) ஸோ'க'ப நோத^3: (இங்கு அண்)

து'ந்த^3'பரிம்ரு'ஜ' : சோம்பேறி

து'ந்த^{3}ப'ரிமார்ஜ' : தொப்புளை கழுவுகிறவன்

ஸோ'க'ப'நுத^3 : மகிழ்ச்சியளிப்பவன்

ஸோ'காபநோத^3 : மகிழ்ச்சியளிப்பவன்

வா: க'ப்'ரக'ரணே மூலவிபு^{4}ஜாதி^{3}ப்^{4}ய: உப'ஸங்க்^{2}யானம் மூலவிபு^{4}ஜ' (தேர்) முதலிய சொற்களையும் 'க' ஒட்டைச் சேர்த்துத் தருவிக்கப்பட்ட சொற்களோடு சேர்க்க வேண்டும்.

நக^{2}முச': – வில்

க'ா'க்கு'ஹ : – 'எள்'

கு'முத^{3}ம் – அல்லி

3.2.6 ப்'ரே த^3ாக்^{3}ஞ:

த^3ா(கொடு), க்^{3}ஞா (அறி) என்ற தாதுக்கள் 'ப்ர' என்ற உபசர்க்கத்துடன் சேர்ந்து, செயப்படு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல்லுடன் வரும்போது அத்தாதுக்களுக்குப் பிறகு 'க' என்ற ஒட்டு இணைக்கப்படும்.

ஸர்வப்'ரத^3: 'எல்லாவற்றையும் கொடுப்பவன்'

பதி^{2}ப்'ரக்^{3}ஞ: 'பாதை தெரிந்தவன்'

3ஆம் சூத்திரத்திலிருந்து, 'க' ஒட்டை, 'ஆ'வை இறுதியாகக் கொண்ட தாதுக்கள் உபசர்க்கமில்லாமல் வரும்போது இணைக்க வேண்டும் , என்று விதி பெறப்பட்டது. இச்சூத்திரத்திலிருந்து உபசர்க்கத்தோடு வரும் தாதுக்களுக்குப்பின் க இணைக்க வேண்டுமென்று பெறப்படுகிறது. இது அண் ஒட்டுக்குத் தடைவிதிக்கிறது.

மற்ற உபசர்க்கத்துடன் வரும்போது 'அண்' ஒட்டுத்தான் இணைக்கப்படும்.

கே^{3}ாஸந்த^3ாய: ('அண்' ஒட்டுடன்)

3.2.7 ஸமிக்^{2}ய:

க்^{2}யா (கூறு) என்ற தாது 'ஸம்' என்ற உபசர்க்கத்துடன் (செயப்படுபொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல்லை உபபதமாகக் கொண்டு) வரும்போது 'க' ஒட்டு இணைக்கப்படும்.

கே^{3}ா ஸம்க்^{2}ய: 'மாட்டு இடையன்'

க³ாம் ஆச'ஷ்டே² கே³ாஸம்க்²ய:
(க³ாம் – ஸம் – க்²யா + க = அ)
இங்கு குறிப்பிட்ட தாது 'ஆ'வை ஈறாகக் கொண்டமைவதால் 'அண்' இங்கு வரவேண்டும் (3.2.3) இச்சூத்திரம் 'அண்' ஒட்டுக்குத் தடைவிதிக்கிறது.

3.2.8 க³ாபோ'ஷ்டக்

க³ா (பாடு) ப'ா(குடி) என்ற தாதுக்கள் உபசர்க்கமில்லாமல் தனித்து வரும்போது 'ஷ்டக்' என்ற (க்ரு'த்) ஒட்டு (செயப்படுபொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல் அத்துடன் உபபதமாக நிற்கும்போது) இணைக்க வேண்டும்.
ஸ'க்ரக³ : (ஸ'க்'ரம் க³ாயதி) = ஸ'க்ர + க³ா + ஷ்டக், ஸ'க்ர என்ற பெயரால் குறிக்கப்படும் ருக்கைப் பாடுபவன்.
ஸாமக³ : ஸாமம் பாடுபவன்
வா: ஸுராஸு'த்⁴வோ பிப³தேரிதி வக்தவ்யம்
ஸுரா, ஸு'து⁴ என்ற சொற்களை உபபதமாகக் கொண்டு வரும்போதுதான் 'பா' என்ற தாதுவுக்குப்பின் ஷ்டக் இணைக்க வேண்டும்.
ஸுராப 'மது அருந்துபவன்' ஸுராபி (பெண்பால்) ஸி'து⁴ப; 'சாறு அருந்துபவன்' ஸி'து⁴பி (பெண்பால்) ஆனால் க்ஷீரபா ப்³ராஹ்மணீ 'பால் அருந்தும் பிராம்மணத்தி'
இது 'க' என்ற ஒட்டு 'பா' என்ற தாதுவுடன் சேர்க்கப்பட்டு ஆக்கப்பட்ட சொல். இதன் பெண்பால் 'ஆ'வை இணைத்துப் பெறப்பட்டது. 'ஈ' அல்ல.

வா: அருந்துதல் என்ற பொருளைக் குறிக்காமல் காத்தல், என்ற பொருளைக் குறிக்கும்போது க ஒட்டுத்தான் இணைக்க வேண்டும்.
ஸுராபா (ஸுராம் பாதி) = 'மதுவைக் காப்பாற்றுபவன்'
இந்த வினைகளை உபசர்க்கத்தோடு பயன்படுத்தினால் அண் தான் வரும் ஷ்டக் அல்ல
ஸ'க்'ர ஸங்க³ாய: ஸாமஸங்க³ாய:

வா: ப³ஹுலம் ச²ந்த³ஸீதி வக்தவ்யம்
வேதமொழியில் இந்த ஒட்டுக்கள் வெவ்வேறு வகையில் பயன்படுத் தப்பட்டுள்ளன.
யாப்3ராஹ் மணீ ஸுரா'ப⁴வதி
ந ஏனாம் தே³வா: பதிலோகம் நயந்தி/ யா ப்³ராஹ்மணீ ஸுரா'பா ப⁴வதி ந ஏனாம் தே³வா: ப'தி லோகம் நயந்தி

3.2.9 ஹரதே: அனுத்³யமனே அச்

'ஹ்ரு': என்ற தாது மேலே தூக்குதல் என்ற பொருளைக் குறிக்காமல் அமைந்து, அத்துடன் அதன் செயப்படுபொருள் நிற்கும்போது 'அச்' என்ற (க்ரு'த்) ஒட்டு இணைக்கப்படும்.
இது 'அண்' வருவதைத் தடுக்கிறது.

அம்ஸ்'ஹர: ஒரு பங்கு எடுத்துக் கொள்பவன்
ரிக்த²ஹர: 'வாரிசு'
அம்ஸ் – ஹ்ரு + அச் : அ : அம்ஸ'ஹர (8.3.84)
ஆனால் ப⁴ார ஹார: 'கனத்தைத் தூக்குபவன்' இச்சொல் 'அண்' ஒட்டு 'ஹ்ரு' வுடன் சேர்க்கப்பட்டு ஆக்கியது.

வா: அச்ப்'ரக'ரணே ஸ'க்தி லாங்க³ல அங்கு'ஸ் யஷ்டி' தே'ாமர க⁴ட' க⁴டீ' த⁴னுஷ்ஷு க்³ர ஹேஷு உபஸங்க்²யானம்.
'க்ரஹ்' என்ற தாது, ஸ'க்தி, லாங்கல, அங்கு'ஸ த⁴னுஸ் ஆகிய சொற்களை உபபதமாகக் கொண்டு நிற்கும்போது, 'அச்' இத்தாதுவுக்குப் பின் வரும் என்று கூறவேண்டும்.
ஸ'க்திக்³ரஹ: 'ஈட்டி தாங்கும் குதிரைப்படை வீரன்'
லாங்க³லக் ³ரஹ 'உழவன்'
அங்கு³ஸக்³ரஹ: 'யானைப் பாகன்'
யஷ்டி'க்³ரஹ: 'கோல் தூக்குபவர்'
தே'ாமரக்³ரஹ : 'தடி தூக்குபவர்'
க⁴டீக்³ரஹ: 'பானை தூக்குபவர்'
த⁴னுர்க்³ரஹ: 'வில்லாளி'

வா: ஸூத்'ரே ச த⁴ார்யர்தே²
சூத்திரம் (கயிறு) என்ற சொல்லை உபபதமாகக் கொண்டு த⁴ாரி (பிடி) என்ற பொருளைக் குறிக்கும்போது 'க்³ரஹ'வுக்குப்பின் 'அச்' வரவேண்டும்.
ஸூத்ரக்³ரஹ: 'நூல் பிடிப்பவன்'
ஸூத்ரக்³ராஹ: 'நூலை எடுத்துக் கொள்பவன்'
என்று பொருளைக் குறிக்கும்போது 'அண்' வரும்.

3.2.10 வயஸி ச
'ஹ்ரு' தாதுவுடன் அதன் செயப்படு பொருள் நின்று, அதிலிருந்து தருவிக்கப்படும் சொல் ஒரு வயதைக் குறிக்குமாறு அமையும்போது, அத்தாதுவுக்குப்பின் 'அச்' ஒட்டு இணைக்க வேண்டும்.
இங்கு, உத்யமன 'உயர்த்து' என்ற பொருளைக் குறிக்கிறது.
காலம் சுழல்வதால், உடல்நிலையில் ஏற்படும் இளைஞன் போன்ற தன்மையை வயது என்ற சொல் குறிக்கும். 'ஹ்ரு'வுடன் நிற்கும் உபபதத்தினால் குறிக்கப்படும் நிலைமைக்குத் தகுந்த வயதை ஒருவன் அடைந்துவிட்டான் என்று குறிப்பிட, இச்சூத்திரம் வழிவகுக்கிறது. காட்டாக அஸ்தி²ஹர: ஸ்'வா
எலும்பு கடிக்கக்கூடிய நாய்
அதாவது எலும்பைக் கடிக்க இயலும் வயதையடைந்த நாய்
கவசஹர: க்ஷத்'ரியகுமார;
கவசத்தையணிந்து கொள்ளும் வயதையடைந்த க்ஷத்திரிய குமாரன்.

3.2.11 ஆஙி தாச்' சீ2ல்யே

'ஆங்' என்ற உபசர்க்கத்துடன் சேர்ந்து நிற்கும் 'ஹ்ரு' தாதுவுக்குப்பின் (அதனுடன் செயப்படுபொருள் உபபதமாக வரும்போது) ஆக்கப்பட்ட சொல், ஒருவனுடைய வழக்கமான தொழில் அல்லது இயல்பான செய்கை என்ற பொருளைக் குறிக்கும்போது, 'அச்' என்ற ஒட்டு இணைக்க வேண்டும்.

புஷ்பாஹர: (புஷ்ப+ஆ+ஹ்ரு+அச்=அ) 'பூ சேகரிப்பவன்'

ப²லாஹர:

ஆனால் ப⁴ராஹாரா: 'மூட்டை தூக்குபவன்'

இங்கு 'அண்' ஒட்டு வரும். பூ, பழங்களைச் சேகரிப்பது ஒருவகை இயல்பு என்று பொருளைக் குறிக்க 'அச்' இணைக்க வேண்டும். ப⁴ராஹார அந்த இயல்பு (தாச்'சீல்ய) உள்ளவன் என்ற பொருளை உணர்த்தாது.

3.2.12 அர்ஹ :

'அர்ஹ' (மதி) என்ற தாது, அதன் செயப்படுபொருளோடு சேர்ந்து வரும்போது 'அச்' ஒட்டு அத்தாதுவுக்குப்பின் இணைக்கப்படும்.

பூஜார்ஹா 'மரியாதைக்குரியவள்'

இவ்வாறு ஆக்கப்பட்ட சொற்கள் பெண்பாற்லில் சொற்களாகும். இச்சூத்திரம் 'அண்' ஒட்டு வருவதற்குத் தடை விதிக்கிறது.

3.2.13 ஸ்த'ம்ப³ க'ர்ணயோரமிஜபோ:

வேற்றுமையுருபுகளோடு (ஸுபி) சேர்ந்து ஸ்த'ம்ப³, க'ர்ண ஆகிய சொற்கள் முறையே, ரம், ஜப் என்ற தாதுக்களின் உபபதமாக அமையும்போது அத்தாதுக்களுக்குப்பின் 'அச்' இணைக்க வேண்டும்.

ரம், ஜப் என்ற தாதுக்கள் செயப்படுபொருள் குன்றிய வினைகள். ஆகையால் இத்துடன் உபபதமாக வரும்சொல், செயப்படுபொருளாக முடியாது. அதனால் 'ஸுபி' என்ற சொல்லை சூ. ⁴லிருந்து அனுவ்ருத்தி மூலம் சேர்த்து இச்சூத்திரம் விளக்கப்பட்டிருக்கிறது.

வா: ஹஸ்தி ஸூச'கயோரிதி வக்த்வயம்

அவ்வாறு ஆக்கப்பட்ட சொற்கள் முறையே யானை என்ற பொருளைக் குறிப்பதாக அமைய வேண்டும். ஸ்த'ம்பே³ரம: (ஸ்த'ம்பே³ரமதி) 'யானை' அதாவது புற்களில் விளையாடுபவன்.

கர்ணேஜப': (கர்ணே ஜபதி)

'காதில் ஓதுபவன்' அதாவது அவதூறு கூறுபவன் மேற்கூறிய பொருளைக் குறிக்காவிட்டால், தருவிக்கப்பட்ட சொல் ஸ்த'ம்பே³ரந்தா. கர்ணேஜபி'த'ா 'கொசு' இவைகள் த்ருச் ஒட்டு சேர்க்கப்பட்டு தருவிக்கப்பட்டவை.

3.2.14 ஸ'மி⁴தாதோ: ஸம்க்³ஞாயாம்

'அச்' என்ற ஒட்டு, ஸம் உபபதமாகச் சேர்ந்து நிற்கும் தாதுவுக்குப்பின் தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயரைக் குறிக்கும்போது, இணைக்கப்படும்.

ஸம் + க்ரு + அச் = அ = ஸங்கர; ஸம்ப[4];வ ஸம்யத[1];
இச்சூத்திரத்தில் 'தாதோ' என்ற சொல் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. அனுவிருத்தி மூலம் இச்சொல் 3.1.91 இலிருந்து பெறப்படும் ஆயினும், இதைத் திரும்பவும் இச்சூத்திரத்தில் பயன்படுத்தியிருப்பதன் காரணம், இச் சூத்திரத்தைத் தொடர்ந்து வரும் விதியில் (3.2.20) கூறப்பட்டிருக்கும் 'க்ரு'வுக்குப்பின் இணைக்கப்பட வேண்டிய 'ட' ஒட்டைத் தடை செய்யத்தான். சூ. 3.2.20 இல் குறிப்பிடப்படும் பொருட்களில்கூட 'அச்' என்ற ஒட்டுத்தான் க்ரு'வுக்குப்பின் வரவேண்டும். ஆகையால் 'ஸங்கர' என்ற சொல்லின் பெண்பால் ஸங்கரா கழுகு, நல்லதைச் செய்யும் இயல்புடையவள்.
ஸங்கரீ அல்ல (பார்க்க 3.2.20)

3.2.15 அதி[4]கரணே ஸேதே[1]

'ஸீ' (படு) என்ற தாதுவுடன் உபபதமாக வரும் வேற்றுமைச் சொல் 7ஆம் வேற்றுமையாக அமைந்தால் (அதி[4]கரணே) அத்தாதுவுக்குப்பின் 'அச்' ஒட்டு இணைக்கப்படும்.
க[2]ஸய (கே[2]ஸேதே) வானத்தில் படுப்பவன்
க[1]ர்த[3]ஸய

வா: பார்ஸ்வாதி[3]ஷு உபஸங்க்[2]யானம்
பார்ஸ்வ முதலிய சொற்களும் உபபதமாக வரும்போது,'ஸ்' க்குப்பின் 'அச்' ஒட்டு இணைக்க வேண்டும்.
பார்ஸ்வஸய: 'ஒரு பக்கமாகப்படுப்பவன்' இங்கு
பார்ஸ்வ இடத்தைக் (அதிகரண) குறிக்காது உத[3]ரஸய: குப்புறப்படுப்பவள்
ப்ருஷ்டஸய நிமிர்ந்துப்படுப்பவன் (ப்ருஷ்ட = முதுகு)

வா: தி[3]க்[3]த[4]ஸஹபூர்வாச்ச
'ஸீ'க்கு முன் தி[3]க்[3]த[4] ஸஹ என்ற சொல் நிற்கும் போதும் அத்தாதுவுடன் 'அச்' ஒட்டு சேர்க்க வேண்டும். தி[3]க்[3]த[4]ஸஹஸய

வா: உத்தானாதி[3]ஷு கர்த்ருஷு
'உத்தான' முதலிய சொற்கள் (முதல் வேற்றுமையில்) கர்த்தாவாக நிற்கும்போது அதனுடன் வரும் ஸீஎன்ற தாதுவுக்குப்பின் 'அச்' ஒட்டு வரவேண்டும்.
உத்தானஸய : (உத்தானஸேதே)
அவமூர்த்[3]த[4]ஸய: 'தலையைக் குனிய வைத்துக் கொண்டு படுப்பவன்'.
வா: கி[3]ரௌ ட[3]ஸ்[1] ச[2]ந்த[3]ஸி
வேதமொழியில் 'கி3ரி' என்ற சொல்லுடன் (அதிகரணமாக) வரும் 'ஸீ'க்குப்பின் 'ட[3]ச்' என்ற ஒட்டு, இணைக்கப்படும்.
கி[3]ரிஸ[1]: 'மலையில் படுப்பவன்'

3.2.16 ச'ரேஷ்'ட':
'சர்' என்ற தாதுவுடன் உபபதமாக இடத்தைக் குறிக்கும் வேற்றுமைச் சொல் நிற்கும்போது, அத்தாதுவுக்குப்பின் 'ட', என்ற ஒட்டு இணைக்க வேண்டும்.
கு'ருச'ர: (குருஷூ ச'ரதி) (கு'ரு + சர் + ட': அ) 'குரு தேசத்தில் சுற்றுபவன்'
'ட' என்ற ஒட்டின் 'ட்', ஒரு 'இத்', இந்த ஒட்டைச் சேர்த்து ஆக்கப்படும் சொல்லின் பெண்பாற்சொற்கள் 'ஙீப்' ஐச் சேர்த்துப் பெறப்படும் என்று குறிக்கிறது.
கு'ருச'ரீ

3.2.17 பி⁴க்ஷாஸேனா ஆத³ாயே ஷூ ச
பி⁴க்ஷா (பிச்சை) ஸேனா (படை) ஆத³ாய (எடுத்துக் கொண்டு) என்ற சொற்களை உபபதமாகக் கொண்டு வரும் சர் தாதுவுக்குப்பின்னும் ட' என்ற ஒட்டு வரும்.
⁴பிக்ஷாச'ர: (பி ⁴க்ஷாம் சரதி) · பி⁴க்ஷா + ச'ர் ட': அ) பிச்சைக்காரன்
ஸேனாசர: படையோடு செல்பவன்
ஆதாய சர எடுத்துக் கொண்டு போகிறவன்
இச்சூத்திரம் இடத்தைக் குறிக்கும் வேற்றுமைச் சொல் உபபதமா காமல், வேறு சொற்கள் வருவதைக் குறிக்கிறது.

3.2.18 புரோ அக்³ரதே³ா அக்³ரேஷூ ஸர்த்'தே
புரஸ், அக்³ரதஸ், அக்³ரே, ஆகிய சொற்கள் உபபதமாக ஸ்ரு என்ற தாதுவுடன் வரும்போது, அத்தாதுவுக்குப்பின் ட' ஒட்டு இணைக்க வேண்டும்.
புர ஸர (புர + ஸ்ரு ' + ட : அ)
முன்னால் போகிறவன்
அக்³ரத' ஸர அக்³ரேஸர தலைவன்

3.2.19 பூர்வே கர்த்தரி
ஸ்ரு' என்ற தாதுவுடன் சேர்த்து உபபதமாக வரும் பூர்வ என்ற சொல் கர்த்தாவைக் குறிக்கும்போது, அத்தாதுவுக்குப்பின் ட' என்ற ஒட்டு வரும்.
பூ'ர்வஸர ('பூர்வம் ஸரதி) முதலில் போகிறவன்
(பூர்வ ச'ாஸௌ 'ஸர)
பூர்வ என்ற சொல் கர்த்தாவைக் குறிக்காவிட்டால் அச் ஒட்டு வரும்.
பூர்வதே³ஸம் ஸர–பூர்வஸர கீழ்த்தேசம் செல்பவன்

3.2.20 க்'ருஞோ ஹேது தாச்'சி²ல்யானுலோம்யேஷூ
க்ரு தாதுவுடன், செயப்படுபொருளைக் குறிக்கும் சொற்கள் உபபதமாக நின்று அவை (1) காரணம், (ஹேது), (2) பழக்கம், இயல்பு (தாச்'சீ²ல்யம்), (3)ஒத்துப்போதல் (ஆனுலோம்ய) என்ற பொருட்களைக் குறிக்கும்போது, அத்தாதுவுக்குப்பின் ட' என்ற ஒட்டை இணைக்க வேண்டும்.
1) யஸ'ஸ் கரீ வித்³யா புகழைக் கொடுக்கும் படிப்பு

(யஸ'ஸ் + க்ர '+ ட': அ) அதாவது புகழுக்குக் காரணம் படிப்பு
2) அர்த3க'ர பணத்தைக் குவிப்பவன்
3) ப்'ரேஷகர சொன்னத்தைச் செய்பவன்
அதாவது கீழ்ப்படிபவன்
மற்ற பொருட்களைக் குறிக்கும்போது அண் ஒட்டு வரும்.
கு'ம்ப4க'ார குயவன்

3.2.21 தி3வா விப4ா நிஸ'ா ப்'ரப4ா ப4ாஸ்க'ராந்தா நந்த'ாதி3 ப3ஹு0 நாந்தீ3 கிம்லிபி' லிபி3 ப3லி ப4க்தி க'ர்த்'ர' சி'த்'ர க்ஷேத்'ர ஸம்க்2யா ஜ2ங் கே4ா ப'ாஹ்ஹவ ஹர்யத்'த'த்3த4 ஞுரருஷ்ஊஷூ.

செயப்படுப் பொருளைக் குறிக்கும் தி3வா முதலிய சொற்கள் உபபதமாக க்ரு' தாதுவுடன் வரும்போது ட' என்ற ஒட்டு இணைக்கப்படும்.

இங்கு ஸூபி, கர்மணி என்ற இரண்டு சொற்களும் அனுவ்ருத்தியாகும். அந்தந்த இடங்களில் இவைகளில் ஒன்றைச் சேர்த்து பொருளை விளக்க வேண்டும்.

1) தி3வாகர (இங்கு ஸூபி சேர்க்க வேண்டும். இது இடத்தைக் குறிக்கும்) சூரியன்
2) விப4ாக'ர சூரியன்
3) நிஸ'ாக்ர சந்திரன்
4) ப்'ரப4ாக்ர சூரியன்
5) ப4ாஸ்க'ர சூரியன்
6) க'ாரக'ர வேலை செய்பவன்
7) அந்த'க'ர முடிவு செய்பவன் அதாவது மரணம்
8) அனந்தக'ர முடிவில்லாத வேலை செய்பவன்
9) ஆதி3க'ர படைப்பவன்
10) ப3ஹூகர நிறையச் செய்பவன்
11) நாந்தீகர வாழ்த்துக் கூறுபவன்
12) கிங்கர வேலைக்காரன்
13)லிபி'கர படியெடுப்பவர்
14) லிபி3கர படியெடுப்பவர்
15) ப்3லிகர யாகம் பண்ணுபவன்
16) ப4க்'தி'கர பக்தன் சேவை செய்பவன்
17) கர்த்'ரு'கர கர்த்தாவை உண்டுபண்ணுபவன்
18) சித்'ரகர ஓவியன்
19) க்ஷேத்'ரகர வியவசாயி
20) ஏக'க'ர ஒரு வேலை செய்பவன்
21) ஜ2ங்க4ாகர ஓடுபவன்
22) ப'ாஹூக'ர தொழிலாளி
23) அஹஸ்கர சூரியன்
24) யத்'கர எதைச் செய்கிறவன்

25) த'த்'கர அதைச் செய்கிறவன்
26) த^{4}னுஷ்க'ர வில் செய்பவன்
27) அருஷ்கர காயப்படுத்துபவன்

முன் சூத்திரத்தில் கூறப்பட்ட ஹேது முதலிய பொருட்களைத் தவிர்த்து மற்ற பொருட்களில் வரும் க்ரு' உடன் இணைத்துத் தருவிக்கப்பட்ட சொற்களுக்காக இச் சூத்திரம் தனி விதியமைக்கிறது.

வா: கிம்யத்'த்'^{3} ப^{1}ஹூஷூ க்ரு'ஞோ அச்வித^{4}ானம் கிம், யத், தத், ப^{1}ஹு ஆகிய சொற்கள், க்ரு'–வுடன் உபபதமாக நிற்கும்போது அச் ஒட்டு இணைக்க வேண்டும்.

ட'வை இணைத்துப் பெறப்படும் சொற்களைப் பெண்பாற் சொற்களாக மாற்ற ஈ என்ற பெண்பால் ஒட்டு சேர்க்கப்படும். அச் இணைத்து தருவிக்கப்படும் சொற்களுடன் ஆ–வைச் சேர்த்து அதன் பெண்பாற் சொற்கள் ஆக்கப்படும். கி'ங்க'ரா, யத்'க'ரா, த'த்'க'ரா

3.2.22 கர்மணி ப்^{4}ருதெ'ள

க்ரு' தாதுவுடன் கர்ம என்ற சொல் உபபதமாக வந்து, தருவிக்கப்பட்ட சொல் கூலி, சம்பளம் (ப்^{4}ரு'தி') என்ற பொருளைக் குறிக்கும்போது ட' ஒட்டு தாதுவுக்குப் பின் வரும்.

க'ர்மக'ர வேலைக்காரன், கூலியாள்

ஆனால் க'ர்மகா'ர கலைஞன்

என்ற பொருளில் அண் ஒட்டு க்ரு'வுடன் இணைத்துப் பெறப்படும்.

3.2.33 ந ஸப்'த^{3} ஸ்'லோக க'லஹ க^{3}ாத^{2}ா

வைர ச'ாடு' ஸூத்'ர மந்த்ர பதேஸூ

ஸப்'த^{3} முதலிய சொற்களை உபபதமாக கொண்டு க்ரு'வரும்போது ட'ஒட்டு அத்துடன் இணைக்கப்படமாட்டாது.

1. ஸப்'த^{3}க'ார இலக்கண ஆசிரியர்
2. ஸ்'லோக'க'ார கவி சுலோகம் எழுதுபவன்
3. க'லஹக'ார சண்டைக்காரன்
4. க^{3}ாத^{2}ா க'ார க^{3}ாத^{2}ா எழுதுபவன்
5. வைர க'ார பகைபாளி
6. ச'டு' க'ார போலிப்புகழ்ச்சி செய்பவன்
7. ஸூத்'ர க'ார சூத்திர ஆசிரியர்
8. மந்த்'ர க'ார மந்திரங்களின் ஆசிரியர்
9. ப'த^{3} க'ார பதபாடத்தின் ஆசிரியர்

இவைகள் அண் ஒட்டு க்ரு'வுடன் இணைக்கப்பட்டு ஆக்கப்பட்டவை.

3.2.24 ஸ்தம்ப^{3} ஸ'க்'ரு' தே'ாரின்

ஸ்தம்ப^{3} ஸ'க்'ருத்' ஆகிய சொற்கள் உபபதமாக வரும்போது

அவைகளுடன் நிற்கும் க்'ரு'–வுக்குப்பின் இன் ஒட்டு வரும்.

வா: வ'ரீஹி வத்'ஸயோரிதி வக்'த'வ்யம் மேற்குறிப்பிட்ட சொற்கள் முறையே அசிரி (வ்ரீஹி), கன்று (வத்'ஸ) என்ற பொருட்களைக் குறிக்கும்போது என்று கூற வேண்டும்.

ஸ்த'ம்ப'3கரி அரிசி
ஸ'க்'ரு'த்'கரி கன்று
வேறு பொருட்களில் அண் ஒட்டு வரும்
ஸ்த'ம்ப'3கார கதிர் கட்டுபவன்
ஸ'க்'ரு'த்கார எச்சமிடுவது

3.2.25 ஹரதே' த்'3ரு'தி' நாத2யோ பஸெ'ள

த்'3ரு'தி (தோல்பை), நாத2 என்ற சொற்களை உபபதமாக நிற்கும்போது ஹ்ரு (எடுத்துக் கொள்) என்ற தாதுவுக்குப்பின் அதன் கர்த்தா ஒரு விலங்கைக் குறிக்கும் சொல்லாக நின்றால் இன் ஒட்டு வரும்.
த்'3ரு'தி'ஹரி நாய் தோலை எடுத்துக் கொண்டு செல்பவன்
நாத2ஹரி விலங்கு எசமானை இழுத்துக் கொண்டு போவது
ஆனால் த்'3ரு'தி'ஹார தோல்பை சுமப்பவன். அதாவது தோல் பையில் தண்ணீர் கொண்டு வருபவன்
நாத3ஹார இங்கு அண் ஒட்டு வரும்.

3.2.26 ப2லேக்'3ரஹி ஆத்'மம்ப4ரிஸ'ச

ப2லோக்'3ரஹி ஆத்'மம்ப'4ரி என்ற சொற்கள் விதிப்படி அமையாதவை (நிபாதனம்)
ப2லேக்'3ரஹி மரம் என்ற சொல்லில் ப2லேயின் ஈறான ஏயும் க்'3ரஹ் தாதுவுடன் இன் ஒட்டு இணைத்தலும் விதிக்குப் புறம்பானவை. ஆத்'மம்ப4ரியில் ஆத்மவுக்குப் பின் நிற்கும் ம'வும், ப்'4ரு தாதுவுடன் இன் வருதலும் விதிப்படி அமையவில்லை. ஆத்1மம் ப4ரி சுய நலக்காரன் ச(உம்) இதைப் போன்ற வேறு சொற்களும் உண்டு என்று குறிக்கிறது. கு'க்ஷிம்ப'4ரி உத'3ரம்ப'4ரி சுய நலக்காரன்

3.2.27 ச2ந்த3ஸி வனஸனரக்ஷிமத2ாம்

வேத மொழியில் வன, ஸன (மதி), ரக்ஷ (காத்தல்), மத்2(கடைதல்) என்ற தாதுக்களோடு செயப்படு பொருள் உபபதமாக வந்து நிற்கும்போது, இன் ஒட்டு, அவைகளுக்குப்பின் இணைக்கப்படும்.
ப்'3ரஹ்மவனிம் த்'வா ஸக்ஷத்'ரவனிம் (வாஸ 1.17, 5.12, 6.3)
கே3ாஸனிம் வாசமுதே3யம் (அ. வே. 3.20.10)
யௌ பதி3ரக்ஷீ ஸ்'வானௌ (அ. வே. 8.1.9)
ஹவிர் மதி2னாம் (ரு.வே. 7.104.20)

3.2.28 ஏஜே க2ஸ்

ஏஜ் (ஆட்டு) (இயக்குவினை) என்ற தாதுவுக்குப்பின், செயப்படுபொருள் உபபதமாக வரும்போது, க2ஸ்1 ஒட்டு இணைக்க வேண்டும்.

க2ஸ்1 ஒட்டின் க்2, ஸ் ஆகியவை இத் க்2 மும் ஆகமத்துக்காக (6.3.67) ஸ்1 ஸார்வதாதுகமென்று குறிப்பிட (3.4.113)

அங்க3மேஜய அவயவத்தை நடுங்க வைப்பவன்

ஜனமேஜய மக்களை நடுங்க வைப்பவன்

வா: க2ஸ்ப்ரகரணே வாத1 ஸூனீதி1ல ஸ1ர்த்3
தே4ஷூ அஜ தே4ட்1து3 ஜஹாதீ1னாம் உபஸம்க்2யானம்.

வாத, ஸூனீ முதலிய சொற்கள் உபபதமாக முறையே அஜ் முதலிய தாதுக்களுடன் வரும்போது இத்தாதுக்களுக்குப்பின் க1ஸ்1 ஒட்டு இணைக்க வேண்டும்.

வாதமஜா: ம்ருக3ா: 'வேகமாக ஓடும் மான்'

வாதமஜ: 'காற்றோடு செல்லும்'

ஸூனிந்த4ய: 'நாய்ப்பால் குடிக்கும்'

தி1ல து1ந்த3 : 'எண்ணெய் வாணிகன்'

ஸ1ர்த்34தஞ்ஜஹா: 'ஒரு வகைப்பருப்பு'

3.2.29 நாஸிகாஸ்த1னயோ: த்4மா தே4டே1:

நாஸிகா (மூக்கு) ஸ்த1ன (முலை) என்ற சொற்களை உபபதமாக (செயப்படுபொருள்)க் கொண்டு நிற்கும் த்4மா (ஊது, தே4ட்(உறிஞ் சு) என்ற தாதுக்கள் வரும்போது, இவைகளுக்குப்பின் 'க2ஸ்' இணைக்க வேண்டும், இங்கு 'நாஸிகாஸ்தன' விதிப்படியமையாத துவந்துவ ஸமாஸம். அதனால் யத2ாஸங்க்2யவதி (முறையே) பயன்படாது.

வா: ஸ்தனே தே4ட1:

'தே4ட்' 'ஸ்தன' என்ற சொல்லை செயப்படுபொருளாக (உபபதம்)க் கொண்டு வரும் ஸ்தனந்த4ய: குழந்தை (தாய்ப் பால் குடிக்கும்)

வா நாஸிக1ாம் துத்4மஸ்ய சதே4ட1ஸ்ச

த்4மா, தே4ட் என்ற இரண்டு தாதுக்களுமே, நாஸிக1ந்த4ம நாஸிகந்த4ய

நாஸிகா + த்4மா + க2ஸ் = நாஸிகா + ம் + த4ம + அ

(6.3.66/67) நாஸிகாந்த4ம 'மூக்கினால் மூச்சு விடுதல்'

நாஸிக1ாந்த4ய: 'மூக்கினால் குடிப்பவன்'

ஸ்தனந்த4யீ (பெண்பால்)

3.2.30 நா டீ3 முஷ்ட்1யோஸ்1 ச

நாடீ, (குழாய்) முஷ்டி1 (கைமுட்டி) என்ற சொற்கள் செயப்படுபொருளாகவும் உபபதமாகவும் வரும்போதும், இவைகளுடன் வரும்.

த்4மா, தே4ட்1 என்ற தாதுக்களுக்குப்பின் 'க2ஸ்1' வர வேண்டும்.

நாடி³ந்த⁴ம: 'குழாயை ஊதுபவன்'
முஷ்டி'ந்த⁴ம: 'கைமுட்டியால் ஊதுபவன்'
நாடி³ந்த⁴ய: 'குழந்தை (குழாயால் பால் குடிப்பவன்)'
முஷ்டி'ந்த⁴ய: 'குழந்தை (கைமுட்டியைச் சப்புபவன்)'
'நாடி³முஷ்டி' விதிப்படியமையாத துவந்துவ சமாஸம். முஷ்டி' என்ற சொல் ஒரு 'கி⁴' அதனால், இச்சொல் முதலுறுப்பினராக வேண்டும். இத்தொகையே விதிக்குப்புறம்பாக அமைந்திருப்பதால் இங்கு யத²ாஸங்க்'ய (முறையே) விதியைப் பயன்படுத்த இயலாது.
இதில் குறிப்பிடப்படாத மற்ற சொற்களையும் இத்துடன் சேர்க்க வேண்டுமென்பதை 'ச' குறிக்கிறது.
க⁴டி'ந்த⁴ம : க⁴டி'ந்த⁴ய: க²ரிந்த⁴ம :
க²ரிந்த⁴ய:
வாத'ந்த⁴ம: (மலை) வாத'ந்த⁴ய :

3.2.31 உதி³ கூலே ருஜிவஹோ:
'உத்'துடன் சேர்ந்த 'ருஜ்', 'வஹ்' தாதுக்களுடன் கூல (கரை) செய்யப்படுபொருள் உபபதமாக நிற்கும் போது அத்தாதுக்களுக்குப் பிறகு 'க²ஸ்¹' ஒட்டு இணைக்கப்படும்.
கூலமுத்³ருஜ: கரையை உடைக்கும் (அதாவது தேர், ஆறு, யானை போன்றவை)
கூலமுத்³வஹ: 'கரையை' உடைக்கும் அல்லது இழுத்துச் செல்லும்.

3.2.32 வஹாப்⁴ரே லிஹ :
வஹ அப்⁴ர என்ற சொற்களை செய்ப்படுபொருள் உபபதமாக, லிஹ் (நக்கு) தாதுவுடன் வரும்போது, அதன் பின் 'க²ஸ்' ஒட்டு இணைக்க வேண்டும்.
வஹம்லிஹ : பசு
அப்⁴ரம்லிஹ : காற்று (மேகத்தை நக்கும்)

3.2.33 பரிமாணே பச'
அளவைக் குறிக்கும் சொல் (பரிமாண) செயப்படு பொருள் உபபதமாக, 'பச்' (சமை) என்ற தாதுவுடன் நிற்கும்போது 'க²ஸ்¹' ஒட்டு தாதுவுடன் இணைக்கப்படும்.
ப'ரஸ்த²ம்பசா: ஸ்த²ாலி 'ஒரு ப்ரஸ்தம் உணவு சமைக்கும் பானை'
கா²ரிம்பச: த்³ரோணம் பச:

3.2.34 மித'நகே² ச
மித', நக² என்ற சொற்கள் செய்ப்படுபொருள். உபபதமாக, 'பச்' தாதுவுடன் வரும்போதும் 'க²ஸ்' ஒட்டு இணைக்கப்படும். இவைகள் அளவையைக் குறிப்பவையல்ல

மித'ம்பச'ா ப்'ராஹ்மணீ. 'குறைவாகச் சமைக்கும் பிராம்மணத்தி'
நக^{2}ம்பசா யவாகூ^{1} : 'நகச் சூடுள்ள பார்லிக் கஞ்சி'

3.2.35 விது^{4} அருஷோ: து'த^3:
விது^{4} (சந்திரன்) அருஷ் (காயம்) என்ற சொற்கள் செயப்படுபொருள் உபபதமாக, து'த்^{1} (அடி) என்ற தாதுவுடன் வரும்போது அத்தாதுவோடு, 'க^{2}ஸ்'' இணைக்கப்படும்.
விது^{4}ந்து'த^3 : 'ராகு' (சந்திரனை மறைப்பவன்)
அருந்து'த^3 : 'அரித்துத் தின்னவல்ல பொருள்'

3.2.36 அஸூர்ய லலாட'யோர் த்^{3}ரு'ஸி தபோ':
அஸூர்ய, லலாட ஆகியவைகள், செயப்படுபொருள் உபபதமாக, த்^{3}ரு'ஸ் (பார்) த'ப்' (சுடு) என்ற தாதுக்களுடன் நிற்கும்போது 'க^{2}ஸ்'' ஒட்டு அவைகளுக்குப்பின் வரும்.
அஸூர்யம் பஸ்'யா: ராஜத^{3}ரா: 'சூரியனை (க்கூட) பார்க்காத ராணிகள்'
லலாடந்தப: 'சூரியன்' நெற்றியைச் சுடுபவன்
அஸூர்யம்பஸ்யா: என்ற தொகையில் 'அ' (எதிர்மறைச் சொல்) 'த்ருஸ்' தாதுவுடன் சேரும். ஸூர்யவுடன் அல்ல. இவ்வகையில் தொகை பொதுவாக ஆக்கப்படமாட்டாது. இது அஸமர்த^{2}ஸமாசம்.

3.2.37 உக்^{3}ரம்பஸ்'ய இரம்மத^3 பாணிந்த^{4}மாஸ்' ச
உக்^{3}ரம்பஸ்'ய (கொடுமையான பார்வையுள்ள/பார்க்கக் கொடுமையான), இரம்மத^3 : (மின்னல் அல்லது குடிப்பதில் மகிழ்ச்சியுறுபவன்)
பாணிந்த^{4}ம்: (கையை நடுங்கவைக்கும்) ஆகிய சொற்கள் கஸ் ஒட்டு இணைக்கப்பட்டு விதிப்படியமையாதவை.

3.2.38 ப்'ரியவஸே' வத^3 : க^{3}ச்
ப்ரிய, வஸ என்ற சொற்கள் செயப்படு பொருள் உபபதமாக, வத்^{3}, என்ற தாதுவுடன் வரும்போது 'க^{2}ச்' ஒட்டு இணைக்கப்படும்.
ப்ரியம்வத^3: 'இனிமையாகப் பேசுபவன்'
வஸ'ம்வத^3 : 'கீழ்ப்படிவதாகக் கூறுபவன்'
க^{2}ச்^{1} இன் க்^{2}, ச், ஆகியவை 'இத்' 'மும்' இணைக்க வேண்டியத்தைக் குறிக்கிறது. க்^{2} (6.3.37) சில உயிர்களை குறிலாக வேண்டுமென்று குறிக்க 'ச்' (6.4.94)

வா: க^{2}ச் ப்ரகரணே க^{3}மே: ஸூப்'புபஸம் க்^{2}யானம் 'க^{3}ம்' என்ற தாதுவுடன், வேற்றுமைச் சொல் உபபதமாக நிற்கும்போது, அத்தாதுவுடன் க^{2}ச் ஒட்டு இணைக்க வேண்டும்.
மித'ங்க^{2}ம்: மெதுவாகச் செல்லும். அதாவது 'யானை' மித'ங்க^{3}மாஹஸ்தினி 'பெண்யானை (பிடி)'

வா: விஹாய ஸோ விஹ ச

இதே சூழலில், விஹாயஸ என்ற சொல்லோடு க³ம் நிற்கும்போது 'க²ச்' இணைக்கப்படும் 'விஹ' என்ற சொல் 'விஹாயஸ'வுக்குப் பதிலியாகும். விஹங்க³ம:பறவை (ஆகாசத்தில் போகும்) அதாவது பறக்கும்.

வா: க²ச்'ச² டி³த்'வா வக்தவ்ய :

'க²ச்' ஒட்டு விருப்பாக 'டி³த்' ஆகக் கருதப்படும்.

விஹங்க:விஹங்க³ம: 'பறவை'

வா: டே³ ச விஹாயஸோ விஹாதே³ஸோ'ா வக்தவ்ய:

'விஹாயஸ' என்ற சொல்லுக்கு விஹாதே³ஸம், 'க³ம்' க்குப்பின் 'ட³' (3.2.45) ஒட்டு இணைக்கும்போது வரும்.

விஹக³ : 'பறவை'

இவ்வார்த்திகங்களிலிருந்து, பறவைக்கு மூன்று சொற்கள் கிடைக்கின்றன. அதாவது விஹக³ :, விஹங்க³ :, விஹங்க³ம.

3.2.39 த்³விஷத்' ப'ரயோஸ் தா'பே:

'த்³விஷத்' ,'பர' ஆகிய சொற்களோடு (செயப்படுபொருள் உபபதமாக வரும்) 'தப்' (சுடு, எரி) என்ற தாது வரும்போது அதன் பிறகு 'க2ச்' ஒட்டு இணைக்க வேண்டும்.

த்³விஷந்த'ப: பகைவனை எரிப்பவன்/சுடுபவன்

பரந்த'ப: பகைவனை எரிப்பவன்/சுடுபவன்

இந்த உபபதங்கள் பெண்பாலாக அமையும்போது 'க²ச்' ஒட்டு வராது, 'அண்' வரும். த்³விஷதீ'த'ாப:

3.2.40 வாசி யமோ வ'ரதே'

'வாக்' (பேச்சு) என்ற சொல்லை உபபதமாக (செயப்படுபொருள்) கொண்ட 'யம்' (அடக்கு, நிறுத்து) தாதுவுடன், ஒரு விரதம் என்ற பொருளைக் குறிக்கும்போது 'க²ச்' வரும். வாசம் யம: ஆஸ்தே 'அவன் மவுனவிரதம் (பேசாமை) இருக்கிறான்.

'விரதம்' என்ற பொருளைக் குறிக்காவிட்டால் வாக்3யாம பேச்சைக் கட்டுப்படுத்தல் ('அண்',' உடன்') என்ற சொல் ஆகும்.

3.2.41 பூ: ஸர்வயோ: த³ாரிஸஹோ:

புர், ஸர்வ என்ற சொற்கள், செயப்படுபொருள்–உபபதமாகக் கொண்ட முறையே த³ாரி, ஸஹ என்ற தாதுக்களுக்குப்பின் 'க²ச்'' ஒட்டு இணைக்கப்படும்.

புரந்த³ர இந்திரனின் மற்றொரு பெயர் நாடுகளைத் தகர்ப்பவன்

ஸர்வஸஹோ ராஜா எல்லாவற்றையும் தாங்கும் அரசன்

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI
ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI. LIBRARY
Accession No 48967
Date of purchase
Call Number 2645

வா: ப^{4}கே^{2}ச த^3ாரேரிதி வக்தவ்யம் ப^{4}க^3 உபபதமாக (செயப்படுபொருள்) த^3ாரி என்ற தாதுவுடன் வரும்போது க^{2}ச்^{1} ஒட்டு இணைக்கப்படும்.
ப^{4}க^{3}ந்த^{3}ர: ஒரு நோயின் பெயர்

3.2.42 ஸர்வ கூ'ல அப்^{4}ர க'ரீஷே ஷ^0 க'ஷ:
ஸர்வ (எல்லாம்), கூ'ல (கரை), அப்^{4}ர (மேகம்) க'ரீஷ (உலர்ந்த சாணம்) ஆகிய சொற்கள் (செயப்படுபொருள் உபபதம்) 'கஷ்' (இழு, உரசு) என்ற தாதுவுடன் வரும்போது 'க^{3}ச்' இணைக்க வேண்டும். ஸர்வங்க'ஷ: க^{2}ல: (எல்லோருக்கும் கஷ்டங் கொடுப்பவன்) கெட்டவன் கூ'லங்க'ஷாநதீ–ஆறு (கரையை உடைப்பது)
அப்^{4}ரங்க'ஷ: கி^{3}ரி:– மலை (மேகத்தை இழுப்பது)
க'ரீஷங்க'ஷா: வாத்'யா:– புயற்காற்று (சாணத்தைப் பறக்க வைப்பது)

3.2.43 மேக^{4}ர்த்'தி' ப^{4}யேஷ^0 க்'ருஞ:
மேக^4, ரு'த்தி (இன்னல்) ப^{4}ய (பயம்)ஆகியவைகள் (செயப்படுபொருள் உபபதம்) க்'ரு' தாதுவுடன் வரும்போது, அத்தாதுவுக்குப்பின் 'க^{2}ச்' ஒட்டு வரும்.
மேக^4 (ம்) க'ர: 'மேகத்தை உண்டாக்கும்'
ருதி(ம்) க'ர: 'வலியைத் தரும்'
ப^{4}ய(ம்) கர: 'அச்சத்தைத் தரும்'

வா: உபபத^{3}விதௌ^{4}ள ப^{4}யாதி^{3}க்^{3}ரஹணம்
த'த^{3}ந்த' விதி^{4}ம் ப்ரயோஜயதி
'ப^{4}ய' முதலிய சொற்கள் உபபதமாக நிற்கும்போது 'த'த^{3}ந்த'விதி' பயன்படுத்தப்படும். இது, 1.1.72இல் கூறப்பட்டிருக்கும் வார்த்திகத் துக்கு ஒரு புறனடை. அதாவது, ப^{4}யம் என்ற சொல்லை இறுதியாகக் கொண்ட சொல், ஆகிய இரண்டுக்குமே இந்த விதி பயன்படுத்தப்படும். காட்டு அப^{4}யங்க'ர: (அப^{4}ய + க்ரு) பாதுகாப்பளிப்பவன்

3.2.44 க்ஷேமப்ரிய மத்^{3}ரே அண் ச
க்ஷேம, ப்ரிய, மத்^{3}ர என்ற சொற்களோடு வரும் 'க்ரு' தாதுவுக்குப்பின் 'அண்' ஒட்டும் வரும் அதாவது அண் க^{3}ச் இரண்டுமே வரலாம்.
க்ஷேமகார: (அண்), க்ஷேமங்கர: (க^{2}ச்) நல்லது செய்பவன்
ப்ரியக'ார:/ப்ரியங்கர: 'அன்பாக இருப்பவன்'
மத்^{3}ரகார:/மத்ரகர: 'மகிழ்ச்சியளிப்பவன்'
'அண்' என்ற சொல்லை மறுபடியும் பயன்படுத்தாமல் 'வா' (விருப்பாக) என்ற சொல்லைப் பயன்படுத்தி, இவ்வொட்டை அனுவ்ருத்தி மூலம் கொண்டு வந்து விளக்கியிருக்கலாம். அப்படியில்லாமல் 'அண்'ஐப் பயன்படுத்தியிருப்பதன் நோக்கம், சூ. 20, இல் கூறப்பட்ட காரணம் பழக்கம் முதலிய பொருட்களை உணர்த்தும்போது கூட 'ட', ஒட்டை இணைக்காமல் பெறப்படுமென்று

வலியுறுத்தத்தான். ஆகையால் இங்கு 'அண்' 'க²ச்' என்ற 2 ஒட்டுக்கள் மட்டுந்தான் வரும். இதனால், இச்சொற்களின் பெண்பால் 'ஆ'வை இணைத்துப் பெறப்படும் 'ஈ'யைப அல்ல.
க்ஷேமகரா:– 'நல்லதைச் செய்யும்'

3.2.45 ஆஸித்தே புவ: கரணபாவ யோ:
'ஆஸித' என்ற சொல் வேற்றுமையுருபுகளுடன் உபபதமாக கருவி (கரண), நிலைமை(ப⁴ாவ) என்ற பொருட்களில் அமைந்து அத்துடன் 'பூ' தாது வரும் போது, 'க²ச்' ஒட்டு இணைக்கப்படும்.
ஆஸித்ம்ப⁴வ: ஒத³ன: (சோறு) (கருவி)
ப⁴ாவ–ஆஸித்ஸ்ய ப⁴வனம்–ஆஸிதம்ப⁴வம் திருப்தி (உண்பதால் ஏற்படுவது)

3.2.46 ஸம்க்³ஞாயாம் ப்⁴ரு'த்³ரு' வ்ரு'ஜி த⁴ாரி ஸஹி த'பித³ம:
கீழ்க்கண்ட தாதுக்களுக்குப்பின் 'க²ச்' ஒட்டு, தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயரைக் குறிக்கும்போது–இணைக்கப்படும்.
(அனுவ்ருத்தி மூலம் வேற்றுமை சொல் (ஸுப்) செயப்படுபொருள் (கர்மணி) வரவேண்டும்.)
ப்⁴ரு' – 'தாங்கு' விஸ்'வம் ப⁴ரா வஸுந்தரா பூமி
த்'ரு' – 'கட' ரத²ந்த'ரம் 'சாமத்தின் பெயர்'
வ்ரு' 'தேர்ந்தெடு' பதிம்வரா – 'பெண்' (கணவனைத் தேர்ந்தெடுக்கும்)
ஜி–'வெல்' ஸ'த்'ருஞ்ஜய:–ஹஸ்தீ 'யானை' ('எதிரிகளை வெல்பவன்')
த⁴ாரி –'தாங்கு' யுக³ந்த⁴ர: 'பர்வத': 'மலை'
ஸஹி –'தாங்கு' ஸ'த்ரும்ஸஹ :'பெயர்'
த'பி 'சுடு' ஸத்ருந்தப: 'எதிரியையழிப்பவன்'
த³ம: 'அடக்கு' அரிந்த³ம: பெயர் 'எதிரியைபடக்குபவன்'
ஆனால்
கு'டு'ம்ப⁴ பா⁴ர: குடும்பத்தைக் காப்பாற்றுபவன். இது ஒரு பெயரைக் குறிக்காததால் 'அண்' வரும்.

3.2.47 க³மஸ்' ச
(ஒரு வேற்றுமைச் சொல்லை உபபதமாகக் கொண்ட)
க³ம் என்ற தாதுவுக்குப்பின்பும் 'க²ச்' ஒட்டு இணைக்கப்படும்.
ஸுத'ம்க³ம: – பெயர்
அனுவிருத்தி மூலம், இதைத் தொடர்ந்துவரும் சூத்திரங்களில் பயன்படுத்துவதற்காக 'க³ம்' தாதுவை, சூ.46இல் சேர்க்காமல் இங்குத் தனியாக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

3.2.48 அந்த' அத்'யந்த' அத்⁴வ தூ³ர பா'ர ஸர்வ அனந்தே'ஷு ட³
அந்த (இறுதி, எல்லை), அத்யந்த (மிகுதி), அத்⁴வன் (பாதை) தூ³ர (தொலைவு), பார(கரை), ஸர்வ (எல்லாம்), அனந்த (முடிவில்லாத) ஆகிய

சொற்களைச் செயப்படுபொருளாகக் கொண்டு, க3ம, தாது நிற்கும்போது அதற்குப்பின் 'ட3' ஒட்டு இணைக்க வேண்டும்.

அந்த'க3 :நன்கு அறிந்துணர்ந்தவன்

அத்'யந்த'க3: வெகு வேகமாகப் போகிறவன்

அத்3வக3 :கால்நடை வழிப்போக்கன்

தூ3ரக: தொலை தூரம் போகிறவன்

பா'ரக3:–கரை கண்டவன்

ஸர்வக3:–எங்கும் போகிறவன் பிரம்மம்

அனந்த'க3:–எப்போதும் இயங்குபவன்

'ட3'வில், 'ட்3' இத் ஆகும் ஒரு சொல்லின் 'டி', பகுதி கெடும் என்பதை 'ட்' என்ற 'இத்' குறிக்கும் (6.4.143)

அந்த'+ க3ம் + ட = அ → அந்த' + க்3 + அ = அந்த'க3:

'க3ம்' இன் 'அம்' 'டி' எனப்படும்.

வா: ட3 ப்ரகரணே ஸர்வத்'ர பன்னயோ ருபஸம்க்2யானம்

ஸர்வத்ர, பன்ன என்ற சொற்கள், 'க3ம்' தாதுவுடன் உபபதங்களாக நிற்கும்போது 'ட3' ஒட்டு இணைக்கப்படும்.

ஸர்வத்ரக3:– 'பிரம்மம்'

பன்னக3 :–பாம்பு 'ஊர்வது'

வா: 'உரஸ்' (நெஞ்சு) என்ற சொல்லோடும் அவ்வாறே. 'உரஸ்' இன் இறுதி எழுத்து (ஸ்) கெடும்

உரக3: 'பாம்பு'

வா: ஸுது3ரோரதி4க'ரணே

ஸு(நல்ல) து3ர்(கெட்ட) என்ற சொற்களுடனும், தருவிக்கப்பட்ட சொற்கள் இடத்தைக் குறிக்கும்போது, அவ்வாறே ஆகும்.

ஸுக3: எளிதாக அணுகக்கூடிய இடம்

து3ர்க3: 'கோட்டை' அணுகுவதற்கு எளிதல்லாத இடம்)

வா: நிரோ தே3ஸே'

'நிர்' என்ற உபசர்க்கத்துடன் தருவிக்கப்பட்ட சொல் ஒரு நாட்டைக் குறிக்கும்போதும் அவ்வாறேயாகும்.

நிர்க3:–நாடு

வா: மேலே குறிப்பிட்ட உபபதங்களைத் தவிர, வேறு சொற்களும் உபபதங்களாக வரும்போதும், 'ட3' ஒட்டு இணைக்க வேண்டுமென்று வேறு சிலரின் கருத்து.

ஸ்த்ர்யகாரக3: (ஸ்த்ரீ+அக3ார+க3ம்+ட3) 'பெண்களின் இடத்துக்குச் செல்பவன்'

க்³ராமக³ :கிராமத்துக்குச் செல்பவன்
கு³ருத'ல்ப'க³: 'ஆசிரியரின் படுக்கைக்குச் செல்பவன்'

3.2.49 ஆஸிஷி ஹன:

`ஹன்` தாது (செயப்படு பொருளை உபபதமாகக் கொண்டு வரும்போது) 'வாழ்த்துதல்' என்ற பொருளைத் தருவிக்கப்பட்ட சொல் குறிக்கும்போது அத்தாதுவின் பின் 'ட³' ஒட்டு இணைக்க வேண்டும்.
திமிஹ: (திமிம் வத்⁴யாத்) அவன் திமிங்கிலத்தைக் கொல்லட்டும்'
ஸ'த்ருஹ:– (ஸத்ரும் வத்⁴யாத்) அவன் எதிரியைக் கொல்லட்டும்
'வாழ்த்துதல்' என்ற பொருளைக் குறிக்காவிட்டால்
ஸ'த்ருக⁴ாத: (க⁴ஞ்ஒட்டுடன்) ''எதிரியைக் கொல்பவன்''

வா: த³ாராவாஹனோ அணந்தஸ்ய ச ட: ஸம்க்³ஞாயாம் 'த³ாரு' என்ற சொல்லை உபபதமாகக் கொண்டு நிற்கும் ஆ+ஹன் தாதுவுக்குப்பின் 'அண்' ஒட்டு (அவ்வாறு தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயராக நிற்கும்போது) வரும். இத்தாதுவின் ஈறான 'ன்' 'ட்'ஆகும். த³ார்வாக⁴ாட மரங்கொத்திப் பறவை (த³ாரு+ஆவஹ்+அண்)

வா: சாரௌ வா
'சாரு' என்ற சொல் உபபதமாக ஆ+ஹன் உடன் வரும்போதும் அண் ஒட்டு இணைக்க வேண்டும்.' ன்'–க்குப் பதிலாக' ட' விருப்பாக வரும்.
ச'ார்வாக⁴ாட:/ச'ார்வாக⁴ாத அழகாக

வா: கர்மணி ஸமி ச
'ஸம்' உடன் சேர்ந்து 'ஹன்' நிற்கும்போது அத்துடன் செயப்படு பொருள் வந்தால் 'அண்' ஒட்டு தாதுவுக்குப்பின் இணைக்கப்படும். அதன் ஈறுக்குப் பதிலியாக 'ட'' விருப்பாக வரும்.
வர்ண ஸங்க⁴ாட:/வர்ண ஸங்க⁴ாத:
(வர்ணான் ஸஹந்தி) 'நெடுங்கணக்கு'
பத³ஸங்க⁴ாட:/பத³ஸங்க⁴ாத: 'சொற்களின் தொகுதி'

3.2.50 அபே1 க்லேஸ' தமஸோ:

`அப' என்ற உபசர்க்கத்துடன் நிற்கும் 'ஹன்', க்'லேஸ', தமஸ் என்ற சொற்களை செயப்படு பொருள் உபபதமாகக் கொண்டு வரும் போது 'ட³' ஒட்டு இணைக்க வேண்டும். க்லேஸ'ாபஹ: 'மகன்' (வருத்தததை அழிப்பவன்)
தமோபஹ: 'சூரியன்' (இருட்டை விரட்டுபவன்)
இச்சூத்திரம் 'வாழ்த்துதல்' என்ற பொருளைக் குறிக்காத மற்ற பொருட்களைப் பற்றியது

3.2.51 கு'மார ஸி'ர்ஷயோ: ணினி
குமார, ஸீர்ஷ என்ற சொற்களை உபபதமாகக் கொண்டு நிற்கும் 'ஹன்' தாதுவுடன் ணினி ஒட்டு வரும்.
குமாரக⁴ாதீ (குமார+ஹன்+ணினி = குமார+க⁴ாத+இன் (7.3.54 3.32) = குமாரக⁴ாதின்) குழந்தையைக் கொல்பவன்
ஸி'ர்ஷக⁴ாதீ தலையை அடிப்பவன்
ஸிரஸ் இலிருந்து 'ஸி'ர்ஷ' என்ற வடிவம் விதிக்குப் புறம்பாக (நிபாதனம்) ஆக்கப்பட்டது.

3.2.52 லக்ஷணே ஜாயா பத்யோஷ்ட1க்
ஜாயா (மனைவி) பதி (கணவன்) என்ற சொற்கள், (செயப்படுபொருள் உபபதமாகும் போது 'ஹன்' தாதுவுக்குப்பின் 'ட'க்' என்ற ஒட்டு தருவிக்கப்பட்ட சொல் கர்த்தாக் குணத்தை உடையவன் என்ற பொருளைக் குறிக்கும் போது இணைக்கப்படும்.
'டக்' என்ற ஒட்டின் 'ட்', 'க்' இரண்டும் இத் ஆக்கப்பட்ட சொல்லின் பெண்பால் 'ஈ' ஒட்டுச் சேர்த்துப் பெறப்படும் என்று 'ட்' குறிக்கும். 'ஹன்' தாதுவின் ஈற்றயலான 'அ' கெடுமென்று 'க்' (இத்) குறிக்கும். ஜாயாக்4ன:– 'மனைவியைக் கொன்றவன்'
பதி'க⁴னீ:–'கணவனைக் கொன்றவள்'
இச்சூத்திரத்தில் காணப்படும் 'லக்ஷண' என்ற சொல்லுக்கு இருவகையாகப் பொருட்களை கொள்ளலாம்.
1) கர்த்தாவே அந்த குணத்தை (லக்ஷண)
உடையவன்/உடையவள்
பதிக்⁴னீ ரேக²ா–'கணவனைக் கொல்வாளிவள்' என்று கைரேகை காட்டுகிறது.
2) தருவிக்கப்பட்ட சொல், அத்தகைய குணத்தை உடையவன் கர்த்தா என்று சுட்டுவது ஜாயாக்⁴ன:

3.2.53 அமனுஷ்ய கர்த்'ரு²கே ச
அஃறிணைப் பொருளைக் கர்த்தாவாகக் (உபபதம்–செயப்படுபெ ாருள்) கொண்ட 'ஹன்' தாதுவுக்குப்பின் 'ட'க்' ஒட்டு இணைக்க வே ண்டும்.
ஜாயாக்⁴ன: திலகாலக: மச்சம் (மனைவியை கொல்வானிவன் என்று உணர்த்தும் மச்சம்)
பதி'க்⁴னீ பாணிரேக²ா 'கணவனைக் கொள்வாளிவள் என்று உணர்த்தும் கைரேகை'
ஸ்'லேஷ்மக்⁴னம் மது⁴, பித்தக்⁴னம் க்⁴ரு'தம்
'மனிதன்' கர்த்தாவாக அமையும்போது 'அண்' ஒட்டுத்தான் வரவேண்டும்.
ஆகு²க⁴ாத: ஸூத்³ர எலிகொன்ற சூத்திரன்.
சே'ாரக⁴ாத: ஹஸ்தீ 'திருடனைக் கொன்ற யானை'
என்ற சொல் 'அண்' ஒட்டுச் சேர்த்து ஆக்கப்பட்டிருக்கிறது. 3.3.113 'க்ருத்ய'

ஒட்டு பல வகைகளில் பயன்படுத்தப்படும் என்று கூறுகிறது. 'க்ருத்' ஒட்டுக்கும் இந்த விதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

3.2.54 ஸ'க்தௌ ஹஸ்தி கபாடயோ:

ஹஸ்தி (யானை) கப'ாட' (கதவு) என்ற சொற்களை (உபபதம் செயப்படுபொருளாகக் கொண்ட) 'ஹன்' தாதுவோடு, 'பலமுள்ள' என்ற பொருளை உணர்த்தும்போது 'ட'க்' ஒட்டு இணைக்க வேண்டும்.

ஹஸ்திக்⁴ன: மனுஷ்ய:– 'யானையைக் கொல்லக்கூடிய பலம் கொண்ட மனிதன்'

கபாடக்⁴ன: சோர: 'கதவை உடைக்கக் கூடிய பலம் கொண்ட திருடன்'

இது மனிதனைக் கர்த்தாவாகக் கொண்டது கர்த்தாவின் பலத்தைக் குறிக்காவிட்டால், 'அண்' ஒட்டு வரும்.

விஷேண ஹஸ்தினம் ஹந்தி–ஹஸ்திக⁴ாத:

விஷங் கொடுத்து யானையைக் கொல்கிறான்

3.2.55 பாணிக⁴ தாட³கெ⁴ள ஸி'ல்பினி

கைவினைஞர் என்ற பொருளைக் குறிக்கும் பாணிக⁴, தாட³க⁴ என்ற சொற்கள் நிபாதனங்கள்

பாணி + ஹன் + க ‧ அ → பாணி + ஹ் + அ → பாணிக⁴ – ஹ்', க⁴ வாக மாறுவது விதிப்படியல்ல

பாணிக⁴:– முரசடிப்பவர்

தாட³க⁴:–உலோக வேலையாளர்

ஆனால் பாணிக⁴ாத: 'குத்துச் சண்டை'

தாட³க⁴ாத: 'சுத்தி 1 சம்மட்டியடித்தல் இச்சொற்கள் கலைஞன் என்ற பொருளை உணர்த்தா.

வா: ராஜக⁴ உபஸம்க்²யானம்

ராஜக⁴ அரசனைக் கொன்றவன் என்ற சொல்லும் இத்துடன் வரவேண்டும்.

3.2.56 ஆட்³ய ஸுப⁴க³ ஸ்தூ²ல பலித

நக்²னாந்த⁴ ப்ரியேஷு ச்வ்யர்தே²ஷு அச்வ்யௌ

க்'ரு'ஞ: கரணே க்²யுன்

ஆட்³ய முதலிய சொற்கள் (உபபதம்–செயப்படுபொருள்) 'ச்வி' ஒட்டினால் ஆக்கப்பட்ட சொற்களின் பொருளை– 'ச்வி' ஒட்டை இறுதியாகக் கொள்ளாமலிருந்த போதிலும் அதன் பொருளைக் குறிப்பதாக அமையும், போது 'க்ரு' தாதுவுக்குப்பின் 'க்2யுன்' ஒட்டு இணைக்க வேண்டும். அவ்வாறு ஆக்கப்பட்ட சொல் 'கரணம்' என்ற பொருளைக் குறிக்கும்.

ஒரு பெயர்ச் சொல்லுடன் பூ⁴(ஆகு) 'க்ரு'(செய்) அஸ்(இரு) ஆகிய தாதுக்கள் வரும்போது ச்வி ஒட்டு (5.4.50) இணைக்கப்படும். 'ச்வி' ஒட்டு, முன்பு இல்லாத

ஒரு நிலையையடைவது என்ற பொருளைச் சுட்டும். 'ச்வி'ஒட்டு விருப்பாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு ஒட்டாக இருப்பதால், இது இருவகையில் ஆகும். (1) 'ச்வி'ஒட்டில் முடியும் சொற்கள் (2)'ச்வி'யில் முடியாத சொற்கள். ஆனால் பொருளைப் பொறுத்தவரையில் 'ச்வி'யுடன் இணைந்ததுபோல் இரண்டுமே செயல்படும். ஆயினும், இச்சூத்திரம் 'ச்வி'யை இறுதியாகக் கொண்ட சொற்களைத் தவிர்த்துவிட்டு மற்றதைப் பற்றிப் பேசுகிறது.

ஆட்3யம் + க்'ரு' + க்2யுன் = ஆட்3யம் + கர் + அன = ஆட்யம் கரணம்– செழிப்பாக்கும் கருவி,

ஸுப4க3ம் க'ரணம்	–	மகிழ்ச்சியுண்டாக்கும் கருவி
ஸ்தூ2லம்க'ரணம்	–	பெரிதாக்கும் கருவி
பலிதம்க'ரணம்	–	நரையுண்டாக்கும் கருவி
நக்3னம்க'ரணம்	–	பாதுகாப்பற்றதாக்கும் கருவி
அந்த4ம்க'ரணம்	–	குருடாக்கும் கருவி
ப்'ரியம்கரணம்	–	அன்புகாட்டும் கருவி

ஆனால்

அப்4யஞ்ஜயந்தி (ஆட்3யம்தைலேண குர்வந்தி) (அவர்கள்) எண்ணெய் பூசுகிறார்கள்.

இங்கு முன்பு இல்லாத ஒன்றை (அதாவது எண்ணெய்) சேர்க்கப்பட்ட போதிலும், பகாப்பதம் (ப்ரக்ருதி) முக்கியமாக ஒன்றாக அமையாததால் இதன் பொருள் 'ச்வி'யின் பொருளல்ல.

ஆட்3வீ குர்வந்தி அனேன – இதனால் பணக்காரனாக (?) ஆக்குகிறார்கள். இங்கு 'க்2யுன்' இணைக்கப்படவில்லை.

'க்2யுன்' சேர்க்காவிட்டால், 'ல்யுட்' (3.3.117) இணைக்கலாமே. ஏனென்றால் 'க்யுன்' 'ல்யுட்' இரண்டுக்கும் வேறுபாடு இல்லை. இரண்டிலிருந்தும் பெறப்படும் ஒட்டு 'யு' அப்படியிருக்கும்போது 'ச்வி'யைப் பயன்படுத்துவதைத் தடுப்பதால் என்ன பயன் என்ற கேள்வி எழும்புகிறது. 'க்யுன்' பயன்படுத்தத் தடையுண்டானால் 'ல்யுட்'க்கும் அதே தடைதான். 'ச்வி'க்குத் தடை விதித்திருப்பது. இதை அடுத்து வரும் சூத்திரங்களுக்காக.

3.2.57 க'ர்தரி பு4வ: கி2ஷ்ணுச் கு2க'ஞௌ

(ஆட்3ய முதலிய சொற்கள் (வேற்றுமையுருபுகளோடு வரும்) 'ச்வி'யினால் ஆக்கப்பட்ட சொற்களின் பொருளை உணர்த்துமாறு அமையும்போது ('ச்வி'இறுதியாக நிற்காமலிருந்தபோதிலும்) இச்சொற்களுடன் 'பூ4', தாது நின்று, ஆக்கப்பட்ட சொல் கர்த்தாவைக் குறிக்கும் போது 'கி2ஷ்ணுச்' கு2க'ஞ்' என்ற ஒட்டுக்கள் தாதுவுக்குப்பின் இணைக்கப்படும்.

ஆட்3யம் ப4விஷ்ணு: (ஆட்3ய + பூ4 + கி2ஷ்ணு = இஷ்ணு)

ஆட்3யம் ப4ாவுக: (ஆட்3ய + பூ4 + கு2 க'ஞ் = உக)

(பணம்) இல்லாதவன் இருக்கிறவானகிறான்

ஸுப4க3ம்ப4விஷ்ணு:, ஸுப4க3ம்பா4வுக:,

(மகிழ்ச்சி) இல்லாதவன் (அது) இருக்கிறவனாகிறான்

ஸ்தூ2லம்ப4விஷ்ணு:, ஸ்தூ2லம்ப4ாவுக:
பெரிதாக ஆகிறான்
பலிதம் ப4விஷ்ணு:, பலிதம்ப4ாவுக:
நரையாகிறது.
நக்3னம்ப4விஷ்ணு: நக்3னம்ப4ாவுக:
உடையற்றவனாகிறான்
அந்த4ம் ப4விஷ்ணு: அந்த4ம்பாவுக:
குருடாகிறான்
ப்ரியம் ப4விஷ்ணு: ப்ரியம் ப4ாவுக:
அன்பைக் காட்டுபவனாகிறான்
கர்த்தாவைக் குறிக்கும்போதுதான் இந்த ஒட்டுக்கள் இணைக்க வேண்டும். கரணத்தைக் குறிக்கும்போது இவைகள் வரா.
உபபதம் 'ச்வி'யின் பொருளைக் குறிக்கும்போதுதான் இவ்வொட்டுக்கள் இணைக்கப்படும், மற்ற இடங்களில் அல்ல.
ஆட்3யோ ப4விதா அவன் பணக்காரன் ஆவான்
உபபதம் ச்வி – யில் முடிந்தால் இவ்வொட்டுக்கள் இணைக்கப்படமாட்டா.
ஆட்3யீ ப4விதா

3.2.58 ஸ்ப்ரு'ஸோ'அனுத3கேக்'வின்
'உதக' என்ற சொல்லைத் தவிர மற்ற வேற்றுமைச் சொற்கள் (ஸுபி) உபபதமாக நிற்கும்போது ஸ்ப்ரு'ஸ்' (தொடு) என்ற தாதுவுக்குப் பின் 'க்'வின்' ஒட்டு இணைக்கப்படும்.
ஸ்ப்ருஸ் ஒரு செயப்படுபொருள் குன்றாவினையாக இருப்பதால், கர்மணி (சூ. 4) என்ற சொல்தான் அனுவ்ருத்தி மூலம் வரவேண்டும். 'ஸுபி' என்ற சொல்லை இத்துடன் ஏன் சேர்க்க வேண்டும் என்ற கேள்வி எழும்பக்கூடும். இதில் தவறு ஏதுமில்லை, ஏனென்றால், இதற்கு முந்திய சூத்திரத்திலிருந்து 'கர்தரி' என்ற சொல்லும், தொக்கிநிற்கிறது. 'ஸுபி' என்ற சொல்லைச் அனுவ்ருத்தி வழியாக இங்கு கொண்டு வரும்போது கர்த்தா, கர்மன், கரணம் ஆகிய எல்லாவற்றையுமே, இங்கு சேர்கக இயலும்.
க்4ரு'த'ஸ் ப்ரு'க் (க்4ருதம் ஸ்ப்ரு'ஸ'தி) 'வெண்ணையைத் தொடுபவன்'
மந்த்ரஸ்ப்ரு'க் (மந்த்ரேண ஸ்ப்ருஸதி) 'மந்திரத்தினால் தொடுபவன்'
ஜலஸ்ப்ரு'க்'ஜலத்தினால் தொடுபவன்'
ஆனால் உத3க'ஸ்பர்ஸ: (அண், உடன்)

3.2.59 ரு'த்விக்3த3த்4ரு'க்' ஸ்ரக்3 தி3கு3ஷ்
ணிக3ஞ்சு' யுஜி க்ருஞ்'சாம் ச
ரு'த்'விக் (புரோகிதர்) த3த்4ரு'க் (ஆணவமான) ஸ்ரக் (மாலை), தி3க் (திசை), உஷ்ணிக் (நாலடிப் பாடல்) ஆகிய சொற்கள் 'க்வின்' ஒட்டு இணைக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள், அஞ்சு (பூசித்தல்), யுஜி (சேர், இணை) க்'ருஞ்சு (வளைதல்) ஆகிய தாதுக்களுக்குப் பின்னாலும் 'க்வின்'

ஒட்டு வரும்.

ரு'த்'விக்' (ரு'து') + யஜ் + க்வின்) (பருவக்காலங்களில் (ருதௌ) அல்லது பருவங்களுக்கு (ருதும்) யாகம் பண்ணுபவன்.

த³த்⁴ரு'க் (த்⁴ருஷ் + க்'வின்)

ஸ்ரக் (ஸ்ரு'ஜ் + க்'வின்)

தி³க் (தி³ஸ் + க்'வின்)

உஷ்ணிக் (உத் + ஸ்னிஹ் +க்'வின்)

மேலே கூறிய 3 தாதுக்களும், இச்சொற்களுடன் கூடக் கூறியிருப்பதால், இவைகளுடன் 'க்வின்' ஒட்டு விதிப்படி இணைக்கப்படவில்லையென்றுதெளிவு.

'அஞ்சு' வுக்கு முன் வேற்றுமைச் சொல் வரும்போது மட்டுந்தான் 'க்வின்' ஒட்டு இணைக்கப்படும்.

ப்ர + இஞ்சு + க்1வின் = ப்ராங், கிழக்கு

ப்ரத்யங் 'மேற்கு', 'உதங்', 'வடக்கு' 'யுஜ்', 'க்ருஞ்சு' என்ற தாதுக்கள் தனியாக நிற்கும்போது மட்டுந்தான் 'க்வின்' ஒட்டு இணைக்கப்படும். யுங் (யுஜ் + க்வின்) 'இணைப்பவன்' ஆனால் 'யுஜ்' ஒரு உபபதத்தோடு வரும்போது 'க்விப்' ஒட்டு வரும். அஸ்வயுக் 'குதிரை பூட்டப்பட்டது' க்'ரு'ங் (க்'ரு'ஞ்ச் + க்வின்)

3.2.60 த்'யத³ாதி³ஷு த்³ருஸே'ா அனாலோசனே கஞ்ச த்'யத்³, முதலியவைகளை உபபதமாகக் கொண்டு நிற்கும் த்'ருஸ்' (பார்) தாதுவுக்குப்பின், பார்த்தல் என்ற பொருளைக் குறிக்காமல் அமையும்போது 'கஞ்' என்ற ஒட்டும் வரும், அதாவது 'கஞ்ச்' 'க்வின்' என்ற இரண்டு ஒட்டுக்களும் இணைக்கப்படும்.

த்யாத்³ருக் (த்யத் + த்³ரு'ஸ் + க்வின்)

த்'யாத்³ருஸ் (த்யத் + த்³ருஸ் + கஞ்)

அதைப் போன்ற மற்றவை

த'ாத்³ருக், த'ாத்³ரு'ஸ':

த்யத³ாதி (பார்க்க 1.1.27)

த்³ருஸ்' 'பார்' என்ற பொருளில் வரும்போது

தத்தர்ஸ': – 'அதைப் பார்க்கிறவன்' (தம் + த்³ருஸ' + அண்)

வா: ஸமானான்யயோஸ்' சேதி வக்தவ்பம்

ஸமான, அன்ய ஆகிய சொற்களுடன் த்³ருஸ்' நிற்கும் போதும் இந்த விதி பொருந்தும்.

ஸத்³ரு'த் (ஸமான + த்³ருஸ் +க்'வின்) 'போன்றவன்' ஸத்³ரு³ஸ':

அன்யாத்³ரு'க்/அன்யாத்³ரு'ஸ' :'வேறு வகையைச் சேர்ந்தவன்'

வா: த்³ருஸே': க்ஸஸ் ச வக்த'வ்ய: 'க்ஸ' என்ற ஒட்டும் 'த்³ரு'ஸ்'', க்குப்பின் வரும். யாத்³ருக்ஷ: தாத்³ருக்ஷ: அன்யாத்³ருக்ஷ:

3.2.61 ஸத்1 ஸூ த்3விஷ த்3ருஹ து3ஹ யுஜ வித3 பி4த3ச் சி2த3ஜி நீ ராஜாமுபஸர்கே3 அபி க்'விப் வேற்றுமைச் சொல்லுடன் உபசர்க்கங்களுப்பட– நிற்கும் ஸத் (அமர்), ஸூ (பிற உண்டாக்கு) த்3விஷ (வேறு), த்3ருஹ் (வன்மம் கொள்) து3ஹ் (கற) யுஜ (சேர்) வித்3 (அறி, ஆகு) பி4த் (பிரி), சி'த்3 (வெட்டு) ஜி (வெல்) நீ (வழிகாட்டு, முன் செல்) ராஜ் (ஒளிவிடு) ஆகிய தாதுக்களுக்குப்பின் 'க்விப்' ஒட்டு இணைக்கவேண்டும்.

வேற்றுமையுருபுகளில் முடியும் சொற்கள் (ஸுபி) இங்கு தொக்கி நிற்கிறது. சூ. 58–இல் விளக்கிய அதே காரணங்களால் கர்மணி என்ற சொல் அனுவிருத்தி மூலம் இங்கு வராது உபசர்க்கங்களையும் ஸுப3ந்தமாகக் கருதப்படும். எங்கெல்லாம் 'ஸுபி' என்ற சொல் முந்திய சூத்திரங்களில் காணப்படுகிறதோ, அந்த இடங்களில் எல்லாம் உபசர்க்கங்களையும் சேர்த்துத்தான் என்ற பொருள் கொள்வது கூடாது என்று மறைமுகமாக உணர்த்துகிறது.

உபஸர்கே3அபி' என்ற சொல் (3.160)
ஸூ'சிஷத்' தூய்மையானவன்
அந்த'ரிக்ஷஸத் ஆகயாத்தில் வசிப்பவன்
உபஸத் பணியாற்றுதல்
அண்ட'ஸூ முட்டையிற்பிறக்கிற பறவை
ஸ'த'ஸூ நூறு உண்டாக்குதல்
ப்ரஸூ தந்தை தாய்
மித்'ரத்3விட்' நம்பிக்கைத் துரோகி
ப்ரத்3விட்' எதிர்ப்புணர்ச்சியுள்ள
மித்'ரத்4ருக்' நம்பிக்கைத் துரோகி
ப்ரத்4ருக்' எதிர்புணர்ச்சியுள்ள
கோ3து4க்' பசுவைக் கறக்கிறவன்
ப்ரது4க்' பால் கறக்கிறவன்
அஸ்'வயுக்' வண்டி குதிரை பூட்டப்பட்டது
ப்ரயுக் தூண்டுதல்
வேத3வித்' வேதத்தைபறிந்தவன்
ப்ரவித்' அறிவாளி
ப்3ரஹ்மவித்' பிரம்மத்தையறிந்தவன்
காஷ்ட'பித்' மரம் வெட்டி
ப்ரபி4த்' வெட்டுபவன்
ரஜ்ஜூச்'சி2த்3 கயிறு வெட்டுபவன், ப்ரச்சி2த்3 வெட்டுபவன்
ஸ'த்'ருஜித்' எதிரியை வெல்பவன் ப்ரஜித்
ஸேனானீ படைத் தலைவன் ப்ரணீ தலைவன்
க்3ராமணி அக்3ரணீ முதல்வன்
விராட்1 அதிகமாக பிரகாசிப்பவன், ஸம்ராட்1 பேரரசன்

3.2.62 ப³ஜோ ண்வி

ப⁴ஜ் (பங்கு கொள்) என்ற தாதுவுக்குப்பின் (வேற்றுமைச் சொல்லை அல்லது உபசர்க்கம் உபபதமாகக் கொண்டு நிற்கும்போது) ண்வி ஒட்டு வரும்.

அர்த⁴ப⁴াக்' பாதிப் பங்கு எடுத்துக் கொள்பவள்

ப்ரப⁴াக்' – பகுதி

3.2.63 ச²ந்த³ஸி ஸஹ:

வேதமொழியில் 'ஸஹ்' என்ற தாதுவுக்குப்பின் (ஸுபந்த, உபஸர்க:, உபபத), 'ண்வி' வரும்.

துராஷாட்' 'இந்திரன்' (8.3.56 8.2.31 6.3.137)

ஜலாஷாட்'

3.2.64 வஹஸ்' ச

'வஹ்' என்ற தாதுவுக்குப் பின்னும், அதே சூழலில் வேத மொழியில் 'ண்வி' இணைக்கப்படும்.

ப்ரஷ்ட'வாட் 'ஒரு பிரஷ்டத்தை (அளவு) தூக்குகிறவன்' தி³த்யவாட்

3.2.65 க்வய புரீஷ புரீஷ்யேஷு ஞ்யுட்'

கவ்ய, புரீஷ, புரீஷ்ய ஆகிய சொற்கள் உபபதமாக நிற்கும்போது, வேதமொழியில் 'வஹ்' தாதுவுக்குப்பின் 'ஞ்யுட்' வரும்.

கவ்ய வாஹன: பித்'ரூணாம் 'நெருப்பு' பித்ருக்களுக்கு பிண்டம் முதலியவை எடுத்துச்: சல்பவன்

புரீஷவாஹன:/புரீஷ்ய வாஹன:

3.2.66 ஹவ்யே அனந்த பாத³ம்

'ஹவ்ய' என்ற சொல் உபபதமாக 'வஹ்' என்ற தாதுவுடன் நின்று, தருவிக்கப்பட்ட சொல் பாதத்தின் நடுவில் (பாட்டின்) அமையாமல் வரும்போது வேதமொழியில் 'ஞ்யுட்' ஒட்டு 'வஹ்' ஒடு இணைக்கப்படும்.

அக்³னிஸ்' ச ஹவ்பவாஹன:

ஒப்பிடுக

ஹவ்யவாட்' அக்னி அஜர பிதா ந

ஹ்வ்யவாஹன: (இறுதியில் நிற்கிறது)

ஹவ்யவாட்' : (முதலில் நிற்கிறது)

3.2.67 ஜன ஸன க²ன க்ரம க³மோ லிட்:

ஜன (பிற, தோன்று), ஸன (அளி), க²ன (தோண்டு), க்1ரம(நட), க³ம (போ, செல்) ஆகிய தாதுக்களுக்குப்பின் வேத மொழியில் 'லிட்' ஒட்டு (ஸுப், உபசர்க்க உபபதங்களாக வரும்போது) இணைக்கப்படும்.

அப்³ஜா (அப் + ஜன் + லிட்) 'தாமரை' (தண்ணீரில் பிறந்த)

கே³ாஜா – 'கடவுள்' 'சுவர்க்கத்தில் உண்டானவன்'

கோ³ஷா	–	'பசுவையளிப்பவன் இந்திரன்'
ந்ரு'ஷா	–	மனிதனை விரும்புவன் 'இந்திரன்'
கூபக²ா	–	கிணறு வெட்டுபவன் (தோண்டுபவன்)
பி³ஸக²ா	–	தாமரைத் தண்டை தோண்டுபவன்
த³தி⁴க்ரா		
அக்³ரேக³ா	–	தலைவன்

3.2.68 அதே³ா அனன்னே

அன்ன (உணவு) என்ற சொல்லைத் தவிர மற்ற வேற்றுமைச் சொற்கள் அத்³ (உண்) என்ற தாதுவுடன் உபபதமாக வந்து நிற்கும்போது, 'விட்' ஒட்டு, அத்தாதுவோடு இணைக்க வேண்டும்.

ஆமாத்' (ஆமம் அத்தி) சமைக்கப்படாததைச் சாப்பிடுபவன்

ஸஸ்யாத்' 'தானியங்களைச் சாப்பிடுகிற'

ஆனால், அன்னாத³ : (அண் ஒட்டுடன்) சமைக்கப்பட்ட உணவு சாப்பிடுபவன் இங்கு 'அன்னம்' உபபதம்.

3.2.69 க்ரவ்யே ச

க்ரவ்ய என்ற சொல் உபபதமாக நிற்கும்போது 'அத்³' தாதுவுடன் 'விட்' இணைக்க வேண்டும். க்ரவ்யாத்' இச்சொல்லை, முந்திய சூத்திரத்தைப் பயன்படுத்தித் தருவிக்க இயலும்போது, இதற்கு ஒரு தனி விதியமைத்திருப்பதின் காரணம், வாஸரூப (3.1.24) 'விதியை' இங்கு பயன்படுத்தக் கூடாது என்று உணர்த்துவதற்காக, அதனால் மாற்று வடிவம் ஆக்குவதற்கு 'அண்' ஒட்டு இங்கு பயன்படுத்தக் கூடாது.

அப்படியானால் 'க்ரவ்யாத³' என்ற சொல் எப்படி ஆக்கப்பட்டது? 'க்ரு'த்த',' 'விக்ரு'த்த' என்ற சொற்களை உபபதமாகக் கருதி 'அண்' ஒட்டு இணைக்கப்படும். இது 'ப்ருஷோத³ராதி' வகுப்பைச் சேர்ந்த விதிப்படியாக்கப்படாத சொல் (6.3.109) ஆகையால், இங்கு 'க்ரவ்ய' உபபதம் இல்லையென்று தான் கருத வேண்டும்.

சமைக்கப்பட்ட மாமிசம் சாப்பிடுபவன் 'க்ரவ்பாத³' அதாவது அசைவ உணவு சாப்பிடும் மனிதன். சமைத்துப் பக்குவப்படுத்தாத மாமிசம் சாப்பிடும் விலங்கு க்ரவ்யாத்'

3.2.70 து³ஹ கப்' க⁴ஸ்'ச

(ஒரு வேற்றுமைச் சொல்லை உபபதமாகக் கொண்டு நிற்கும்) 'து3ஹ்' தாதுவுக்குப்பின், 'க'ப்' ஒட்டு இணைக்கப்படும். 'க⁴' அதன் இறுதியெழுத்துக்குப் (ஹ) பதிலியாக வரும்.

க'ாமது³க⁴ா தே⁴னு விரும்பியபொருளைக் கறக்கும் பசு

காமது³ஹ் + கப்' = அ = காமது³ஹ் + அ = காமது³க்⁴ + டாப் = அ = காமது³கா⁴

3.2.71 மந்த்ரே ஸ்'வேத' வஹ உக்'த^{2}ஸ'ஸ்
புரோட^{3}ாஸே'ா ண்வின்
மந்திரத்தில் (வேதமொழியில் மந்திரப் பகுதியில்) ஸ்'வேத'ஹ, உக்த^{2}ஸ'ஸ், புரோட^{3}ாஸ்' ஆகிய சொற்களுக்குப்பின் 'ண்வின்' ஒட்டு இணைக்கப்படும். இச்சொற்களில் உபபதம், தாது இரண்டுமே காணப்படுகின்றன. இவைகள் விதிப்படியாக்கப்படாத சொற்கள் என்று புலப்படும். 'ஸ்'வேத' என்ற சொல்லை உபபதமாகக் கொண்ட 'வஹ்' என்ற தாதுவுக்குப்பின் 'ண்வின்' ஒட்டு இணைக்கப்பட்டிருக்கிறது. 'ஸ்வேத' கர்த்தாவைக் குறிக்கும், அதே சமயத்தில், தருவிக்கப்பட்ட சொல், செயப்படு பொருளைக் (கர்மன்) குறிக்கும்.
ஸ்'வேத' வஹா: இந்திரனின் பெயர் (எவனை வெள்ளைக் குதிரைகள் இழுத்துச் செல்கிறதோ)
உக்'த^{2}ஸ'ஸ் (உக்'த^{2} + ஸஸ் + ண்வின்) உக்'த^{2}ஸ'ா மந்திரங்களை ஓதுபவன், யாகம் பண்ணுபவனின் பெயர் இங்கு, 'உக்'த^{2}' என்ற சொல், 2 அல்லது 3ஆம் வேற்றுமையில் அமையும், எவன் உக்தங்களை அல்லது உக்தங்களால் புகழ்கிறானோ.
புரோட^{3}ாஸ்' (புரஸ் + த^{3}ாஸ் + ண்வின்)
புரோட^{3}ா (எதை முதலில் அளிக்கப்படுகிறதோ)

வா: ஸ்'வேத' வஹாதீ^{3}னாம் ட^{3}ஸ்பதஸ்யேதி வக்தவ்யம் 'பத' ஒட்டுக்கள் தொடரும்போது ஸ்வேதவாஹ் க்குப்பின் 'ட^{3}ஸ்' ஒட்டு இணைக்கப்படும். அதாவது முதல் வேற்றுமை ஒருமை 3ஆம் வேற்றுமை இருமை முதலியவைகளுக்குப்பின் 'ண்வின்' ஒட்டு வராமல், 'ட^{3}ஸ்' ஒட்டு வரும்.
ஸ்வேதவஹ் → ஸ்வேதவஸ்
ஸ்'வேத'வோப்^{4}யாம் (3ஆம் வேற்றமை இருமை)
ஸ்'வதே'வோபி^{4} (3ஆம் வேற்றுமைப் பன்மை)
ஸர்வநாமஸ்த^{2}ான, ப^{4}, ஒட்டுக்களுக்கு முன் 'ட^{3}ஸ்' இணைக்கப்படமாட்டாது.
ஸ்'வேத வாஹௌ
ஸ்'வேத வாஹ:

3.2.72 அவே யஜ:
மந்திரப்பகுதியில் 'அவ்' என்ற சொல்லை (உபபதமாகக் கொண்ட) 'யஜ்' தாதுவுக்குப்பின் 'ண்வின்' ஒட்டு வரும்.
அவயாஜ் (அவ + யாஜ் + ண்வின்)
அவயா: (முதல் வேற்றுமை ஒருமை)
இதைத் தொடர்ந்து வரும் சூத்திரங்களுக்காக இச்சூத்திரம் தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்குப்பின் வரும் சூத்திரங்களில் 'யஜ்' தாது அனுவிருத்தி மூலம் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

3.2.73 விஜுபே ச^{2}ந்த^{3}ஸி
'உப்'வை உபபதமாகக் கொண்ட யஜ் தாதுக்குப்பின், வேத மொழியில் 'விச்'

ஒட்டு வரும்.
உபயட்³பி⁴: ஊர்த்⁴வம் வஹந்தி
'உபயஜ்' மூலம் அதை மேலே கொண்டு போகிறார்கள்
உப + யஜ் + விச் - உபயஜ்
ஒரு யாகத்தின் பதினொன்று வகைமுறை (formula). ஒன்றுக்கு 'உபயஜ்' என்ற பெயர்.

'சந்த³யஸ்' என்ற சொல் பிராம்மண மொழியையும் சேர்த்துக் குறிப்பதற்காக இங்க மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. 'விச்', இன் 'ச்' ஒரு 'இத்' ஆகும், இந்த ஒட்டை இதைவிடப் பெரிய 'வி' வகுப்பைச் சேர்ந்தவைகளுடன் (க்வின், க்விப், ண்வி விட்' பார்க்க 6.1.67) சேர்ப்பதற்கு 'ச்' பயன்படும். 3.2.75இன்படி 'யஜ்' தாதுவுடன் 'விச்' ஒட்டுச் சேர்க்க இயலும்போது, இச்சூத்திரத்தைத் தனியாகக் குறிப்பிடுவதன் தேவை என்ன. இது ஒரு நியம சூத்திரம் (Restricted Rule) 'உபயஜ்' வேதமொழியில் மாத்திரந்தான் காணப்படுகிறது. பேச்சு மொழியில் அல்ல.

3.2.74 ஆதே³ா மனின் க்வனிப்³வனிப's'ச
(வேற்றுமைச் சொல்லோ அல்லது உபசர்க்கமோ உபபதமாக நிற்கும்) 'ஆ'வை இறுதியாகக் கொண்ட தாதுவுக்குப்பின், மனின் (மங்ன்) க்வனிப்(வன்), வனிப்(வன்), விச் என்ற ஒட்டுக்கள் இணைக்கப்படும் (வேதமொழியில்)
ஸுத³ாமா (ஸு + தா + மனின் - மன்) 'தாராளமாகக் கொடுப்பவன்'
அஸ்'வத்' த²ா மா—ஒரு பெயர்
ஸுதீ⁴வா (ஸு + தா + க்வனிப் + வன்)
நன்றாகப் புரிந்து கொள்பவன்
ஸுபீவா 'நன்றாகக் குடிப்பவன்'
பூ⁴ரித³ா வா (பூ⁴ரித³ா + வனிப்-வன்)
அதிகமாக/தாராளமாகக் கொடுப்பவன்
க்⁴ருத பாவா (க்⁴ருத + பா +வனிப்-வன்)
கீலாலபா: (கீலால, பா + விச்) 'அமிழ்து குடிப்பவன்'
ஸுப⁴்யா (ஸுப⁴யா + விச்)
ராமஸ்யோபத³ா (. . . . . உபத³ா + விச்)

3.2.75 அன்யேப்⁴யோ அபித்³ருஸ்'யந்தே
வேறு இடங்களிலும். இவ்வொட்டுக்கள் காணப்படுகின்றன, அதாவது 'ஆ'வை ஈறாகக் கொண்ட தாதுக்களோடு மட்டுமல்லாமல் மற்ற தாதுக்களுடனும் இவ்வொட்டுக்கள் இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.
ஸுஸர்மா (ஸுஸ்'ரு' + மனின் - மன்)
'நன்றாக அழிக்கிறவன்' அதாவது பாடத்தை அல்லது அறியாமையை அழிக்கிறவன்
ப்ராத'ரித்'வா (ப்ராத: + இன் +க்வனிப்-வன்)
'விடியற்காலையின் போகிறவன்'

விஜாவா (வி + ஜன் + வனிப்) 'உண்டாக்குகிறவன்'
ரேட்[3] (ரிஷ் + விச்) 'காயப்படுத்துபவன்'
இவ்வொட்டுக்களைப் பயன்படுத்த இதற்கு முந்திய சூத்திரங்களில் கூறப்பட்டிருக்கும் எல்லா வரையறைகளும் இதைக் கட்டுப்படுத்தாது என்ற 'உம்' (அபி) என்ற சொல் உணர்த்தும். அதாவது தாதுக்கள் உபபதத்தோடு சேராமல் நிற்கும்போதும் இவ்வொட்டுக்கள் இணைக்கப்படும்.
தீ[4]வா, பீ'வா
எல்லா தாதுக்களோடும் இந்த ஒட்டுக்களை விதிமுறையில்லாமல் பயன்படுத்தக் கூடாது என்பதை த்[3]ருஸ்யந்தே (காணப்படுகின்றன) என்ற சொல் குறிக்கிறது. ஒரு சொல்லின் அமைப்பைப் பார்க்கும் போதுதான் இந்த ஒட்டுக்களைச் சேர்த்து அச்சொல்லைத் தருவிக்கப்பட்டிருக்கிறது என்று அனுமானிக்க வேண்டும்.

3.2.76 க்'விப்' ச

(உபபதங்களோடு சேர்ந்தோ அல்லது உபபதங்களில்லாமல் தனி யாக நிற்கும்போதோ எல்லா தாதுக்களுடன்) க்விப் ஒட்டு. வேத மொழியிலும், பேச்சு மொழியிலும் வரும்.
உக[2]ாஸ்ரத் (உக[2]ா + ஸ்ரம்ஸ் + க்விப் → உக[3]ாஸ்ரத் (6.4.24 8.2.72) 'பானையிலிருந்து கீழே விழுவது'
பர்ணத்[4]வத்' (பர்ண + த்[4]வம்ஸ் + க்விப்) 'இலைகளை அழிப்பது'
வாஹப்[4]ரட் (வாஹ + ப்[4]ரம்ஸ் + க்விப்)

3.2.77 ஸ்த[2] : க[1] ச

(வேற்றுமைச் சொற்களை உபபதமாகக் கொண்டு நிற்கும்) 'ஸ்த[2] ா' என்ற தாதுவுக்குப் பின் 'க' 'க்விப்' ஆகிய இரண்டு ஒட்டுக்களும் வரு ம்.
சூ. 3.2.4 இன்படி 'க' ஒட்டும், சூ. 3.2.75இன் படி 'க்விப்' ஒட்டும் 'ஸ்த2ா' என்ற தாதுவுக்குப்பின் வரமுடியும். ஆகையால், இச்சூத்திரம் தனியாக அமைக்க வேண்டிய தேவை என்ன? இது தடை விதிக்குத் தடை விதிக்கிறது.
(ப[1]ாத[4]க ப[1]ாத[4]னார்த[2]ம்),அதாவது சூ. 3.2.14 'அச்' ஒட்டு விதிக்கி றது. இந்த ஒட்டைச் சேர்ப்பதற்குத் தடை விதிக்கிளறது. 3.2.77
ஸம்ஸ்த[2] :/ஸம்ஸ்த[2]ா:
ஸம்ஸ்த[2] (ஸம் + ஸ்த[2]ா + க =அ)
ஸம்திஷ்ட[2]தி என்ற விளக்கம் கொடுக்கும்போது, 'அச்' ஒட்டுத்தான் வரும். இச்சூத்திரம், அச் ஒட்டுக்குத் தடை விதிப்பதால், 'க' ஒட்டு இணைக்கப்படும்.
ஸம்ஸ்த[2]ா: (ஸம் +ஸ்த[2] + க்விப்)

3.2.78 ஸுப்'யஜாதெ'ள ணினிஸ்த'ாச் சீ[2]ல்யே

உபபதமாக வரும் வேற்றுமைச் சொல் இனத்தைக் குறிப்பதாக அமையாமல் வரும்போது அத்துடன் வரும் தாதுக்களுக்குப்பின் 'ணினி' என்ற ஒட்டு, பழக்கம் என்ற பொருளைக் குறிக்கும் போது இணைக்கப்படும்.

உஷ்ணபோ⁴ஜீ (உஷ்ணம் + பு⁴ஜ் + ணினி = இன் → உஷ்ணபோ⁴ஜின்
உஷ்ணபோ⁴ஜீ முதல் வேற்றுமை ஒருமை, 'சூடாக (உணவை)ச் சாப்பிடுபவன்'
ஆனால்
ப்³ராஹ்மணான் ஆமந்த்ரயிதா
'பிராமணனுக்கு அழைப்பு விடுபவன்'
இங்கு ஒரு இனத்தைச் சுட்டுவதால் (பிராம்மணன்) இதனுடன் வரும் வினை, த்ருச் ஒட்டுடன் காணப்படுகிறது.
ஒப்பிடுக
உஷ்ணம் பு⁴ங்க்தே க'த³ாசித்'
'எப்போதாவது சூடாகச் சாப்பிடுகிறான்'
'ஸூபி' அனுவிருத்தி மூலம், இங்குப் பெறப்படுமென்றாலும், இதை மறுபடியும் இங்கு கூறியிருப்பது 'உபசர்க்கம்' உபபதமாக இங்கு வரக்கூடாது என்று உணர்த்துவதற்குத்தான். அதாவது உபசர்க்கம் உபபதமாக வரும்போது 'ணினி' ஒட்டு இணைக்கப்படமாட்டாது.

வா: உத் ப்ரதிப்⁴யாமாங்கி ஸர்த்தே'ருப ஸங்க்²யானம்
'ஆ + ஸ்ரு', என்ற தாது 'உத்', 'ப்ரதி' ஆகியவைகளுடன் சேர்ந்து வரும்போது அத்தாதுவுக்குப்பின் 'ணினி' ஒட்டு இணைக்கப்படும்.
உத³ாஸாரின் (உத்ஆஸ்ரு + ணினி = இன்)
உத³ாஸாரிணீ (பெண்பால்)
ப்ரத்யாஸாரிணீ

வா: ஸாது⁴ காரிணி ச
'அதைச் செய்யத் திறமையுள்ள' (ஸாது4 காரிணி) என்ற பொருளிலும் 'ணினி' ஒட்டு இணைக்கப்படும்.

ஸாது⁴காரீ	–	சிறந்த வேலையாள்
ஸாது⁴த³ாயீ	–	ஏராளமாகக் கொடுப்பவன்

வா: ப்³ரஹ்மணி வத³:
'ப்³ரஹ்ம' என்ற சொல்லை உபபதமாகக் கொண்ட 'வத்³' என்ற தாதுவுக்குப் பின் 'ணினி' ஒட்டு வரும். ப்³ரஹ்மவாதி³னோ வத³ந்தி
'பிரம்மத்தை அறிந்தவர்கள் சொல்கிறார்கள்'
(ப்³ரஹ்ம + வத்³ + ணினி = இன்)

3.2.79 கர்தரி உபமானே
கர்த்தாவைக் குறிக்கும் உவமைச் சொல்லை உபபதமாகக் கொண்ட தாதுவுக்குப் பின் 'ணினி' ஒட்டு இணைக்கப்படும். அதாவது, உபபதமாக நிற்கும் கர்த்தா, ஒட்டின் (ணினி) கர்த்தாவுக்கு, உவமையாக ஆகும்.
உஷ்ட்'ர க்ரோஸி'

உஷ்ட்'ர (உபபதம்) + க்ரு'ஸ் + ணினி = இன்) ஒட்டகத்தைப் போல் (உஷ்டர) கத்துபவன் (க்ரோஸி)

த்⁴வாங்க்ஷ ராவீ 'காகத்தைப் போல் கத்துபவன்'

பழக்கம் என்ற பொருளைக் குறிக்காத போதும் அல்லது இனத்தை க் குறிக்கும் சொல் உபபதமாக வரும் போதும், இவ்விதியைப் பயன்படுத்தலாம். ஒப்பிடுக

அபூபானிவ ப⁴க்ஷயதி மாஷான்

ஆப்பத்தைப் போல் பருப்பைச் சாப்பிடுகிறான்

இங்கு உவமைச் சொல் கர்மன். கர்த்தாவைக் குறிக்கவில்லை.

3.2.80 வ்ரதே

'விரதம்' என்ற பொருளைக் கொடுக்கும் வேற்றுமைச் சொல் உபபதமாக நிற்கும்போது தாதுவுக்குப்பின் 'ணினி' ஒட்டு வரும்.

சாத்திரங்களால் ஒழுங்கு முறைப்படுத்தியது விரதம் என்று கூறப்ப டும். இந்த ஒழுங்கு முறை இங்கு ஒரு முழுச் சொல்லைக் (completed word) குறிக்கும் அதாவது, தாது உபபதம், ஒட்டு ஆகியவைகளால் முழுமையாக்கப்பட்ட ஒரு சொல், 'விரதம்' என்ற பொருளைக் குறிப்பது.

ஸ்த²ண்டி³ல ஸா'யீ (ஸ்த²ண்டி³ல –ஸி + இன்)

'வெறுந்தரையில் படுத்துக் கொள்வது–என்று விரதம் அல்லது அவ்விரதத்தை மேற்கொண்டவன்.'

ஒப்பிடுக

ஸ்த²ண்டி³லே ஸே'தே' தே³வத³த்த:

தேவதத்தன் வெறுந்தரையில் படுத்துக் கொள்கிறான்

இங்கு ஒரு விரதம் என்ற பொருளைக் குறிக்காததால், இங்கு இதைத் தொகுக்க முடியாது.

3.2.81 ப³ஹுலம் ஆபீ⁴க்ஷ்ண்யே

'தொடர்ந்து திருப்பிச்செய்தல்' என்ற பொருளில் 'ணினி' என்ற ஒட்டு தாதுவுக்குப்பின் பலவகையாகப் பயன்படுத்தப்படும்.

ஆர்வத்துடன் செய்தல் என்ற பொருளில் 'ணினி' பயன்படுத்தப்படும். பழக்கத்தைச் சுட்ட அல்ல.

கஷாயபாயிண: க³ாந்த⁴ார: ''காஷாயம் அடிக்கடி குடிப்பவர்கள் காந்தாரத்து மக்கள்''

கஷாய + பா + ணினி = கஷாய + பா + யுஜ் + ணினி (7.3.33): க்ஷீரபாயிண: உஸி'நரா: 'பால் அடிக்கடி அருந்துபவர்கள் உசீநரத்து மக்கள்'

'பலவகையில்' என்று கூறியிருப்பது சில சமயங்களில் இந்த ஒட்டு இணைக்கப்படாமலும் இருக்கலாம் என்று சுட்டும். குல்மாஷக²ாத³ : 'தானியம் சாப்பிடுபவன்' இங்கு அண் ஒட்டு இணைக்கப்படும். 'ணினி' வராது.

3.2.82 மன:

(வேற்றுமைச் சொல்லை உபபதமாகக் கொண்டு வரும்) மன 'நினை' என்ற தாதுவுக்குப்பின் 'ணினி' ஒட்டை இணைக்க வேண்டும்.

த3ர்ஸ'னீயமானீ (த3ர்ஸ'னீய – மன் + ணினி - இன்)

தன்னை அழகானவன் என்று நினைத்துக் கொள்பவன் 'ஸோ'ப4ன' மானீ 'தன்னை அழகானவன் என்று நினைத்துக் கொள்பவன்'

'பலவகையில்' என்ற சொல் அனுவிருத்தி மூலம் இச்சூத்திரத்திலும் பயன்படுத்தப்படும். அதனால் இங்கு 'தி3வாதி3', வகுப்பைச் சேர்ந்த 'மன' தாதுவைத்தான் குறிக்கும். த'னாதி3 வகுப்பைச் சேர்ந்த 'மன்' தாதுவை அல்ல. இச்சூத்திரத்தின் கீழ் இந்த இரண்டு வகுப்பையும் சேர்ந்த தாதுக்களாலாக்கப்பட்ட சொல்லின் வடிவம் ஒன்றாகவேயமையும். அதாவது 'மானின்' ஆனால் அடுத்த சூத்திரத்தில் 'க2ஸ்' ஒட்டு இணைக்கும்போது அந்தந்த வகுப்புக்குரிய விகரணத்தை இணைக்கப்படுவதால் தருவிக்கப்பட்ட சொற்களின் வடிவம் ஒன்றாக அமையாது.

3.2.83 ஆத்மமானே க2ஸ்' ச

(வேற்றுமைச் சொல் உபபதமாக நிற்கும்போது) 'மன' தாதுவுக்குப்பின், 'தன்னைப் பற்றி அவ்வாறு நினைத்துக் கொள்தல்' என்ற பொருளில் 'க2ஸ்' ஒட்டும் வரும், 'ணினி' ஒட்டு 'க2ஸ்' ஒட்டு இரண்டுமே வரலாம் என்பதை 'ச' சுட்டுகிறது.

கர்த்தா 'தன்னைத்தான் அழகானவன் என்று நினைத்துக் கொள்ளல்' என்ற பொருளைக் குறிக்கும்போது இந்த ஒட்டு இணைக்க வேண்டும்.

த3ர்ஸ'னீயம் மன்ய: (த3ர்ஸ'னீயம்–மன் க2ஸ் அ)

த3ர்ஸ'னியம் மன் + ஸ்யன் + ய அ) (3.1.69) 'தன்னை அழகானவன் என்று நினைத்துக் கொள்கிறான்'

த3ர்ஸ'னீய மானின் ('ணினி'யுடன்)

பண்டிதம்மன்ய:/பண்டிதமானீ

'தன்னைப் படித்தவன்/அறிவாளியென்று நினைத்துக் கொள்பவன்'

ஆனால் மற்றவர்களைப் பற்றி அவ்வாறு கருதும்போது த3ர்ஸ1னீய மானீ தே3வத3த்த: யக்3ஞத3த்தஸ்ய

'யக்3ஞத3த்தனை அழகானவன் என்று தேவதத்தன் நினைகிறான்'

க2ஸ்' ஒட்டின் 'க்2' (இத்) மும் ஆகமம் வரும் என்று குறிக்கும் (6.3.66) 'ஸ்'' அதை ஸார்வதாதுகமாக்குகிறது.

இதுவரையில் கூறப்பட்ட ஒட்டுக்கள் எல்லாக் காலத்தையும் குறிப்பதாகும். இதையடுத்து விளக்கப்படும் ஒட்டுக்கள் குறிப்பிட்ட ஒரு காலத்தை மட்டும் சுட்டும்.

3.2.84 பூ4தே'

'இறந்த காலத்தில்'

இது ஒரு அதிகார சூத்திரம். இதற்குப்பின் கூறப்படும் அதாவது 3.2.123

வரையில், ஒட்டுக்கள் இறந்த காலத்தைக் குறிப்பதாக அமையும்.
இதற்கு அடுத்த சூத்திரம் 'யஜ்' தாதுவுடன் உபபதமாக நிற்கும் சொல் கருவிப் பொருளில் வரும்போது, 'ணினி' ஒட்டு இணைக்கப்படும் என்று கூறுகிறது. இத்துடன் இறந்த காலத்தைக் குறிக்கும்போது (பூதே[4]) என்று சேர்த்து பொருட் கொள்ள வேண்டும்.
அக்[3]னிஷ்டே[1]ாமயாஜீ: 'அக்னிஷ்டோமம் என்ற யாகம் செய்தவன்'
இறந்த காலத்தைச் சுட்டாவிட்டால்
அக்[3]னிஷ்டே[1]மேன யஜதி
'அக்னிஷ்டோமம் என்ற யாகம் செய்கிறான்'
இங்கு 'ணினி' இணைத்து தொகுக்கப்படமாட்டாது.

3.2.85 கரணே யஜ:
'யஜ்' தாதுவுடன் கருவிப் பொருளைக் குறிக்கும் வேற்றுமைச் சொல் உபபதமாக நிற்கும்போது, இறந்த காலப் பொருளில் 'ணினி' ஒட்டு இணைக்கப்படும்.
அக்னிஷ்டோமயாஜீ.
ஒருவன் விரும்பிய பொருளையடைய அக்னிஷ்டோமயாகம் கருவியாக அமைகிறது இங்கு.

3.2.86 கர்மணிஹன:
செயப்படுபொருளைக் குறிக்கும் சொல்லை உபபதமாகக் கொண்ட 'ஹன்' தாதுவுக்குப்பின் 'ணினி' ஒட்டு (இறந்த காலத்தைக் குறிக்கும்போது) இணைக்க வேண்டும்.

பித்'ரு'வ்யக[4]ாதீ – தகப்பனுடன் பிறந்தவனைக் கொன்றவன்
மாதுலக[4]ாதீ–மாமனைக் கொன்றவன்
ஹன் + ணினி = க[4]ன் + ணினி (7.3.54 க[4]த் + ணினி 7.3.32) = க[4]ாதி (7.2.116)
வா: குத்ஸிதக்[3]ரஹணம் கர்த்தவ்யம்
நிந்திக்கக்கூடிய கொலையைச் சுட்டும்போதுதான் இவ்வொட்டு இணைக்க வேண்டும் அதனால் சோரம் ஹதவான் 'திருடனைக் கொன்றான்'. இங்கு 'ணினி 'வராது. 3. 2.92 வரை கர்மணி அனுவிருத்தியாகும்.

3.2.87 ப்[3]ரஹ்ம ப்[4]ரூண் வ்ரு'த்ரேஷு க்விப்
'ப்[3]ரஹ்ம' முதலிய சொற்கள் (செயப்படு பொருள்) உபபதமாக நி ற்கும்போது, 'ஹன்' தாதுவுடன் 'க்விப்' ஒட்டு (இறந்த காலத்தைக் குறிக்கும்போது) இணைக்க வேண்டும்.
ப்[3]ரஹ்மஹா (ப்[3]ரஹ்ம–ஹன் + க்விப்) (முதல் வேற்றுமை ஒருமை) 'பிராம்மணனைக் கொன்றவன்.'
ப்[4]ரூணஹா 'கருவை அழித்தவன்'

வ்ரு'த்ரஹா 'விருத்திரனைக் கொன்றவன். இந்திரனின் ஒரு பெயர்' சூ. 3.2.76இன்படி எல்லா தாதுக்களுக்குப் பின்னும் 'க்விப்' ஒட்டு வரும் என்று இருக்கும்போது, இந்த சூத்திரம் தனியாக அமைப்பதற்குத் தேவை என்ன? இது ஒரு நியம சூத்திரமாகும். இங்கு, 4 வகையான நியமத்தைச் சுட்டுகிறது.

1) ப்3ரஹ்ம முதலிய சொற்கள் உபபதமாக நிற்கும்போது தான் 'ஹன்' தாதுவுக்குப் பின் 'ணினி' ஒட்டு வரும். மற்ற இடங்களில் அல்ல ஆகையால் புருஷம் ஹந்தவான்–மனிதனைக் கொன்றான்

2) 'ப்³ரஹ்ம' முதலிய சொற்கள் 'ஹன்' தாதுவுடன் வரும்போது மாத்திரம் 'ணினி' ஒட்டு வரவேண்டும். ப்³ரஹ்ம அதீ⁴தவான் 'வேதத்தைப் படித்தான்'

3) 'ப்³ரஹ்ம' முதலிய சொற்கள் 'ஹன்' தாதுவுடன் இணைந்து இறந்த காலத்தைக் குறிக்கும்போது 'க்விப்' ஒட்டு மாத்திரந்தான் வரவேண்டும். வேறு எந்தவொரு ஒட்டும் இணைக்கக்கூடாது.

4) இந்த விதி இறந்த காலத்தைக் குறிக்கும்போது மட்டுந்தான் பயன்படுத்தப்படும். மற்ற காலத்தைச் சுட்டும்போது அல்ல.
ப்³ரஹ்மானம் ஹந்தி/ஹனிஷ்யதி
'பிராம்மணனைக் கொல்கிறான்/கொல்வான்'
இதைபடுத்து வரும் சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் பலவகையில் (ப³ஹுலம்) என்பதை முன்கூட்டியே எதிர்பார்த்து, அதற்கு பல எடுத்துக்காட்டுகளையும் இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.

3.2.88 ப³ஹுலம் ச²ந்த³ஸி

வேதமொழியில் 'க்விப்' ஒட்டு பல வகையில் 'ஹன்' தாதுவுக்குப் பின் வரும் (இறந்த காலத்தைக் குறிக்கும்போது) (இதற்கு முந்திய சூத்திரத்தில் கூறப்பட்ட சொல் வராமல் வேறு சொல் நின்றாலும்கூட)

இது, மேற்சூத்திரத்தில் சேர்க்கப்படாதவைகளையும் சேர்ப்பதற்கு இவ்விதி பயன்படுகிறது.

மாத்ரு'ஹா ஸப்தமம் நரகம் ப்ரவிஸேத் (தாயைக் கொன்றவன் 7வது நரகத்துக்குச் செல்லட்டும்)
பித்ரு'ஹா.
மாற்று வடிவங்கள் மாத்ரு'க⁴ாத: பித்ரு'க⁴ாத:, (அண் ஒட்டுடன்)

3.2.89 ஸுகர்ம பாபமந்த்ரபுண்யேஷு க்ரு'ஞ:

'க்ரு' தாதுவுக்குப்பின் 'க்விப்' ஒட்டு, கீழ்க்கண்ட சொற்கள், (செயப்படுபொருள்) உபபதமாக வரும்போது இணைக்க வேண்டும்.

'ஸு' ஒரு அடைச் சொல்லானதால், இதைத் தவிர்த்து மற்ற சொற்களான கர்ம (செயல்), பாப, (பாவம்) மந்த்ர (மந்திரம் புண்ய (புண்ணியம்) ஆகியவைகள் செயப்படு பொருளாகும்.

ஸுக்ரு'த் (ஸு + க்ரு'த் + க்விப்) 'நன்றாகச் செய்தவன்'

கர்மக்ரு'த் – 'செயல் செய்தவன்'
பாபக்ரு'த் – 'பாபம் பண்ணினவன்'
மந்த்ரக்ரு'த் – 'மந்திரங்களை எழுதினவன்'
புண்யக்ரு'த் – 'புண்ணியம் செய்தவன்'

இதுவும் ஒரு நியம விதியாகும். இங்கு 3 வகை நியமும் ஏற்படும். தாதுவைப் பற்றிய நியமத்தைத் தவிர்த்து, (1) காலம் (2) உபபதம் (3) ஒட்டு ஆகியவைகளுக்கு நியமம் ஏற்படும் (பார்க்க 3.2.87) தாதுவைப் பொறுத்த வரையில் நியமம் இல்லாததால் இங்கு கூறப்பட்டிருக்கும் உபபதங்களைத் தவிர, வேறு உபபதங்களோடும் இவ்வொட்டைப் பயன்படுத்தலாம்.

ஸ'ாஸ்த்ரக்ரு'த் – 'சாத்திரம் படைத்தவன்'
ப⁴ாஷ்யக்ரு'த் – 'உரையெழுதியவன்'

3.2.90 ஸோமே ஸுஞ:

'ஸோம' என்ற சொல் (செயப்படு பொருள் உபபதமாக நிற்கும்போது) ஸூ (சாறு பிழி) என்ற தாதுவுக்குப்பின் 'க்விப்' ஒட்டு இணைக்க வேண்டும். ஸோமஸுத் 'ஸோமரசம் பிழிபவன்'

இதுவும் ஒரு நியம சூத்திரமாகும். இங்கும் நாலு வகை நியமத்தைச் சுட்டும். அதாவது, தாது, காலம், உபபதம் ஒட்டு ஆகியவை. ஆகையால் (1) ஸோம, என்ற சொல் மாத்திரம் உபபதமாக வரும்போதும் (2)' ஸு' என்ற தாது மட்டும் இத்துடன் வரும் போதும் (3) கடந்த காலத்தைக் குறிக்கும்போது மாத்திரமும் (4) 'க்விப்' ஒட்டு இணைக்கும் போது மட்டும் ஆகிய நான்கு வகை நியமமாகும்.

3.2.91 அக்³னௌ சே:

அக்னி (செயப்படு பொருள் உபபதமாக நிற்கும்போது) 'சி' என்ற தாது அதனுடன் வரும்போது 'க்விப்' ஒட்டு தாதுவுக்குப் பின் இணைக்க வேண்டும். அக்னிசித் 'புனித நெருப்பை வளர்த்தவன்'

இதுவும் முந்திய சூத்திரங்களைப் போல் 4 வகை நியமங்களைச்சுட் டுகிறது.

3.2.92 கர்மணி அக்ன்யாக்²யாயாம்

(அக்னி) செயப்படுபொருள் (உபபதமாக 'சி' என்ற தாதுவுடன்) தருவிக்கப்பட்ட சொல் ஒரு நெருப்பின் (அக்னி) பெயரைக் குறிக்கும்போது 'க்விப்' ஒட்டு இணைக்கப்படும்.

ஸ்'யேனசித் ஒரு நெருப்பின் பெயர் (கழுகு போன்று (ஸ்'யேன) அமைக்கப்பட்ட ஒரு நெருப்பின் பெயர்) க'ங்க'சித்–கொக்கைப் போன்ற உருவத்தில் அமைக்கப்பட்ட ஒரு நெருப்பு.

இச் சொற்கள் ரூடி³ எனப்படும். இவைகளின் பொருள் வழக்கினால் பெறப்படும். அவைகளின் ஆக்க வரலாறு (etymology) சார்ந்து நிற்பவையல்ல. வேள்வித் தீ வளர்ப்பதற்கு செங்கற்களை பலவகை உருவங்களில் அமைப்பது வழக்கம். அந்த உருவங்களைப் பொறுத்து,

அவைகளின் பெயர்களமையும். காட்டாக, கழுகு போன்ற உருவத்தில் செங்கற்கள் அமைக்கப்பட்டு தீ வளர்த்தால் அதற்கு ஸ்யேன சித் என்று பெயர்.

3.2.93 கர்மணீ நிர்விக்ரிய:

செயப்படுபொருள் உபபதமாக வரும்போது அதனுடன் நிற்கும் வி + க்ரீ (விற்றல்) என்ற தாதுவுக்குப்பின் 'இந்' ஒட்டு வரும் (இறந்த காலத்தைக் குறிக்கும்போது)

'கர்மணீ' என்ற சொல் அநுவிருத்தி மூலம், இச்சூத்திரத்திற்கும் கொண்டு வரலாம். ஆயினும் இப்பொருளை விற்பதால், கர்த்தா, கண்டனத்துக்குரியவன் என்று உணர்த்த இச்சொல்லைத் திரும்பவும் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஸோமவிக்ரயீ (ஸோமவிக்ரீ + இன்) 'ஸோமத்தை விற்பவன்'

ரஸவிக்ரயீ – 'சாராயம் விற்பவன்'

ஒப்பிடுக: த⁴ான்ய விக்ராய: (அண் ஒட்டுடன்)

'தான்யம் விற்பவன்' இங்கு 'கண்டனம்' என்ற பொருளைக் குறிக்கவில்லை.

3.2.94 த்³ருஸே: க்வனிப்

த்³ரு'ஸ்' தாதுவுடன் செயப்படுபொருளைக் குறிக்கும் சொல் உபபதமாக நிற்கும்போது, 'க்வனிப்' ஒட்டு தாதுவுடன் இணைக்கப்படும்.

மேருத்³ரு'ஸ்'வா (மேரு + த்³ரு'ஸ் + க்வனிப் = வன்)

'மேரு (மலை) வைக்கண்டவன்'

பரலோக த்³ரு'ஸ்வா (மேலுலகத்தைப் பார்த்தவன் 3.2.75 இலிருந்து க்வனிப் ஒட்டு இங்கும் வரமுடியும். ஆயினும் அண் முதலிய மற்ற ஒட்டுக்கள் இங்கு வராமல் அடை செய்வதற்காக, இதை மறுபடியும் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

3.2.95 ராஜனி யுதி⁴ க்'ரு'ஞ:

'ராஜன்' (செயப்படுபொருள்–உபபதமாக நிற்கும்போது) 'யுத்⁴', 'க்ரு'ஞ்' ஆகிய தாதுக்களுடன் வரும்போது 'க்வனிப்' ஒட்டு (இறந்த காலத்தை சுட்டும்போது) அத்தாதுக்களுக்குப்பின் வரும். 'யத்⁴' செயப்படுபொருள் குன்றிய வினையாகும்.

அதனுடன் செயப்படுபொருள் வரும் வாய்ப்பு இல்லையே என்ற கேள்வி எழும்பலாம். ஆனால் இத்தாதுவுடன் இயக்குவினை ஒட்டுச் (ணிச்) சேர்த்து, இயக்கு வினையாக அமையும்போது, இத்தாதுவுடன் செயப்படு பொருள் வரமுடியும்.

ராஜயுத்⁴வா – 'அரசனைச் சண்டை செய்ய வைத்தவன்'

ராஜக்ரு'த்வா – 'அரசனாக்கியவன்'

3.2.96 ஸஹே ச

ஸஹ (உடன்) என்ற சொல் உபபதமாக நிற்கும்போது, யுத்^{4} க்ருஞ் ஆகிய தாதுக்களுக்குப்பின் 'க்வனிப்' ஒட்டு இணைக்கப்படும் (இறந்த காலத்தைக் குறிக்கும்போது) 'ஸஹ' ஒரு இடைச் சொல்லானதால் (Particle) இது வேற்றுமையுருபுகளோடுவர இயலாது. அதனால் 'கர்மணி' அனுவிருத்தியாகாது.

ஸஹயுத்^{4}வா – 'உடன் சண்டையிட்டவன்'

ஸஹக்'ரு'த்வா – 'மற்றவனுடன் சேர்ந்து செயல் செய்தவன்'

3.2.97 ஸப்தம்யாம் ஜனேர் ட^3:

ஜன் (உண்டாக்கு) என்ற தாது, 7ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல் லுடன் சேர்ந்து (இறந்த காலப் பொருளில்) வரும்போது ட^3 ஒட்டு இணைக்க வேண்டும்.

உபஸரஜ: (உபஸர + ஜன் + ட^3 = அ) (6.4.143)

முதல் கர்ப்பத்தில் (உபஸரே) பிறந்தவன்–அதாவது முதல் பிள்ளை.

மந்து^{3}ரஜ: (மந்து^{3}ரா + ஜன் + ட^3 = அ) தொழுவத்தில் பிறந்தவன்.

3.2.98 பஞ்சம்யாமஜாதெ'ள

ஒரு இனத்தைக் குறிக்காத 5ஆம் வேற்றுமைப் பெயர்ச் சொல்லை உபபதமாகக் கொண்ட, ஜன் தாதுவுக்குப்பின், (இறந்த காலப் பொருளில்) 'ட^3' ஒட்டு வரும்.

பு^{3}த்^{3}தி^{4}ஜ (பு^{3}த்^{3}தி^{4} + ஜன் + ட^3 = அ) 'அறிவிலிருந்து பிறந்தது'

ஸம்ஸ்காரஜ – 'பழக்கத்தினால் வந்தது'

ஆனால், ஹஸ்தின: ஜாத:

'யானையிலிருந்து பிறந்தது'

'யானை' ஒரு இனத்தைச் சேர்ந்ததால் இங்கு ஒட்டு இணைக்கப்படமாட்டாது.

3.2.99 உபஸர்கே^{3} சஸம்க்^{3}ஞாயாம்

இறந்தகாலத்தைச் சுட்டும் 'ஜன்' தாது ஒரு உபசர்க்கத்தை உபபதமாகக் கொண்டு வரும்போது, அந்தத்தாதுவுடன் 'ட^3' ஒட்டு, அச்சொல் ஒரு பெயர்ச் சொல்லாக அமையும்போது இணைக்கப்படும்.

ப்ரஜா: (ப்ர + ஜன் + ட^3 = அ) 'மக்கள்'

3.2.100 அநௌ கர்மணி

அனு + ஜன் (உடன் செயப்படு பொருள் – உபபதமாக நிற்கும் போது) உக்குப்பின் (இறந்த காலத்தைச் சுட்டும்) 'ட^3' ஒட்டு இணைக்கப்படும்.

புமனுஜ:– ஓர் ஆணுக்குப்பின் பிறந்தவன்

ஸ்'தர்யனுஜ:– ஒரு பெண்ணுக்குப்பின் பிறந்தவன்

3.2.101 அன்யேஷ்வபி த்^{3}ரு'ஸ்யதே

மற்ற காரகங்கள் உபபதமாக நிற்கும்போதும் 'ஜன்' தாது, 'ட^3' ஒட்டோடு வருவதைக் காணலாம்.

அஜ: பிறக்காதவன் (ந + ஜன் + ட^3 = அ) பிறவிபற்றவன்

த்^{3}விஜ: (இரண்டு தடவை பிறந்தவன்/இருபிறவிபெடுத்தவன்.

இவ்விரண்டு சொற்களும்7ஆம் வேற்றுமைச் சொல்லை உபபதமாகக் கொண்டு அமைபவில்லை. முதல் எடுத்துக்காட்டு எதிர்மறைச் சொல்லுடனும், 2வது முதல் வேற்றுமைச் சொல்லுடனும் காணப்படுகிறது.

2) ப்ராஹ்மணஜ: த^{4}ர்ம: பிராம்மணிடமிருந்து பிறந்தது தர்மம்
க்ஷத்ரியஜம் யுத்^{3}த^{4}ம் க்ஷத்திரியனிடமிருந்து பிறந்தது யுத்தம்
இங்கு 5ஆம் வேற்றுமைச் சொல் உபபதமாக நின்று இனத்தைக் குறிக்கும்போதும் 'ஜன்' கக்குப்பின் 'ட^3' ஒட்டு வரக்காணலாம் (3.2.98ஐ ஒப்பிடுக)

3) அபி^{4}ஜா: பரிஜா: தலைமுடி:
உபசர்க்கத்தோடு வரும் 'ஜன்' ஒரு பெயராக அமையாமலிருந்தால் 'ட^3' ஒட்டு இணைக்கப்படும் என்று 3.2.99 கூறுகிறது. இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் உபசர்க்கத்துடன் (அபி4, பரி) வரும் 'ஜன்' பெயர்ச் சொல்லாகத் தருவிக்கப்பட்ட சொல் அமையும்போதும் 'ட^3' ஒட்டுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

4) செயப்படு பொருள் இல்லாமல் வரும்போதும் 'அனு + ஜன்' உடன் 'ட^3' இணைக்கப்படும் (3.2.100) அனுஜ: 'தம்பி' (பின்னால் பிறந்தவன்)

இவ்விதி காணப்படும் 'அபி' என்ற சொல், இதற்கு முன் விளக்கப்பட்ட எல்லா சூழல்களையும் தவிர்த்த மற்ற இடங்களிலும் இத்தகைய சொல் ஆக்க இயலும் என்று குறிக்கிறது. அதாவது வேறு தாதுக்களுடனும், வேற்றுமைச் சொற்களுடனும் 'ட^3' ஒட்டு இணைத்து இவ்வாறு சொல் தருவிக்கலாம்.

பரிக^2ா (பரி + க^{2}ன் + ட^3 = அ) 'அகழ்'

ஆக^2ா (ஆ + க^{2}ன் + ட^3 = அ) 'குளம்'

3.2.102 நிஷ்ட^2ா

நிஷ்ட^2ா ஒட்டுக்கள் தாதுவுடன் சேர்ந்து இறந்த காலத்தைக் குறிக்கும்.

'க்த', க்த'வது ஆகியவைகள் நிஷ்டாவாகும் (1.1.26) க்ரு'த'ம்

(க்ரு' + க்த' = த்) 'செய்யப்பட்டது'

க்ரு'த'வான் (க்ரு' + க்த'வத் = த'வத்') 'செய்தான்'

வா: ஆதி^{3} கர்மணி நிஷ்ட^2ா வக்தவ்யா

ஒரு செயலின் தொடக்கத்தைக் குறிக்கும்போது (ஆதிகர்மணி)
நிஷ்ட²ா ஒட்டு இணைக்க வேண்டும்.
க்ரு'த: கட'ம் தே³வத³த்த:
ப்ரக்ரு'தவான் கடம் தே³வத³த்த:
பாய்முடையத் தொடங்கினான் தேவதத்தன்
ஆதிகர்மன் பார்க்க 3.4.71

3.2.103 ஸுயஜோர் ங்வனிப்

ஸு, யஜ் ஆகிய தாதுக்களுக்குப்பின் (இறந்தகாலத்தைச் சுட்டும்) ங்வனிப் ஒட்டு இணைக்கப்படும்.
ஸு + ங்வனிப் = வன் = ஸுத்வா – 'சாறு பிழிந்தவன்'
யஜ்வா – 'யாகம் பண்ணியவன்'

3.2.104 ஜீ ர்யதேரத்'ரு'ன்

(இறந்தகாலத்தைக் குறிக்கும்) ஜ்ரு' (முதுமையடை) என்ற தாதுவுக்குப்பின் 'அத்ரு'ன்' ஒட்டு இணைக்கப்படும்.
ஜரன் (ஜ்ரூ' + அத்ருன் = ஜர் + அத் (7.3.84) = ஜரத்)
'வயதானவன்'
இத்தாதுவுடன், நிஷ்ட'ா ஒட்டுக்களும் (வாஸரூப 3.1.94படி) வரும்.
ஜீர்ண: ஜ்ரூ' + க்த = ஜிர் + த (7.1.100), (1.1.51) =
ஜிர் + ன (8.2.42) = ஜீர்ண: (8.2.77 68.4.1) 'வயதானவன்' ஜீர்ணவான்.

3.2.105 ச²ந்த³ஸி லிட்'

வேதமொழியில், இறந்தகாலத்தைக் குறிக்க 'லிட்' ஒட்டு தாதுவுக்குப்பின் இணைக்கப்படும்.

அஹம் ஸுர்யம் உப'யதோ த³த³ர்ஸ'
'நான் இருபக்கமும் சூரியனைப் பார்த்தேன்'
அஹம் த்³யாவா ப்ரு'தி2வீ ஆத'த'ான
நான் ஆகாயத்தையும் பூமியையும் விரிவாக்கினேன்.
இங்கு த³த³ர்ஸ, ஆத'த'ான என்ற சொற்கள் 'நிஷ்ட'ா' ஒட்டின் செயலைக் கொண்டது. 3.4.6 வேத மொழியில் லுங், லங், லிட்' ஒட்டுக்கள் இறந்த காலத்தைச் சுட்டுவதாக வருமென்று கூறுகிறது. ஆகையால் இங்கு தனியாக அதைப் பற்றிக் கூறுவதன் அவசியம் என்ன? சூ. 3.4.6 இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட தாதுக்கள் தொடர்பு கொண்டதாக ஒரு வாக்கியத்தில் வருவதைப் பற்றிப் பேசுகிறது (3.4.1 தாது ஸம்ப'ந்தே). ஆனால் இச்சூத்திரம், பொதுவாக (அதாவது இம்மாதிரியான கட்டுப்பாடு இல்லாத) இறந்த காலத்தைப் பற்றிப் பேசுகிறது.

3.2.106 லிட' : கானஜ்வா:

(வேதமொழியில்) 'லிட்'' டுக்கு, 'கானச்' விருப்பாகப் பதிலியாகும்.

அக்³னிம் சிக்யான: 'புனிதத் தீயை வளர்த்த'

(சி + லிட் ∶ காசன் ∶ ஆன ∶ சிக்யான)

ஸோமம் ஸுஷிவாண: 'ஸோமரஸம் பிழிந்த'

இது ஒரு விகல்ப (விருப்பு) விதியானபடியால் 'கானச்' ஒட்டு வராமலும் அமையலாம் (மேற் சூத்திரத்தின்படி) இதற்கு முந்திய சூத்திரத்திலிருந்து 'லிட்' என்ற சொல் அனு விருத்தி மூலம் இச்சூத்திரத்திற்கு எடுத்து வர வாய்ப்பு இருக்கும் போது இச் சொல்லை ஏன் திரும்பவும் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

'கானச்' ஒட்டு 3.2.105இல் கூறப்பட்டிருக்கும் சிறப்பியல்புடைய 'லிட்'உக்கு மட்டுமல்லாமல், தாதுக்களுடன் பொதுவாக வரும் இறந்த காலத்தைக் குறிக்கும் (Perfect) 'லிட்' உக்கும் ஆதேசமாக வருமென்பதை இது சுட்டுகிறது. ஆகையால் 'கானச்' ஒட்டு ஒரு வினைபடைச் சொல்லாகவும் (Verbal adjective) (Perfect) ஆகவும் அமையும்.

3.2.107 க்வஸுஸ்' ச

வேதமொழியில் 'லிட்'டுக்கு 'க்வஸு' ஆதேசமாகும். ஜக்ஷிவான் (அத் + லிட் ∶ க்வஸூ ∶ வஸ்) 'உண்டான்'

பபிவான் – 'அருந்தினான்'

'க்வஸு' ஆதேசமாகாமலும் வரலாம் (பார்க்க முன் சூத்திரத்தின் எடுத்துக்காட்டு)

இது யோக விபாகமாகும். 'க்வஸு' மட்டுந்தான் அடுத்த சூத்திரத்தில் தொடரும் என்று குறிக்கத்தான் இச்சூத்திரத்தை இதற்கு முந்திய சூத்திரத்தில் சேர்க்காமல் தனியாகக் கூறப்பட்டிருக்கிறது.

3.2.108 ப⁴ாஷாயாம் ஸத³வஸ ஸ்'ரு'வ:

பேச்சு மொழியில், ஸத, வஸ, ஸ்'ரு என்ற தாதுக்களுக்குப் பின் விருப்பாக லிட்' டுக்குப் பதிலியாக 'க்வஸு' ஆதேசமாகும். உபஸேதி3வான் கௌத்ஸ: பாணினிம்

(உபஸத்³ + லிட் ∶ க்வஸு ∶ வஸ்)

'கௌத்ஸன்' பாணினிக்குத் தொண்டாற்றினான்

மாற்று வடிவம் உபாஸதத் (லுங்)

உபாஸீத³த் (லங்), உபஸஸாத³ (லிட்)

அநூஷிதவான் கௌத்ஸ: பாணினிம்

(அனு + வஸ் + லிட் ∶ க்வஸு ∶ வஸ்)

மாற்று வடிவம் அன் வவாத்ஸீத் (லுங்) அன்வவஸத் (லங்), அநூவாஸ (லிட்)

உபஸு'ஸ்'ருவாத் கௌத்ஸ: பாணினிம்

(உப + ஸ்'ரு + லிட் ∶ க்வஸூ ∶ வஸ்)

மாற்றுவடிவம், உபாஸ்1ரௌஷீத் (லுங்), உபாஸ்'ரு' ணோத் (லங்)

உபஸூ'ஸ்ராவ (லிட்)

லுங், லங் ஆகியவைகளிலும் 'க்வஸு' ஒட்டு ஆதேசமாகும்.

3.2.109 உபேயிவான், அனாஸ்1வான் அனூச'னஸ் ச

உபேயிவான், அனாஸ்1வான், அனுசான் ஆகிய சொற்கள் விதிப்படியமையாதவை (நிபாதனம்)

உப + இண் ÷ இ + லிட் ÷ க்வஸு வஸ் → உப + ஈ (7.4.69) + இ + வஸ் புணர்ச்சி விதியின்வடி, ஈயும், இயும் சேர்க்க முடியாது. ஏனென்றால் 7.4.69. அதைத் தடுக்கிறது. இங்கு 7.6.67க்கு மாறாக 'இட்' ஆகமம் வருகிறது. இது விதிக்குப் புறம்பானது. உப + ஈ + இ+ இட்' + வஸ் → உப + ஈ + ய் (6.4.81) + இட் + வஸ் ÷ உபேயிவஸ்.

'ப்'' அடிச் சொற்களில் 'இட்' கெடும். இங்கு 'வ'ஸ்', 'உஷ்' ஆக மாறும். ஒரு வரையறைக்குட்பட்ட தனிச் சிறப்பு வாய்ந்தது, 'இட்'ஐப் புகுத்துவது. ஏனென்றால், பொதுவிதியான 7.2.25, முதலியவைகள். இந்த இட் ஆகமத்தை விதிக்கின்றன. அதே சமயம் விதி 7.2.67 அதைத் தடை செய்கிறது. தடை விதிக்குத் தடை விதிக்கும் விதியினால், 'வஸ்'உக்கு முன் 'இட்' பயன்படுத்தப்படுகிறது. ஆகையால், 2ஆம் வேற்றுமைப் பன்மையில் உபேயுஷ: 3ஆம் வேற்றுமை ஒருமையில் உபேயுஷா என்ற வடிவங்கள் பெறப்படுகின்றன. 'உப' என்ற உபசர்க்கத்தோடு மட்டும் இந்த நிபாதனம் ஆகவில்லை, வேறு உபசர்க்கங்களுடன், உபசர்க்கமில்லாமலும் இத்தகைய சொற்களாக்கப்படும். ஸமீயிவான் (ஸம் + இ +க்தவது), ஈயிவான் (இ + க்தவது)

'வா' என்ற சொல் அனுவிருத்தி மூலம் பெறப்படுவதால், 'லுங்' முதலியவைகளும் மாற்று வடிவமாக வரும். உபாக'ாத் (லுங்), உபைத் (லங்), உபேயாய (லிட்)

அனாஸ்வான் (நஞ் + அஸ்' + க்வஸு ÷ வஸ் → அன் + அஸ' + வஸ்)

மாற்று வடிவங்கள் நாஸ்னீதி (லுங்), நாஸ'னாத் (லுங்), நாஸ' (லிட்)

அனூசான: (அனு + வச் + லிட் ÷ கானச் ÷ ஆன)

மாற்று வடிவங்கள் அன்வவோசத் (லுங்), அன்வப்'ரவீத் (லங்) அனூவாச (லிட்)

3.2.110 லுங்

தாதுக்களுக்குப்பின் இறந்த காலத்தைக் குறிக்க லுங் ஒட்டு வரும்.

அகார்ஷீத் (க்'ரு' + லுங் ÷ திப் → அ (6.4.71) + க்ரு + லுங் → அ + க்ரு +ஸ + தி (3.1.43: 44:) → அக்ரு' + ஸ் + ஈ + த் (3.4.100: 7.3.96:) → அகார் (7.2.1) ஸ்ஈத் → அகார்ஷீத் 'செய்தான்'

வா: வஸ தேர் லுங் ராத்ரி விஸேஷே ஜாக'ரண ஸந்ததௌ வக்தவ்ய:

இரவு முழுவதும் கண் விழித்திருத்தல் என்பதைக் குறிக்க, வஸ் (வசி) தாதுவுக்குப் பின் இறந்த காலத்தை உணர்த்த 'லுங்' ஒட்டு இணைக்கப்படும்.

நீ எங்கிருந்தாய்? என்ற கேள்விக்கு நான் இரவு முழுவதும் இங்கு தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தேன். (அஹம் அத்ர அவாத்ஸம்) என்ற பதில் கூறும்போது, 'வஸ்' தாதுவுக்குப்பின் 'லுங்' ஒட்டு இணைக்க வேண்டும்.

வஸ் + லுங் –> அவாத்ஸம்.

3.2.111 அனத்3யதனே லங்

ஒரு தாதுவுக்குப்பின் 'லங்' ஒட்டு, இன்றைக்கு முன் நிகழ்ந்த இறந்த காலத்தைக் குறிக்க இணைக்க வேண்டும்.

அகரோத் (அவன் செய்தான்) (லங்)

க்ரு + லங் = திப் → அகரோத்

'அனத்யதன' ப3ஹுவ்ரீஹி சமாசமாகும். இன்றோ அல்லது நேற்றோ என்ற சந்தேஹம் ஏற்படுமானால் 'லங்' வராது, லுங் வரும் என்பதைக் குறிக்க ப3ஹிவ்ரீஹிச் மாசம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அத்3ய ஹ்யோ வா அபு4க்ஷ்மஹி

இன்றோ நேற்றோ உண்டோம்

வா: பரோக்ஷே ச லோகவிக்3ஞாதே

ப்ரயோக்துர் த3ர்ஸ'ன விஷயே லங் வக்தவ்ய

அண்மையில் நிகழ்ந்த உலகமறிந்த பேசுபவர் நேரில் பார்க்காத, ஆனால் உணரக்கூடிய ஒரு நிகழ்ச்சியைப் பற்றிப் பேசுபவர் குறிப்பிடும் போது லங் ஒட்டு தாதுவுக்குப்பின் வரும்.

அருணத்3 யவன: ஸாகே'த3ம்

யவனர் சாகேதத்தை முற்றுகையிட்டனர்

அருணத்3 யவன: மாத்4யமிகாம்

யவனர் மாத்யமிகத்தை முற்றுகைமிட்டனர். இங்கு 'லங்' பயன்படுத்தி பேசுபவர் பதஞ்சலி. யவனர் முற்றுகை அண்மையில் நிகழ்ந்த உலகறிந்த பேசுபவரால் அறிந்துணர்ந்த ஒரு செய்தியாகும்.

3.2.112 அபி4க்3ஞாவசனே ல்ருட்

'நினைவு கூர்' என்ற பொருளைக் குறிக்கும் சொல் உபபதமாக நிற்கும்போது இன்றைக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிக்க தாதுவுடன் 'ல்ருட்' (2ஆம் எதிர்காலம்) ஒட்டு இணைக்க வேண்டும். இது 'லங்' ஒட்டுப் பயன்படுத்தத் தடையாகிறது.

அபி4ஜானாஸி தே3வத3த்த: கஸ்மீரேஷு வத்ஸ்யாம: நினைவிருக்கிறதா தேவதத்தா காஷ்மீரத்தில் வசித்தோமே

வஸ் + ல்ருட் = மஸ் → வஸ் + ஸ்ய (3.1.33) + மஸ் → வஸ் + ஸ்யா (7.3.101) + மஸ் → வத் (7.4.49) + ஸ்யா மஸ் = வத்ஸ்யாம

'வசன' என்ற சொல், ஸ்மரஸி, பு3த்4யஸே, சே'த3யஸே, போன்ற அதே பொருளை அதாவது நினைவு கூர் உணர்த்தும் சொற்களையும் குறிக்கும்.

3.2.113 ந யதி^{1}

முன் சூத்திரத்தில் கூறப்பட்ட சூழலில் 'யத்' என்ற இடைச்சொல் தாது உடன் நிற்கும்போது 'ல்ருட்' இணைக்கப்பட மாட்டாது.

அபி^{4}ஜானாஸி தே^{3}வத^{3}த்த:

யத்' கஸ்மீரேஷு அவஸாம

நாம் காஷ்மீரில் வசித்தோம் என்பது (யத்) நினைவிருக்கிறதா தேவதத்தா இங்கு வசித்தது மாத்திரம் நினைக்கப்படுகிறது அதை த் தவிர வேறு எதுவும் உணர்த்தவில்லை. முந்திய சூத்திரத்துக்கு இ து தடை விதிக்கிறது.

3.2.114 விப^{4}ாஷா ஸாகாங்க்ஷே

கரிஷ்யந்தம் (2) தேவ³வத³த்தம் (2) பஸ்'ய செய்யவிருக்கும் தேவதத்தனைப்

பார் கரிஷ்யமாணம் (2) தே3வத3த்தம் (2) பஸ்'ய செய்யப்படவிருக்கும் தேவதத்தனைப் பார் ஹே கரிஷ்யத்
ஹேகரிஷ்யமாண:
முதல் வேற்றுமையுருபுகளுடன் வரும் பெயர்ச் சொல்லோடு, வரும்போது இந்த ஒட்டுக்கள் 'ல்ருட்' உக்குப் பதிலியாக வரா (பார்க்க 3.2.124) அதாவது முதல் வேற்றுமைச் சொல்லோடு விருப்பாகவும், மற்ற வேற்றுமைச் சொற்களோடு கட்டாயமாகவும் இவ்வொட்டுக்கள் பதிலியாகும்.
கரிஷ்யன் தே3வத3த்த:
கரிஷ்யமாண: தே3வத3த்த:
செய்யவிருக்கும் தேவதத்தன்
(எதிர்காலம்)
அல்லது கரிஷ்யதி/கரிஷ்யதே 'செய்வான்'

3.3.15 அனத்3யதனே லுட்1
இன்றைக்கல்லாத எதிர்காலத்தைக் குறிக்க (அனத்3யதன) 'லுட்' தாதுவுக்குப் வரும்.
ஸ்'வ :கர்தா நாளை செய்வான்
ஸ்'வோ பே4ாக்தா நாளை உண்பான்
இது 'ல்ருட்1' வருவதைத் தடுக்கிறது. ஆனால், ஒரு வாக்கியத்தில், இன்று அல்லது, இன்றைக்குப் பிறகு என்ற இரண்டுவித எதிர்காலத்தையும் குறிக்கும் சொற்கள் அமைந்தால் 'லுட்' வராது.
அத்3ய ஸ்'வோ வா க3மிஷ்யதி இன்று அல்லது நாளை போவான்
இன்றைக்கோ அல்லது நாளைக்கோ போவான்
வா: பரிதே3வனே ஸ்'வஸ்தனீ ப4விஷ்ய த3ர்தே2 வக்தவ்யா:
வருத்ததைக் குறிக்கும்போது (பரிதே3வனே) எதிர்காலத்தை உணர்த்த 'லுட்' பயன்படுத்த வேண்டும்.
(ஸ்'வஸ்தனீ = லுட்)
இயம் நு கத3ா க3ந்தர், யா ஏவம் பாதெ3ள நித3த4ாதி
இவ்வளவு மெதுவாக நடப்பவள் எப்போது போவான்
அயம் து க'த3ா அத்4யேதா, ய ஏவமன பி4யுக்த:
இப்படி கவனமில்லாமலிருப்பவன் எப்போது படிப்பான்

3.3.16 பத3ருஜவிஸ'1 ஸ்ப்ரு'ஸோ'1ா க4ஞ்
பத3 (நட) ருஜ் (துன்புறுத்து) விஸ் (நுழை) ஸ்ப்ரு'ஸ்'1 (தொடு) ஆகிய தாதுக்களோடு 'க4ஞ்' ஒட்டு இணைக்கப்படும்.
எதிர்காலம் (ப4விஷ்யதி) என்ற சொல், இங்கு அனுவிருத்தி யாகாது இங்கிருந்து தொடரும் சூத்திரங்களில் கூறப்படும் ஒட்டுக்கள் மூன்று காலத்தையும் உணர்த்தும்.
பாத3: 'கால்', ரோக: 'நோய்', வேஸ': 'வாசல்'
பத்3யதே அஸௌ பாத3: எது நடக்கிறதோ அது:

ருஜதி அஸௌ ரோக: 'எது வருத்துகிறதோ அது'
விஸ'தி அஸௌ வேஸ': எது நுழைகிறதோ அது
பத்3 + க4ஞ் - பாத3: ருஜ் + க4ஞ் -ரோக:
விஸ் + க4ஞ் - வேஸ':
இவைகள் கர்த்தாவைக் குறிக்கும் சொற்கள் (பார்க்க 3.4.67)
வா: ஸ்ப்ருஸ' உபதாப இதி வக்தவ்யம்
'நோய்' என்ற பொருளைக் குறிக்கும்போதுதான் 'க4ஞ்' ஒட்டு 'ஸ்ப்ரு'ஸ்' தாதுவுடன் வரும். ஸ்பர்ஸ': 'ஒரு நோய்' வேறு பொருளைக் (அதாவது தொடுதல்) குறிக்கும்போது 'அச்' ஒட்டு வரும் (3.1.134)
ஸ்பர்ஸ': தேவத3த்த: தொடுகிற தேவதத்தன் இவ்விரண்டும் சுரத்தினால் வேறுபடும்.' க4ஞ்' இணைத்து ஆக்கப்படும் சொல் முதலசையில் உதாத்தமும், 'அச்' உடன் ஆக்கப்படும் சொல்லின் இறுதி அசையில் உதாத்தமும் கொண்டதாக அமையும்.

3.3.17 ஸ்ரு ஸ்தி2ரே
கர்த்தா நெடுங்காலம் நிற்கும் (ஸ்தி2ர) என்ற பொருளைக் குறிக்கும்போது, 'ஸ்ரு' தாதுவுக்குப்பின் 'க4ஞ்' ஒட்டு வரும்.
நெடுங்காலம் நீடித்து நிற்கும் பொருளைச் சுட்டுகிறது. ஸ்தி2ர என்ற சொல்
சந்த3ன ஸார:– சந்தனத்தின் மணம் (ஸ்ரு + க4ஞ் - ஸார)
க2தி3ரஸார:– பாக்கின் சாரம்/சுவை
ஆனால், ஸர்த்தா, ஸாரக: நடப்பவன்
இங்கு, 'க4ஞ்' வராமல் முறையே த்ரு'ச்: ண்வுல் இணைக்கப்படுகிறது.

வா: வ்யாதி4 மத்ஸ்ய ப3லேஷூ இதி வக்தவ்யம் நோய், மீன், பலம் ஆகிய பொருட்களைக் குறிக்கும் போதும், க5ஞ் ஒட்டு வரும்.
இந்த வார்த்திகம் நீண்ட காலம் நீடித்து நிற்காத பொருட்களையும், க்4ஞ் ஒட்டு இணைத்துத் தருவிக்கலாம் என்று குறிக்கும். அதிஸார: (அதி + ஸ்ரு + க4ஞ்) ஒரு வகை நோய்
விஸார: 'மீன்'
ஸார: பலம்

3.3.18 ப⁴ாவே

ஒரு செயலை மாத்திரம் குறிக்க ஒரு தாதுவுக்குப்பின் 'க⁴ஞ்' இணைக்கப்படும்.

பாக: (பச் + க4ஞ்) 7.2.116–7.3.52) 'சமைத்தல்'

த்யாக³: (த்யஜ் + க⁴ஞ்) 'துறவு, கைவிடுதல்'

ராக³: (ரஞ்ஜ் + க⁴ஞ்) 'சாயமேற்றுதல்'

ஒரு செயல் பொதுவாக ஒரு நிலையைக் குறிக்கும் ஆகையால் தாதுக்களனைத்தும் அவைகளின் பொருட்களை உணர்த்தும்போது செயலைக் குறிக்கும். அதாவது தாதுவின் பொருளைத் (அத்தாதுவே உணர்த்தும்) தான் குறிக்கும். ஆகையால், ஒரு முடிவுற்ற செயலைக் குறிக்கவே, 'க⁴ஞ்' முதலிய ஒட்டுக்கள், ஒரு தாதுவுடன் இணைக்க வேண்டும் என்பதை இச்சூத்திரம் வலியுறுத்துகிறது. இவ்வாறு ஆக்க ப்பட்ட சொற்கள், எப்போதுமே ஆண்பால் ஒருமையைக் குறிப்பதாகத்தான் அமையுமென்ற நியதியில்லை. ஆகையால் இச்சொற்கள் மற்ற பால், எண்ணையுடைத்தாகவும் ஆகலாம்.

பத்தி: (பச் + க்தின் + பெண்பால் ஒட்டு)

பக்வம் (பச் + க்த அஃறிணை)

பசனம் (பச் + ல்யுட் = அன அஃறிணை

பாகௌ (இருமை) பாகா: (பன்மை)

சுருங்கக்கூறுவதனால், இவ்வொட்டுக்கள், தொழிற்பெயர், பண்புப்பெயர் ஆகியவைகளைத் தருவிக்க, தாதுக்களுடன் இணைக்கப்படும்.

3.3.19 அகர்தரி ச காரகே ஸம்க்³ஞாயாம்

கர்த்தா அல்லாத காரகமாகவும் ஒரு பெயராகவும் (பெயர்ச் சொல்) தருவிக்கப்பட்ட சொல்லமையும் போது 'க⁴ஞ்' ஒட்டு தாதுவுக்குப் பின் வரும். ப்ரஸேவ: பை முதலியவை எதை மனிதன் சேர்த்துத் தைக்கிறானோ ப்ராஸ: (அம்பு, அஸ்திரம் (மனிதன் எதை எறிகிறானோ ஆஹார: உணவு (எதிலிருந்து மனிதன் சக்தி பெறுகிறானோ) மது⁴ராஹார:, தக்ஷஸிலாஹார: போன்ற தொகைகளில் காணப்படுவது, ஆனால் கர்த்தாவைக் குறிக்கும் காரகமானால், 'அச்' ஒட்டு வரும். மேஷ: ஆடு (எது சண்டையிடுகிற தோ) ஒரு நிலைமைய்க் குறிக்கும் (ப⁴ாவே 18) கர்த்தா அல்லாத ஒரு காரகப் (அகர்தரி காரகே 19) ஆகியவைகள் இங்கிருந்து தொடங்கி, சூ. 3.3.113 வரை எல்லாச் சூத்திரங்களிலும் தொடரும்.

3.3.20 பரிமாணாக்²யாயாம் ஸர்வேப்⁴ய:

தருவிக்கப்பட்ட சொல் ஓர் அளவின் பெயரைச் சுட்டும்போது (பரிமாணாக்²யா) எல்லாத் தாதுக்களுக்குப் பின்னும் 'க⁴ஞ்' ஒட்டு வரும்.

ஏகஸ்தண்டு³ல நிஸ்'சாய: (நி + சி + க⁴ஞ்)

'ஒரு நிஸ்சாய அரிசி'

த்3வெள ஸூர்ப நிஷ்பாவெள (நி + பூ + க4ஞ்)
இரண்டு முறம் உமி முதலியவை நீக்கிச் சுத்தப்படுத்தியது.
'உமி முதலியவைகளை நீக்கி சுத்தப்படுத்திய இரண்டு முறம் அரிசி'
3.3.58 'சி' தாதுவுடன் 'அப்' ஒட்டு வருமென்று கூறுகிறது
3.3.57 'அப்' ஒட்டு சில தாதுக்களுடன் வருமென்று குறிக்கிறது. 3.3.56 'அச்' ஒட்டு விதிக்கிறது. இச்சூத்திரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் 'எல்லாம்' (ஸர்வ) என்ற சொல், 'அப்' ஒட்டு மட்டுமல்லாமல் 'அச்' ஒட்டும் வரத் தடை செய்கிறது. ஒரு அபவாத விதிக்கு முன்னால் அமையும் ஒட்டுக்களை மட்டுந்தான் அந்த அபவாத விதி தடுக்க முடியும். அதற்குப் பின் வருபவகளையல்ல என்ற பரிபாஷா விதியின்படி 'அச்' ஒட்டுக்கு மாத்திரந்தான் இத்தடை. ஆகையால், 'எல்லாம்' என்ற சொல்லை இங்கு பயன்படுத்தி 'அச்' 'அப்' ஆகிய இரண்டையுமே தடை செய்யப்பட்டிருக்கிறது. அளவின் பெயராகாமல், வேறு பொருளில் நிஸ்'சய என்ற சொல் வரும். ஆராய்ந்தறிந்து கொள்தல்
'அப்', 'அச்' ஆகியவற்றிற்குத் தடையாக கூறப்பட்டிருக்கும் 'க4ஞ்' ஒட்டு, பெண்பாற் சொற்களாக்கும் ஒட்டுக்களுக்குத் தடையாகாது.
ஏகா திலோச்'ச்2ரிதி:
உத் + ஸ்1ரிஞ் + க்தின் (3.3.94) = தி = உச்' + ஸ்ரி + தி (8.4.40) = உச்'ச்2ரித்தி
த்3வே ப்ரஸ்ருதீ

வா: த3ார ஜாரௌ கர்தரி ணிலுக்ச
இயக்கு வினைகளான த3ாரி, ஜாரி ஆகியவைகளோடு 'க4ஞ்' ஒட்டு, தருவிக்கப்பட்ட சொல் கர்த்தாவை குறிக்கும்போது வரும். இயக்கு வினை ஒட்டான ணி கெடும்.
த3ாரா: 'மனைவி'
ஜாரா: 'கள்ளநாயகன்'

3.3.21 இஙஸ் ச
'இங்' தாதுவுக்குப்பின் 'க4ஞ்' ஒட்டு வரும்.
இது 'அச்' (3.3.56) ஒட்டு வருவதைத் தடுக்கிறது. அத்4யாய: (அதி4 + இ + க4ஞ் = அ = அதி4 + ஆய் + அ, யண் – அத்யாய:) பாடம் அல்லது படிப்பு
உபாத்4யாய: (உப + அதி4 + இ + க4ஞ்) 'ஆசிரியர்'
(யாருக்குப் பக்கத்தில் போய் படிக்கிறார்களோ அவர்)
வா: அபாத3ானே ஸ்த்ரியாம் உபஸம்க்2யானம்
தத3ந்தாச் ச வா ஙீஷ்
அபாதான காரகத்தில் பெண்பாலில் 'க4ஞ்' ஒட்டு வரும். அதற்குப் பின் ஙீஷ் (பெண்பாலாக்கும் ஒட்டு) விருப்பாக வரும்.
உபாத்4யாயா/உபாத்4யாயீ 'ஆசிரியை'

வா: ஸ்'ரு' வாயுவர்ண நிவ்ரு'தேஷு

'ஸ்'ரு' தாதுவுக்குப்பின் க^{4}ஞ் ஒட்டு தருவிக்கப்பட்ட சொற்கள் காற்று, (வாயு) நிறம் (வர்ண), நிறுத்தம் (நிவ்ரு'த) ஆகிய பொருட்களைக் குறிக்கும்போது வரும்.

ஸ'ார (ஸ்'ரு' + க^{4}ஞ் = அ) 'காற்று', 'பச்சை' முதலிய நிறம்:

3.3.22 உபஸர்கே^{3} ருவ:

உபசர்க்கத்தோடு சேர்ந்து நிற்கும் 'ரு' தாதுவுக்குப்பின் 'க^{4}ஞ்' ஒட்டு வரும். இது 'அப்' ஒட்டுக்குத் தடை விதிக்கிறது.

ஸம்ராவ: உபராவ: 'இரைச்சல்' உபசர்க்கமில்லாமல் 'ரு' தனியாக வரும்போது ரவ: (ரு + அப்) 'சத்தம்'

3.3.23 ஸமி யுத்^{3}ரு து^{3}வ:

'ஸமி'யுடன் நிற்கும் தாதுக்கள் யு (இணை) த்^{3}ரு (ஓடு) து^{3} (எரி) ஆகியவைகளுக்குப்பின் 'க^{4}ஞ்' ஒட்டு வரும்.

ஸம் யாவ: 'ஒருவகை ஆப்பம்'

ஸந்த்^{3}ராவ: 'மக்கள் ஒருமித்து ஓடுமிடம்'

ஸந்த^3ாவ: 'பெருந்தீ'

வேறு உபசர்க்கத்துடன் 'க^{4}ஞ்' வராது 'அப்' வரும் ப்ரயவ:

3.3.24 ஸ்'ரிணீபு^{4}வோ அனுபஸர்கே^{3}

உபசர்க்கமில்லாமல் தனித்து நிற்கும், ஸ்'ரி, (போ) நீ (வழிகாட்டு), பூ^{4} (இரு) ஆகிய தாதுக்களுக்குப் பின் 'க^{4}ஞ்' ஒட்டு வரும்.

இது அச், அப் ஒட்டுக்கள் வருவதைத் தடை செய்கிறது.

ஸ்'ராய 'புகலிடம்', நாய: 'தலைமை', ப^4ாவ: 'நிலைமை'

ஆனால் உபசர்க்கங்களுடன் ப்ரஸ்'ரய: மரியாதை, கௌரவம்

ப்ரணய: 'காதல்'

ப்ரப^{4}வ: 'உற்பத்திஸ்தானம், ஆரம்ப இடம்'

ப்ரப^4ாவோ ராக்^{3}ஞ: என்ற தொடரில் வரும் ப்ரப^4ாவ என்ற சொல் ப்ர + பூ + க^{4}ஞ் என்பதிலிருந்து ஆக்கப்பட்டதல்ல. இது ப்ர + ப^4ாவ என்ற இரண்டையும் தொகுக்கப்பட்ட தொகை (ப்ராதிஸமாஸ) இதன் பொருள் 'சிறந்த நிலைமை' நயோ ராக்^{3}ஞ: என்பதில் நிற்கும் 'நய' என்ற சொல்லும். க்ருத்ய, ல்யுட் ஒட்டுக்கள் பல வகைகளில் பயன்படுத்தப்படும். (3.3.113) என்ற சூத்திரத்தின்படி 'நீ' தாதுவுடன் 'அச்' இணைக்கப்பட்டுத் தருவிக்கப்பட்ட சொல்

3.3.25 வௌ க்ஷுஸ்'ருவ:

'வி' உபசர்க்கத்துடன் நிற்கும் க்ஷு (தும்மு) ஸ்'ரு ஆகிய தாதுக்களுடன் 'க^{4}ஞ்' ஒட்டு வரும். இது 'அப்' வருவதைத் தடை செய்கிறது

விக்ஷாவ: 'தும்மல், இருமல்' விஸ்'ராவ: 'பாய்தல் அல்லது புகழ் பெற்றவன்.'

'வி'யுடன் நிற்காவிட்டால் க்ஷவ: ஸ்'ரவ:

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

3.3.26 அவோதே3ார்ய:

அவ, உத் ஆகியவற்றுடன் சேர்ந்து வரும் 'நீ' தாதுவுக்குப் பின் 'க்4ஞ்' ஒட்டு வரும்.

அவநாய: கீழே தள்ளுதல்

உன்னாய: உயர்த்துதல்

உன்னய: பத3ார்த3ானாம் என்ற தொடரில் காணப்படும் உன்னய:, என்ற சொல் 'அச்' ஒட்டுடன் இணைத்துப் பெறப்பட்டது (3.3.113)

3.3.27 ப்ரே த்3ருஸ்து ஸ்ருவ:

'ப்ர' என்ற உபசர்க்கத்துடன் சேர்ந்து நிற்கும் த்3ரு, ஸ்து, ஸ்ரு ஆகிய தாதுக்களுக்குப்பின் 'க4ஞ்' ஒட்டு வரும்.

ப்ரத்3ராவ: வேகமாக ஓடுதல்

ப்ரஸ்தாவ: 'அறிமுகப் புகழ்ச்சி'

ப்ரஸ்ராவ: 'நீரோட்டம்'

3.3.28 நிரப்4யோ: பூல்வோ:

'நிர்', 'அபி' என்ற உபசர்க்கங்கள் முறையே பூ (புனிதமாக்கு, சுத்தம் செய்) லூ (வெட்டு) என்ற தாதுக்களுடன் வரும்போது 'க4ஞ்' ஒட்டு வரும்.

நிஷ்பாவ: 'ஒருவகைப் பருப்பு'

அபி4லாவ: 'அறுவடை செய்தல்'

ஆனால் பவ: சுத்தம் செய்தல், லவ: வெட்டுதல்

3.3.29 உன்னயோர்க்3ர:

உத், நி ஆகிய உபசர்க்கங்களுடன் சேர்ந்து 'க்ரு', தாது வரும்போது 'க4ஞ்' ஒட்டு தாதுவுக்குப்பின் வரும். உத்3க3ார: ஸமுத்3ரஸ்ய 'கடலின் இரைச்சல்' நிக3ரோ தேவதத்தஸ்ய: 'தேவதத்தனின் உண்ணுதல்' ஆனால் க3ர: 'விழுங்குதல்'

3.3.30 க்ரு' த4ான்யே

'உத், நி' ஆகியவைகளுடன் சேர்ந்து நிற்கும் 'க்ரு' தாது தானியம் என்ற பொருளைச் சுட்டும்போது 'க்4ஞ்' ஒட்டு வரும்.

உத்கார: த3ான்யஸ்ய தானியத்தைக் காற்றில் தூற்றுவது

நிகார: த3ான்யஸ்ய

தானியம் என்ற பொருளை உணர்த்தாமல் வரும்போது, பை4க்ஷியோத்கர: 'பிச்சையை ஒன்று சேர்த்தல்', புஷ்பநிகர: 'பூக்குவியல்' இவை 'அப்' ஒட்டு இணைக்கப்பட்டுத் தருவிக்கப்பட்டவை.

3.3.31 யக்3ஞே ஸமி ஸ்துவ:

வேள்வி சம்பந்தமான பொருட்களைக் குறிக்கும்போது, 'ஸம் + ஸ்து'

வுக்குப்பின் 'க⁴ஞ்' ஒட்டு வரும்.
ஸம்ஸ்தாவஸ்ச²ந்தே³ா க³ானாம்
எந்த இடத்தில் பிராம்மணார்கள் ஒன்று சேர்ந்து வேத மந்திரங்களால் புகழ்கிறார்களோ அந்த இடத்துக்கு ஸம்ஸ்ராவ என்று பெயர்.
ஆனால் ஸம்ஸ்தவஸ் ச²ாத்ரயோ: இங்கு வேள்வி பற்றியது அல்ல 'இரண்டு மாணாக்கர்களின் புகழ்ச்சியுரை'

3.3.32 ப்ரே ஸ்த்ரோ அயக்³ஞே
'ப்ர'வுடன் நிற்கும் ஸ்த்ரூ' என்ற தாதுவுடன் யாகம் பற்றிய பொருளைக் குறிக்காவிட்டால் க⁴ஞ் ஒட்டு வரும்.
ஸங்க³ப்ரஸ்த²ார: 'சங்குகளின் படுகை'
ஆனால் ப³ர்ஹிஷ்ப்ரஸ்தர: 'தர்ப்பைகளின் குவியல்' இது வேள்வி சம்பந்தமானதால் 'க⁴ஞ்' ஒட்டு வராமல் 'அப்' ஒட்டு வருகிறது.

3.3.33 ப்ரத²னே வாவஸ'ப்³தே³
'வி + ஸ்த்ரு' பரப்புதல் என்ற பொருளைக் குறிக்கும்போது, ஆனால் சொற்களைப் பரப்புதல் என்றில்லாமல் அமையும்போது, க⁴ஞ் ஒட்டு வரும்.
பட'ஸ்ய விஸ்தார: 'துணியினகலம்'
ஆனால் த்ருணவிஸ்தர: 'புற்குவியல்'
விஸ்தரோ வசஸாம்: 'சொல்மிகை'
'அப்' உடன் இணைத்துப் பெறப்பட்டது 'விஸ்தர': என்ற சொல்

3.3.34 ச²ந்தே³ா நாம்னி ச
'வி + ஸ்த்ரு'வுக்குப்பின் ஒரு யாப்பின் பெயரைக் குறிக்குமாறு தருவிக்கப்பட்ட சொல் அமையும்போது 'க⁴ஞ்' இணைக்கப்படும்.
விஷ்டார பங்க்தி: ச²ந்த³:
விஷ்டார ப்³ருஹதீ ச²ந்த:
'விஷ்டார பங்க்தி' ஒரு யாப்பின் பெயர். இது 'க⁴ஞ்' ஒட்டில் முடியும் சொல் அல்ல, இதன் முதல் பகுதியான 'விஷ்டார' என்ற சொல்தான் 'க⁴ஞ்' ஒட்டில் முடிகிறது.

3.3.35 உதி³ க்³ரஹ:
'உத்'துடன் நிற்கும் 'க்³ரஹ்' என்ற தாதுவுக்குப்பின் 'க⁴ஞ்' ஒட்டு வரும். இது 'அப்' வருவதைத் தடை செய்கிறது.
உத்³க்³ராஹ: 'தூக்குதல்'

வா: ச²ந்த³ஸி நிபூர்வாதபீஷ்யதே ஸ்ருகு³
த்³யமன நிபாதனயோ: ஹகாரஸ்ய ப⁴கார:
வேதமொழியில், 'நி' என்ற உபசர்க்கத்துடன் 'க்ரஹ்' வரும்போதும் 'க⁴ஞ்' ஒட்டு இணைக்கப்படும். ஸ்ருக் (யாகத்தில் பயன்படுத்தும் பெரிய குழிவுக்

கரண்டி)ஐ மேலே தூக்குதல், கீழே கொண்டு போதல் என்ற பொருளை இது குறிக்கும்.

'க்ரஹ்' தாதுவின் 'ஹ'வுக்குப் பதிலியாக

'ப⁴' வரும்.

உத³க்³ராப⁴ம் ச நிக்³ராப⁴ம் ச

ப்³ரஹ்ம தே³வா அவீவ்ருத⁴ன்

ஸ்ருக்கை, மேலேயும் கீழேயும் கொண்டு போவது (உத³க்³ ராப⁴ம், நிக்³ராப⁴ம்) (அதாவது வேள்வித் தீயில்) நெய்யை விடும்போது) நமது வேள்வியை தேவர்கள் வளர்க்கட்டும். அதாவது, நமது வளர்ச்சியையும், நமது எதிரிகளின் வீழ்ச்சியையும் கொண்டு வந்து நமது வேள்வியை வளர்க்கட்டும்.

3.3.36 ஸமி முஷ்டெள

'ஸம்' உடன் சேர்ந்து 'க்³ரஹ்' தாது நிற்கும்போது, அத்தாது 'கைமுட்டி'யென்ற பொருளைச் சுட்டும்போது, அதற்குப்பின் 'க⁴ஞ்' ஒட்டு வரும்.

அஹோ மல்லஸ்ய ஸங்க்³ராஹ:

குத்துச் சண்டைக்காரனின் குத்து

வேறு பொருளில், ஸங்க்³ரஹோ தான்யஸ்ய 'ஒரு பிடி தான்யம்.' இங்கு 'அப்' வரும்.

3.3.37 பரி ந்யோர் நிணோர் த்³யூதா ⁴ப்ரேஷயோ:

பரி, நி, ஆகிய உபசர்க்கங்கள், முறையே 'நீ' (வழிகாட்டு) இ (போ) என்ற தாதுக்களுடன் நிற்கும் போது, அவைகள் முறையே, 'சூதாட்டம்' (³த்யுத), தகுதியுடைமை ஒழுங்கு (அப்⁴ரேஷ) ஆகிய பொருட்களை உணர்த்தும்போது, 'க⁴ஞ்' ஒட்டு தாதுவுக்குப் பின் வரும்.

பரிணாய (பரி + நீ + க⁴ஞ் = அ) சொக்கட்டான் காய்களை எல்லாப் பக்கத்திலும் சரியாக நகர்த்துவது.

பரிணாயே ஸாரான் உறந்தி–சொக்கட்டான் காய்களைச் சரியாக நகர்த்தி பல காய்களை வெல்கிறான்.

ந்யாய: (நி + இ + க⁴ஞ் = அ) 'நியாயம்' இது 'அச்'சுக்குத் தடை விதிக்கிறது. மேற்கூறிய பொருளைக் குறிக்காவிட்டால் பரிணய: (திருமணம்) ந்யபம்– அழிவு ந்யயம் ³கத: பாப:– பாபம் அழிந்தது.

3.3.38 பராவனு பாத்யய இண:

'பரி'யுடன் சேர்ந்து நிற்கும் 'இண்' தாதுவுக்குப்பின் ஒன்றுக்குப்பின் மற்றொன்று முறையாகத் தொடர்ந்து வருதல் என்ற பொருளைக் குறிக்கும்போது 'க⁴ஞ்' ஒட்டு வரும்.

பர்யாய: 'முறை, தொடர்தல்'

தவ பர்யாய: 'உன் முறை'

ஆனால் காலஸ்ய பர்யய:– காலம் கழிதல்

பர்யய: ('அச்' உடன்)

3.3.39 வ்யுபயோ: ஸேதே பர்யாயே
வி, உப என்ற உபசர்க்கங்களோடு சேர்ந்து நிற்கும் ஸீ' (படு) என்ற தாதுவுக்குப்பின் 'முறைப்படியான வரிசை' என்ற பொருளில் 'க^{4}ஞ்' ஒட்டு வரும்.
தவ விஸாய: 'தூங்குவதற்கு உன் முறை'
தவ ராஜோபஸாய: 'அரசனின் அருகில் தூங்க, உன்முறை'
'பர்யாய' என்ற பொருளைக் குறிக்காமல் அமையும்போது 'அச்' ஒட்டுடன்
விஸய: 'சந்தேகம்' உபஸய: 'அருகில் படுத்தல்'

3.3.40 ஹஸ்தாத^{3}னே சேரஸ்தேயே
'திருடுதல்' என்ற பொருளைச் சுட்டாமல் 'கையால் எடுத்துக் கொள்ளல்' என்ற பொருளைக் குறிக்கும்போது, 'சி' (திரட்டு,சேர்) என்ற தாதுவுக்குப்பின் 'க^{4}ஞ்' ஒட்டு வரும்.
புஷ்பப்ரசாய: 'பூக்கொய்தல்'
ப^{2}லப்ரசாய: 'பழம் பறித்தல்'
'கையால்' அல்லது 'திருடாமல்' என்ற பொருளைத் தவிர்த்து, வேறு பொருளில் அதாவது 'திரட்டுதல்' என்ற பொருளைக் குறிக்கும்போது ப்ரசய என்று அமையும்.

வா: உச்சயஸ்ய ப்ரதிஷேதே^{4}ா வக்தவ்ய:
'உச்சய' என்ற சொல்லுக்குத் தடை விதிக்க வேண்டும். அதாவது உச்சய (சேகரித்தல்) என்ற சொல் 'க^{4}ஞ்' ஒட்டு இணைத்து ஆக்கப்படவில்லை.
உத்^{3} + சி + அச் - உச்சய: 'புஷ்போச்சய:– 'பூக்கொய்தல்'

3.3.41 நிவாஸ சிதி ஸரீரோப ஸமாத^{4}னேஷ்வாதே^{3}ஸ் ச க:
'சி' தாதுவுக்குப்பின் 'க^{4}ஞ்' ஒட்டு கீழ்க்கண்ட பொருளைத் தருவிக்கப்பட்ட சொல் குறிக்கும்போது, இணைக்கப்படும். 'சி' இன் முதல் எழுத்துக்குப் பதிலாக 'க' வரும்.
இருப்பிடம் (நிவாஸ), சேகரித்தல் (சிதி), உடல் (ஸரீர)
குவித்தல் (உபஸமாத^{4}ன)
காஸிநிகாய:– 'காசி இருப்பிடம்'
ஆகாயமக்^{3}னிம் சின்வீத:– 'ஈமவிறகு அடுக்கு'
அநித்ய காய: 'அழியக்கூடிய உடல்'
மஹாகோ^{3}மய நிகாய: 'சாணத்தின் குவியல்'
வேறு பொருட்களில் சய: 'சேகரிப்பு' இங்கு 'அச்' வரும் 'க^{4}ஞ்' அல்ல.
மஹான் காஷ்டநிசய: ''விறகுகளின் பெரிய குவியல்''

3.3.42 ஸங்கே^{4} சானௌத்தராத^{4}ர்யே
ஒழுங்கு முறைப்பட்ட கூட்டம் (ஸங்கே^{4}) என்ற பொருளில் 'சி'தாதுவுக்குப் பின் க^{4}ஞ் ஒட்டு வரும். சி–யின் முதலெழுத்தான 'ச்'உக்குப் பதிலாக 'க்' வரும்.

இக்கூட்டம் தாறுமாறாக அமையாமலிருக்கும்போதுதான் இவ்வொட்டு வரும். இது உயர்திணைப் பெயர்களைத்தான் குறிக்கும்.

ப்'ராஹ்மண நிகாய: – பிராம்மணர்களின் கூட்டம்

வையாகரண நிகாய: – இலக்கணகாரர்களின் கூட்டம்

ஆனால் ஸூகரநிசய (அச் ஒட்டுடன்)

பன்றிகளின் கூட்டம்.

3.3.43 கர்மவ்யதிஹாரே ணச் ஸ்த'ரியாம்

செயல்களின் பறிமாற்றத்தை (Reciprocity of action)க் குறிக்கும்போது, பெண்பாலில், 'ணச்' ஒட்டு வரும்.

வ்யாவக்ரோஸீ[1]	–	'ஒருவரையொருவர் திட்டிக் கொள்தல்'
வ்யாவலேகீ[2]	–	'ஒருவர்க்கொருவர் எழுதுதல்'
வ்யாவஹாஸீ	–	'ஒருவர்க்கொருவர் ஏளனம் செய்தல்'

வி + ஆங் + க்ருஸ்' + ணச் · அ → வி + ஆ + க்ரோஸ்' + அ · வ்யாவக்ரோஸ + ஙீஷ் ஈ (5.4.14 4.1.15 6.4.148) · வ்யாவ க்ரோஸீ

ஆனால் ஆண்பாலாகும்போது வ்யதிபாக:

சூ. 3.3.94இலிருந்து 'க்தின்' ஒட்டு இணைத்து ஒரு செயலை மாத்திரம் குறிக்கும் பெண்பாற் சொற்கள் ஆக்குவதைப் பற்றிக் கூறுகிறார் ஆசிரியர். இதை இங்கு தனியாகக் குறிப்பிடாமல், அந்தப் பகுதியிலேயே அவைகளுடன் சேர்த்துக் கூறியிருக்கலாம். ஆனால் அவ்வொட்டு இணைப்பதைத் தடை செய்ய சில விதிகள் அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்தடை இந்த ஒட்டுக்கும் பயன்படுத்த வாய்ப்பு உண்டு. அதைத் தடுப்பதற்காக இந்த விதியை முதலிலேயே அமைத்துள்ளார் ஆசிரியர்.

வ்யாவ சோரீ, வ்யாவசர்சீ

சு'ர், சர்ச் ஆகிய தாதுக்கள், சு1ராதி வகுப்பின் விகரணமான 'ணிச்' ஸ்வார்திக ஒட்டோடு வரும். அதனால் இத்தாதுக்களுடன் 'யுச்' ஒட்டு பெண்பாலில் வரும் (3.33107) ஆகவே சோரணா என்ற வடிவம் 'சுர்' தாதுவுக்கும், சர்சா என்ற வடிவம் 'சர்ச்' தாதுவுக்கும் 3.3.104இன்படியும் பெறும். ஈக்ஷ், ஈஹ் என்ற தாதுக்கள் 'க்தின்' ஒட்டுக்குப் பதிலாக 'அ' ஒட்டைப் பெறும் (3.3.102 & 103) இந்த தடுப்பு விதியினால் (debarring rule) பெறப்படும் 'அ'வை இந்த விதி (3.3.42) தடை செய்யாது ஆகையால், இத்தாதுக்களிலிருந்து பெறப்படும் பெண்பாற் சொற்கள் வ்யதீக்ஷா, வ்யதீஹா என்றேயமையும். வ்யதீக்ஷீ அல்ல. 'வ்யாதுக்ஷீ' என்று ஒரு சொல் காணப்படுகிறது. அது விதிவிலக்கு என்று தெளிவு இத்தகைய விதிவிலக்குகள், எல்லாம் 3.3.113இல் கூறப்பட்ட 'பலவகையான' (ப3ஹுலம்) என்பதற்கு எடுத்துக்காட்டுகளாக அமையும்.

3.3.44 அபி⁴விதெ⁴ள ப⁴ாவ இனுண்

முழுவதும் உடனிணைந்து பரவிய (அபி⁴விதி⁴) ஒரு நிலைமையைக் குறிக்க, தாதுவுக்குப்பின் 'இனுண்' என்ற ஒட்டு வரும்.

ஸாங்கூடி'னம் (ஸம் + கூட் + இன் + அண் 5.4.15)
முழுவதும் பரவிய பெருந்தீ
ஸாம்ராவிணம் – 'ஒன்று சேர்ந்து கூக்குரலிடுதல்
ஸாந்த்3ராவிணம் – 'ஒன்றாகச் சேர்ந்து ஓடுதல்'
ஆனால் ஸ்கோட': ('க4ஞ்' ஒட்டுடன்) பெருந்தீ
ஸம் ராவ :–'பெருங் கூச்சல்'

'ப4ாவே' என்ற சொல்லை மறுபடியும் பயன்படுத்தியிருப்பது வா அஸரூப (3.1.94) விதியைத் தடுப்பதற்கு. அதனால் விருப்பாக இங்கு 'க4ஞ்' ஒட்டு வராது.

3.3.45 ஆக்ரோஸே' அவன்யோர் க்3ரஹ:

அவ, நீ என்ற உபசர்க்கங்களுடன் க்3ரஹ் (பிடி) என்ற தாது வரும்போது தருவிக்கப்பட்ட சொல் 'சாபமிடுதல்' (ஆக்ரோஸே') என்ற பொருளைக் குறிக்கும்போது 'க4ஞ்' ஒட்டு வரும். இதற்கு முந்திய சூத்திரத்தின் 'இனுண' வராமல் இங்கு 'க4ஞ்' ஒட்டு அனுவிருத்தியாகும்.

அவக்3ராஹோ ஹந்த தே வ்ருஷல பூயாத் ஒ பாபி உனக்கு . கெடுதி உண்டாகட்டும்

நிக்3ராஹே ஹந்த தே வ்ருஷல பூ4யாத்ஓ பாவி, உனக்கு நாசம் உண்டாகட்டும். அதனுடைய பொருளில் அ வக்3ராஹ: பத3ஸ்ய நிக3ரஹ: சோரஸ்ய திருடனைப் பிடித்தல்

3.3.46 ப்ரே லிப்ஸாயாம்

'ஒரு பொருளையடைய விரும்புதல்' என்ற பொருளை உணர்த்த, 'க்3 ரஹ்' தாது 'ப்ர' என்ற உபசர்க்கத்துடன் வரும்போது, 'க4ஞ்' ஒட்டு தாதுவுக்குப்பின் வரும்.

பாத்ரப்ரக3ராஹேண சரதி பிக்ஷ: பிண்டார்தீ2
பிச்சைப் பாத்திரம் நடக்கிறான் பிச்சைக்காரன் பிச்சைக்காக
பிச்சைக்காரன் பாத்திரத்தைக் கையிலேந்தி பிச்சைக்காகப் போகிறான்
ஸ்ருவப்ரக்3ராஹேண சரதி த்3விஜோ தக்ஷிணார்தீ2
தட்சிணைக்காகப் பிராமணன் போகிறான்
ஆனால் ப்ரக்3ரஹோ தே3வதத்தஸ்ய
தேவதத்தனின் அகம்பாவம்
இங்கு 'அப்' ஒட்டு ப்ர + க்3ரஹ் உடன் வரும் (3.3.58)

3.3.47 பரௌ யக்3ஞே

'பரி'யுடன் நிற்கும் 'க்3ரஹ்' தாதுவுக்குப் பின் யாகம் பற்றிய பொருளில் 'க4ஞ்' ஒட்டு வரும்.

உத்தர பரிக்3ராஹ: ஸ்ப்2ய
வேதியின் வடபக்க வேலியமைத்தல்
அத4ர பரிக்3ராஹ: வேதியின் தெற்குப் பக்க வேலிகட்டுதல்

யாக சம்பந்தமில்லாவிட்டால், பரிக்³ரஹோ 'சூழ்தல்'
பரிக்³ரஹ: ('அப்' உடன்)

3.3.48 நௌ வ்ரு' த⁴ான்யே
'நி'யுடன் நிற்கும் 'வ்ரு' தாதுவுடன் 'க⁴ஞ்' ஒட்டு, தானியம் என்ற பொருளைக் குறிக்கும்போது வரும். நீவாரா, ஒரு வகை அரிசி
இது 'அப்' வருவதைத் தடை செய்கிறது. தானியத்தைக் குறிக்காவிட் டால்
நிவரா கன்யா–'தேர்ந்தெடுக்கத் தகுந்த பெண்'
நிவரா ('அப்' ஒட்டுடன்)

3.3.49 உதி³ஸ்¹ரயதி யௌதி பூத்³ருவ:
'உத்'துடன் வரும் ஸ்¹ரி, யு, பூ, த்³ரு ஆகிய தாதுக்களுக்குப் பின் 'க⁴ஞ்' ஒட்டு வரும். இது 'அச்', 'அப்' ஆகிய ஒட்டுக்களுக்குத் தடை.
உச்ச²ராய ஒரு கிரகத்தின் உதயம்
உத்¹யாவ:– ஒன்றாக்குதல், கலக்குதல்
உத் பாவ: – தூய்மையாக்குதல்
உத்³த்³ராவ: – ஓடுதல்

3.3.50 விப⁴ாஷா ஆஙி ருப்லு வோ:
'ஆங்' உடன் நிற்கும் ரு, (கர்ஜி) ப்லு (மித) என்ற தாதுக்களுக்குப்பின் 'க⁴ஞ்' ஒட்டு விருப்பாக வரும்.
ஆராவ: அல்லது ஆரவ: 'கூச்சல்'
ஆங் + ரு + க⁴ஞ் = அ → ஆராவ: ஆங் + ரு + அப் = அ = ஆரவ:
ஆப்லாவ: அல்லது ஆப்லவ: மிதத்தல்
ஆங் + ப்லு + க⁴ஞ் = அ = ஆப்லாவ: ஆங் + ப்லு + அப் = அ = ஆப்லவ

3.3.51 அவே க்³ரஹோ வர்ஷப்ரதி ப³ந்தே⁴
'அவ'வுடன் க்³ரஹ் தாது நின்று, மழையைத் தடுத்து நிறுத்துதல் என்ற பொருளை உணர்த்தும்போது 'க⁴ஞ்' ஒட்டு விருப்பாக வரும்.
அவக்³ராஹோ/அவக்³ரஹோ தே³வஸ்ய
'வானம் பொய்த்தல்'
ஆனால், அவக்³ரஹ: பத³ஸ்ய இங்கு 'அம்'தான் வரும்.

3.3.52 ப்ரே வணிஜாம்
'ப்ர'வுடன் 'க்³ரஹ்' நிற்கும்போது 'வியாபார சம்பந்தமான' என்ற பொருளில் 'க⁴ஞ்' ஒட்டு விருப்பாகத் தாதுவுடன் வரும். துலாப்ரக்³ ராஹேண சரதி அல்லது துலாப்ரக்³ரஹேண சரதி வியாபாரி (அல்லது மற்றவர்களோ) தராசைக் கையில் கொண்டு சுற்றுகிறான். இங்கு வியாபாரச் சம்பந்தமென்பது தராசைக் கட்டியிருக்கும் கயிற்றைக் குறிக்கும் மற்ற பொருளில் ப்ரக்3ரஹோ (அப் மட்டும்) தேவத³த்தஸ்ய 'தேவதத்தனின் சவுக்கு'

3.3.53 ரஸ்'மௌ ச

(க்ரஹ் தாது, 'ப்ர'வுடன் நிற்கும்போது 'க^{4}ஞ்') ஒட்டு (விருப்பாக) 'கடிவாள வார், லகான்' என்ற பொருளில் வரும்.

ப்ரக்^{3}ரஹ:/ப்ரக்^{3}ராய 'கடிவாள வார், லகான்'

3.3.54 வ்ருணோதே: ஆச்'ச^2ாத^{3}னே

'ப்ர'வுடன் 'வ்ரு' தாது நிற்கும்போது 'ஒரு வகையான உறை' என்ற பொருளில் விருப்பாக 'க^{4}ஞ்' வரும்.

ப்ராவார/ப்ரவர: 'போர்வை'

ஆனால் ப்ரவரா ('அப்' ஒட்டு மாத்திரம்) கௌ:

'உயர்த்தியான பசு'

3.3.55 பரௌ பு^{4}வோ ஆவக்^{3}ஞானே

'பரி'யுடன் பு^{4} தாது நின்று, 'அவமதிப்பு' என்ற பொருளைச் சுட்டும்போது (க4ஞ் ஒட்டு விருப்பாக வரும்)

பரிப^4ாவ:/பரிப^{4}வ: 'அவமதிப்பு'

ஆனால் பரிப^{4}வ: 'சுற்றிலுமுள்ள, சூழ்ந்த'

(மாற்று வடிவம் கிடையாது)

3.3.56 ஏரச்

'இ'வகுப்பைச் சேர்ந்த எழுத்தில் (அதாவது இ,ஈ) முடியும் தாதுக்களுக்குப்பின் 'அச்' ஒட்டு வரும். (வெறும் செயலை மாத்திரம் குறிக்கும்போது, (3.3.18), கர்த்தா அல்லாத காரகத்தில் (3.3.19) ஒரு பெயராகும்போது)

இது 'க^{4}ஞ்' உக்குத் தடுப்பு விதி

சய: (சி + அச்) 'சேகரித்தல், திரட்டுதல்'

அய: (இ + அச்) 'போதல்'

ஜய: (ஜி + அச்) 'வெற்றி'

க்ஷய: (க்ஷி + அச்) 'அழிதல்'

வா: அஜ்விதெ^{4}ள ப^{4}யாதீனாமுபஸம்க்^{2}யானம் நபும்ஸகே க்த'ாதி^{3} நிவ்ருத்யர்த^{2}ம்

'அச்' ஒட்டு பற்றிய விதியில் 'ப^{4}ய' முதலிய சொற்களையும் சேர்த்துக் கூற வேண்டும். இச்சொற்கள் நபும்ஸகமானதால் 'க்த' முதலிய ஒட்டுக்கள் இவைகளுடன் வராமலிருப்பதற்கு இவ் வார்த்திகம் தேவை.

ப^{4}யம் – 'அச்சம்' வர்ஷம் 'மழை'

வா: ஜவஸவௌ ச^{2}ந்த^{3}ஸி வக்தவ்யௌ

ஜவ, ஸவ என்ற சொற்கள் இவ்வொட்டை இணைத்து ஆக்கப்பட்டவை. இவைகள் வேத மொழியில் காணப்படுகின்றன.

ஊர்வோரஸ்து மேஜவ: (ஜூ + அச்)
பஞ்சௌத³னஸவ: (ஸூ + அச்)
இவ்வார்த்திகமில்லாவிட்டால், இவைகளுடன் 'அப்' ஒட்டு வந்திருக்கும். இவைகளின் வடிவம் ஒன்றாத்தானமையும். ஆனால் சுரத்தில் வேறுபாடு உண்டு. 'அச்' ஒட்டோடு சேர்ந்து தருவிக்கப்பட்ட சொல், இறுதியில் உதாத்த சுரம் பெறும்.

3.3.57 ரு' தே³ரப்
ரு', உ, ஊ எழுத்துக்களை ஈறாகக் கொண்ட தாதுக்களுக்குப் பின் 'அப்' ஒட்டு வரும் (மேற்குறிப்பிட்ட சூழலில்)
இது 'க⁴ஞ்' உக்குத் தடை.
ஒட்டின் 'ப்' ஒரு இத். இது சுரத்தைக் குறிப்பதற்காக (3.1.4 அனுதா த்தம்)
கர: (க்ரு' + அப்) 'சிதறுதல்'
க³ர: (க்³ரு' + அப்) 'நஞ்சு'
ஸ'ர: (ஸ்'ரு + அப்) 'அம்பு'
யவ: (யு + அப்) 'பார்லி'
ஸ்தவ: (ஸ்து + அப்) 'துதி'
லவ: (லூ + அப்) 'அறுவடை செய்தல்'
பவ: (பூ + அப்) 'புடைத்தல்'

3.3.58 க்³ரஹ வ்ரு' த்³ரு' நிஸ்'சி க³மஸ்' ச
'க்³ரஹ்' முதலிய தாதுக்களுக்குப்பின் 'அப்' ஒட்டு இணைக்கப்படும்.
இது 'க⁴ஞ்' வருவதைத் தடுக்கிறது.
'நிஸ்'சி'யுடன் 3.3.56 மூலம் கிடைத்த 'அச்' வருவதைத் தடுக்கிறது.
க்³ரஹ: 'கிரகம்'
வர: 'வரம்'
த³ர: 'குகை'
நிஸ்'சய: 'தீர்மானம்'
கம: 'அணிவகுப்பியக்கம்'

வா: வஸி'ரண்யோரு பஸம்க்²யானம்
வஸ், ரண் என்ற தாதுக்களோடும் 'அப்' ஒட்டு வரவேண்டுமென்று கூற வேண்டும்.
வஸ': 'கீழ்ப்படிதல்' ரண: 'சண்டை'

வா: க⁴ஞர்தே² க'வித⁴ானம் ஸ்த²ாஸ்தா பாவ்யதி⁴ ஹனி யுத்⁴யாத 2ம்
'க⁴ஞ்' ஒட்டின் பொருளில் (கர்த்தாவல்லாத காரகத்தில், பெயராகவும், ஒரு நிலைமையையும் குறிக்கும் போது) கீழ்க்கண்ட தாதுக்களுக்குப் பின் 'க' ஒட்டு இணைக்கப்படும். ஸ்த²ா, ஸ்நா, பா, வ்யத்⁴, ஹன், யுத்⁴
ப்ரஸ்த²: 'மேட்டுச் சமவெளி'மலை எதில் நிற்கிறதோ அது'

ப்ரஸ் ந: குளிக்கும் தொட்டி 'எதில் குறிக்கிறார்களோ'
ப்ரபா: தண்ணீர் தொட்டி 'எதிலிருந்து தண்ணீர் குடிக்கிறார்களோ '
ஆவித^{4}: குத்தூசி, துளைக்கும் கருவி
விக்^{4}ன: இடையூறு: 'எதில் தடை வருகிறதோ'
ஆயுத^{4}ம்: ஆயுத^{4}ம் 'எதைக் கொண்ட சண்டையிடுகிறார்களோ'

3.3.59 உபஸர்கே^{3} அத^{3}:
'அத்^{3} உபசர்க்கங்களுடன் நிற்கும்போது 'அப்' ஒட்டு வரும். விக^{4}ஸ:– பகுதியை உண்ட பிறகு மீத்து இருக்கும் அன்னம். வைசுவதேவம் என்ற வேள்வியில், தேவர்களுக்கு அளித்த பிறகு மீத்திருக்கும் சோற்றின் பெயர்.
ப்ரக^{4}ஸ, 'சிறந்த உணவு'
ஆனால் க^{4}ாஸ: 'புல்' இங்கு 'அப்' வராது க^{4}ஞ் வரும்.

3.3.60 நௌ ண ச
'நி'யுடன் சேர்ந்து நிற்கும் 'அத்^{3}' தாதுவுக்குப் பிறகு 'ண' ஒட்டு வரும் 'ச' என்ற சொல், 'அப்'பும் வரும் என்று குறிக்கும் ந்யாத^{3}: (நி + அத்^{3} + ண = நி + அத்^{3} + அ) ந்யாத^{3} (7.2.116) 'உணவு', 'உண்பித்தல்'
நிக^{4}ஸ: (நி + அத்^{3} + அப் = நி + க^{4}ஸ் + அ (2.4.38) = நிக^{4}ஸ) 'உண்ணுதல், உணவு'

3.3.61 வ்யத^{4} ஜபோரனுப ஸர்கே^{3}
வ்யத்^{4}, ஜப் தாதுக்கள் உபசர்க்கமில்லாமல் தனித்து நிற்கும் போது அத்தாதுக்களுக்குப் பின் 'அப்' ஒட்டு வரும்.
இது 'க^{4}ஞ்' உக்குத் தடை
வ்யத^{4}: 'காயம்' ஜப: 'ஜபம்'
ஆனால் ஆவ்யாத^{4}ா 'பெருந்துன்பம்'
உபஜாப:

3.3.62 ஸ்வநஹஸோர் வா
ஸ்வந, ஹஸ், தாதுக்கள் உபசர்க்கமில்லாமல் நிற்கும்போது 'அப்' தாது விருப்பாக வரும். அதாவது 'க^{4}ஞ்' ஒட்டும் வரும்.
ஸ்வந:/ஸ்வாந: 'சத்தம்/ஒலி'
ஹஸ:/ஹாஸ 'சிரிப்பு'
உபசர்க்கத்துடன்
பரஸ்வாந: 'உரத்த சத்தம்'
ப்ரஹாஸ: 'உரத்த சிரிப்பு'

3.3.63 யம ஸமுபநிவிஷு ச
ஸம், உப, நி, வி ஆகியவைகளுடன் யம் தாது வரும் போது (அல்லது உபசர்க்கமில்லாமல் இத்தாது நிற்கும்போதும்) 'அப்' ஒட்டு (விருப்பாக) வரும்.

ஸம்யம:/ஸம்யாம 'அடக்கம்'
உபய ம:/உபயாம 'திருமணம்'
நியம:/நியாம: எல்லை வரையறை
வியம:/வியாம: துன்பம்
உபஸர்க்கமில்லாமல், யம; யாம

3.3.64 நௌ க^{3}த^{3} நத^{3} பட^{2}ஸ்வன
'நி'யுடன் நிற்கும், க^{3}த்^{3}, நத்^{3}, பட்^{2}, ஸ்வன் ஆகியவைகளுடன் 'அப்' ஒட்டு (விருப்பாக) இணைக்கப்படும்.
நிக^{3}த^{3}/நிக^{3}ாத^{3}: 'பேச்சு'
நிநத^{3}/நிநாத^{3}:'சத்தம்'
நிபட^{2}/நிபாட^{2}: 'படித்தல்'
நிஸ்வன/நிஸ்வான: 'சத்தம்'

3.3.65 க்வணோ வீணாயாம் ச
'நி'யுடன் நிற்கும் 'க்வண்' தாதுவுக்குப் பிறகு (அல்லது உபசர்க்கமில் லாவிட்டாலும்) 'யாழ்' என்ற பொருளில், 'அப்' ஒட்டு வரும்.
நிக்வண:/நிக்வாண: இசைக்குறியீடு (யாழில்)
க்வண:/க்வாண: ஒலி
கல்யாண ப்ரக்வணா வீணா: 'சரியான இசையைக் கொடுக்கும் யாழ்'
ஆனால், 'அதி' யுடன் இத்தாது நிற்கும்போது
அதிக்வாண வர்த்ததே இங்கு 'க^{4}ஞ்' மட்டும் வரும்.
சுருக்கமாக 'க்வண்' தாதுவுடன் 'அப்' ஒட்டு, (1)'நி' யுடன் நிற்கும் போதோ அல்லது (2) உபசர்க்கமில்லாமல் தனியாக நிற்கும்போதோ அல்லது (3)'யாழை' க் குறிக்கும்போதோ (இங்கு உபசர்க்கம் கட்டாயமாக வரும்) இணைக்கப்படும்.

3.3.66 நித்யம் பண: பரிமாணே
'பண்' (பண்டமாற்று) தாதுவுடன் ஒரு நிறையை/அளவைக் (பரிமாண) குறிக்கும்போது 'அப்' ஒட்டு கட்டாயமாக (நித்யம் வரும்.
மூலக பண: ஒரு கையளவு முள்ளங்கி
ஸ^{1}ாகபண: ஒரு கையளவு கீரை
பரிமாணத்தைக் குறிக்காவிட்டால் 'பாண'
வியாபாரம், வர்த்தகம்

3.3.67 மதே^{3}ா அனுபஸர்கே^{3}
உபசர்க்கமில்லாமல் நிற்கும் 'மத்^{3} தாதுவுக்குப்பின் 'அப்' ஒட்டு வரும்.
வித்^{3}யாமத^{3} : 'படித்த கர்வம்'
த^{4}னமத^{3} : 'பணத்தின் கர்வம்'
உபசர்க்கத்துடன் உன்மாத^{3} : பைத்தியம்'

ப்ரமாத³ : அசட்டை, சோம்பேறித்தனம்

3.3.68 ப்ரமத³ஸமதெ³ள ஹர்ஷே

'மகிழ்ச்சி' என்ற பொருளில், ப்ரமத, ஸமத என்ற சொற்கள் நிபாதனங்கள்.

கன்யானாம் ப்ரமத³: – 'பெண்களின் மகிழ்ச்சி'

கோகிலானாம் ஸம்மத³: – 'குயில்களின் மகிழ்ச்சி'

'மகிழ்ச்சி' என்ற பொருளைக் குறிக்காவிட்டால், ப்ரமாத³: அஜாக்கிரதையானவன் ஸம்மாத: 'ஆவேசம், வெறி'

3.3.69 ஸமுதே³ாஜ பஸுஂஷு

'ஸம்', 'உத்' என்ற உபசர்க்கங்களுடன் நிற்கும் 'அஜ்' தாதுவுக்குப்பின், 'விலங்கு' என்ற பொருளைச் சுட்டும்போது 'அப்' ஒட்டு வரும்.

ஸமஜ: பஸூனாம் 'விலங்குகளின் கூட்டம்'

உத³ஜ: பஸூனாம் 'விலங்குகளை ஒட்டுதல்'

ஆனால், ஸமாஜோ ப்³ராஹ்மணானாம்

பிராம்மணர்களின் கூட்டம்

உத³ாஜ: க்ஷத்ரியானாம் 'க்ஷத்திரியர்களின் அணி வகுப்பியக்கம்'.

3.3.70 அக்ஷேஷு க்³லஹ:

சூதாட்டம் என்ற பொருளில், க்³லஹ : என்ற சொல் விதிப்படியமை யாத சொல். 'க்³ரஹ்' என்ற தாதுவுடன் 'அப்' ஒட்டு 3.3.58இன்படி வந்திருக்கும். ஆயினும், 'ர' வுக்குப் பதிலியாக 'ல' என்ற எழுத்து, விதிக்குப் புறம்பானது என்பதைச் சுட்டவே இந்தச் சூத்திரம்.

அக்ஷஸ்யக்³லஹ : பகடையை வீசுதல்

ஆனால் க்³ரஹ: பாத³ஸ்ய 'காலைப் பிடித்தல்'

'க்³லஹ்' என்ற தாதுவுடன் 'அப்' ஒட்டு இணைத்து (க²ஞ் ஒட்டைத் தடுத்து) 'க்³லஹ்' என்ற சொல் விதிமுறைப்படியாக்கப்பட்டது என்று ஒரு சாரார் கருதுகின்றனர். அவர்கள் க்³லஹ என்ற ஒரு தாது (க்³ரஹ்/ஐத்தவிர) இருப்பதாக நம்புகிறார்கள். இதற்கு க்³லாஹ: (க³லஹ் + க⁴ஞ்) 'பெறுதல்' என்ற சொல்லை மாற்றுச் சொல்லாக் குறிக்கிறார்கள் அவர்கள்.

3.3.71 ப்ரஜனே ஸர்த்தே:

'ஸ்ரு' தாதுவுக்குப் பின் 'அப்' ஒட்டு 'முதல் கருவுண்டா குதல்' என்ற பொருளில் இணைக்கப் பெறும்.

க்³வாம் அனுஸர:

இது 'க⁴ஞ்' வருவதைத் தடுக்கிறது.

3.3.72 ஹ்வ: ஸம்ப்ரஸாரணம் ச ந்யப்⁴யுபவிஷு

நி, அபி⁴, உப, வி, ஆகியவைகளுடன் ஹ்வே (கூப்பிடு) என்ற தாது நிற்கும்போது, அப் ஒட்டு தாதுவுக்குப்பின் இணைக்கப்படும். அதன் அரை உயிர்

அதோடு ஒத்த உயிராக மாறும்.

நி + ஹ்வே + அப் = அ = நி + ஹ்வா + அ = நி + ஹ் உ + அ = நி + ஹூ + அ = நி + ஹோ + அ = நிஹவ: 'கூப்பிடுதல்'

அபி'ஹவ : 'நான்கு பக்கத்திலிருந்தும் கூப்பிடுதல்'

உபஹவ: 'அருகிலிருந்து கூப்பிடுதல்'

விஹவ: 'இரைந்து கூப்பிடுதுல்'

ஆனால் ப்ரஹ்வாய:

3.3.73 ஆஙி யுத்[3]தே[4]

'சண்டை' என்ற பொருளில் 'ஆ'வுடன் சேர்ந்து 'ஹ்வே' நிற்கும்போது 'அப்' ஒட்டு இணைக்கப் பெறும் (அதன் அரை உயிர் அதற்கொத்த முழு உயிராகும்)

ஆஹவ: 'சண்டை' (ஆ + ஹ்வே + அப் = ஆ + ஹூ + அ = ஆ + ஹோ + அ = ஆ + ஹவ் + அ)

ஆனால் ஆஹ்வாய: (க[4]ஞ் ஒட்டுடன்)

3.3.74 நிபானமாஹாவ:

தொட்டி (நிபானம்) என்ற பொருளைச் சுட்டும் ஆஹாவ என்ற சொல் நிபாதனம். இங்கு உயிராக்கம் (ஸம்ப்ரஸாரணம்) 'அப்' ஒட்டு, வ்ரு3த்தி4 இவைகள் முறைப்படி அமையா.

ஆ + ஹ்வே + அப், ஆ + ஹ் வா, ஆ + ஹ் உ + அ = ஆ + ஹூ + அ = ஆ + ஹ்வோ + அ = ஆ + ஹாவ் + அ = ஆஹாவ: பஸூனாம், 'தொட்டி' என்ற பொருளைச் சுட்டா விட்டால், ஆஹ்வாய:

3.3.75 ப[4]ாவே அனுபஸர்க[3]ஸ்ய

உபசர்க்கமில்லாமல் நிற்கும் 'ஹ்வே' என்ற தாதுவுடன் ஒரு நிலைமையைச் சுட்டும்போது (அப் ஒட்டு வரும், ஸம்ப்ர ஸாரணம்)

ஹவ: 'அழைத்தல், கூப்பிடுதல்'

வேதத்தில்

ஹவே ஹவே ஸுஹவம் ஸூரமிந்தரம்

'ஒவ்வொரு பிரார்த்தனையிலும் அழைக்கத் தகுதி பொருந்திய சூரனான இந்திரனை அழைக்கிறேன்'.

இச்சூத்திரத்தில் 'பாவ' என்ற சொல் 3.3.19இல் கூறப்பட்ட அகர்தரி..... அனுவிருத்தியாகாமல் தடுப்பதற்காகத்தான்.

3.3.76 ஹனஸ்' ச வத[4]:

(உப சர்க்கமில்லாமல், நிலைமையைமட்டும் குறிக்கும்போது) 'ஹன்' தாதுவுக்குப் பின் 'அப்' ஒட்டு வரும். இந்த ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஹன்' உக்குப் பதிலியாக 'வத்[4]' வரும்.

வத[4] : சோராணாம் 'திருடர்களைக் கொல்லுதல்'

வத⁴வின் இறுதியசையில் உதாத்தம் பெறும். 'அப்' அநுதாத்த சுரத்தைபுடைத்தாயினும் இங்கு உதாத்தமாகிறது. மாற்று எடுத்துக்காட்டுக்கள்
க⁴ாத: (க⁴ும் உடன்) 'அடி'
ப்ரக⁴ாத: விக⁴ாத:

3.3.77 மூர்த்தௌ க⁴ன:
கெட்டியான (மூர்த்தௌ) என்ற பொருளில் 'ஹன்' தாதுவுக்குப் பின் 'அப்' ஒட்டு வரும். அத்தாதுவுக்குப் பதிலியாக 'க⁴ன' வரும்.
அப்⁴ரக⁴ன: 'கெட்டியான (நெருக்கமான) மேகம்'
த³தி⁴ க⁴ன: 'கெட்டித்தயிர்'

3.3.78 அந்தர் க⁴னோ தே³ஸே'
'அந்தர்' என்ற சொல்லைத் தொடர்ந்து நிற்கும் ஹன் தாதுவுக்குப் பின் 'அப்' ஒட்டு வரும். 'வத⁴' அதற்கு ஆதேசமாக வரும். இச்சொல், 'தேசம்' என்ற பொருளைக் குறிக்கும்.
அந்தர்க⁴ண: 'வாஹ்லிகத்திலுள்ள ஒரு நாட்டின் பெயர்',அந்தர் க⁴ண: என்றும் அமையும். நாட்டைக் குறிக்காவிட்டால் அந்தர்க⁴ாத: 'நடுவில் புகுந்து முற்றுகையிடுதல்'.

3.3.79 அக³ாரைகதே³ஸே' ப்ரக⁴ண: ப்ரக⁴ாணஸ் ச
ப்ரக⁴ண, ப்ரக⁴ாண என்ற சொற்கள் 'வீட்டின் ஒரு பகுதி' (அக³ாரைகதே³ஸே') என்ற பொருளில், விதி முறைப்படியமையாதவை (ப்ர + ஹன் உடன் 'அப்') ப்ரக⁴ண/ப்ரக⁴ாண; 'தலைவாயில், முகப்பு மண்டபம்' வேறு பொருளில் 'ப்ரக⁴ாத:'

3.3.80 உத்³க⁴னோ அத்யாத⁴ானம்
உத்³க⁴ன: என்ற சொல் தச்சர் முதலியோர் வேலை செய்யும் மேசை. (அத்யாத⁴ானம்) என்ற பொருளில், (உத் + ஹன் உடன் 'அப்' இணைக்கப்பட்டு) நிபாதனமாகும்.
உத்³க⁴ண: 'தச்சர் முதலியோர் வேலை செய்யும் மேசை'
வேறு பொருளில் உத்³க⁴ாத: ' அடித்தல்'

3.3.81 அபக⁴னோ அங்கம்
அபக⁴ன (அப + ஹன்) ஒரு அவயவம் என்ற பொருளில் நிபாதனமாகும்.
அபக⁴ன: 'உடலின் ஒரு அவயவம்'
வேறு பொருளில் அபக⁴ாத: 'வெட்டியெறிதல்'

3.3.82 கரணே அயோவித்³ருஷு
'அயஸ்', வி, த்³ரு, ஆகியவைகளுடன் 'ஹன்' தாது வரும்போது, ஆக்கப்பட்ட சொல் கருவிப் பொருளைக் குறிக்கும்போது 'அப்' ஒட்டு தாதுவுக்குப் பின்

வரும்.

'க^{4}ன்' 'ஹன்' உக்குப் பதிலியாக வரும்.

அயோக^{4}ன: 'கொல்லனின் சம்மட்டி'

விக^{4}ன: 'மரச்சம்மட்டி, மரச் சுத்தி'

த்^{3}ருக^{4}ன: 'கோடரி'

^{3}த்ருக^{4}ண: என்றும் காணப்படுகிறது.

3.3.83 ஸ்தம்பே^{3} க ச

'ஸ்தம்ப' என்ற சொல்லுடன் 'ஹன்' தாது நிற்கும்போது (கருவிப் பொருளில்) 'க' ஒட்டும் வரும். 'க^{4}ஞ்' உம் வரும் (ச)

ஸ்தம்ப^{3}க்^{4}ன: (ஸ்தம்ப + ஹன் + க = அ;

ஸ்தம்ப^{3}ஹ்ன் (6.4.98) = ஸ்தம்ப^{3}க்^{4}ன் + அ

(7.3.54)-ஸ்தம்ப^{3}க்^{4}ன)

ஸ்தம்ப^{3}க^{4}ன:/(க^{4}ஞ் ஒட்டு வரும்போது)

ஸ்தம்ப^{3}க்^{4}ன:/ஸ்தம்ப^{3}க^{4}ன' புல்வெட்டும் அரிவாள்'

ஸ்தம்ப^{3}க்^{4}னா:/ஸ்தம்ப^{3}க^{4}னா (பெண்பால்)

வேறு பொருளில் ஸ்தம்ப^{3}க^4ாத:

3.3.84 பரௌ க^4:

'பரி'யுடன் ('ஹன்' நிற்கும்போது கருவிப் பொருளில் 'அப்' ஒட்டு வரும் ('ஹன்' உக்கு 'க^4' ஆதேசம் ஆகும்.

பரிக^4: 'இரும்பு உத்தரம்', 'இரும்புத் தடி'

பலக^4: (பார்க்க 8.2.22)

3.3.85 உபக்^{4}ன ஆஸ்'ரயே

'உபக்^{4}ன' என்ற சொல் 'சாய்ந்து கொள்ளும் இடம்' என்ற பொருளில், விதிமுறைப்படியமையாத சொல்.

இச்சொல், உப + ஹன் + அப் = அ = உப + க்^{4}ன என்று, 'ஹன்' இன் ஈற்றயலான கெட்டு, உருவாகிறது. இங்கு ஈற்றயல் கெடுவது நிபாதனம்.

பர்வதோபக்^{4}ன: 'மலையின் கீழ் நோக்கிய சரிவு'

க்3ராமோபக்^{4}ன: 'கிராமத்தின் எல்லை'

3.3.86 ஸங்கோ^{4}த்^{3}கெ^{4}ள க^{3}ணப்ரஸ'ம்ஸயோ:

ஸங்க^4, உத்^{3}க^4 என்ற சொற்களும் நிபாதனங்கள். அவைகளின் பொருட்கள் முறையே, 'திரட்டுதல், கூட்டுதல்; 'புகழ்ச்சி' ஸம் + யன் + அப் = அ ஸங்க^4: இங்கு டி' (அதாவது 'ஹன்' இன் இறுதி அசை அன்) கெடுதலும், 'ஹ'வுக்கு 'க^4' ஆதேசமும் நிபாதனங்கள்.

ஸங்க^4: பஸூனாம்–'பசுக்களின் கூட்டம்'

உத்^{3}க^4: மனுஷ்யாணாம்–'மனிதர்களைப் பற்றிப் புகழ்ச்சி, அல்லது மனிதர்களுன் சிறந்தவன்'

வேறு பொருளில் ஸங்க^4ாத: 'கூட்டுக் குழு'

உத்3க4ாத: 'அடித்தல்'

3.3.87 நிகே4ா நிமிதம்

'நிக4' என்ற சொல் 'உயரமும் அகலமும் ஒத்தது' என்ற பொருளில் நிபாதனங்கள்.

நி + ஹன் + அப் : நிக4: இங்கும் 'டி' கெடுதலும், 'ஹ'வுக்கு 'க4' ஆதேசமும் விதிமுறைப்படியல்ல.

நிக4ா: வ்ரு'க்ஷா: 'உயரம் பருமன் ஆகிய இரண்டும் பொருத்தமாக உள்ள மரங்கள்'

நிக4ா: ஸ'ாலய: 'பொருத்தமான வடிவத்தைக் கொண்ட அரிசி' வேறு பொருளில் நிக4ாத: 'அடி'

3.3.88 ட்3வித: க்த்ரி:

'டு3'வை 'இத்'தாகக் கொண்ட தாதுக்களுக்குப் பின் 'க்த்ரி' ஒட்டு வரும். (ஒரு செயலை மட்டும் குறிக்கும் போது பாவே அகர்தரி . . . .)

'க்த்ரி' ஒட்டு தனியாக வராமல் எப்போதும் 'மப்' ஒட்டுடன் சேர்ந்துதான் பயன்படுத்தப்படும் (பார்க்க 4.4.20) 'டு3'வை இத்தாகக் கொண்ட தாதுக்களான டு3 பசஷ் 'சமை' (தா பா 997) டு3வப் (தா பா 1004), டு3க்ருஞ் ஆகியவைகளிலிருந்து முறையே பக்தரிமம் 'பழுத்தது' உப்தரிமம் 'விதைத்தது.' க்ருத்ரிமம் 'செயற்கையானது' என்ற சொற்கள் க்த்ரி + ம என்ற ஒட்டைச் சேர்த்து ஆக்கப்பட்டவை.

3.3.89 ட்'விதோ அது2ச்

'டு'வை இத்தாகக் கொண்ட தாதுக்களுக்குப் பிறகு "அது2ச்" ஒட்டு இணைக்கப்படும் (ப4ாவே. . . .) டு'வேப்–வேபது2: 'நடுக்கம்' (தா பா 367) டு'ஒஸ்'வி (தா பா 1011) ஸ்' வயது2: 'வீக்கம்'

டு' க் ஷு (தா பா 1037) க்ஷவது2: 'இருமல்'

3.3.90 யஜ யாசயத விச்'ச2 ப்ரச்'ச2 ரக்ஷோ நங்

யஜ் முதலிய தாதுக்களுக்குப்பின் நங் ஒட்டு வரும். (ஒரு செயலை மாத்திரம் குறிக்க. . .)

நங் இல், ந ஒட்டு, 'ங்' 'இத்' குணவ்ருத்3த4 வருவதைத் தடுப்பதற்காக இந்த 'ங்'

யஜ்	–	யக்3ஞ:	–	"வேள்வி"
யாச்	–	யாச்ஞா	–	"வேண்டுகோள்"
யத்	–	யத்ன:	–	"முயற்சி"
விச்'ச2	–	விஸ்'ன:	–	"ஒளி"
ப்ரச்'ச2	–	ப்1ரஸ்1ன:	–	"கேள்வி"
ரக்ஷ்:	–	ரக்ஷ்ண:	–	"காப்பாற்றுதல்"

'ப்ரச்'ச2', தாதுவின் 'ர' 'ஙித்' ஒட்டான 'நங்'குக்கு முன் 'ரு' ஆக மாறியிருக்க

வேண்டும். (உயிராதல்) (6.1.16) பாணினியின் (க்ஞாபத்தின்படி) சூ. 3.2.117இனால், அவ்வாறு மாறவில்லை. இல்லாவிட்டால், இது ப்ரு'ஸ்ன: என்று அகியிருக்கும்.

3.3.91 ஸ்வபோ நன்
''ஸ்வப்'' தாதுவுக்குப்பின் 'நன்' ஒட்டு வரும். (பாவே, அகர்தரி. . . .) 'நன்' இன் 'ந' சுரத்திற்காக (6.1.197)
முதலசை உதாத்தம் பெறும்.
ஸ்வப்ன: 'கனவு'

3.3.92 உபஸர்கே³ கோ⁴ : கி:
கு⁴ (தா³, தா⁴) என்ற பெயரால் அழைக்கப்படும் தாதுக்கள் உபசர்க்கத்தோடு நிற்கும்போது 'கி' ஒட்டு, தாதுவுக்குப் பின் வரும். (பாவே, அகர்தரி. . . .)
தாதுவின் 'அ', 'இத்' ஒட்டுச் சேர்ப்பதால் கெடும்.
ப்ரதி³ ப்ர + தா³ + கி → இ → ப்ர + த + இ (6.4.64) → ப்ரதி பரிசு
ப்ரதி⁴: சக்கரத்தின் புறச் சுற்று வட்டம்
அந்தர்த்³தி⁴: மறைதல்
உபாதி⁴: 'ஏய்ப்பு, மோசடி'

3.3.93 கர்மணி அதி⁴கரணே ச
செயப்படு பொருளைக் குறிக்கும் சொல்லை உபபதமாகக் கொண்ட ''கு⁴'' என்ற பெயரால் குறிக்கப் பெறும் தாதுக்களுக்குப் பின் இடப் பொருளில் (அதிகரணகாரக) 'கி' ஒட்டு இணைக்கப் பெறும்.
ஜலதி⁴: 'கடல்' (எதில் தண்ணீர் தேக்கப்பட்டிருக்கிறதோ)
ஸ'ரதி⁴: 'அம்பறாத்தூளி 'எதில் அம்புகள் வைக்கப்பட்டிருக்கிறதோ'

3.3.94 ஸ்த்ரியாம் க்தின்
பெண்பாலில் 'க்தின்' ஒட்டு, (பாவே, அகர்தரி ச காரகே) இணைக்கப்படும்.
'க⁴ஞ்', அச், அப் 'ஒட்டுக்களுக்கு இவ்விதி தடை விதிக்கிறது.
க்ருதி: 'செயல்'
சிதி: 'சேகரித்தல், திரட்டுதல்'
மதி: 'அறிவு'

வா: க்தின்னா ப்ா³தி³ப்⁴யஸ்'ச வக்தவ்ய:
'ஆப்' முதலியவைகளோடும் 'க்தின்' ஒட்டு இணைக்கப்படும்.
ஆப்தி: 'அடைதல்'
ராத்³தி⁴: 'நிறைவேற்றிய செயல், சிறப்புத் திறமை'
தீ³ப்தி: 'ஒளி'
ஸ்ரஸ்தி: 'வழுக்குதல், தவறுதல்'
த்⁴வஸ்தி: 'அழிதல்'

ஆஸ்தி: 'உட்கார்தல்'
லப்³தி: 'அடைதல்'
வா: ஸ்'ரு யஜி ஸ்துப்⁴ய: கரணே
ஸ்'ரு, யஜ், ஸ்து ஆகியவைகளுக்குப்பின் கருவிப் பொருளில், 'க்தின்' ஒட்டு வரும்.

ஸ்ருதி: – காது (எதன் மூலம் கேட்கப்படுகிறதோ)
இஷ்டி: – 'வேள்வி'
ஸ்துதி: – 'புகழ்தல்'

வா: க்³லாம்லா ஜ்யா ஹாப்⁴யோ நி:
க்³லை, ம்லை, ஜ்யா, ஹா ஆகியவற்றின் பின் 'நி' ஒட்டு வரும்.
க்³லாநி: 'சோர்வு, களைப்பு'
ம்லாநி: 'வாடுதல்'
ஜ்யாநி: 'முதுமை'
ஹாநி: 'இழப்பு, நஷ்டம்'

வா: ரூ'காரல்வாதி³ப்⁴ய: க்தின் நிஷ்டா'வத்³ ப⁴வதி இதி வக்தவ்யம்.
'ரூ'வை ஈறாகக் கொண்ட தாதுக்கள், 'லூ' முதலிய தாதுக்கள் ஆகியவைகளுக்குப் பிறகு வரும் 'க்தின்' ஒட்டை நிஷ்டா ஒட்டுக்களுக்கு ஈடாகக் கருத வேண்டும். அதாவது அவைகள் நிஷ்டா ஒட்டுக்கள் போன்று செயற்படும்.
க்ரூ' – கீர்ணி: 'சிதறுதல்'
க்ரூ' + க்தின் = கிர் + தி = கீர்தி (8.2.77)
கீர்நி (நிஷ்டாவத்³ப⁴ாவ) = கீர்ணி
கீ³ர்ணி: 'புகழ்'
ஜீர்ணி: 'முதுமை'
ஸீர்ணி: 'அழிவு'
லூனி: 'வெட்டுதல்'
பூனி: 'அழிவு'

வா: ஸம்பத³ாதி³ப்⁴ய: க்விப்
'ஸம்பத்' முதலியவைகளுடன் 'க்விப்' ஒட்டு வரும்.
ஸம்பத் 'வளமை, நற்பேறு'
விபத் 'இடுக்கண்'
ப்ரதிபத் 'வாய்ப்பு'
'ஸம்பத்' முதலியவைகளுடன் 'க்தின்' ஒட்டு வருவதும் விரும்பத்தக்கது.
ஸம்பத்தி:
விபத்தி:

3.3.95 ஸ்த²ாக³ா பா பசோ ப⁴ாவே
ஸ்த²ா முதலிய தாதுக்களுக்குப் பின் பெண்பாலில், ஒரு செயலை மாத்திரம் குறிக்கும்போது 'க்தின்' ஒட்டு வரும்.3.3.106, 'ஆ'வை ஈறாகக் கொண்ட தாதுக்களுக்குப் பிறகு 'க்தின்' ஒட்டு வருவதைத் தடுத்து, 'அங்' ஒட்டு வரவேண்டுமென்று விதிக்கிறது. இச்சூத்திரம் இத்தடுப்பு விதிக்குத் தடை விதித்து, 'க்தின்' ஒட்டுத்தான் இங்கு வரவேண்டும்.
'அங்' அல்ல என்று குறிக்கிறது.
ப்ரஸ்தி²தி: "பயணம்"
உத்³கீதி: "சாமகானம்"
ஸங்கீதி: "சங்கீதம்"
ப்ரபீதி: "தொட்டி"
ஸம்பீதி: "சேர்ந்து குடித்தல்"
பக்தி: "சமைத்தல்".
இங்கு வேறு எந்தப் பொருளையும் உணர்த்தாது என்று குறிக்க, 'ப⁴ாவே' என்ற சொல் திரும்ப இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.
அவஸ்த²ா, ஸம்ஸ்த²ா முதலிய சொற்களும் காணப்படுகின்றன. இவைகள் பாணினியின் சூ. 1.1.34 இத்தகைய சொற்களும் ஆக்குவதில் தவறு இல்லை என்று குறிப்பால் உணர்த்துகிறது. அதாவது 'அங்' ஒட்டும் சில சமயங்களில் வருவதற்குத் தடையில்லை.

3.3.96 மந்த்ரே வ்ரு'ஷேஷ பசமன வித³ பூ⁴வீரா உத³ாத்த:
வேதத்தின் மந்திரப் பகுதியில் உத³ாத்த சுரத்தைக் கொண்ட 'க்தின்' ஒட்டு, கீழ்க்கண்ட தாதுக்களுக்குப்பின் (ஒரு செயலைக் குறிக்கும் பெண்பாற் சொற்கள் ஆக்க) இணைக்க வேண்டும்.
வ்ருஷ் (மழைபெய்), இஷ் (விரும்பு), பச் (சமை), மன் (நினை), வித் (அறி), பூ⁴ (இரு), வீ(போ), ரா (கொடு) பூ⁴(இரு), வீ(போ),
வ்ருஷ்டி': – மழை:, இஷ்டி: (விருப்பம்)
பக்தி: 'சமைத்தல்', மதி: 'அறிவு'–வித்தி 'அறிவு'
பூ⁴தி: 'ஆக்கம், செல்வம்'
வீதி: 'போதல், செல்வம்' ராதி: 'செல்வம்'
'க்தின்' ஒட்டு எல்லாத் தாதுக்களுக்குப் பின்னும் இணைக்க வேண்டும் என்ற விதி சூ. 94இலிலேயே கூறப்பட்டிருகிறது. இவ்வாறு ஆக்கப்பட்ட சொற்களின் சுரத்தை ஒழுங்குப்படுத்துவதற்காக இச்சூத்திரம் அமைக்கப்பட்டுள்ளது. 'இஷ்' இலிருந்து இச்'ச²ா என்ற சொல்லும் (நிபாதனம் 3.3.101) ஆக்கப்படும்.

3.3.97 ஊதி யூதி ஜூதி ஸாதி ஹேதி கீர்த் தயஸ்' ச
'ஊதி' முதலிய சொற்கள் நிபாதனங்கள். இவைகள் உதாத்த சுரம் கொண்டது, ஊதி (அவ் + க்தின் = ஊட்² = ஊ (6.4.20) = ஊதி) 'காப்பாற்றுதல்' இதை சூ. 94இன்படி க்தின் இணைத்து தருவிக்க இயலும். ஆனால் சுரத்தை (உதாத்த)யல்ல. யூதி: (சேர்த்தல், இணைத்தல்) ஜூதி: (வேகம்) ஆகிய

இரண்டிலும் நெடில் நிபாதனம்.

ஸாதி:(அழிவு) 'ஸை' தாது 'ஸா' ஆகி (6.1.45), இந்த ஆ 7.4.40இன்படி 'இ'யாக வேண்டும். அப்படி மாறா தாது இங்கு நிபாதனம்.

அல்லது 'ஸன்' தாதுவுடன் 'க்தின்' இணைத்து 6.4.42இன் மூலம் 'ன்' க்கு பதிலியாக 'ஆ'வைச் சேர்த்து 'ஸாதி' என்ற சொல் முறைப்படி தருவிக்கலாம். இவ்வாறு ஆக்கப்பட்ட சொல்லில் உதாத்த சுரம் விதி முறைப்படி வராது. அதனால் சுரம் நிபாதனமாகிறது.

ஹேதி: (< ஹா அல்லது ஹி) ஆயுதம்

கீர்த்தி : 'புகழ்ச்சி'

க்ரு'த் + ணி + க்தின் = கீர்த்தி இங்கு 'ணி' இறுதியாக உள்ளவற்றில் யு ச் ஒட்டு வரவேண்டும் (3.3.107). இங்கு 'க்தின்' வருவது நிபாதனம்.

3.3.98 வ்ரஜயஜோர் ப⁴வோ க்யப்

வ்ரஜ் (போ), யஜ் (யாகம் செய்) ஆகிய தாதுக்களுக்குப் பின் செயலை மட்டும் குறிக்கும் (ப⁴ாவே) பெண்பால் சொற்கள் (உதாத்த சுரத்தில்) ஆக்குவதற்கு 'க்யப்' ஒட்டு இணைக்க வேண்டும்.

வ்ரஜ்யா	–	'சுற்றுதல்'
இஜ்யா	–	'யாகம் பண்ணுதல்'

இது 'க்தின்' வரத்தடை விதிக்கிறது. 'க்யப்' இன் 'ப்' ஒரு 'இத்' இங்கு இதனால் பயன் ஏதுமில்லை, ஆயினும் இந்தப் 'பித்' தினால் அடுத்த சூத்திரத்தைப் பயன்படுத்தி யாக்கப்படும் சொற்களில் 'த'வை இணைக்க உதவுகிறது. (6.1.71)

3.3.99 ஸம்க்³ஞாயாம் ஸமஜனி ஷத³நிபத மன வித³ ஷுஞ் ஸு'ங் ப்⁴ருஞ்ணி:

'ஸமஜ்' முதலிய தாதுக்களுடன் ஒரு பெயரைச் சுட்டும் பெண்பாற் சொற்கள் (உதாத்த சுரத்துடன்) ஆக்க, 'க்யப்' ஒட்டு இணைக்கப்படும்.

ஸம்ஸ்யா 'அவை' நிஷத்³யா' படுக்கை கடை'

நிபத்யா 'சறுக்கு நிலம்' மத்யா 'நினைத்தல்' அல்லது மன்யா 'பின்கழுத்து', வித்³யா 'அறிவு, கல்வி' ஸுத்யா 'சோமரசம் எடுக்கும் வேளை', ஸய்யா 'படுக்கை' ப்⁴ருத்யா 'வேலைக்காரி' இத்யா 'பல்லக்கு'

3.3.100 க்ரு'ஞ ஸ' ச

'க்ரு'வுக்குப்பின் 'ஸ' ஒட்டு வரும். 'க்யப்' உம் (ச) வரும் (பெண்பால்)

க்ரியா	–	செயல் (க்ரு' + ஸ் = அ டாப்)
க்ரு'த்யா	–	செயல் (க்ரு' + க்யப் = ய, துக் = த் + டா'ப்)
க்ருதி:	–	செயல் (க்ரு + க்தின்)

3.3.101 இச்'ச²ா

இச்'சா என்ற சொல், 'இஷ்' தாதுவுக்குப் பின் 'ஸ' ஒட்டைச் சேர்த்து ஆக்கப்படுகிறது. இங்கு 'யக்' ஒட்டு வரவேண்டிய இடத்தில், வராததால், இது நிபாதனமாகிறது.

வா: (இச்சா) பரிசர்யா பரிஸர்யாம்ருக³யா

அட'ாட்'யானாமுபஸம்க்²யானம்

1) பரிசர்யா (சேவை) (2) பரிஸர்யா (சுற்றுதல்)

(3) ம்ரு'க³யா (வேட்டையாடுதல்) (4) அட'ாட்'யா

(சமயச்சார்புள்ள இரவலராக சுற்றிக் கொண்டிருத்தல்) முதலியவைகளும் நிபாதனங்கள்

1.2. குணாதேசம் நிபாதனம்

3. தாதுவின் 'அ'காரம் கெடவேண்டும் அது கெடாதது நிபாதனம்

4. தாதுவின் இரட்டித்தல் நிபாதனம்

வா: ஜாகர்தே: அகாரோ வா

'ஜாக்3ரு' தாதுவுக்குப்பின் 'அ' ஒட்டு விருப்பாக வரும்.

ஜாகரா (ஜாக்³ரு + அ)/ஜாக³ர்யா

(ஜாக்³ரு + ஸ) 'விழித்திருத்தல்'

3.3.102 அ ப்ரத்யயாத்

ஒட்டுக்களில் முடியும் தாதுக்களுக்குப்பின் பெண்பாலில் 'அ' ஒட்டு வரும் (செயலைக் குறிக்கும்போது) தருவிக்கப்பட்ட தாதுக்கள். ஒட்டுகளில் முடியும் தாதுக்கள் அவைகள் ஸன்னந்த (desiderative) இயக்குவினை, நாம தாது (Denominative)யஙந்த (intensive) ஆகியவைகள்.

சிகீர்ஷா (ஸன்னந்த – சிகீர்ஷ் +, ட'ாப் = ஆ)

செய்ய விருப்பம்

புத்ரீயா (க்யஜந்த நாமதாது புத்ரீய + அ, ட'ாப் = ஆ)

புத்ரகாம்யா 'பிள்ளை வேண்டும் விருப்பம்'

லோலூயா (யங் பரத்யயாந்த, லோலூய + அ + டப்) 'அடிக்கடி வெட்டுதல்'

3.3.103 கு³ரோஸ்' ச ஹல:

'கு³ரு' எனப்படும் உயிரைக் கொண்ட (1.4.11) மெய்யெழுத்தில் முடியும் தாதுக்களுக்குப் பின்னும், தருவிக்கப்பட்ட சொல் பெண்பாற் சொல்லாக அமையும்போது 'அ' ஒட்டுவரும்.

இது 'க்தின்' வருவதைத் தடுக்கிறது.

குப்³ஜா – 'ஒழுக்கங்கெட்டவள்'

ஈஹா – 'விருப்பம்'

மாற்று வடிவங்கள் – ப⁴க்தி (குரு உயிரல்ல)

நீதி (மெய்யீறு கொண்டதல்ல)

3.3.104 ஷித்^{1}பி^{4}த^{3}ாதி^{3} ப்^{4}யோஅங்

'ஷ்' வை 'இத்'தாகக் கொண்ட தாதுக்கள், பி^{4}த்^{3} வகுப்பைச் சேர்ந்த தாதுக்கள் ஆகியவைகளுக்குப்பின் (பெண்பாலில், செயலை மாத்திரம் குறிக்கும்போது) 'அங்' ஒட்டு வரும்.

ஜ்ரு^{2}ஷ் – ஜரா 'முதுமை'

த்ரபுஷ் – த்ரபா 'நாணம்'

பி^{4}த^{3}ாதி^{3}

பி^{4}த^{3}ா – 'உடைத்தல்' மாற்றுவடிவம் பித்'தி 'சுவர்'

சி^{2}த^{3}ா – 'வெட்டுதல்' மாற்றுவடிவம் சி^{2}த்தி

வித^{3}ா – 'அறிவு'

க்ஷிபா – 'எறிதல்'

வா: கு^{2}ஹா கி^{3}ர்யோஷத்^{4}யோ:

'கு^{3}ஹா' என்ற சொல், மலையின் ஒரு பகுதி என்ற பொருளில் (கிரி, ஒஷதி4)

ஸ்ரத்^{3}த^{4}ா நம்பிக்கை மேத^{4}ா

ஆரா 'கத்தி'; மாற்று வடிவம் ஆர்த்தி 'துன்பம்'

காரா 'சிறை' க்ஷியா 'வசித்தல்', போதல், அழிவு

தாரா, கடத்தல் (ஆறு)

த^{4}ாரா, 'ஆறு' மாற்றுவடிவம் த்^{4}ருதி லேக^{4}ா, ரேக^{4}ா 'எழுதுதல்' சூட^{3}ா வபா 'கொழுப்பு'

வஸா 'எலும்புமச்சை' ம்ருஜா 'சுத்தம்'

வா: க்ருபே: ஸம்ப்ரஸா ஏணம்

'க்ருபா' என்ற சொல்லில், 'க்ரப்' தாதுவின் 'ர்'வை முழு உயிராக்கப்படுகிறது.

3.3.105 சிந்தி பூஜிகதி^{2}கும்பி^{3} சர்சஸ் ச

சிந்த் (நினை) பூஜ்(பூசி), கத்^{2}(பேசு) கும்ப்^{3}(மூடு, மறை) 'சர்ச்'(படி) ஆகியவைகளுக்குப்பின் 'அங்' ஒட்டும், 'யுச்' ஒட்டும் (3.3.107) (பெண்பாலில்) இணைக்கப்படும்.

சிந்தர் 'நினைத்தல்' பூஜா 'பூசை'

கத^{2}ா 'கதை' கும்ப^{3}ா 'உள்பாவாடை' சர்சா 'படித்தல்' 'யுச்' உடன் வரும்போது சிந்தனா, பூஜனா (பார்க்க 7.1.1)

3.3.106 ஆதஸ்' ச உபஸர்கே

'ஆ' வை ஈறாகக் கொண்ட தாதுக்கள் உபசர்க்கத்தோடு வரும்போது (பெண்பாலில் 'அங்' ஒட்டு வரும். இது 'க்தின்' வருவதற்குத் தடையாகிறது.

'ப்ரத^{3}ா', பரிசு, கொடை' உபத^{3}ா 'பரிசு'

ப்ரத²ா உபத⁴ா 'ஈற்றயல்'

வா: ஸ்'ரத³ந்தரோ பஸர்க³வத்³ வ்ருத்தி:
ஸ்'ரத், அந்தர் ஆகியவற்றை உபசர்க்கத்தைப் போல் கருத வேண்டும்.
ஸ்'ரத³த⁴ா – நம்பிக்கை
அந்தர்த⁴ா – மறைதல்

3.3.107 ண்யாஸஸ்'ரந்தே²ா யுச்
ணிஜந்த தாதுக்கள் (இயக்குவினை) ஆஸ, ஸ்'ரந்த² என்ற தாதுக்கள், ஆகியவைகளுக்குப்பின் 'யுச்' ஒட்டு வரும் (பெண்பாலில்)
'அ'வுக்குத் தடையாகிறது இவ்விதி
காரணா (க்ரு – ணிச் = காரி + யுச் = யு = அன = கார் + அன = காரணா) 'செய்வித்தல்'
ஹாரணா திருடுதல் ஆஸனா அமர்தல் ஸ்'ரந்த²னா தளர்த்துதல்

வா: யுச் ப்ரகரணே க⁴ட்'டி' வந்தி³விதி³ப்⁴ய உபஸம்க்²யானம்
க⁴ட்'ட்' (இயங்கு, போ) வந்த்³ (புகழ்) வித்³ (உணர்) ஆகியவைகளுடனும் 'யுச்' ஒட்டு வரும்.
க⁴ட்'ட'னா 'ஆடுதல்', போதல்' வந்த³னா 'பிரார்த்தனை' வேத³னா 'வலி'. இங்கு கூறப்பட்டிருக்கும் க⁴ட்'ட்', துத³ாதி³ வகுப்பைச் சேர்ந்தது. இயங்கு என்ற பொருளைக் குறிக்குமது சு'ராதி³ வகுப்பைச் சேர்ந்ததல்ல. இந்த வகுப்பைச் சேர்ந்த 'க⁴ட்'ட்' ' ஏற்கனவே கூறப்பட்ட 'ணிஜந்த'த்துடன் சேர்ந்தது, இவ்வகுப்பைச் சேர்ந்த 'க⁴ட்'ட்' ' 'மூடு' என்ற பொருளில் வரும்.

வா: இஷேரனிச்'ச²ார்த²ஸ்ய யுஜ் வக்தவ்ய:
'விரும்புதல்' என்ற பொருளைக் குறிக்காமல் வேறு பொருளைக் குறிக்கும் 'இஷ்' என்ற தாதுவுக்குப்பின் 'யுச்' வரும்.
அத்⁴யேஷணா – 'வேண்டுதல்'
அன்வேஷணா – 'தேடுதல்'

வா: பரேர் வா
'பரி' என்ற உபசர்க்கத்தோடு வரும் 'இஷ்' விருப்பாக 'யுச்' ஒட்டோ டு வரும்.
பர்யேஷணா/பரீஷ்டி' : "ஆதாரங்களுடன் ஆராய்தல்"

3.3.108 ரோக³ாக்²யாயாம் ண்வுல் ப³ஹுலம்
தருவிக்கப்பட்ட சொல் ஒரு நோயின் பெயராகவும் பெண்பாற் சொல்லாகவும், அமையும்போது, தாதுவின் பின் 'ண்வுல்' ஒட்டு பலவகையில் வரும்.
இது 'க்தின்' ஒட்டும் மற்ற ஒட்டுக்களையும் தடுக்கிறது.
ப்ரச்'ச²ர்த்³தி³ா 'வாந்தி'
ப்ரவாஹிகா 'பேதி'

ப்ரச்'ச^{2}ர்த்^{3} + ண்வுல் : வு : அக, டாப்,
இத்வ : ப்ரச்'ச^{2}ர்தி^{3}கா
ப்ரவாஹிகா (ப்ர + வாஹி + ண்வுல் : அக : ப்ரவாஹிகா)
விசர்சிகா 'ஒரு தோல் வியாதி'
இந்த ஒட்டு வராமலும் அமையும்.
ஸி'ரோர்த்தி: 'தலைவலி' அர்த்^{3} + க்தின்

வா: த^{4}ாத்வர்த^{2} நிர்த்^{3}தே^{3}ஸே ண்வுல் வக்தவ்ய:
ஒரு தாதுவின் பொருளை மட்டும் குறிக்கும்போது 'ண்வுல்' ஒட்டு இணைக்க வேண்டும்.
ஆஸி'கா – 'உணவு', ஸ'ாயிகா – 'படுக்கை'

வா: இக்ஸ்'திபௌ த^{4}ாது நிர்தே^{3}ஸே' (இதி வக்தவ்யம்) ஒரு தாதுவை மட்டும் குறிக்கும்போது 'இக்', ஸ்'திப் ஒட்டுக்கள் வரும்.
பி^{4}த^{3} : (பி^{4}த்^{3} + இக்) சி^{2}தி^{3} : பசதி: பட்'தி:
ஆகியவைகள் வெறும் தாதுவை மட்டுந்தான் சுட்டும். அதாவது பி^{4}தி^{3} என்பது 'பி^{4}த்^{3}' தாதுவை மட்டும் சுட்டும்.

வா: வர்ணாத் கார:
'கார' என்ற ஒட்டு, ஒரு எழுத்து என்பதைக் குறிக்கும்.
அகார: 'அ' என்ற எழுத்து
இகார: 'இ' என்ற எழுத்து

வா: ராதி^{3}ப^{2}:
'ர' என்ற எழுத்தைக் குறிக்க 'இப^{2}' ஒட்டு வரும்.
ர + இப^{2} : ரேப^{2}

வா: மத்வர்த^{2}ாச்'ச^{2} : (அகார லோபஸ்' ச)
'மத்வர்த^{2}' என்ற சொல்லுக்குப்பின் 'ச^{2}' ஒட்டு இணைக்கப்படும். இறுதி 'அ' கெடும்.
மத்வர்த^{2} + ச^{2} : ஈய : மத்வர்தீ^{2}ய:

வா: இணஜாதி^{3}ப்^{4}ய:
'அஜ' முதலியவைகளுக்குப் பின் 'இண்' ஒட்டு வரும்.இ
ஆஜி: (அஜ் + இண்)
ஆதி' : ஆதி^{3} : தொடக்கம்

வா: க்ரு'ஷ்யாதி^{3}ப்^{4}ய:
'க்ரு'ஷ்' முதலியவைகளுக்குப்பின் 'இக்' ஒட்டு வரும்.
க்ரு'ஷி: விவசாயம்; கிரி: 'பன்றி'

3.3.109 ஸம்க்3ஞாயாம்

தருவிக்கப்பட்ட சொல், ஒரு பெயரைக் குறிக்கும்போது, ஒரு தா துவுக்குப்பின் 'ண்வுல்' ஒட்டு வரும் (பெண்பாலில்) உத்3த்3ாலக புஷ்ப ப4ஞ்ஜிகா. உத்தாலக என்ற பூவைப் பறித்து, விளையாடும் ஒருவகை விளையாட்டின் பெயர்(உத்3த்3ாலக + ப4ஞ்ஜ் + வுல் - அக)

வரணபுஷ்ப ப்ரசாயிகா 'வரணப்பூக்களைப் பறித்துச் சேகரிக்கும் ஒரு விளையாட்டு'

அப்4யூஷக2ாதி3கா

ஸாலப4ஞ்ஜிகா ஒரு வகையான விளையாட்டுகளின் பெயர்

தால ப4ஞ்ஜிகா

3.3.110 விப4ாஷாக்2 யான பரிப்ரஸ்'னயோரிஞ் ச

வினா–விடையை உணர்த்தும்போது தாதுவுக்குப்பின் ரிஞ் ஒட்டு விருப்பாக வரும். அதாவது 'ண்வுல்' லும் வரும். வேறு ஒட்டுக்களும் வரும் (ச) ஆக்2யான (விடை), பரிப்ரஸ்1ன (வினா) என்ற சொற்களில் கேள்வியைக் குறிக்கும் சொல், முதலிலும், விடையைக் குறிக்கும் சொல். அதையடுத்தும் நிற்க வேண்டும். ஆனால், குறைந்த உயிரெழுத்துக்கள் முதலில் நிற்க வேண்டுமென்ற விதியையொட்டி இச்சூத்திரத்தில் ஆக்3யான முதலில் நிற்கிறது.

வினா

காம்த்வம் காரிம் அகார்ஷீ (க்ரு + இஞ்)

காம் காரிகாம் அகார்ஷீ (க்ரு + ண்வுல்)

காம் க்ரியாம் அகார்ஷீ (க்ரு + ஸ)

காம் க்ரு'த்யாம் அகார்ஷீ (க்ரு + க்யப்)

காம் க்ருதிம் அகார்ஷீ (க்ரு + க்தின்)

நீ என்ன வேலை செய்தாய்

விடை

ஸர்வாம் காரிம் அகார்ஷம் (இஞ்)

ஸர்வாம் காரிகாம் அகார்ஷம் (ண்வுல்)

ஸர்வாம் க்ரியாம் அகார்ஷம் (ஸ)

ஸர்வாம் க்ருத்யாம் அகார்ஷம் (க்யப்)

ஸர்வாம் க்ருதிம் அகார்ஷம் (க்தின்)

நான் எல்லா வேலையையும் செய்தேன்

இவ்வாறே காம் க3ணிமஜீகண: க3ணனாம், க3ணிகாம்........

ஸர்வாம் க3ணிம் அஜீக3ணம்.........

வினா விடையாக அமையாவிட்டால் 'க்ருதி.

3.3.111 பர்யாயார்ஹர்ண உத்பத்திஷு ண்வுச்
தொடர்தல் அல்லது வரிசை, தகுதி, கடன், உற்பத்தி ஆகிய பொருளில், தாதுக்களுக்குப்பின் 'ண்வுச்' ஒட்டு (பெண்பாலில்) வரும்.
இது 'க்தின்' முதலியவைகளக்குத் தடை ப⁴வத: ஸ்'ாயிகா தூங்க தங்களது முறை
அர்ஹதி பவான் இக் ஷு ப⁴க் ஷி காம்
தாங்கள் கரும்பு தின்ன தகுதியுடையவர்கள்
இக்ஷிப⁴க் கிாம் மே த⁴ாரயஸி
நீ எனக்குக் கரும்பு உண்பிக்கக் கடன்பட்டிருக்கிறாய்
இக் ஷூ ப⁴க் ஷிகா மே உத³ பாதி³
"நான் கரும்பு சாப்பிடுவதற்கு உற்பத்தி பண்ணியிருக்கிறாய்"
இச்சூத்திரத்தில் 'விருப்பாக' தொக்கி நிற்கிறது.
'ண்வுல்', 'ண்வுச்' ஒட்டுக்களை இணைத்து
தருவிக்கப்படும் சொற்கள் ஒரே வடிவத்தைக் கொண்டவை. சுரத்தில் தான் வேறுபாடு காணப்படும்.

3.3.112 ஆக்ரோஸே' நஞ் யனி:
